உதயன்

விலை ரூபா 20.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 ஆனி 10 சனிக்கிழமை (25.06.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 211



14 மஹிந்தவின் புதிய தலையிடி



23 சாவுக்கு நாங்கள் அஞ்சவில்லை



24 யுத்தத்தில் உயிரிழந்தவர்களுக்கு சென்னையில் அஞ்சலி



25 வென்றது இந்தியா

# அளவெட்டி அத்துமீறலை கண்டித்து ஆர்ப்பாட்டம்

## நவசமசமாஜக் கட்சி ஏற்பாட்டில் கொழும்பில் நேற்று நடந்தது

கொழும்பு, ஜூன் 25

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் அளவெட்டியில் நடத்திய தேர்தல் கூட்டத்துக்குள் இராணுவத்தினர் புகுந்து நடத்திய தாக்குதலைக் கண்டித்து கொழும்பில் நேற்று தெற்கு அரசியல் கட்சிகள் ஆர்ப்பாட்டம் நடத்தின. கோட்டை ரயில் நிலையம் முன்பாக நடந்த இந்த ஆர்ப்பாட்டத்தில் நாற்றுக்கணக்கான சிங்கள, தமிழ் மக்கள் கலந்து கொண்டனர்.

நவசமசமாஜக் கட்சி இந்த ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்திருந்தது. புதிய இடதுசாரி முன்னணி மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகிய கட்சிகளைச் சேர்ந்த தலைவர்களும் இதில் பங்கேற்றனர்.

கடந்த 16ஆம் திகதி அளவெட்டி மகா ஜன சபை மண்டபத்தில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக் கூட்டிய தேர்தல் கூட்டத்தினுள் புகுந்து இராணுவத்தினர் அடாவடித்தனம் புரிந்தனர். கூடியிருந்த மக்களை கொட்டன்கள், பொல்லுகளால் அடித்து விரட்டினர். நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பாதுகாக்க முயன்ற மெய்ப்பாதுகாவலர்கள் தாக்கப்பட்டனர்.

இந்தச் சம்பவத்துடன் இராணுவத்தினரே

(31ஆம் பக்கம் பார்க்க)




அளவெட்டியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலுக்கு எதிர்ப்புத் தெரிவித்து கொழும்பு கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்பாக நேற்றுப்பகல் ஆர்ப்பாட்டமொன்று நடைபெற்றது.

## யாழ். மாநகர சபைக்கு நகரில் புதிய கட்டம்

### 300 மில்லியன் ரூபா ஒதுக்கீடு

யாழ்ப்பாணம், ஜூன் 25

யாழ்.நகரில் சுப்பிரமணியம் பூங்காவுக்கு முன்பாக அமைந்திருந்த போரால் அழிந்து போன யாழ் மாநகர சபையின் கட்டடத்தை அந்த இடத்திலேயே புதிதாக அமைக்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கி உள்ளது. இதற்கான பணிகளை ஆரம்பித்து வைக்க ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ யாழ்ப்பாணம் வருவார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

மாநகர சபைக்கான புதிய கட்டடத்தை எழுப்ப 300 மில்லியன் ரூபாவை ஒதுக்குவதற்கு அமைச்சரவை அனுமதி அளித்துள்ளது. இது தொடர்பில் ஆராயவென இன்று கொழும்பில் இருந்து ஒரு குழு வரும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

### குடிசன மதிப்பீட்டை மேற்கொள்ளும்

## பாதுகாப்பு அமைச்சின் செயலை கண்டிக்கிறது தமிழ்க் கூட்டமைப்பு

கொழும்பு, ஜூன் 25

''எந்த ஒரு நாட்டிலும் குடிசன மதிப்பீட்டுப் பணிகளை புள்ளிவிவரவியல் திணைக்களம் மேற்கொள்வதே வழமை.

''அந்தத் திணைக்களத்துக்குப் புறம்பாக வேறு எவரும் இந்தப் பணியை மேற்கொள்வது அத்துமீறிய செயல்'' என்று தெரிவித்துள்ள நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா பாதுகாப்பு அமைச்சின் இந்தச் செயலைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வன்மையாகக் கண்டிக்கிறது என்றும் தெரிவித்தார்.

வடக்கில் படையினர் மேற்கொள்ளவுள்ள சனத்தொகை மதிப்பீடு குறித்துக் கேட்டபோதே அவர் உதயனுக்கு இதனைத் தெரிவித்தார்.

(31ஆம் பக்கம் பார்க்க)

## எதிர்க்கட்சி எம்.பிக்களிடம் சி.ஐ.டியினர் விசாரணை

### சபாநாயகரிடம் ரணில் முறைப்பாடு

கொழும்பு, ஜூன் 25

நாடாளுமன்றில் பேசப்படும் விடயங்கள் தொடர்பாக விசாரணை செய்வதற்காக சி.ஐ.டியினர் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளனர் என்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்று நாடாளுமன்றில் கூறினார்.

நாடாளுமன்றில் நேற்று இடம்பெற்ற காலஞ்சென்ற நாடாளுமன்ற உறுப்பினர்களான கே.எம்.பி ராஜரட்ன, திருமதி குசுமா இராஜரட்ன ஆகியோர் மீதான அனுதாபப் பிரேரணையில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றில் நிகழ்த்துகின்ற உரை தொடர்பாக யாருக்கும்

(31ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கில் அரசியல் சுதந்திரத்தை நிலைநாட்ட நடவடிக்கை எடுக்குக

### 'கபே' மீண்டும் அரசை வலியுறுத்துகிறது

கொழும்பு, ஜூன் 25

வடக்கில் அரசியல் சுதந்திரத்தை நிலைநாட்டுமாறு நீதியானதும், சுதந்திரமானதுமான தேர்தல்களுக்கான மக்கள் இயக்கம் (கபே) அரசை மீண்டும் வலியுறுத்துகிறது.

யாழ்ப்பாணம், அளவெட்டியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நடத்திய கூட்டத்தில் நடத்தப்பட்ட தாக்குதல் மற்றும் 'நாம் இலங்கையர்' அமைப்பு கிளிநொச்சியில் நடத்திய ஆர்ப்பாட்டத்தின் போது இடையூறு விளைவிக்கப்பட்டமை ஆகியன வடக்கில் அரசியல் சுதந்திரம் இல்லை என்பதையே எடுத்துக்காட்டுகின்றன

(31ஆம் பக்கம் பார்க்க)

## 'சனல்-4' வீடியோ போலியானதாம் நிரூபிப்பேன் என்கிறார் சவேந்திர சில்வா

நியூயோர்க், ஜூன் 25

''இலங்கையின் படுகொலைக் களம்'' என்ற சனல் - 4 வெளியிட்ட விவரணத் திரைப்படம் போலியாகத் தயாரிக்கப்பட்டது என்பதை நிரூபிக்கத் தயார் என்கிறார் சவேந்திர சில்வா.

இலங்கையின் போர்க்குற்றங்கள் தொடர்பாக சனல் - 4 வெளியிட்ட வீடியோக்கள் உலகம் முழுவதும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இந்த நிலையில் இலங்கை அரசு, சனல் - 4 ஒளிபரப்பிய வீடியோக்கள் போலியானவை என நிரூபிக்க பகீரதப் பிரயத்தனத்தை மேற்கொண்டு வருகிறது.

ஐ.நா. பாதுகாப்புச்சபை தனக்கொரு சந்தர்ப்பம் வழங்கினால் சனல் - 4 வீடியோ போலியானவை என நிரூபிப்பேன் என சவேந்திர சில்வா சூளுரைத்துள்ளார்.

இறுதிக்கட்ட யுத்தத்தின்

(31ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் மக்களின் மனங்களை வெல்வதற்காக தடுப்பிலுள்ளோரின் பெயர்களை வெளியிடுக

### 'நாம் இலங்கையர்' அமைப்பு கோரிக்கை



கொழும்பு, ஜூன் 25

வடக்கு, கிழக்கு தமிழ் மக்களின் மனங்களை வெல்ல வேண்டுமாயின், காணாமற்போனோர் மற்றும் தடுப்பில் உள்ளோரின் பெயர் விவரங்களை அரசு உடன் வெளியிடவேண்டும் என்று நாம் இலங்கையர் அமைப்பு நேற்று கோரிக்கை விடுத்தது.

கொழும்பு, மருதானையில் நேற்றுக்காலை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றிய 'நாம் இலங்கையர்' அமைப்பின் நிறைவேற்றுக் குழு உறுப்பினர் உதுல் பிரேமரட்ன மேற்கண்ட கோரிக்கையை விடுத்தார்.

அத்துடன், காணாமற் போனவர்களின் உறவுகள் நேற்றுமுன்தினம் கிளிநொச்சியில் நடத்திய ஆர்ப்பாட்டத்துக்கு இராணுவம் மேற்கொண்ட இடையூறுகள் தொடர்பாகவும் அவர் இதன்போது கூறினார்.

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

காணாமற் போனவர்களை

(31ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம் : 021-2229933
தொலைநகல்: 021-2229944
செய்தி/படங்கள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com




தெளிவான வானிலை அனைத்து மாவட்டங்களிலும் நிலவுவதற்கான சாத்தியம் . அநேக மாவட்டங்களில் வெப்பமான காலநிலை நாள் முழுவதும் நிலவும்.

CSE
COLOMBO STOCK EXCHANGE

பங்குச்சந்தை µ யாழ்ப்பாணம்
ஆனி 24, 2011
பங்குச்சந்தைச் சுட்டிகள்
அனைத்துப்பங்கு(ASPI) 6892.56↑
மிலங்கா(MPI) 6439.30↑
உரிமைமுதல் தகவல்கள்
வியாபாரப்புரள்வு(Rs.) 1.8Bn
பங்குகளின் அளவு(No.) 129.80Mn
வியாபாரம்(No.) 18569
விலை அசைவுகளின் அடிப்படையில்
அதிகரிப்பு(Top 5 gainers)விலை Rs.
இன்டோ மலே 1300.00
ஜெ எல் மொறிசன் 3006.00
செறன்டிப் லேண்ட் 2999.00
சிங்கபுத்திரா 101.20
ஜெ எல் மொறிசன் 4200.00
குறைவு(Top 5 losers) - விலை Rs.
எஸ் எம் பி லீசிங் 0.40
சீலின்சிங் 1050.00
ஹொட்டல் சிகிரியா 61.10
பிபுத் 69.00
ஆசிரி சென்றல் 2200.00
மேலதிக தகவல்கள்- www.cse.lk

## குருதிக் கொடையாளர் கௌரவிப்பு நிகழ்வு நாளை வீரசிங்கம் மண்டபத்தில்

யாழ்ப்பாணம், ஜூன் 25

குருதிக் கொடையாளர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு நாளை காலை 9 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக முல்லைத்தீவுப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி கனகையன் அகிலனும் சிறப்பு விருந்தினர்களாகப் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அதிபர் நடராசா தெய்வேந்திரராஜா, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணம் தொழில்நுட்பக் கல்லூரிப் பணிப்பாளர் என்.ஆர். ஜி.ஹூல், காங்கேசன்துறை பொலிஸ் அத்தியட்சகர் ஜே.ஏ. பி.காமினி பெரேரா, முல்லைத்தீவு 24 சிங்க றெஜிமன்ட் அலம்பில் பொறுப்பதிகாரி லெப். கேணல் எம்.சி. அபயகோன் ஆகியோரும் கௌரவ விருந்தினராகக் 'ஹச்' நிறுவனப் பிராந்திய முகாமையாளர் விமலதாஸ் கவிச்செல்வனும் கலந்துகொள்வர்.

யாழ்.போதனா வைத்தியசாலையில் இரத்த வங்கியிலும் நடமாடும் இரத்தான முகாம்களிலும் மற்றும் வடமாகாண ஏனைய இரத்த வங்கிக் கிளைகளிலும் தொடர்ச்சியாக இரத்த தானம் செய்துவரும் குருதிக் கொடையாளர்கள், இரத்ததான முகாம் ஒழுங்கமைப்பாளர்கள், இந்தப் பணிக்கு ஒத்துழைப்பு வழங்கும் அனுசரணையாளர்கள் உள்ளடங்கிய 200 பேர் இந்த விழாவில் கௌர விக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-313)

## 'நொதேர்ன் பவர்' மின்பிறப்பாக்கிகளுக்கு 'ஹெவி டீசல்' நேற்று வந்து சேர்ந்தது

யாழ்ப்பாணம், ஜூன் 25

'நொதேர்ன் பவர்' நிறுவனத்தின் மின்பிறப்பாக்கிகளுக்குத் தேவையான 'ஹெவி டீசல்' வந்து சேர்ந்துள்ளது. எனவே மின்வெட்டை அமுல்படுத்த வேண்டிய தேவை இனிமேல் ஏற்படாது என யாழ்.பிரதேச மின் பொறியியலாளர் நேற்று மாலை உதயனுக்குத் தெரிவித்தார்.

'நொதேர்ன் பவர்' நிறுவனத்தின் கையிருப்பிலிருந்த 'ஹெவி டீசல்' தீர்ந்து போனமையால் கடந்த 23 ஆம் திகதி முதல் அந்த நிறுவனத்தின் மின்பிறப்பாக்கிகள் இயங்கவில்லை. இதனால் சுழற்சி முறையில் மின்வெட்டு அமுல்படுத்தப்பட்டது.

இதன் காரணமாக மாவட்டத்தின் அதிக பகுதிகளில் அடிக்கடி மின்வெட்டு ஏற்பட்டது.

பாடசாலை மாணவர்கள், அலுவலக உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் இந்த மின்வெட்டுக் காரணமாக அதிக சிரமங்களை எதிர்கொண்டனர்.

மின்வெட்டு அமுல்படுத்தும் நேர அட்டவணை குறித்துக் கேட்பதற்கு யாழ்.பிரதேச மின்பொறியியலாளரைத் தொடர்பு கொண்டு கேட்ட போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

நேற்று மாலை முதல் சீரான மின்விநியோகம் மேற்கொள்ளப்படும் எனவும் அவர் கூறினார்.

அவர் மேலும் கூறுகையில், 'நொதேர்ன் பவர்' நிறுவனத்துக்குத் தேவையான 'ஹெவி டீசல்' வந்து சேர்ந்துள்ளது. எனவே நேற்று மாலை தொடக்கம் யாழ். குடாநாட்டில் சீரான மின்சாரத்தை விநியோகிப்பதற்கு நடவடிக்கைஎடுக்கப்பட்டுள்ளது. - என்றார்.(து-14)

(மற்றொரு செய்தி 7ஆம் பக்கத்தில்)

## கவனிப்பாரற்று வெள்ளவாய்க்கால் டெங்குநோய் பரவும் அபாய நிலை

யாழ்ப்பாணம், ஜூன் 25

கொக்குவில் பிரதேசத்தில் வீதி அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமான வெள்ள வாய்க்கால் கடந்த 5 வருடங்களாக கவனிப்பாரற்றுக் காணப்படுகின்றது.

இதனால் அந்தப்பகுதியில் டெங்கு நோய் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக கொக்குவில் பிரதேச சுகாதாரப் பரிசோதகர்கள் தகவல் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக யாழ். மாவட்ட செயலகத்தில் டெங்கு நோய் தொடர்பான பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கோரிக்கை முன்வைக்கப்பட்டும். அதற்கான தீர்வுகள் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொக்குவில் ஆடியபாதம் அம்மன் வீதியிலும் குளப்பிட்டி வீதி, கொக்குவில் ஆகிய பிரதேசங்களில் உள்ள வெள்ள வாய்க்கால்களில் கழிவுநீர் அகற்றப்படாமல் கவனிப்பார் அற்று உள்ளது.

வாய்க்காலை மறைக்கும் அளவுக்குப் பற்றைகள் வளர்ந்து காணப்படுகின்றன.

இதனால் பொதுமக்கள் அந்த வாய்க்காலை கழிவுப் பொருள்கள், இறந்த விலங்குகள், குப்பைகள் போடும் இடமாக மாற்றியுள்ளனர்.

இதனால் இந்தப் பிரதேசத்தில் வெகு விரைவில் டெங்கு நோய் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

எனவே, இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்குமாறு சுகாதாரப் பரிசோதகர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-313)

## தனியார் பஸ் ஊழியர்களுக்கு 3 மாதங்களில் அ.அட்டைகள்

யாழ்ப்பாணம், ஜூன் 25

யாழ். மாவட்டத்தில் சேவையில் ஈடுபடும் தனியார் சிற்றூர்திச் சாரதி, நடத்துநர்களுக்கு தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவால் அடையாள அட்டைகள் வழங்கப்படவுள்ளன.

இதற்கான தரவுகளைத் திரட்டுவதற்குக் கொழும்பில் இருந்து நேற்று விசேட குழுவொன்று யாழ்ப்பாணம் வருகை தந்துள்ளது.

இதுவரை காலமும் யாழ். மாவட்டத் தனியார் போக்குவரத்துச் சங்கத்தால் வழங்கப்பட்ட அடையாள அட்டையை வைத்துக்கொண்டு சாரதி, நடத்துநர் சேவையில் ஈடுபட்டு வந்தனர்.

தற்போது முதற்தடவையாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவால் வடக்கில் அடையாள அட்டைகள் வழங்கப்படவுள்ளன.

சாரதி, நடத்துநர்களின் விவரங்களைத் திரட்டி இன்னும் 3 மாதகாலத்தினுள் அடையாள அட்டைகள் வழங்கப்படவுள்ளன.

இதற்கான நடவடிக்கைகளைகொழும்பிலிருந்து வருகை தந்துள்ள தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் அதிகாரிகள் உள்ளடங்கிய குழுவொன்று மேற்கொண்டுள்ளது என்று தனியார் போக்குவரத்துச் சங்கத்தின் யாழ்.மாவட்ட தலைவர் பொ.கங்காதரன் தெரிவித்துள்ளார். (ம-9)

## வடக்கு - கிழக்கில் விசேட போட்டிப் பரீட்சை நிர்வாக சேவையில் 46 வெற்றிடங்களை நிரப்ப

யாழ்ப்பாணம், ஜூன் 25

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் நிர்வாக சேவை அதிகாரிகளுக்கு நிலவும் 46 வெற்றிடங்களையும் நிரப்புவதற்கான விசேட பரீட்சை ஒன்று ஒக்ரோபர் மாதத்தில் பரீட்சைத் திணைக்களத்தால் நடத்தப்படவுள்ளது.

நிர்வாக சேவை அதிகாரிகள் பதவிக்குக் கடைசியாக நடத்தப்பட்ட பரீட்சையில் குறிப்பிட்ட புள்ளிகளைப் பெறாததால் தமிழர் எவரும் சித்தியடையவில்லை. இதன்காரணமாக வடக்கு- கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த தமிழ்ப் பட்டதாரிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

கொழும்பில் இந்தப் பரீட்சை நடத்தப்படவிருக்கின்றது. இந்தப் பரீட்சைக்கான விண்ணப்பங்களை அடுத்த மாதம் 25 ஆம் திகதிக்கு முன்னர் பரீட்சை ஆணையாளர் நாயகத்துக்கு அனுப்புமாறு கேட்கப்பட்டுள்ளது.

திறந்த போட்டிப் பரீட்சையாக நடத்தப்படும் இந்தப் பரீட்சைக்கு விண்ணப்பிப் போர் 28 வயதுக்குட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரர் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தின் தமிழ்மொழி மூல பட்டதாரியாக இருக்க வேண்டும்.

இந்தப் போட்டிப்பரீட்சை தொடர்பான விவரங்கள் 24.06. 2011 ஆம் திகதிய வர்த்தமானியில் வெளிவந்துள்ளன. (ஐ)

# நிகழ்வுகள்

### வட்டு . சென்றலில் பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், ஜூன் 25

வட்டுக்கோட்டை மத்திய கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கல்லூரியின் அதிபர் ந.சபாரத்தின சிங்கி தலைமையில் நடைபெறவுள்ள இந்த விழாவில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக் கழகத்தின் இந்து நாகரிகத்துறைத் தலைவர் பேராசிரியர் மா.வேதநாதனும் சிறப்பு விருந்தினராக இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் வலி.மேற்குப் பிரிவுத் தலைவர் தி.உதயசூரியனும் கலந்து கொள்ளவுள்ளனர். (ற)

### பெற்றோர் தின விழா

யாழ். தொல்புரம் விக்கினேஸ்வர வித்தியாலயத்தின் பெற்றோர் தின விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடை பெறவுள்ளது. பாடசாலை அதிபர் இ.கணேசானந்தன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த விழாவில் பிரதம விருந்தினராக வலிகாமம் வலயக்கல்விப் பணிப்பாளர் ஆ.இராஜேந்திரன், சிறப்பு விருந்தினராக தெல்லிப்பழை ஆதார வைத்திய சாலையின் ஆற்றுப்படுத்துநர் சி.கதிர்காமநாதன், சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியின் ஆசிரியரும் பழைய மாணவியுமான திருமதி க.திவ்விய லோசனி ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.(ற)

### ஆசிரியர்களுக்கான செயலமர்வு

வடமராட்சி வலயப் பாடசாலைகளில் தரம் 6 முதல் 11 வரையான வகுப்புக்களில் ஆங்கிலபாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான விசேட செயலமர்வு இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு பருத்தித்துறை வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

ஆசிரியர்களின் வினைத்திறனை உறுதிப்படுத்தும் கற்பித்தல் முறைகள் தொடர்பாக வடமராட்சி வலய ஆங்கில உதவிக்கல்விப் பணிப்பாளர் எஸ்.சுந்தரமூர்த்தி கருத்துரைகளை வழங்கவுள்ளார். (ம-236)

### காந்தி சேவா சங்கக் கூட்டம்

அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள காந்தி சேவா நிலையத்தின் தலைமையகத்தில் தலைவர் ஆ.வடிவேலு தலைமையில் நடைபெறவுள்ளது.

(ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர்க்குற்ற காணொளிகள் இராணுவத்தினர் ஊடாக அனுப்பப்படுவது குறித்து கோத்தபாய அதிர்ச்சி

இறுதிக்கட்ட யுத்தத்தின் போது இராணுவத்தினரால் இழைக்கப்பட்ட போர்க்குற்றங்கள் தொடர்பான காணொளிகளை இராணுவத்தினரே விலை பேசி விற்க முற்பட்டிருப்பது குறித்து பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய கடும் அதிர்ச்சியடைந்துள்ளார்.

விடுதலைப் புலிகளுடனான யுத்த வெற்றியின் பின் இராணுவத்தினருக்கு வழங்கப்பட்டு வந்த நலன்புரிக் கொடுப்பனவுகள் இரத்துச் செய்யப்பட்டமை, விடுமுறைகள் கடினமாக்கப்பட்டுள்ளமை, மற்றும் முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவுக்கு நேர்ந்துள்ள கதி, யுத்தத்தில் முக்கிய பங்காற்றிய இராணுவத் தளபதிகள் படிப்படியாக ஓரங்கட்டப்பட்டு வருகின்றமை ஆகிய விடயங்களின் காரணமாக இராணுவ சேவையிலிருந்து அதிகாரிகள் தரத்தில் உள்ளவர்களும் தற்போது தப்பியோடத் தொடங்கியுள்ளனர்.

அவ்வாறு தப்பியோடும் அதிகாரிகள் இறுதிக்கட்ட யுத்தத்தின்போது இடம்பெற்ற போர்க் குற்றங்கள் தொடர்பான காணொளிகள் ஒன்றிரண்டை எப்படியேனும் திரட்டிக் கொண்டே தப்பியோடுகின்றனர். அதனை தமிழர்தரப்புகளுக்கு விற்று பெரும் பணத்தொகையொன்றைப் பெற்றுக் கொண்டு தங்கள் வாழ்வை வளமாக்கிக் கொள்வது அவர்களின் நோக்கமாகவுள்ளது.

அதில் ஒருசிலருக்கு வெளிநாட்டுத் தொடர்புகளும் இருப்பதுடன், இன்னும் சிலர் அவ்வாறான காணொளிகளுடன் வெளிநாடுகளுக்குத் தப்பிச் சென்றுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அவ்வாறு தப்பிச் சென்றவர்கள் மற்றும் தப்பிச் செல்லத் தயாரானவர்களை அரசுடன் முரண்பட்டுக் கொண்டு வெளிநாடுகளுக்குத் தப்பிச் சென்றிருக்கும் அரசின் முன்னைய முக்கியஸ்தர்கள் குழுவொன்று அடிக்கடி தொடர்பு கொண்டு ஒருங்கிணைத்து வருவதாகவும் நம்பகமான தகவல்கள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவுக்குக் கிட்டியுள்ளன.

இராணுவத்தினரே இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடத் தொடங்கியிருப்பது குறித்து கடும் அதிர்ச்சியடைந்துள்ள அவர், அதனைத் தடுப்பதற்கான அனைத்து முயற்சிகளையும் முடுக்கி விட்டுள்ளார்.

அத்துடன் அவ்வாறான செயற்பாடுகளின் பரிமாற்ற மையமாகப் பயன்படுத்தப்படும் தென்னிந்தியாவிலும் இலங்கைப் புலனாய்வாளர்கள் குழுவொன்று களமிறங்கியிருப்பதாகவும், அவர்கள் கொடுத்த தகவல்களின் பிரகாரம் தென்னிந்தியாவிலிருந்து வெளிநாடுகளுக்குத் தப்பிச் செல்ல முற்பட்ட பல இலங்கையர் அண்மைக்காலமாக கைது செய்யப்பட்டு வருவதாகவும் பிரஸ்தாப தகவல் வட்டாரங்களிலிருந்து மேலும் தெரிய வந்துள்ளது.

## கனடாவுக்கு தபால் போடாதீர்கள்

கனடாவில் தபால் ஊழியர்களின் வேலை நிறுத்தம் நடைபெறுவதால் கனடாவுக்கு கடிதங்களையும் பொதிகளையும் அனுப்புவதை தவிர்த்துக் கொள்ளுமாறு இலங்கையர்கள் கோரப்பட்டுள்ளனர்.

கனடாவுக்கான வழக்கமான தபால் சேவை எப்போது மீண்டும் ஆரம்பமாகும் என்பதை தபால் திணைக்களம் பின்னர் அறிவிக்கும் என அத்திணைக்களத்தின் சர்வதேச தபால் சேவைப் பிரிவின் தலைவர் ஜே.எல். நவரட்ண தெரிவித்தார்.

## ஐ.நா. வளாகத்தில் குழப்பம் விளைவித்த சவேந்திரவுக்கு ஜனாதிபதி மஹிந்த தொலைபேசி மூலம் பாராட்டு தெரிவிப்பு

அனைத்துலக ரீதியாக எழுந்துள்ள போர்க்குற்றச்சாட்டுகளைத் தோற்கடிப்பது குறித்து, சிறிலங்கா அதிபர் மஹிந்த ராஜபக்ஷ நியூயோர்க்கிலுள்ள ஐ.நாவுக்கான சிறிலங்காவின் பிரதி நிரந்தர வதிவிடப் பிரதிநிதி மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவுடன் தொலைபேசி மூலம் கலந்துரையாடியுள்ளார்.

சனல் 4 தொலைக்காட்சி தயாரித்த ஆவணப்படத்தை முன்னிறுத்தி சிறிலங்காவுக்கு எதிரான போர்க்குற்றச்சாட்டுகள் குறித்த பரப்புரைகள் நியூயோர்க்கில் தீவிரமடைந்துள்ள நிலையிலேயே மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவுடன் சிறி லங்கா அதிபர் மஹிந்த ராஜபக்ஷ கலந்துரையாடியுள்ளார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்த தொலைபேசி மூலமான உரையாடலின் போது, சனல்-4 ஆவணப்படத்தைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் சிறிலங்காவுக்கு எதிரான பரப்புரைகளை முறியடிக்க எல்லாவிதமான உத்திகளையும் கையாளுமாறு ஜனாதிபதி பணித்துள்ளார்.

அத்துடன் சனல்-4 ஆவணப்படத்தின் மூலம் இலங்கையின் பெயரைக் கெடுக்க அனைத்துலக நிறுவனங்கள் மேற்கொள்ளும் முயற்சிகளை முறியடிப்பதில் திறமையாகச் செயற்படுவதாக மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவுக்கு இலங்கை ஜனாதிபதி பாராட்டும் தெரிவித்துள்ளார்.

ஐ.நா வளாகத்தில் தேவாலய நிலையத்தில் இந்த ஆவணப்படம் திரையிடப்பட்ட போது அங்கு அழையா விருந்தாளியாக நுழைந்த மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா அதைக் குழப்பும் வகையில் தன்னிலை விளக்கம் கொடுத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதற்காகவே, ராஜபக்ஷவினால் மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா பாராட்டப்பட்டுள்ளார்.

## துறைமுக கடனுக்காக 1110 கோடி ரூபா வட்டி

ஹம்பாந்தோட்டை துறைமுக அபிவிருத்தித் திட்டத்திற்காக சீனாவிடமிருந்து வாங்கிய கடனுக்கு இலங்கை அரசு 111.21 மில்லியன் அமெரிக்க டொலர்களை அதாவது சுமார் 11.1 பில்லியன் (1110 கோடி) ரூபா வட்டியாக செலுத்த வேண்டியிருப்பதாக அரசு நேற்று நாடாளுமன்றில் தெரிவித்துள்ளது.

இத்திட்டத்திற்கான மொத்த செலவு 360 மில்லியன் டொலர்களாகும். இவற்றில் 54 மில்லியன் டொலர்கள் மாத்திரம் துறைமுக அதிகார சபையால் வழங்கப்பட்டது. எஞ்சிய தொகை சீனா வங்கியிடமிருந்து பெறப்பட்டது. இதற்காக வட்டியுடன் சேர்த்து அரசு 418.21 மில்லியன் அமெரிக்க டொலர்களை 31.12.2022 வரை 11 தவணைகளில் மேற்படி சீன வங்கிக்கு செலுத்த வேண்டும்.

## நாளை மின் தடை

யாழ்ப்பாணம், ஜூன் 25

உயரழுத்த மின்மார்க்கங்களில் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகள் செய்யும் பொருட்டு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், இருபாலை, கல்வியங்காடு, நல்லூர், அரியாலை, தென்மராட்சிப் பிரதேசம், புன்னாலைக்கட்டுவன், அச்செழு, புத்தூர், ஆவரங்கால், அச்சுவேலி, இடைக்காடு, வடமராட்சிப் பிரதேசம் மற்றும் சுன்னாகம், குப்பிளான், மயிலங்காடு, ஏழாலை, காங்கேசன்துறை, உயர் பாதுகாப்பு வலயப் பகுதிகளிலும் -

கொட்டடி, நாவாந்துறை, மீனாட்சிபுரம், காக்கைதீவு மற்றும் யாழ். தொழில்நுட்பக் கல்லூரி பிரதேசம், கலட்டிப்பிரதேசம், பிறவுண் வீதியில் ஆடியபாதம் வீதியிலிருந்து கலட்டிச் சந்தி வரை, கம்பஸ் லேன், இராமநாதன் வீதி, ஆத்திசூடி ஆகிய இடங்களிலும் - மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று யாழ். பிரதேச மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (ஓ)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜூன் 25

கட்டிளமைப் பருவத்தினரிடையே அதிகரித்து வரும் சுகாதாரப் பிரச்சினைகளுக்குப் பொருத்தப்பாடான தீர்வு ஒன்றை காண்பதற்கு ஊடகத் துறையினரின் காத்திரமான பங்களிப்பை எவ்வாறு பெற்றுக்கொள்ளலாம் என்பது தொடர்பான கலந்துரையாடல் இன்று சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு சுகவாழ்வுக்கான பயணம் நிறுவனத்தில் நடைபெறவுள்ளது. (ற)

# முஸ்லிம்களின் மீளக்குடியமர்வு தொடர்பாக அரசிடம் தெளிவான கொள்கை ஏதும் இல்லை

### முஸ்லிம் எம்.பிக்களுடனான சந்திப்பில் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 25

யாழ். முஸ்லிம்களின் மீளக் குடியமர்வு தொடர்பாக அரசிடம் தெளிவான கொள்கைகளும் சிந்தனைகளும் இல்லை.

இதன் அடிப்படையில் அதிகாரிகள் மேற்கொள்ளும் நடைமுறைகளால் மக்கள் பெரிதும் பாதிப்படைந்துள்ளனர்.

யாழ்., கிளிநொச்சி முஸ்லிம் சம்மேளனத்துக்கும் முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குமிடையிலான சந்திப்புக் கடந்த புதன்கிழமை நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பின்போது அமைச்சர் ரவூப் ஹக்கீம், பிரதி அமைச்சர் பஷீர் சேகுதாவுத் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஹஸன் அலி, ஹுசைன் பாரூக், தௌபீக் ஆகியோர் கலந்து கொண்டனர்.

சம்மேளனத்தின் பிரதிநிதிகள் யாழ்., கிளிநொச்சி மாவட்ட முஸ்லிம் மக்களின் மீளக்குடியமர்வு நிலைமைகள் தொடர்பில் கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டனர்.

அதன்போது மேற்கண்ட விடயம் சுட்டிக்காட்டப்பட்டது.

இதில் மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு:

* முஸ்லிம் மக்களின் தற்போதைய நிலைமையால் வாக்காளர் உரிமை பாதிக்கப்பட்டுள்ளது. இதனை நிவர்த்தி செய்வதுக்கான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

* மீளக்குடியமர்ந்த மக்களுக்கு வழங்கப்படும் உதவித் திட்டங்கள் எவ்வித பாகுபாடுமின்றி வழங்கப்பட வேண்டும்.

* யுத்த காலத்தில் விற்கப்பட்ட முஸ்லிம் மக்களின் காணிகள் மீளவும் அந்த மக்களுக்கு வழங்கப்படவேண்டும்.

* யாழ்ப்பாணத்திலிருந்து பழைய இரும்புகளை வெளி மாவட்டத்துக்கு எடுத்துச் சென்று வியாபாரத்தில் ஈடுபடுவதற்குப் பாதுகாப்புத் தரப்பினர் அனுமதி வழங்கவேண்டும்.

* தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒருநல்லெண்ண வெளிப்பாடாக முஸ்லிம்களின் நலனில் கவனம் செலுத்த முடியும்.

இது குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிரதிநிதிகளிடம் முஸ்லிம் பிரதிநிதிகள் பிரச்சினைகளை முன்வைக்கவேண்டும். (ம-14)

# வெளிவாரி பட்டமளிக்கும் நிறுவனங்கள் பல்கலைக்கழகங்களுடன் இணைக்கப்படும்

### கண்டியில் உயர்கல்வி அமைச்சர் தகவல்

கொழும்பு, ஜூன் 25

வெளிவாரிப் பட்டமளிக்கும் நிறுவனங்கள் யாவும் இனிமேல் பதிவு செய்யப்படவிருப்பதாக உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்க தெரிவித்திருக்கிறார்.

வெளிவாரி பட்டமளிப்பு நிறுவனங்களில் பொருத்தமானவற்றை அமைச்சு தெரிவுசெய்ய விருப்பதாகவும் அவைகளை அரச பல்கலைக்கழகங்களுடன் இணைந்த நிறுவனங்களாகப் பதியவிருப்பதாகவும் உயர் கல்வி அமைச்சர் தெரிவித்தார்.

வெளிவாரி பட்டங்களின் தரத்தையும் தகுதியையும் உயர்த்துவதற்காக இந்த நடவடிக்கை எடுக்கப்படவிருப்பதாக அமைச்சர் மேலும் கூறினார்.

பேராதனையில் பனிதெனிய, பிரிவெனாவில் இடம்பெற்ற ஒரு நிகழ்ச்சியில் அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க இந்தத் தகவல்களை வெளியிட்டுள்ளார்.

வெளிவாரி பட்டமளிக்கும் நிறுவனங்கள் நாடுமுழுவதிலும் எந்தவித தரங்களுமின்றி காளான்களைப் போல இன்று தோன்றி வருகின்றன. இது கல்வியின் தரத்தை வெகுவாகப் பாதித்துள்ளது. வெளிவாரிப் பட்டம் வழங்கும் நிறுவனங்களை பல்கலைக்கழகங்களுடன் இணைப்பதற்கு நாம் முடிவு செய்துள்ளோம் - என்றார் அமைச்சர்.

வெளிவாரிப் பட்டம் பெற்றவர்கள் இப்போது பொருத்தமான அங்கீகாரமில்லாமல் இருக்கிறார்கள். விரைவில் நாம் இதை மாற்றியமைப்போம். எல்லாவித வெளிவாரிப்பட்டங்களும் ஒழுங்குபடுத்தப்படும் - என்றார் அவர். (ப)

## உணவு கையாளும் நிலைய உரிமையாளர்களுக்கு கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜூன் 25

யாழ். மாநகரசபை எல்லைக்குட்பட்ட உணவு கையாளும் நிலையங்களின் உரிமையாளர்களுக்கான கலந்துரையாடல் நாளைமறுதினம் திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு நாவலர் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

புதிதாக அறிமுகம் செய்யப்பட்டுள்ள H800 படிவம் தொடர்பான விளக்கம் அளிக்கப்படவுள்ளதால் உரிமையாளர்களைச் சமுகமளிக்குமாறு யாழ். மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி கேட்டுள்ளார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாக்- இந்திய அமைதிப் பேச்சுக்கள் இஸ்லாமாபாத்தில் மீண்டும் ஆரம்பம்

இஸ்லாமாபாத், ஜூன் 25

இந்திய வெளியுறவு செயலாளர் நிருபமாராவ் கடந்த வியாழனன்று பாகிஸ்தானில் வந்திறங்கினார். தென் ஆசியாவை அமைதிப் பிரதேசமாக மாற்றி அமைக்கும் முயற்சியில் இரு நாடுகளும் இறங்கப்போவதாக கருதப் படுகிறது. பாகிஸ்தான் வெளியுறவு செயலாளருடன் இந்திய வெளியுறவு செயலாளர் அமைதிப் பேச்சுக்களை நடத்தவிருக்கிறார்.

ஆப்கானிஸ்தானிலிருந்து தனது படைகளை அகற்றிக்கொள்ள அமெரிக்கா முடிவு செய்துள்ள நிலையில் பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்குமிடையில் அமைதிப் பேச்சுக்கள் தொடர விருப்பது தென்னாசியாவுக்கு நல்ல சகுனமாக இருக்கும் என்று கருதப் படுகின்றது. பாகிஸ்தான் வெளியுறவு செயலாளர் சல்மான் பஷீருக்கும் இந்திய வெளியுறவு செயலாளர் நிருபமா ராவுக்கும் இடையில் கடந்த பெப்ரவரியில் பூட்டானில் சந்திப்பொன்று நடைபெற்றது.

உயர் நிலை தொழில் ரீதியிலான இவ்விரு ராஜதந்திரிகளும் இஸ்லாமாபாத்தில் இரண்டு நாள்கள் கலந்துரையாடல்களை மேற்கொள்ளவிருக்கிறார்கள்.

அடுத்த மாதம் பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் இந்தியாவுக்கு விஜயம் மேற்கொள்ளவிருப்பதையொட்டி இந்த இராஜதந்திர சந்திப்புகள் இடம் பெறுவதாகத் தெரிகின்றது.

பாகிஸ்தானில் கடந்த மே 02 ஆம் திகதி ஒஸாமா பின்லேடன் அமெரிக்கப்படைகளால் கொல்லப்பட்டதையடுத்து நடைபெறவிருக்கும் இந்தச் சந்திப்பின் போது பயங்கரவாதிகள் சம்பந்தமான விடயங்களே இந்தியாவின் தரப்பில் நிகழ்ச்சி நிரலில் முக்கியத்துவம் பெறும் என்று நம்பலாம்.

இருநாடுகளுக்குமிடையிலான நான்கு வருட அமைதி முயற்சிகள் 2008 ஆம் ஆண்டு நவம்பரில் மும்பையில் இஸ்லாமிய ஆயுததாரிகளால் 166 பேர் கொல்லப்பட்டதோடு முற்றுப்பெற்றன.

பாகிஸ்தானில் தடைசெய்யப்பட்ட லஷ்கர் ஈ தொய்பா தீவிரவாதிகளே இதற்கு பொறுப்பாக இருந்துள்ளனர் என்று இந்தியா பாகிஸ்தான் மீது குற்றஞ்சாட்டி வந்தது. இந்த தாக்குதலுக்கான திட்டத்தின் ஒருபகுதியாகுதல் பாகிஸ்தான் மண்ணில்தான் தீட்டப் பட்டுள்ளது என்பதை அந்த நாடு ஏற்றுக் கொண்டது.

இரண்டு ஆண்டுகள் பேச்சுக்கள் தடைப்பட்டிருந்த நிலையில் இப்பொழுது மீள ஆரம்பமாகியிருப்பது குறிப்பிடத்தக்கது. (ப)

## ஆசிரிய உதவியாளர் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜூன் 25

ஆசிரிய உதவியாளருக்கான கலந்துரையாடல் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு ஆரியகுளம் சந்தியிலுள்ள புதிய உயர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் சம்பள உயர்வு, ஆசிரியப் பயிற்சி நெறி தொடர்பாக சிறுகைத் தொழில் மற்றும் பாரம்பரிய கைத்தொழில் அமைச்சுடன் கலந்துரையாட இருப்பதால் கடந்த 10 வருடங்களுக்கு மேலாகத் தொண்டராசிரியர்களாக கடமையாற்றி 2009 நவம்பர் மாதத்தில் இருந்து 3,000 ரூபா சம்பளத்துக்கு ஆசிரிய உதவியாளராக கடமையாற்றி வரும் ஆசிரிய உதவியாளர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு ஆசிரிய உதவியாளர் சங்கத் தலைவர் சி.சிவானந்தன் அறிவித்துள்ளார். (ம-313)

# மினி சூறாவளியால் சேதமடைந்த மின் இணைப்புகள் சீராகவில்லை

வடமராட்சி, ஜூன் 25

வடமராட்சிப் பிரதேசத்தில் அண்மையில் வீசிய மினி சூறாவளியினால் சேதமடைந்த மின்சார, தொலைபேசி இணைப்புகள் சீர் செய்யும் பணிகள் இன்னமும் பூர்த்தியடையவில்லை.

கடந்த 14 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 6.30 மணியளவில் பருத்தித்துறை, வடமராட்சி வடக்கு பிரதேசத்தில் சுமார் 20 நிமிட நேரம் வீசிய மினி சூறாவளியினால் பனை, தென்னை மரங்கள் முறிந்து வீழ்ந்தும் மின் கம்பங்கள், தொலைபேசிக் கம்பங்கள் என்பன அடியோடு புரண்டும் இடையில் முறிந்தும் விழுந்திருந்தன.

இதனால் பல இடங்களில் மின், தொலைபேசி தொடர்புகள் துண்டிக்கப்பட்டிருந்தன. அவ்வாறு துண்டிக்கப்பட்ட மின் இணைப்பு, தொலைபேசி இணைப்புக்கள் சீரமைக்கப்பட்டு வருகின்றபோதிலும் அவை இன்னமும் பூர்த்தியடையவில்லை. (ம-236)

## கிருமி நாசினியால் ஒவ்வாமை நிலை

தென்மராட்சி, ஜூன் 25

தோட்டப் பயிர்களுக்கு கிருமிநாசினி விசிறியவருக்கு ஒவ்வாமை ஏற்பட்டு உபாதைகளுக்கு உள்ளானார்.

பயிர்களுக்கு மருந்து விசிறிவிட்டு வீட்டுக்கு வந்து உணவு அருந்தி விட்டு படுத்தவருக்கே பல்வேறு உபாதைகள் ஏற்பட்டன.

இவர் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அவசர சிகிச்சைப் பிரிவில் வைத்து சிகிச்சையளிக்கப்பட்டு வருகிறது.

மட்டுவிலைச் சேர்ந்த சின்னத்துரை சிவனேசன்(வயது 28) என்பவரே வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளவராவார். (ம-202)

## தேசிய இளைஞர் சேவை மன்றத்தால் 30 இளைஞருக்கு கடனுதவிகள்

யாழ்ப்பாணம், ஜூன் 25

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் நிஸ்கோ பிரிவினால் செபி திட்டத்தின் கீழ் மக்கள் வங்கி, இலங்கை வங்கி ஆகியவற்றின் ஊடாக 30 இளைஞர், யுவதிகளுக்கு தலா 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபா கடன் வழங்கப்படவுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட இந்த 30 பயனாளிகளுக்குமான கடன் வழங்கலுக்கான பயிற்சியின் ஆரம்ப நிகழ்வு யாழ்.மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள்மன்றத்தில் நேற்று இடம்பெற்றது.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் யாழ்.மாவட்ட உதவி இயக்குநர் த.ஈஸ்வரராஜா தலைமையில் இடம் பெற்ற இந்த நிகழ்வில் தேசிய இளைஞர் சேவைகள் மன்ற வடமாகாணப் பணிப்பாளர் திருமதி.விமலேஸ்வரி சிறீஸ்கந்தரூபன், மற்றும் பயனாளிகள் ஆகியோர் கலந்துகொண்டனர். (ம-313)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு
21 ★ 10 ★ 1989



உதிர்வு
26 ★ 05 ★ 2011

**அமரர் சீனித்தம்பி சுதர்சனா**
(ஒலுஸ்)

எங்கள் வீட்டுப் பூக்கள் எல்லாம்
மாலையாகி உன் மனை நாடிவரும்
நாள் இன்றோ நேற்றைய பொழுதுகளில்
நிஜமாக வாழ்ந்தவளே காற்றுச் சுமந்த சேதி
எம்மைக் கலங்க வைக்குதடி ஒலுஸ்
ஒலுஸ் என ஏங்கும் உன் குடும்பத்தினரைப் பாராயோ
உன்னை இழந்து பதறுகின்றது எம் உள்ளங்கள்
ஒரு முறையாவது எங்கள் முன் வாராயோ

இளையர் கிணற்றடி,
கொற்றாவத்தை,
பொலிகண்டி,
வல்வெட்டித்துறை. (சி/1145) குடும்பத்தினர்.

### காணி விற்பனைக்கு

கொக்குவில் சம்பியன் லேன், நந்தாவில் ஒழுங்கையில் குட்டி வைரவர் கோயிலுக்கு அருகில் $1\frac{3}{4}$ பரப்புக்காணி சுற்றுமதில், கிணறு வசதிகளுடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு: கு.குமாரகுலசிங்கம்
ஏழாலை வடக்கு, ஏழாலை. T.P: 021 3205671 (5088)

### வீட்டுத்தோட்ட பராமரிப்பாளர்/காவலாளி

யாழ்ப்பாண வீட்டில் காவலாளியாகவும் வீட்டுத்தோட்ட பராமரிப்பாளராகவும் (பகல்) வேலை செய்ய 50 வயதுக்கு மேற்பட்ட ஆண்கள் தேவை.
சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம்.
தொடர்பு:- 077-1965666 (5154)

### வேலையாள்கள் தேவை

ரேஸ்ரா மிக்சர் கொம்பனிக்கு பின்வரும் வேலையாள்கள் தேவை.
★ சாரதி
★ மேற்பார்வையாளர் (பெண்)
(க.பொ.த. உ/த சித்தி)
தொடர்பு:- 0779789223 (5171)

### தவறிவிட்டது

தாவடி வடக்கு கொக்குவில் என்னும் முகவரியைச் சேர்ந்த தம்பிராசா இராஜ குமார் என்பவரது தேசிய அ.அட்டை (791682878V) விசேட அ.அட்டை (0906004667) என்பன கொக்குவிலுக்கும் தாவடிக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து மேற்காணும் முக வரிக்கு அனுப்பி வைக்கவும் அல்லது கொக் குவில் தபால் கந்தோரில் ஒப்படைக்கவும். (5133)

### சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ.உ)

### கூறுவிலை கோரல்

சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தால், மின்தறியாலை முன்பு நடத்தப்பட்டது. தற்போது மின்தறியாலையில் முன்பு பாவிக்கப்பட்ட இயந்திரங்களான இரும்பு வகைகள், சீனச்சட்டி வகைகள், மரவகைகள் விற்பனைக்குண்டு. தாங்கள் சங்கக் காரியாலய நேரத்தில் நேரில் பார்வையிட்டு அதன் கொள்வனவு விலையைக் குறிப்பிட்டு 02.07.2011 ஆம் திகதி சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்னதாக பொதுமுகாமையாளர், சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், சங்கானை எனும் முகவரிக்கு அனுப்புமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

பொதுமுகாமையாளர்
(சி/1146) சங்கானை ப.நோ.கூ.சங்கம்

### சிங்கர் நிறுவனத்தின்

SINGER® FASHION ACADEMY

தையல் நுண்கலைப்பிரிவு மாணவ மாணவிகளின் கை வண்ணத்தில் உருவான உன்னத படைப்புக்களின்

**கண்காட்சியும், விற்பனையும்.**

இடம்: கிறீன் கிறாஸ் விடுதி,(Green Grass Hotel) ஆசீர்வாதம் வீதி, யாழ்ப்பாணம் ( புகையிரத நிலைய வீதி அருகாமையில் )

காலம்: 24,25 - 06.2011 திகதிகளில்
காலை 9.30 தொடக்கம் மாலை 6.00 மணி வரை

அனுமதி முற்றிலும் இலவசம் !


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# வடமாகாணத்துக்கு மட்டும் அரசின் 'விசேட' ஏற்பாடு

இலங்கை முழுவதும் இயல்புநிலை நிலவிய காலங்களில் மக்களின் குடிசன மதிப்பீடு பத்து வருடங்களுங்கு ஒருமுறை நடைபெறுவதே வழக்கம். ஆனால், 1981 ஆம் ஆண்டின் பின்னர் நாடளாவிய ரீதியில் முழு அளவில் குடிசன மதிப்பீடு இடம்பெற்றதில்லை.

1983 ஆம் ஆண்டில் நடைபெற்ற இனக்கலவரத்தின் பின்னர் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அரச அடக்கு முறைகளும் பதிலுக்கு வன்முறைகளும் தலைதூக்கின. அதனால் இரண்டு மாகாணங்களிலும் மக்கள் தத்தமது மாவட்டங்களுக்கு உள்ளே இடம்பெயர நேரிட்டது. அதன் காரணமாக வடக்கு, கிழக்கு மாகாணங்களில் குடிசன மதிப்பீட்டைச் சீராகவும் உரியகாலத்திலும் நடத்த முடியவில்லை.

எனினும், தென்னிலங்கைப் பகுதிகளில் அது நடைபெற்றது. மொத்தத்தில் நாடளாவிய மட்டத்தில் குடிசன மதிப்பீடு என்பது அர்த்தமற்றுப் போயிற்று. அதன்பின்னர் குடிசன மதிப்பீட்டுத் திணைக்களத்தின் இந்த ஆண்டுக்கான நாடளாவிய ரீதியிலான குடிசன மதிப்பீடு எதிர்வரும் ஜூலை மாதத்தில் நடைபெறவுள்ளது.

ஆனால் மிகப்புதுமையாக, யாழ்ப்பாண மாவட்டத்திலும் வன்னி மாவட்டத்திலும் அதாவது வட மாகாணத்தில் குடிசன மதிப் பீட்டுத் திணைக்களம் நடத்தும் குடிசன மதிப்பீட்டுக்குப் புறம்பாகப் பாதுகாப்பு அமைச்சும் அந்த வேலையைச் செய்ய உள்ளது!

நினைவுக்கு எட்டிய வரை எந்த நாட்டிலும் தனது சொந்த மக்களை இராணுவமோ அதன் சார்பில் பாதுகாப்பு அமைச்சோ குடிசன மதிப்பீடு நடத்தியதாக இல்லை.

இரண்டாவது உலக மகா யுத்தங்களின் போது கூட, எந்த நாட்டிலும் இராணுவம் - அதன் நிர்வாகத்துக்குப் பொறுப்பான பாதுகாப்புப் பிரிவு - உயிர் தப்பிய பொதுமக்கள் எண்ணிக்கையைக் கணக்கெடுத்ததில்லை. போர்க் களத்திலும் பொதுமக்கள் குடியிருப்புக்கள் மீதான குண்டு வீச்சுக்களின் போதும் இறந்தவர்களினதும் காயமுற்றவர்களினதும் எண்ணிக்கை மட்டுமே அந்தந்த நாட்டு அரசாங்கங்களால் கணக்கில் எடுக்கப்பட்டது.

இப்போதும், அந்த நடைமுறையைத் தழுவியே உள்நாட்டுப் போர்கள் அல்லது ஆயுதக் கிளர்ச்சிகளின் போதும் பலியானோரினதும் இறந்தவர்களினதும் எண்ணிக்கை கணக்கெடுக்கப்படுகின்றது.

மேலும், நாடளாவிய ரீதியிலான புள்ளி விவரத் திணைக்களத்தின் ஆரம்பக் கட்டப் பணிகள், நாட்டின் ஏனைய மாவட்டங்களைப் போன்றே யாழ்ப்பாண மாவட்டத்திலும், வன்னி மாவட்டத்திலும் ஆரம்பிக்கப்பட்டு விட்டன. யாழ்ப்பாண மாவட்டத்தில் முதற்கட்டப் பணிகள் ஏற்கனவே முடிவடைந்து விட்டன.

இப்போது திடீரென, பாதுகாப்பு அமைச்சும் அந்தப் பணியை ஆற்றவுள்ளதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. பாதுகாப்பு அமைச்சின் குடிசன மதிப்பீட்டுப் பணிக்களுக்கென யாழ்ப்பாண மாவட் டத்துக்குக் கொழும்பில் இருந்து விசேட வாகனங்கள் கொண்டு வரப் படவுள்ளன. அதிகாரிகளும் தெற்கில் இருந்து வரவுள்ளனர். அவர்களு டன் உள்ளூர் அரச அதிகாரிகளும், இங்குள்ள ஆசிரியர்களும் பணிக்கு அமர்த்தப்படவுள்ளனர்.

அத்தோடு, குடிசன மதிப்பீடு, புள்ளிவிவரவியல் திணைக்களத்தினால் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட முதற்கட்டப் பணிகளின் அடிப்படையிலேயே பாதுகாப்பு அமைச்சின் மதிப்பீட்டுப் பணிகள் நடைபெறும் என்று தெரிவிக்கப்படுகிறது.

பாதுகாப்பு அமைச்சின் மதிப்பீட்டு பணியின் போது, குறிப்பிட்ட வீட்டில் வதிபவர்கள், காணாமற்போனவர்கள், வெளிநாடுகளில் உள்ளவர்கள், அண்மையில் மரணம் அடைந்தவர்கள், குடும்ப உறுப்பினர்களுடன் வீட்டில் தங்கியிருக்கும் வெளியாள்கள் போன்ற விவரங்கள் பதிவுசெய்யப்படும் என்று நம்பிக்கையாக அறியவந்துள்ளது.

நாட்டின் வேறெந்தப் பகுதியிலும் பாதுகாப்பு அமைச்சு குடிசன மற்றும் புள்ளி விவரங்களை மேற்கொள்வதாக இல்லை. அவ்வாறாயின் யாழ்ப்பாணம், வன்னி மாவட்டங்களில் - வடமாகாணத்தில் - மட்டும் இந்த புதிய ஏற்பாட்டுக்கான காரணங்கள் இன்னும் வெளிப்படுத்தப்படவில்லை.

பாதுகாப்புக் காரணங்களுக்காக என்றும் கூறுவதற்கில்லை. இரண்டு மாவட்டங்களிலும் இராணுவத்தினர் மற்றும் படையினரின் இறுக்கமான பிரசன்னம் நீக்கமற உள்ளது. சிவில் நிர்வாகத்துக்குச் சமாந்தரமாக படைத்தரப்பு நிர்வாகம் உள்ளது. ஆங்காங்கே இராணுவத்தினரும் சமூகப் பணிகளில் ஈடுபட்டு வருகிறார்கள்; பல சந்தர்ப்பங்களில் மக்களோடு அன்னியோன்யமாகவும் பழகுகிறார்கள்.

இத்தகைய ஒரு சூழமைவில் சிவில் நிர்வாகத்தினர் மேற்கொள்ளும் குடிசன மதிப்பீட்டுப் பணியில் - நாட்டின் ஏனைய மாவட்டங்களில் சிவில் நிர்வாகத்தினர் மட்டுமே ஈடுபடும் பணியில் -

குறிப்பிட்ட இரண்டு மாவட்டங்களில் மட்டும் படையினரும் ஈடுபடுவதற்றான முத்தாய்ப்பு என்ன?

இரண்டு மாவட்டங்களில் இருந்தும் இராணுவத்தினரின் எண்ணிக்கையைக் குறைப்பது குறித்தோ அல்லது நீக்குவது குறித்தோ அரசு ஒரு துளியளவேனும் சிந்திக்கமாட்டாது. சிவில் நிர்வாகத்தை மேற்படையாகக் காட்டிக்கொண்டு, அந்தக் கம்பளத்தின் கீழ் இராணுவ நிர்வாகத்தை விரிப்பதற்கான அரசின் முன்னோட்டமான காட்சியே இப்போது விரிந்துகொண்டிருக்கிறது.

குடிசன மதிப்பீடு என்ற பெயரில் எடுக்கப்படும் தகவல்களை வைத்து மக்களுக்கு வேண்டாத நெருக்கடிகளையும் இடுக்கண்களையும் கொடுக்கவும் இம்சிக்கவும் வழிசெய்யப்படுவதாகவே மக்கள் மத்தியில் அச்சம் எழுந்துள்ளது.

யாழ்ப்பாணம், வன்னி மாவட்டங்களில் - வடமாகாணத்தில் - மக்களின் விவரங்களை இராணுவம் பதிவு செய்யக்கூடாது என்று உயர்நீதிமன்றம் தீர்ப்பு வழங்கிய பின்னரும் அது இரண்டு மாவட்டங்களிலும் தொடர்ந்தது. வெளிநாடுகள் சிலவும் அரசிடம் அதிருப்தி வெளியிட்டன. அவற்றை நிறுத்துவதாகக் கூறிக்கொண்டு, குடிசன மதிப்பீடு என்ற வடிவத்தில் அரசு புதிய முத்திரையுடன் தனது பழைய திட்டத்தை முன்னெடுத்துள்ளது.

அவசரகாலச்சட்டத்தையும், பயங்கரவாதத் தடைச் சட்டத்தையும் தொடர்ந்து நீடித்து நடைமுறைப்படுத்துவதற்கும், அவற்றின் கீழ் வடக்கில் மறைமுக இராணுவ ஆட்சியை நடத்தவும் -

ஒரு கட்டத்தில் அதனைப் பூரணமான இராணுவ ஆட்சியாக மாற்றுவதற்கான அரசின் முதலாவது காலடி என்றும் -

பாதுகாப்பு அமைச்சின் குடிசன மதிப்பீட்டுச்செயற்பாட்டைக் கொள்ளவேண்டும். அளவெட்டிச் சம்பவம் போன்றே இதனையும் ஜனநாயகத்துக்கு விழுந்த மற்றொரு அடி எனக்கொள்ளலாம்.

# அமெரிக்காவின் தலைமைத்துவ உச்சி மாநாட்டுக்கு இலங்கையில் இருந்து தமிழ் மாணவிகள் இருவர்


லக்ஷ்மி சரவணபவன்


ராகா ரகுநாதன்

கொழும்பு, ஜூன் 25

உலகின் 30 நாடுகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட, ஆற்றல் மிக்க 300 எதிர்காலத் தலைவர்கள் பங்குகொள்ளும் உச்சி மாநாடு ஒன்று நடைபெறவுள்ளது.

2012 'செயலில் தலைமைத்துவ உச்சி மாநாடு' ஐக்கிய அமெரிக்காவின் ஹாவார்ட் மற்றும் ஸ்ரான்போர்ட் பல்கலைக்கழகங்களில் ஒருவாரத்துக்கு இடம்பெறவுள் ளது. வழமையாக ஒவ்வோர் ஆண்டும் ஜூலை மாதத்தில் இந்த மாநாடு நடைபெற்றுவருகிறது. இந்த முறை இலங்கையிலிருந்து இந்த மாநாட்டில் 33 மாணவத் தலைவர்கள் பங்குகொள்கின்றனர்.

அடுத்த தலைமுறையினருக்கு மிக அரிதாகவே கிடைக்கும் இந்த வாய்ப் பினைப் பெற்ற 33 பேரில் ராகா ரகுநாதன், லக்ஷ்மி சரவணபவன் ஆகிய இரண்டு தமிழ் மாணவர் தலைவர்களும் அடங்குவர்.

நிஷாத் கரீம், அஹில் ரிபாய், ஷிம்மர் மில்பர், ஷெரீன் அக்பர் அலி, மான்ஷா அப் துல்லா, அஹ்லா மிஸ்வர் ஆகிய முஸ்லிம் மாணவத் தலை வர்கள் மற்றும் 24 சிங்கள மாணவத் தலைவர்களும் அடங்குகின்றனர்.

கடந்த 2000 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை 550 இலங்கையைச்சேர்ந்த 16-19 வயதுக்குட்பட்ட மாணவத் தலைவர்களுக்கு இந்த வாய்ப்புக்கிட்டியுள்ளது.

இவர்களில் 470 பேர்வரையில் யேல், ஹவார்ட், ஸ்ரான் போர்ட், ஒக்ஸ்போட் உள்ளிட்ட பல்வேறு வெளிநாட்டுப் பல்கலைக் கழகங்களில் கல்வி வாய்ப்பைப் பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. 1956 இல் ஸ்தாபிக்கப்பட்ட முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஐசனோவர் நிதியத்தின் ஏற்பாட்டில் 'மக்களிடமிருந்து மக்களுக் கான தலைவர்' எனும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் இந்த மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (த)

# யாழ். - கொழும்பு பஸ் சேவைக்கு முறையற்ற வழி அனுமதிப் பத்திரம்

## நாடாளுமன்றத்தில் அநுரகுமார குற்றச்சாட்டு

யாழ். -கொழும்பு பஸ்சேவை நடத்துவதற்காக தமிழ் மக்கள் யாழ்ப்பாணத்தில் காத்திருக்கின்ற நிலையில் வேறு சிலருக்கு முறையற்ற விதத்தில் பஸ் வீதி அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன என்று நாடாளுமன்ற உறுப்பினர் அநுர குமார திஸாநாயக்க நாடாளுமன்றில் கூறினார்.

நாடாளுமன்றில் இடம்பெற்ற போக்குவரத்து திருத்தச் சட்ட மூலம் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இது தொடர்பாக மேலும் தெரிவித்தவை வருமாறு:

யாழ்.- கொழும்பு பஸ் சேவை நடத்துவதற்காக பஸ் வீதி அனுமதிப்பத்திரம் வழங்குவது தொடர்பில் கேள்விப்பத்திரம் கோரியிருக்கின்றபோதிலும் முறையற்ற விதத்தில் சிலருக்கு பஸ் வீதி அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

பஸ் இல்லாதவர்களுக்கும் அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. அனுமதிப்பத்திரங்கள் கிடைக்கப்பெற்ற பின்னரே அவர்கள் பஸ்களைக் கொள்வனவு செய்கின்றனர். ஆனால் பஸ் வைத்திருக்கின்றவர்கள் அனுமதிப்பத்திரங்கள் இல்லாமல் உள்ளனர் - என்றார். (த)

## கடும் வெப்பம் காரணமாக

# நீர் நிலைகள் வற்றியதால் பயிர்கள் அழியும் அபாயம்

தென்மராட்சி, ஜூன் 25

நீர் நிலைகளில் தண்ணீர் திடீரென வற்றியதால் பயிர்கள் அழிந்துபோகும் அபாய நிலை தோன்றியுள்ளது.

சாவகச்சேரி, கல்வயல், விளைவேலி பகுதி விளை நிலங்களில் அப்பகுதி விவசாயிகள் பல்வேறு பயிர்வகைகளை பயிரிட்டுள்ளனர்.

பயிரிட்ட பகுதியில் உள்ள கிணறுகளிலிருந்தும் குளத்திலிருந்தும் நீர் இறைத்து பயிர்களை பராமரித்து வந்தனர்.

இங்குள்ள கிணறுகள், குளம் போன்றவற்றில் கடும் வெப்பம் காரணமாக நீர் குறைந்துள்ளதால் பயிர்களுக்கு பாய்ச்ச வேண்டிய நீரை பாய்ச்ச முடியாத நிலை விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ளது.

இதனால் பயிர்கள் நீரின்றி வாடும் அபாயம் காணப்படுவதாக விவசாயிகள் கவலை தெரி வித்தனர்.

(த-207)

# கிளிநொச்சியில் தேர்தலைக் கண்காணிக்க வருகிறார் மட்டக்களப்பு உதவி ஆணையாளர்

யாழ்ப்பாணம், ஜூன் 25

யாழ். தேர்தல் மாவட்டத்துக்குள் அடங்கும் கிளிநொச்சி மாவட்டத்தின் மூன்று பிரதேச சபைகளுக்கான உள்ளூராட்சி சபைத் தேர்தல் நடவடிக்கைகளை மட்டக்களப்பு மாவட்ட உதவித்தேர்தல் ஆணையாளர் எஸ். ரத்னாயக்கா கண்காணிக்கவுள்ளார்.

இந்தத் தகவலை யாழ். செயலக உயர் அதிகாரியொருவர் தெரிவித்தார். அடுத்த மாதம் 23 ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சிசபைத் தேர்தலில் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த கரைச்சி, பச்சிலைப்பள்ளி, பூநகரி ஆகிய பிரதேச சபைகளுக் கான அனைத்து நடவடிக்கைகளும் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் மேற்கொள்ளப்படவுள்ளன. அங்கு நடைபெறவுள்ள வாக்களிப்பு, வாக்கு எண்ணுதல் ஆகியன உட்பட்ட பல்வேறு நடவடிக்கைகளையும் மட்டக்களப்பு மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் எஸ். ரத்னாயக்கா கண்காணிக்கவுள்ளார். இவர் எதிர்வரும் 19 ஆம் திகதி கிளிநொச்சிக்கு வருகை தந்து அங்கு கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடவுள்ளார் என்றார் அந்த அதிகாரி.

(த-9)

# மினி சூறாவளியால் 11 வீடுகள் வடமராட்சி வடக்கில் சேதம்

வடமராட்சி, ஜூன்.25

வடமராட்சி வடக்குப் பிரதேசத்தில் கடந்த ஒரு வாரத்துக்கு முன்னால் வீசிய மினி சூறாவளியினால் 11 வீடுகள் பகுதிச் சேதமடைந்துள்ளதாக பருத்தித்துறை வடமராட்சி வடக்குப் பிரதேச செயலர் இ.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

அத்துடன் வியாபாரி மூலைச் சந்தியில் உள்ள மயிலிட்டித்துறை மீனவர் கூட்டுறவுச் சங்கமும் சேதத்துக்குள்ளாகியதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

கடந்த 17 ஆம் திகதி மாலை 6.30 மணியளவில் சுமார் 20 நிமிடங்கள் வரை வீசிய மினி சூறாவளியினால் ஏற்பட்ட இந்தச் சேத விவரம் யாழ். மாவட்ட அரச அதிபருக்கு பிரதேச செயலகத்தினால் அனுப்பிவைக்கப் பட்டுள்ளது.

(த-236)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.ஆஸ்பத்திரியில் தாய்,சேய் மரணம் இவ்வாண்டு இரு மடங்காக அதிகரிப்பு

## வைத்திய அதிகாரி திருமகள் தகவல்

யாழ்ப்பாணம், ஜூன் 25

யாழ்.போதனா வைத்திய சாலையில் தாய் சேய் மரண வீதம் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் இந்த ஆண்டு இரண்டு மடங்காக அதிகரித்துள்ளதாக தாய் சேய் வைத்திய அதிகாரி திருமதி திருமகள் சிவசங்கர் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

யாழ். போதான வைத்திய சாலையில் தாயும் சேயுமாக இதுவரை 5 மரணங்கள் நிகழ்ந்துள்ளன. ஊர்காவற்றுறை, கிளிநொச்சி, புன்னாலைக்கட்டுவன், பருத்தித்துறை, மன்னார் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த தாயும் சேயுமே இவ்வாறு மரணமாகியுள்ளார்கள்.

கடந்த வருடம் முழுவதுமாக ஐந்து தாய் சேய் மரணங்களே நிகழ்ந்துள்ளன. இருப்பினும் இந்த வருடத்தின் அரையாண்டுக்குள் 5 தாய் சேய் மரணங்கள் நிகழ்ந்துள்ளன.

மேலும் ஒரு வயதுக்குட்பட்ட குழந்தைகளின் மரணம், முதல் மூன்று மாதங்களில் மட்டும் 31 ஆக உள்ளது. பிறந்து ஒரு வாரத்தினுள் 10 குழந்தைகளும், ஒரு மாதத்தினுள் 6 குழந்தைகளும் அதன் பின்னரான காலப் பகுதியில் 15 குழந்தைகளும் மரணமாகியுள்ளன - என்றார்.

இத்தகைய திடீர் அதிகரிப்புக்கான காரணம் தொடர்பாக அவரிடம் கேட்டபோது,

தாய்மார் கர்ப்ப காலத்தில் சரியான மருத்துவ முறைகளையும் வைத்தியசாலைகளையும் நாடாமல் தவறான வழிநடத்தலில் உள்ள வைத்தியசாலைகளுக்குச் செல்கின்றனர். அத்துடன் ஒரே சுகாதார வைத்திய அதிகாரி பிரிவின் கீழ் அவர்கள் இருப்பதில்லை. அவர்கள் அடிக்கடி இடம்மாறுவதனால் அவர்கள் தொடர்பான விவரங்களை பேணமுடியாமையும் இதற்கு ஒரு காரணமாகும் என்றார். (த-154)

## மாதகலில் நேற்று இரவு

# மதுபோதையில் வந்த குழு தம்பதியரைத் தாக்கியது

யாழ்ப்பாணம், ஜூன் 25

மாதகல் பிரதேசத்தில் மது போதையில் வந்த குழு ஒன்றினால் கணவன்- மனைவி இருவரும் கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளதாக இளவாலைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்று இரவு இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாதகல் பிரதேசத்தில் கடந்த சில தினங்களாக இளைஞர்கள் சிலர் குழுவாக இணைந்து மது அருந்திவிட்டு வீதியில் நின்று இடையூறு விளைவிப்பதுடன் வீடுகளுக்குள் இருப்பவர்களையும் வம்புக்கு இழுத்துச் சண்டை போடுவதாகவும், இதனை அந்தப் பகுதியில் கடை வைத்திருக்கும் தாம் தட்டிக் கேட்டபோதே தாக்கப்பட்டதாகவும் தம்பதியரின் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாதகலைச் சேர்ந்த சந்திரபாலன் (வயது-35), உஷாநந்தினி (வயது-32) ஆகிய இருவருமே இளைஞர்களால் தாக்கப்பட்ட நிலையில் தலையில் பலத்த காயங்களுடன் சங்கானைப் பிரதேச வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள். (த-313)

# கூட்டுறவு அமைப்புக்களின் அபிவிருத்தி குறித்து ஆராய்வு

யாழ்ப்பாணம், ஜூன் 25

குடாநாட்டில் உள்ள கூட்டுறவுச் சங்கங்களின் அபிவிருத்தி தொடர்பாகவும், அவற்றின் எதிர்காலச் செயற்பாடுகள் தொடர்பாகவும் விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

இது குறித்த கலந்துரையாடல் ஒன்று கடந்த புதன்கிழமை கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே.அருந்தவநாதன் தலைமையில் நடைபெற்றது.

வடமாகாணக் கூட்டுறவு ஆணையாளராகப் புதிதாகப் பதவியேற்றுள்ள திருமதி மதுமதி வசந்தகுமாரும் இதில் கலந்துகொண்டார்.

குடாநாட்டில் இயங்கும் கூட்டுறவுச் சங்கங்களின் செயற்பாடுகளை வினைத்திறன் உள்ளவையாக மாற்றும் ஆலோசனைகள் இந்தக் கலந்துரையாடலில் முன் வைக்கப்பட்டுள்ளன. கூட்டுறவு அமைப்புக்கள் மீது மக்களை நம்பிக்கை கொள்வதற்கான முயற்சிகள் குறித்தும் இதில் விரிவாக ஆராயப்பட்டது.

இலாபத்தில் இயங்கும் சங்கங்களின் செயற்பாடுகளை மேலும் அதிகரிப்பதற்கும், நட்டத்தில் உள்ள சங்கங்களை முன்னேற்றுவதற்கும் உரிய ஆலோசனைகள், வழிகாட்டல்கள் என்பன இதில் வழங்கப்பட்டன.

இந்தக் கலந்துரையாடலில் சகல கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர். (த-26)

## மங்களகரமான...



வழியனுப்புதல்: இணுவில் மத்திய கல்லூரி க.பொ.த உயர் தர மாணவர்களின் ஒன்றுகூடல் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.தேசிய கல்வியியல் கல்லூரியின் விரிவுரையாளர் பா.தனபாலன் மங்களவிளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைக்கிறார். கல்லூரியின் அதிபர் அ.சதானந்தன் உயர்தர மாணவர் மன்றத்தின் தலைவர் செல்வன் சி.செங்கோன் ஆகியோரும் அருகில் உள்ளனர். (த-11)

# கட்டுவன் மக்களுக்கு வாழ்வாதார உதவி

யாழ்ப்பாணம்,ஜூன்.25

வன்னியில் இருந்து வந்து மீளக்குடியமர்ந்துள்ள கட்டுவன்,மயிலிட்டி தெற்கு வாழ் மக்களுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கப்படவுள்ளன.

இதற்கான ஏற்பாட்டை பாலர்ஞானோதயச் சங்கம் - ஐக்கிய இராச்சியம் அமைப்பு மேற்கொண்டுள்ளது.

வன்னியிலிருந்து மீண்ட இந்தக் கிராமங்களின் மக்கள் சிறப்பாகக் குடும்ப உறுப்பினர்களை இழந்தோர், ஊனமுற்றவர்கள் குரும்பசிட்டியிலுள்ள கிராம அபிவிருத்திச் சங்கச் செயலகத்தில் உரியபடிவங்களைப் பெற்றுப் பூர்த்தி செய்து இந்த மாத முடிவுக்குள் அங்கு கையளிக்கும்படி மேற்படி சங்கத் தலைவர் ஆ.சி. நடராஜா கேட்டுள்ளார். (த)

# தையல் கண்காட்சி நேற்று



யாழ்ப்பாணம், ஜூன் 25

'சிங்கர்' தையல் இயந்திரக் கம்பனியின் தையல் கண்காட்சி நேற்றுவெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் கிறீன் கிறாஸ் ஹோட்டலில் நடைபெற்றது.

கண்காட்சியை 'சிங்கர்' நிறுவன பிரதம நிறைவேற்று அதிகாரி அசோகா பீரிஸ் திறந்து வைத்தார்.

இந்த நிறுவனம் கடந்த 160 வருடங்களாக வியாபாரத்துறையில் இருப்பதாகவும், தையல் இயந்திரங்களை விற்பனை செய்வது மட்டுமே அதன் தொழிற்பாடல்ல என்றும் தெரிவித்த பிராந்திய முகாமையாளர் மாணிக்கவேல் மகேசரட்ணம் அதன் பயன்பாடுகளைப் பற்றி மக்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும் என்பதற்காக 'சிங்கர்' அக்கடமியும் உருவாக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

63 கிளைகளில் சுமார் 2500 மாணவிகள் தையல் பயிற்சிகள் தொடர்பான கற்கைநெறிகளை மேற்கொள்வதாகவும் அவர் மேலும் கூறினார்.

'சிங்கர்' அறிமுகப்படுத்தியுள்ள நவீன இயந்திரங்களைப் பயன்படுத்தி மாணவிகளுக்குப் பயிற்சிகள் வழங்கப்படுவதாகவும், யாழ்ப்பாணத்தில் 'சிங்கர்' நிறுவனக் கிளைகள் ஊடாக பாடசாலை மாணவிகளுக்கும் இந்தக் கற்கை நெறியை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் கண்காட்சி முகாமையாளர் தம்மிக டீஅல்விஸ், ஆசிரியை காஞ்சனா பெரேரா, விற்பனைப் பணிப்பாளர் குமாரசிங்க, சந்தைப்படுத்தல் பணிப்பாளர் நசார் மஜித் ஆகியோரும் கலந்து கொண்டனர். (த-7)

# வங்கியில் வைப்பிலிடக் கொடுத்த பணத்துடன் பணியாளர் தலைமறைவு

## 2 லட்சம் ரூபாவும், மோ. சைக்கிளும் பறிபோனது

ஊர்காவற்றுறை, ஜூன் 25

வங்கியில் வைப்பிலிடுவதற்காகக் கொடுத்தனுப்பிய பணத்துடன் நிறுவனப் பணியாளர் தலைமறைவாகியுள்ளார்.

உடுப்பிட்டியில் அமைந்துள்ள ஹோட்டல் ஒன்றில் பணிபுரிந்து வந்த இரத்தினபுரி, றக்குவானை பிரதேசத்தைச் சேர்ந்த பாலகிருஷ்ணன் ரமேஸ் என்ற இளைஞனே இவ்வாறு தலைமறைவாகியுள்ளார்.

இவர் வங்கியில் வைப்பிலிடுவதற்காக கொடுத் தனுப்பிய பணம் ஒரு லட்சத்து 75 ஆயிரம் ரூபா, நிறுவன முகாமையாளரின் பணப்பையினுள் இருந்த 28 ஆயிரம் ரூபா, வங்கிக்கு சென்று வருவதற்காக இரவல் வாங்கிய 'ஸ்கூட்டி பெப்' மோட்டார் சைக்கிள் ஆகியவற்றுடன் தலைமறைவாகியுள்ளார்.

இது பற்றி மேலும் தெரிய வருவதாவது:-

இந்தப் பணியாளர் நெல்லியடியில் உள்ள வங்கிக் கிளை ஒன்றுக்கு பணத்தை வைப்பிலிடுவதற்காக முகாமையாளரால் அனுப்பி வைக்கப்பட்டிருந்தார். வங்கிக்குச் சென்றவர் நீண்ட நேரமாகியும் திரும்பாததால் சந்தேகம் கொண்ட நிறுவன முகாமையாளர் வங்கியுடன் தொடர்பு கொண்டபோது குறித்த நபர் வங்கியில் பணத்தை வைப்பிலிடாதது தெரியவந்தது.

நிறுவன முகாமையாளரின் பணப்பையினுள் இருந்த 28 ஆயிரம் ரூபா பணம் காணாமல் போன விடயமும் அப்போது தெரியவந்தது.

இந்தச் சம்பவம் குறித்து நிறுவன உரிமையாளர் வல்வெட்டித்துறைப் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார். இந்தச் சம்பவம் கடந்த 16 ஆம் திகதி இடம்பெற்றது. (த-127)

# கைதடி முதியோர் இல்லத்துக்கு 5 மில்லியன் ரூபா

யாழ்ப்பாணம், ஜூன் 25

கைதடி முதியோர் இல்லத்தின் புனரமைப்புப் பணிகளுக்கு சமூக சேவைத் திணைக்களத்தால் 5 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக இல்லத்தின் அத்தியட்சகர் என்.இராஜலிங்கம் தெரிவித்தார்:

தற்போது கைதடி முதியோர் இல்லத்தில் 176 முதியோர்கள் தங்கியுள்ளனர், இங்கு 200 முதியோர்கள் தங்குவதற்கு வசதியாக இல்லத்தில் புதிய கட்டடங்கள் அமைக்கப்படவுள்ளன.

கட்டடத் திணைக்களத்தின் மதீப்பீட்டு நடவடிக்கைகள் முடிவடைந்தவுடன் கட்டடப் பணிகள் ஆரம்பிக்கப்படும்.

இந்த வருட இறுதிக்குள் கைதடி முதியோர் இல்லம் சகல வசதிகளுடனும் தனது செயற்பாடுகளை வழங்கும் என்றார்.- இராஜலிங்கம். (த-313)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.குடாநாட்டில் மின்சார சபையின் 'ஜாலம்' அரச, தனியார் அலுவலகங்கள், வங்கிகள் பாதிப்பு

## மின்வெட்டால் பொதுமக்கள், மாணவர்கள் சிரமம்

யாழ்ப்பாணம், ஜூன் 25

யாழ்.குடாநாட்டில் கடந்த சில தினங்களாகக் கால நேரமின்றி அடிக்கடி இடம்பெற்று வரும் மின்வெட்டுக் காரணமாக பொதுமக்களின் அன்றாட அலுவல்கள் பல தடைப்பட்டுள்ளதுடன் அரச மற்றும் தனியார் நிறுவனங்களின் பணிகளும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

இந்த மின்வெட்டுக் குறித்துப் பொதுமக்கள் அரச அலுவலகங்கள் எனப் பலரும் தமது விசனத்தை வெளிப்படுத்தியுள்ளனர்.

இந்த மின்வெட்டு ஆரம்பமாகிச் சில தினங்கள் கடந்துவிட்டபோதும் அதனைச் சீர் செய்வதற்கு மின்சார சபை அதிகாரிகள் இதுவரை நடவடிக்கை மேற்கொள்ளாமை குறித்தும் பலரும் அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

'நொதேர்ன் பவர்' நிறுவனம் மின் விநியோகத்தை நிறுத்தியுள்ளதாகவும், அந்த நிறுவனத்தின் மின் பிறபாக்கிகளுக்கு டீசல் இன்மையே இதற்குக் காரணம் என்றும், இதனாலேயே மின்வெட்டு அமுல்படுத்தப்படுகின்றது என்றும் மின்சார சபையின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மின் பிற்பாக்கிகளின் செயற்பாட்டையும், அவைகளுக்கான எரிபொருள் ஏற்பாடுகளையும் கவனித்துக் கொள்ளவேண்டிய பொறுப்பு மின்சார சபையின் அதிகாரிகளுக்கு உரியது. டீசல் முடிவடைய உள்ளமை இந்த அதிகாரிகளுக்கு முன்னரே தெரியாதா? எனவும் மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

மக்களுக்கான அத்தியாவசிய சேவைகளில் ஒன்றாக மின்சாரம் உள்ளது. அதில் தடை ஏற்பட்டால் அனைத்தும் தடைப்படும் என்பது மின்சார சபையின் அதிகாரிகளுக்குத் தெரியாதா? என்ற கேள்வியும் எழுந்துள்ளது.

அலுவலகங்களில் எப்போது மின்சாரம் தடைப்படும் என்ற ஏக்கத்துடனேயே அவசர அவசரமாகப் பணிகளை மேற்கொள்வதில் ஊழியர்கள் ஈடுபட்டுள்ளனர்.

குறிப்பாக அரச அலுவலகங்கள், வங்கிகள் என்பற்றில் பணிகளை முன்னெடுப்பதற்கு இந்த மின்வெட்டு பெரும் தடையாக உள்ளது. இந்த நிறுவனங்களுக்குத் தமது அன்றாட அலுவல்களை மேற்கொள்ள வரும் பொதுமக்களும் மணிக்கணக்கில் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்படுகின்றது. வீடுகளில் மக்கள் தண்ணீர்த் தாங்கிகளுக்கு நீரை நிரப்பமுடியாமல் சிரமப்படுகின்றார்கள்.

**எரிபொருள் நிலையங்களில் அலைமோதும்ள மக்கள்.**

அத்துடன் அடிக்கடி மின்வெட்டு இடம்பெறுவதால் எரிபொருள் நிலையங்களிலும் கூட்டம் அலைமோதுகின்றது. மின்சாரம் வரும் வரை எரிபொருள் நிலையங்களில் காத்திருக்கவேண்டி ஏற்படுவதாக வாகனச் சாரதிகள் தெரிவிக்கின்றனர்.

அடிக்கடி மின்தடை ஏற்படுவதால் தொலைக்காட்சி, கணினி உட்படப் பல்வேறு இலத்திரனியல் உபகரணங்களும் பழுதடைந்து வருவதாகவும் இதனால் பெரும் நஷ்டத்தை எதிர்நோக்கி வருவதாகவும் பொதுமக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இம்முறை நடைபெறவுள்ள ஜி.சீ.ஈ.உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தம்மைத்தயார்படுத்தும் மாணவர்களும் இந்த மின்வெட்டினால் சிரமங்களை எதிர்கொள்வதாகப் பெற்றோர் தரப்பில் விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

ஒவ்வொரு வருடமும் பரீட்சைக் காலங்களில் மின்தடை வருவது குறித்து பெற்றோர்கள் ஒரு சிலர் ஆச்சரியமும் அதிருப்தியும் தெரிவித்தனர்.

எனவே இது குறித்து உரிய அதிகாரிகள் உடன் நடவடிக்கை எடுத்து சீரான மின்விநியோகத்தை வழங்குவதற்கான ஏற்பாடுகளைத் தாமதமின்றி செய்ய வேண்டும் என வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

(த-9-26-86-100-236)

# தோப்புக்காடு வீதியை புனரமைக்குமாறு கோரிக்கை

காரைநகர்,ஜூன்.25

காரைநகர், தோப்புக்காடு கடற்கரை வீதியைப் புனரமைத்துத் தருமாறு அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடற்படையினரின் கட்டுப்பாட்டில் இருந்த தோப்புக்காடு பிரதேசம் கடந்த வருடமே மக்கள் முழுமையாக குடியேற அனுமதிக்கப்பட்டது. மக்கள் மீளக்குடியமர்ந்து வரும் இந்தக் கிராமத்தின் பிரதான வீதியான கடற்கரை வீதி மிக மோசமாகச் சேதமடைந்து இருப்பதால் இந்த வீதி ஊடாகச் செல்வோர் பெரும் சிரமங்களை எதிர் நோக்குகின்றனர்.

அத்துடன் தோப்புக்காடு மறைஞானசம்பந்தர் வித்தியாலயமும் இந்த வீதியிலேயே அமைந்துள்ளது.

இதனால் பாடசாலை மாணவர்கள் உள்ளிட்ட அனைத்து தரப்பினரும் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். எனவே இந்த வீதியை உடனடியாக புனர்மைத்துத் தருமாறு இந்தப் பகுதி மக்கள் உரிய அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (த-250)

# வீதி ஓரங்களில் நிறுத்தப்படும் வாகனங்கள் பொலிஸ் நிலையத்துக்கு

## யாழ். பொலிஸார் அதிரடி நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 25

யாழ்.நகரப் பகுதியில் உள்ள முக்கிய வீதிகளின் ஓரங்களில் சைக்கிள்கள், மோட்டார் சைக்கிள்கள் ஆகியவற்றை நிறுத்துவதற்குப் பொலிஸார் தடை விதித்துள்ளனர்.

இவ்வாறு நிறுத்தப்படும் சைக்கிள்கள், மோட்டார் சைக்கிள்கள் என்பன பொலிஸாரால் பொலிஸ் நிலையத்துக்கு எடுத்துச் செல்லப்படுகின்றன.

எந்த நேரமும் போக்குவரத்து அதிகரித்துக் காணப்படும் யாழ். நகர் பகுதி வீதிகளின் ஓரங்களில் வாகனங்கள் நிறுத்தப்படுவதால் போக்குவரத்து நெருக்கடி ஏற்படுகின்றது. எனவே இந்த வீதிகளின் ஓரங்களில் வாகனங்களை நிறுத்தவேண்டாம் என யாழ்.பொலிஸார் அறிவுறுத்தி வருகின்றனர். இவ்வாறு வாகனங்களை நிறுத்துவோர் மீது எதிர்காலத்தில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர்கள் அறிவித்துள்ளனர்.

கஸ்தூரியார் வீதி, கே.கே.எஸ்.வீதி, ஆஸ்பத்திரி வீதி, மின்சார நிலைய வீதி, ஸ்ரான்லி வீதி ஆகிய முக்கிய வீதிகளில் கடந்த புதன், வியாழன் ஆகிய தினங்களில் இவ்வாறு போக்குவரத்துக்கு இடையூறாக நிறுத்தப்பட்டிருந்த சைக்கிள்கள், மோட்டார் சைக்கிள்கள் என்பவற்றை பொலிஸார் பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு சென்றுள்ளனர்.

(த-26)

## நுளம்பை ஒழிக்க...



படையினரும்: தேசிய நுளம்பு கட்டுப்பாட்டு வாரத்தை முன்னிட்டு டெங்கு நோயின் பரம்பலைக் குறைப்பதற்கு நேற்று முன்தினம் வியாழக்கிழமை வேலணை பிரதேச செயலக ஊழியர்களும், தீவக கடற்படையினரும் இணைந்து வேலணை பிரதேச செயலக வளவில் உள்ள பற்றைகளை சிரமதானம் மூலம் துப்புரவு செய்தனர்.(த-167)

# பண்டத்தரிப்பு கிராம அலுவலகத்தை மீண்டும் செயற்படுத்த நடவடிக்கை

நவாலி, ஜூன்25

கடந்த காலத்தில் இடம்பெற்ற யுத்தத்தின்போது முற்றாக சேதமடைந்த நிலையிலுள்ள பண்டத்தரிப்பு கிராம உப அலுவலகத்தை மீளவும் கட்டியெழுப்புவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன் முதல் நடவடிக்கையாக அலுவலகம் அமைந்திருந்த காணியின் எல்லைகள் அமைக்கப்படவுள்ளன. இதற்கு அருகிலுள்ள காணிகளின் உரிமையாளர்கள் தமது காணிக்குரிய ஆவணங்களுடன் வலி. தென்மேற்கு பிரதேச சபைக்கு வருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதே போன்று பண்டத்தரிப்பு காடாப்புலத்திலுள்ள பிரதேச சபைக்கு சொந்தமான காணியில் பல கட்டடங்கள் நிறுவப்படவுள்ளன.

இதன் காரணமாக இதன் அருகிலுள்ள எல்லைகளும் நிர்ணயிக்கப்படவுள்ளன. ஆதலால் இதனுடன் இணைந்துள்ள காணிச் சொந்தக்காரர்களும் தமது உறுதிகள், வரைபடங்கள் என்பவற்றையும் எடுத்து வந்து சமர்ப்பிக்குமாறும் எல்லைகள் நிர்ணயம் செய்யப்பட்ட பின்னர் வந்து சேரும் முறைப்பாடுகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாதென்றும் பிரதேச சபையின் செயலாளர் பு.சிவலிங்கம் அறிவித்துள்ளார்.

(த-100)

# புதிய அங்கத்தவரை இணைப்பதில் சங்கங்கள் ஆர்வம் காட்டவில்லை

## கூட்டுறவு ஆணையாளர் கவலை

யாழ்ப்பாணம், ஜூன் 25

யாழ்.குடாநாட்டில் உள்ள சில கூட்டுறவு அமைப்புக்கள் புதிதாக அங்கத்தவர்களை இணைப்பதில் அதிக அக்கறை காட்டாமல் இருப்பது குறித்து கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே. அருந்தவநாதன் கவலை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

சர்வதேச கூட்டுறவு தின விழாவை முன்னிட்டு கடந்த முதலாம் திகதி தொடக்கம் எதிர்வரும் 30 ஆம் திகதி வரை இந்தப் புதிய அங்கத்தவர்களை இணைக்கும் திட்டம் அமுல்படுத்தப்பட்டு வருகின்றது.

இந்தக் காலப்பகுதியில் மக்கள் தத்தம் கிளை நிலையங்களில் அங்கத்தவராக இணைந்து கூட்டுறவை வளர்க்க முன்வர வேண்டும். இந்தச் செயற்பாடுகளுக்குச் சகல கூட்டுறவுப் பணியாளர்களும் முழுமையான ஒத்துழைப்பு வழங்கவேண்டும்.

சில பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக்கிளைகளில் இந்தச் செயற்பாடுகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை

புதிய அங்கத்தவர்களை இணைப்பதற்கு ஒரு சில சங்கங்களின் தலைமைத்துவங்கள் பின்னடித்தும் வருகின்றன என்றார். (த-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழக ஆர்ப்பாட்டங்களால் அடிபணிந்தது இலங்கை

**'த ஹிந்து' பத்திரிகை தகவல்**

தமிழக ஆர்ப்பாட்டங்கள் மற்றும் இந்திய அரசின் அழுத்தங்களுக்கு இலங்கை அரசு அடிபணிந்துள்ளமை மற்றுமொரு முறை புலனாகிறது என்று த ஹிந்து பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் உள்ள இந்தியத் தூதரக சிரேஷ்ட அதிகாரி வீ.மஹாலிங்கத்தை மேற்கோள்காட்டி, த ஹிந்து பத்திரிகை இதனைத் தெரிவித்துள்ளது.

கடந்த 20ஆம் திகதி கைது செய்யப்பட்ட மீனவர்கள் இரண்டு தடவைகள் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டனர். இதனையடுத்து அவர்களை எதிர்வரும் முதலாம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்க, மன்னார் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதனடிப்படையில் மேற்படி மீனவர்கள் விரைவில் விடுவிக்கப்படுவர் என்று இலங்கைத் தூதரகம் அறிவித்தது.

இதனையடுத்து இலங்கையில் தமிழ்நாட்டு மீனவர்கள் கைது செய்யப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து நடத்திய போராட்டத்தை, தமிழக மீனவர்கள் இடை நிறுத்தியுள்ளனர்.

தமிழக அரச அதிகாரிகளுடன் இடம்பெற்ற பேச்சின் பின்னர் இந்தப் போராட்டம் கைவிடப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன் அடிப்படையில் அவர்கள் நாளைய தினம் முதல் தொழிலுக்குத் திரும்புவதாக உறுதியளித்துள்ளனர்.

அத்துடன் தமது பிரச்சினைகள் குறித்து பேசுவதற்காக, மாதாந்தம் தமிழக முதல்வர் ஜெயலலிதா ஜெயராமுடனான சந்திப்பு ஒன்றை ஏற்பாடு செய்து தருமாறு அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதற்கிடையில் இலங்கையில் கைது செய்யப்பட்ட தமிழக மீனவர்களின் குடும்பங்களுக்கு அவர்கள் விடுவிக்கப்படும் வரையில் நாளாந்தம் 50 ரூபா மேலதிக கொடுப்பனவாக வழங்க தமிழக அரசு இணங்கியுள்ளது. (வ)

# செல்வந்தர்களை உருவாக்கும் ஆசிய நாடுகள் வரிசையில் 6ஆவது இடத்தில் இலங்கை

செல்வந்தர்களை உருவாக்கும் ஆசிய நாடுகள் வரிசையில் இலங்கைக்கு ஆறாவது இடம் கிடைத்துள்ளது.

மெரில் லிண்ட் மற்றும் கெப் ஜெமினி ஆகிய நிறுவனங்கள் கூட்டிணைந்து மேற்கொண்ட ஆசியாவில் செல்வந்தர்களை உருவாக்கும் பலம் கொண்ட நாடுகள் தொடர்பிலான ஆய்வுகளின் மூலம் மேற்கண்ட தகவல் வெளியிடப்பட்டது.

ஹொங்கொங் மற்றும் வியட்னாம் என்பன நூற்றுக்கு முப்பத்து மூன்று வீதம் வேகமான வளர்ச்சியுடன் அதிக எண்ணிகையான செல்வந்தர்களை உருவாக்கிய நாடுகள் தொடர்பான பிரஸ்தாப பட்டியலில் முன்னிலை வகிக்கின்றன. இந்தோனேசியா, சிங்கப்பூர் மற்றும் இந்தியா ஆகியவை இலங்கையை விட முன்னிலையில் அந்தப் பட்டியலில் இடம் பிடித்துள்ளன.

இதேவேளை முதல் தடவையாக ஐரோப்பிய நாடுகளை விட ஆசியாவில் செல்வந்தர்கள் தொகை அதிகரித்துள்ளமை குறித்தும் பிரஸ்தாப அறிக்கையின் புள்ளி விவரங்கள் மூலம் தெரியவந்துள்ளது. (வ)

# பிரிட்டனில் 555 இலங்கையர்களுக்கு அரசியல் தஞ்சக் கோரிக்கை நிராகரிப்பு

பிரிட்டனில் அரசியல் தஞ்சம் கோரிய 555 பேருக்கு அந்தக்கோரிக்கை மறுக்கப்பட்டுள்ளது என்று பிரிட்டன் எல்லை முகவரகத்தின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த 2010 ஆம் ஆண்டு முன்னைய வருடங்களைக் காட்டிலும் பிரிட்டனில் அரசியல் தஞ்சம் கோரிய இலங்கையர்களின் எண்ணிக்கை வெகுவாகக் குறைவடைந்திருந்தது.

அத்துடன் முன்னைய வருடங்களை விட கடந்த வருடம் அரசியல் தஞ்சம் கோரியவர்களில் அனேகமானவர்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன.கடந்த வருடம் 1360 இலங்கையர் கள் பிரிட்டனில் அரசியல் தஞ்சம் கோரும் முயற்சிகளை மேற்கொண்டிருந்தனர். அவர்களில் 805 பேருக்கு மட்டுமே அரசியல் தஞ்சம் வழங்கப்பட்டுள்ளதாகவும் எல்லை முகவரகம் குறிப்பிட்டுள்ளது.

அத்துடன் கடந்த வருடம் அரசியல் தஞ்சம் மறுக்கப்பட்ட 555 பேர் எதிர்காலத்தில் இலங்கைக்குத் திருப்பியனுப்பப்படுவதற்கான காத்திருப்போர் பட்டியலில் உள்வாங்கப்பட்டுள்ளதாகவும் அந்த புள்ளி விவரத்தில் இருந்து மேலும் தெரிய வருகின்றது. (வ)

# நாடு கடத்தலுக்கு எதிராக சுவிற்ஸர்லாந்தில் ஈழத் தமிழர்கள் கையெழுத்துப் போராட்டம்

சுவிற்ஸர்லாந்தில் வசிக்கும் இலங்கைத் தமிழர்கள் பலர் தம்மை நாடு கடத்த வேண்டாம் என்று கோரி பேர்னில் கையெழுத்துப் போராட்டம் ஒன்றில் நேற்று முன்தினம் ஈடுபட்டனர்.

சுவிஸுக்கு அரசியல் தஞ்சம் கோரி வந்த இலங்கைத் தமிழர்களில் 2225 பேர் வரையானோர் கடந்த வருட இறுதியில் நாடு கடத்தப்பட வேண்டிய நிலைமையை எதிர்கொண்டு உள்ளனர்.

ஆனால் நாட்டுக்கு திருப்பி அனுப்பப்படுகின்ற பட்சத்தில் சித்திரவதைகள், அச்சுறுத்தல்கள், உயிராபத்துக்கள் ஆகியவற்றை எதிர்கொள்கின்றமைக்கு நேரலாம் என்று அஞ்சுகின்றார்கள்.

இந்தநிலையில் தமிழீழ சுவிஸ் கழகம் உட்பட புலம்பெயர் தமிழர் அமைப்புக்களின் ஏற்பாட்டில் கையெழுத்துப் போராட்டம் ஒன்று நடத்தப்பட்டது.

இந்தக் கோரிக்கைக்கு ஆதரவாக 4844 கையொப்பங்கள் சேகரிக்கப்பட்டன. (வ)

# இத்தாலியில் சந்தேகத்தில் கைதாகிய 30 தமிழரும் நீதிமன்றால் விடுதலை

இத்தாலியில் புலிகள் என்ற சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்ட 30 தமிழர்களும் குற்றமற்றவர்கள் என்று நேற்று முன்தினம் நீதிமன்றத்தினால் விடுதலை செய்யப்பட்டுள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது. இத்தாலி நாட்டில் கடந்த மூன்று ஆண்டுகளிற்கு முன்னர் பயங்கரவாத செயல்களில் ஈடுபட்டு வந்தனர் என குற்றம் சுமத்தப்பட்டு புலிகளின் உறுப் பினர்கள் என குறித்த 30 பேரும் கைது செய் யப் பட் டிருந்தனர்.

இவர்களை விசாரணை செய்த இத்தாலிய நீதிமன்றம் குற்றமற்றவர்கள் என தீர்ப்பளித்தது.

மேற்படி நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பானது இத்தாலியிலுள்ள புலம்பெயர் தமிழர்களுக்குக் கிடைத்த முதல் வெற்றி எனவும் அங்குள்ள தமிழர்கள் தெரிவித்துள்ளனர். (வ)

# கடந்த ஆண்டில் சிறையிலிருந்து 251 கைதிகள் தப்பியோட்டம்

**சிறைச்சாலைகள் திணைக்கள செயற்பாட்டறிக்கையில் தகவல்**

கடந்த 2010ஆம் ஆண்டில் சிறைச்சாலையிலிருந்து சிறைக் கைதிகள் மற்றும் சந்தேக நபர்கள் 251 பேர் தப்பியோடியுள்ளதாக நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்ட சிறைச்சாலைகள் திணைக்களத்தின் 2010ஆம் ஆண்டுக்கான செயற்பாட்டு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதற்கமைய வெலிக்கடைச் சிறைச்சாலையிலிருந்து 43 பேரும், கண்டி போகம்பரை சிறைச்சாலையிலிருந்து 14பேரும், மகர சிறைச்சாலையிலிருந்து 21பேரும், பல்லேகலை சிறைச்சாலையிலிருந்து 26 பேரும், தங்காலை சிறைச்சாலையிலிருந்து 9 பேரும், வட்ரெக்கை திறந்தவெளி சிறை முகாமிலிருந்து 13பேரும், அம்பேபுஸ்ஸ சிறைச்சாலையிலிருந்து 9 பேரும், குருவிற்றை சிறைச்சாலையிருந்து 11 பேரும் தப்பியோடியுள்ளனர். இதனிடையே, 2010ஆம் ஆண்டில் சிறைக் கைதிகள் மற்றும் சந்தேக நபர்கள் எவ்வாறு மரணமடைந்துள்ளமை தொடர்பான விசாரணைகள் நடத்தப்பட்டுள்ளன. அந்த மரணங்கள் அனைத்தும் இயற்கை மரணங்களே என மரண விசாரணை அறிக்கைகள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதே ஆண்டில் ஆயுள் தண்டனைக் கைதிகள் 200 பேரை வெலிக்கடை மஹர மற்றும் போகம்பரை சிறைச்சாலைகளில் தங்க வைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் 2010 டிசெம்பர் 31ஆம் திகதியில் சிறைத்தண்டனைகளுக்கு உள்ளாகியுள்ளோரின் எண்ணிக்கை 1லட்சத்து 28ஆயிரத்து 597 பேர் எனவும் அறிக்கை தெரிவித்துள்ளது.

(வ-22)

- தபால் மூலம் -
ஆறு மாத கால டிப்ளோமா
Course Length - Six Month
20
JUNE 2011 TO NOVEMBER 2011
தமிழ் மொழி மூலம்

Dip. in Psychology - உளவியல் டிப்ளோமா
Dip. in Office Administration - காரியாலய நிர்வாக டிப்ளோமா
Dip. in Human Resources Management - மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Civil Engineering - சிவில் எஞ்ஜினியரிங் டிப்ளோமா
Dip. in Business Management - வியாபார முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Banking Management - வங்கி முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Sales & Marketing Management - விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் மு. டி.
Dip. in Health & Hospital Management - சுகாதாரம் மற்றும் வைத்தியசாலை மு. டி.
Dip. in Nursing Administration - தாதியர் நிர்வாக டிப்ளோமா
Dip. in Educational Management - கல்வி முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Montessori - மொண்டிசூரி டிப்ளோமா

கற்கை முடிவில் பரீட்சை நடைபெறும் பிராந்திய நிலையங்கள்
• கல்முனை • மட்டக்களப்பு • திருகோணமலை • புத்தளம் • வவுனியா • மன்னார் • யாழ்ப்பாணம் • கண்டி • கொழும்பு • ஹட்டன் • அனுராதபுரம் • நுவரெலியா

மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பப்படிவம் பெற உங்களது பெயர், முகவரி, தெரிவுசெய்த கற்கைநெறி என்பனவற்றை கீழ் உள்ள கையடக்க தொலைபேசிக்கு SMS செய்து பெற்றுக்கொள்ளலாம்.
Mobile: 0777 140 844, 071 803 48 48
விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி
Country Co-ordinator
MARUTHUR . A. HASSEN
(B.Sc. Psychology, M.Sc. Psychology)
ALL INDIA INSTITUTE OF MANAGEMENT STUDIES
24, 1ST FLOOR, SUPERMARKET COMPLEX, MAIN STREET, SAINTHAMARUTHU-07.
Web: www.ailmas.com, www.iimat.com, www.aicomas.org
Tel: 067 2222917, 067 3671749, 067 3679688, 071 803 4848
விண்ணப்ப முடிவுத் திகதி : 28.06.2011

For Rent
3000 sq.ft of covered space and 10000 sq.ft of cemented floor at Neervely Junction is available for rent.
Contact: No 077 1484251

இறைச்சிக் கோழி விற்பனை
கல்பேட் புறொய்லர் இறைச்சிக்கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் மிகக் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம். சுத்தம் செய்யப்பட்டது 420/- மட்டும்.
கூடுதல் கொள்வனவு செய்வோருக்கு விசேட விலைக் கழிவு உண்டு
விஜயகுமார்
குளப்பிட்டி வீதி, ஆனைக்கோட்டை.
(5181) (45)

மலிவு விற்பனை
பல புதிய மொடல்கள் Sony Wega Flat (மேல்பட்டன்) 21"-29" TV கள் 12000/- முதல், குளிர்சாதனப் பெட்டிகள் (இரட்டைக்கதவு), DVD அம்பிளிபயர்கள், Computer விற்பனைக்குண்டு.
K.K.S. வீதி, இணுவில்.
(5181) (45)

13ஆவது பிறந்த தினமும் 46ஆவது மாத நினைவஞ்சலியும்

செல்வன்
கண்ணதாசன்
ரஜந்தன் (அன்பு)
(தரம் 4 மாணவன் - இணுவில் இந்துக்கல்லூரி)
அன்னை மடியில்:
25★06★1998
பரமன் அடியில்:
30★08★2007
அகவை பதின்மூன்றில் - உன்
அன்பு முகம் பார்க்க முடியவில்லை
உன் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
இணுவில் கிழக்கு,
இணுவில்.
(5104) (45)
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனைவரும் ஏற்கக்கூடிய அரசியல்தீர்வு: ஐக்கிய தேசியக்கட்சி ஆதரவு வழங்கத் தயார்

## லஷ்மன் கிரியெல்ல கூறுகிறார்

கொழும்பு, ஜூன் 25

அனைவரும் ஏற்றுக்கொள்ளக் கூடிய அரசியல் தீர்வொன்றை அரசு முன்வைக்கும் பட்சத்தில் ஐக்கிய தேசியக் கட்சி அதற்கு ஆதரவு வழங்கத் தயாராக இருப்பதாக அதன் உபதலைவரான லஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியானது இனப்பிரச்சினை விடயத்தில் அரசியல் தீர்வுக்கான நடைமுறைகளை ஆதரித்து வந்திருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசு பதவிக்கு வந்த பின் நியமிக்கப்பட்ட நிபுணர்குழு மற்றும் அதன் பின் நியமிக்கப்பட்ட சர்வகட்சிக் குழு என்பன மூலம் அரசியல் தீர்வு குறித்து முன்வைக்கப்பட்டுள்ள பரிந்துரைகளை தமிழ்த்தரப்பினரும் ஏற்றுக் கொண்டுள்ள நிலையில், அதனை அடிப்படையாக வைத்துக் கொண்டு அரசியல் தீர்வுக்கான முயற்சிகளை முன்னெடுப்பது பொருத்தமானதாக இருக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.



எனவே அரசியல் தீர்வுக்கான செயற்பாடுகளை விரைவாக முன்னெடுக்க வேண்டும் என்று மேலும் தெரிவித்துள்ளார். (ச)

## மகளிர் எழுச்சி....



சவூதி அரேபியாவில் சித்திரைவதைக்குள்ளாக்கப்பட்ட குடும்பப் பெண்ணொருவருக்கு நியாயம் வழங்கக் கோரி வாகரையில் கடந்த புதன்கிழமை ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்தப் பெண்ணுக்கு அரசு நிவாரணம் வழங்க வேண்டும் என்று ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட மக்கள் கோஷமிட்டனர். (ச)




உலகக் குருதிக் கொடையாளர் தினத்தை முன்னிட்டு யாழ். மாவட்டத்தில் உள்ள தன்னார்வக் குருதிக் கொடையாளர்கள், எதிர்வரும் 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் வைத்து யாழ். போதனா வைத்தியசாலை இரத்த வங்கியினரால் கௌரவிக்கப்பட உள்ளார்கள்.

மனித குருதிக்கு மாற்றீடு மனிதக்குருதியே

குருதி வழங்குநரின்

* உடலின் நிறை, குருதிச் செறிவு அறியப்படுகின்றது.
* உடல் நிலை (நாடித்துடிப்பு, குருதி அமுக்கம்) சோதிக்கப்படுகின்றது.
* குருதி வகை அறியப்படுகின்றது.
* குடும்ப அங்கத்தவர்கள், நண்பர்களின் குருதித் தேவைக்கு உதவ முடிகின்றது.
* வைத்தியசாலையுடனான உறவு நெருக்கமாகின்றது.
* ஆத்ம திருப்தி ஏற்படுகின்றது.
* குடும்ப, சமூகப் பொறுப்புணர்வு அதிகரிக்கின்றது.

இரத்தவங்கி, போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.
021-2223063.


## அரச ஊழியர்கள் அனைவரும்

# சொத்து விவரங்களை சமர்ப்பிக்க அறிவுறுத்து

கொழும்பு, ஜூன் 25

சகல அரச ஊழியர்களும் எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்பு தமது சொத்து விவரங்களை அவர்கள் பணிபுரியும் நிறுவனத் தலைவர்களிடம் சமர்ப்பிக்க வேண்டுமென இலஞ்ச ஊழல்கள் விசாரணை ஆணைக் குழுவின் தலைவர் ஜகத் பால பெட்டபந்தி அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது:

இது புதிய சட்டம் அல்ல எனவும் 1988ஆம் ஆண்டு தொடக்கம் அமுலில் உள்ள இந்தச் சட்டத்துக்கு அனைத்து அரச ஊழியர்களும் கட்டுப்பட்டவர்கள்.

எனினும் கடந்த சில வருடங்களாக இந்தச் சட்டம் பின்பற்றப்படவில்லையெனவும் இந்த வருடம் முதல் இந்த விடயத்தில் தான் கண்டிப்பாக இருப்பேன் எனத் தெரிவித்தார்.

எந்தவொரு அரச ஊழியரும் குறிப்பிட்ட கால எல்லைக்குள் தனது நிறுவனத் தலைவருக்கு சொத்து விவரங்களை சமர்ப்பிக்கத் தவறினால் அவருக்கு எதிராக இந்தச் சட்டமூலத்தின் 9ஆவது ஷரத்தின்கீழ் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

இந்தப் பணிப்புரைக்கமைய எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன் தமது சொத்து விவரங்களை சமர்ப்பிக்கத் தவறும் அரச ஊழியர்களின் விவரங்களை ஆணைக் குழுவுக்கு சமர்ப்பிக்குமாறு சகல நிறுவனத் தலைவர்களுக்கும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது- என்றார். (ச-5)

# மாநகரசபை முதல்வருக்கு எதிராக ஆர்ப்பாட்டம்

கண்டி, ஜூன் 25

ஐக்கிய தேசியக்கட்சியின் நிர்வாகத்தின் கீழுள்ள கண்டி மாநகரசபைமுதல்வருக்கு எதிராக கடந்த புதன்கிழமை ஆர்ப்பாட்டமொன்று மேற்கொள்ளப்பட்டது.

கண்டி நகரின் நிர்வாகத்தை சிறந்த முறையில் கொண்டு நடத்த கண்டி மாநகர முதல்வர் தவறியுள்ளார் என ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவித்துள்ளனர்.

இதுதொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தி மத்திய மாகாண முதலமைச்சருக்கு மனு ஒன்றையும் ஆர்ப்பாட்டக்காரர்கள் கையளித்துள்ளனர்.

எனினும், மாவட்டத்துக்கு வெளியில் இருந்து வந்தவர்களே இந்த ஆர்ப்பாட்டத்தை மேற்கொண்டனர் என கண்டி மாநகர முதல்வர் தெரிவித்துள்ளார்.

தம்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் ஆதாரமற்றவை எனவும், அபிவிருத்தி நடவடிக்கைகள் உரியமுறையில் முன்னெடுக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச)

# சீனாவிடம் கடன் பெறுவதற்கு அமைச்சரவை அங்கீகாரம்

கொழும்பு, ஜூன் 25

சீனாவிடம் இருந்து கடன் பெறுவதற்கு மீண்டும் அமைச்சரவையின் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இதன்படி, சீன அபிவிருத்தி வங்கியிடம் இருந்து 1.5 பில்லியன் டொலர்கள் கடனாகப் பெறப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் கடனைப் பெறுவதற்கு உடன்படிக்கை ஒன்று விரைவில் கைச்சாத்தாகவுள்ளது.

இந்த நிதி, வீதி மற்றும் பாலங்கள் நிர்மாணிப்பு, நீர் விநியோகம், மின்சாரம் வழங்கல் உள்ளிட்ட 3 ஆண்டு வேலைத் திட்டத்துக்காக பயன்படுத்தப்படவுள்ளதாக அமைச்சர் அனுர பிரியதர்ஷன யாப்பா அறிவித்துள்ளார்.

ஏற்கனவே சீனாவிடம் இருந்து யுத்த பிரதேச அபிவிருத்திகாக மாத்திரம் 11பில்லியன் டொலர்களுக்கும் அதிகமான கடன்கள் பெறப்பட்டுள்ளன.

எனினும் இதுவரையில் அந்த பிரதேசங்களில் எந்த அபிவிருத்தி நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை என வடமாகாண தகவல்கள் தெரிவிக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

# பாதுகாப்பு தலைமையகக் கட்டடம் நிர்மாணிக்க ரூ.20 பில்லியன்

கொழும்பு, ஜூன் 25

புதிய பாதுகாப்பு தலைமையக் கட்டடத்தை நிர்மாணம் செய்வதற்கு 20 பில்லியன் ரூபா தேவைப்படுவதாக அரசு நாடாளுமன்றத்தில் அறிவித்துள்ளது. நாட்டின் பாதுகாப்பு அமைச்சர் என்ற ரீதியில் புதிய பாதுகாப்பு தலைமையகத்தை அமைப்பதற்கு தேவையான நிதி ஒதுக்கீடு தொடர்பான பிரேரணை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் கையொப்பத்துடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

வரவு செலவுத் திட்டத்திலும் பாதுகாப்பு அமைச்சுக்கு அரசு கூடுதலான நிதியை ஒதுக்கியுள்ளது. பாதுகாப்பு அமைச்சுக்காக வரவு செலவுத் திட்டத்தில் 210 பில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இராணுவத் தலைமையகம் பத்தரமுல்ல பிரதேசத்துக்கு இடம் நகர்த்தப்பட உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# இந்தியா செல்வதற்கான விசா 24 மணி நேரத்தில் பெறலாம்

கொழும்பு, ஜூன் 25

இந்தியாவுக்கு செல்வதற்கான விசா கொழும்பிலுள்ள இந்திய தூதரகத்தினால் விண்ணப்பம் கையளிக்கப்பட்டு அடுத்துவரும் கடமை நாளின் போது பெற்றுக் கொள்ள முடியுமென்று தூதரகத்தின் சிரேஷ்ட அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

யுத்தம் நடந்து கொண்டிருந்த காலகட்டத்தில் இலங்கையர் ஒருவர் இந்தியாவுக்கு செல்வதற்கான விசா விண்ணப்பப்படிவமொன்றை தூதரகத்தில் ஒப்படைத்தால், அது இந்தியாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டு அங்கிருந்து சம்பந்தப்பட்டவருக்கு விசா வழங்கலாம் என்ற அங்கீகாரம் கிடைத்த பின்னரே விசா வழங்கப்பட்டது.

அதன் காரணமாக இலங்கையர் ஒருவர் இந்திய விசாவைப் பெறுவதற்கு ஒரு வாரம் வரையிலான காலதாமதம் ஏற்பட்டது.

இன்று இலங்கையில் யுத்தம் முடிவுற்று நாட்டில் சமாதானமும் அமைதியும் திரும்பிக் கொண்டிருக்கின்றது. பாதுகாப்பு நடைமுறைகள் தளர்த்தப்பட்டு ஒருவரின் விசா விண்ணப்பம் அன்றைய தினமே பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, அடுத்து வரும் கடமைநாளின்போது சம்பந்தப்பட்டவருக்கு விசா வழங்கப்படும்.

இப்போது இலங்கையில் அமைதி நிலைகொண்டிருப்பதனால் வெகு விரைவில் விசாவை இந்தியா செல்லும் பயணிக்கு விமான நிலையத்தில் வைத்தே வழங்குவதற்கான ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கான திட்டம் தீவிர பரிசீலனைக்கு எடுக்கப்பட்டுள்ளது – என்றார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணாமற் போனவர்களின் உறுதிப்படுத்தலை பெறுவதில் உறவினர்கள் தீவிரமாக முயற்சி

கிளிநொச்சி, ஜூலை 25

வன்னிப் பகுதியில் உள்ள கிராம சேவையாளர்களிடம் சென்று காணாமற் போன தமது உறவினர்கள்தொடர்பான உறுதிப்படுத்தல்களைப் பெருமளவான மக்கள்பெற்று வருவதாகத் தெரிய வருகின்றது.

வன்னியில் நடந்த யுத்தத்தால் பெருமளவானவர்கள் காணாமற் போய் இருந்தார்கள். யுத்தம் முடிந்து இரண்டு வருடங்கள் ஆனபோதும் காணாமற் போன தமது உறவுகள் பற்றிய தகவல்கள் எதுவும் கிடைக்காத நிலையில் பலரும் பல இடங்களுக்கும் அலைந்து திரிவதைக் காண முடிகின்றது.

தற்போது காணாமல் போனவர்கள் பற்றிய விவரங்கள் வவுனியா பயங்கரவாதத் தடுப்புப் பிரிவில் உள்ளது என்ற செய்திகள் வந்துள்ளமையால் காணாமல் போன தமது உறவுகளைப் பற்றி அறிவதற்காக வெளியில் கூறப்பட்ட பிரகாரம் கிராம சேவையாளரது உறுதிப்படுத்தல் கடிதத்தைப் பெறுவதற்காக பெருமளவானவர்கள் கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா போன்ற மாவட்டங்களில் உள்ள கிராம சேவையாளர் பிரிவு அலுவலகங்களுக்குச் சென்று தமது உறவுகள் பற்றிய உறுதிப்படுத்தல் கடிதங்களைப் பெற்று வருகின்றார்கள்.

தமது உறவினர்கள் விரைவாகக் கிடைக்க வேண்டும். இவர்கள் எங்கு இருந்தாலும் அங்கு தேடிச் சென்று அவர்களைக் கண்டுபிடித்துத் தம்முடன் இணைக்க வேண்டும் என்பதற்காகப் பறிகொடுத்த உறவுகள் பல இடங்களுக்கும் அலைந்து திரிவதைக் காணக் கூடியதாக உள்ளது.

(க-426)

# பஸ் நேரத்தை மாற்றுமாறு ஆசிரியர்கள் கோரிக்கை

கிளிநொச்சி, ஜூன் 25

யாழ்ப்பாணத்திலிருந்து தினமும் அக்கராயனுக்குப் பயணிக்கும் அரச பேருந்தை அரை மணித்தியாலம் முன்னதாகப் புறப்படுவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இந்தப் பேருந்து தினமும் காலை 6.30 மணிக்கு யாழ்ப்பாணத்திலிருந்து புறப்பட்டு கேரதீவு, சங்குப்பிட்டி ஊடாகப் பயணித்து 8.45 மணியளவில் அக்கராயனைச் சென்றடைகின்றது. இதில் பயணிக்கும் ஆசிரியர்கள் ஸ்கந்தபுரத்தில் இறங்கிக் கால்நடையாக தாம் கற்பிக்கும் பாடசாலைக்குச் செல்வதைக் காணமுடிகிறது.

சிலவேளைகளில் பிரயாணத்தின் போது தடைகள் ஏற்படுமாயின் இந்த ஆசிரியர்கள் தாமதமாகவே பாடசாலைக்குச் செல்கின்றனர்.

இதனால் மாணவர்களின் கல்வி நிலையில் பாதிப்பு ஏற்படுகின்றது.

ஆகவே இந்தப் பேருந்து புறப்படும் நேரத்தில் மாற்றம் செய்து காலை 6 மணிக்கு இதனைப் புறப்படச் செய்தால் ஓரளவு தாமதத்தைக் குறைக்க முடியுமென இவர்கள் எதிர்பார்க்கின்றனர்.

(க-410)

# அரச ஊழியர்களுக்கு உதவிகள் மறுப்பு

## பிரதேச செயலருக்கு மனு சமர்ப்பிப்பு

கிளிநொச்சி, ஜூன் 25

அரச ஊழியர்கள் என்ற பெயரில் தமக்கு நிரந்தர வீடுகள் உட்பட அனைத்து உதவிகளும் மறுக்கப்படுவதாகத் தெரிவித்து அக்கராயனிலுள்ள 18 பேர் கையொப்பமிட்டு கரைச்சிப் பிரதேச செயலருக்கு மனுவொன்றைச் சமர்ப்பித்துள்ளனர்.


தாம் மீள்குடியமர்ந்து ஒரு வருடம் பூர்த்தியான நிலையிலும் தமக்கான வாழ்வாதார உதவிகள், சுயதொழில் உதவிகள், கடனுதவிகள் எவையும் தமக்கு வழங்கப்படவில்லையெனவும் இவர்கள் தமது மனுவில் குறிப்பிட்டுள்ளனர்.

தமது அயற்கிராமங்களில் அரச ஊழியர்களுக்கு நிரந்தர வீடுகள் வழங்கப்பட்ட நிலையில் தாம் மட்டும் புறக்கணிக்கப்படுவதாக இவர்கள் வேதனை தெரிவித்துள்ளனர். மேலும் தமது மாதாந்த ஊதியம் 16 ஆயிரம் ரூபாவுக்கும் குறைவாக இருக்கின்ற நிலையில் தம்மால் ஒரு வீட்டினை அமைக்க முடியுமா? என்ற வினாவையும் இவர்கள் தமது மனுவில் எழுப்பியுள்ளனர்.

போர்க்காலத்தின் போது அரச ஊழியர்கள் என்ற வேறுபாடுகள் பார்த்துத் தாக்குதல்கள் நடைபெறவில்லை. அனைவருமே பாதிக்கப்பட்டார்கள். இந்த நிலையில் உதவிகளை வழங்கும்போது வேறுபாடுகள் பார்ப்பது நியாயமற்றது எனவும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே பிரதேச செயலர் நேரில் தமது கிராமத்துக்கு வருகைதந்து தமது தறப்பாள் வீடுகளையும், குடிசைகளையும் பார்வையிட்டுத் தமக்கு நிரந்தர வீடுகள் அமைப்பதற்கு உதவவேண்டுமெனவும் அவர்களின் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. (க-410)

## அதிகாரிகளின் பார்வை எப்போது...?



சீரழிவின் சின்னம்: மன்னாரில் சட்ட விரோதச் செயல்கள் நடைபெறுவதாகக் கூறப்படும் மன்னார் காட்டுப் பள்ளிவாசல் பகுதியில் உள்ள அடர்ந்த காட்டுப் பகுதி சீரழிவின் சின்னமாகக் காணப்படுகின்றது. (601)

# புதிய விளையாட்டு மைதானம்

வவுனியா, ஜூன் 25

வவுனியா, வேப்பங்குளம், கல்லாட்டான்குளம், இளங்கதிர் விளையாட்டுக் கழகத்தினருக்குப் புதிய விளையாட்டு மைதானம் ஒன்று அமைக்கப்பட்டு வருகின்றது.

இதுவரை காலமும் இந்தக் கழகம் அருகில் உள்ள நாதன் படிப்பகம் அமைந்துள்ள பகுதியிலே விளையாட்டுக்களை நடத்தி வந்தது. விளையாட்டுக்கழக உறுப்பினர்களின் முயற்சியாலும் அந்தப் பகுதியிலுள்ள பெரியவர்களின் உதவியுடனும் இந்த மைதானம் அமைக்கப்பட்டு வருகின்றது. புதிதாக அமைக்கப்பட்டு வரும் இந்த மைதானத்தில் விரைவில் மாபெரும் விளையாட்டு விழா ஒன்றை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (க-421)

# அழிக்கப்படாத சிறுபற்றைக்குள் சமூக விரோத செயற்பாடுகள்

வவுனியா, ஜூன் 25

வவுனியா, இராசேந்திரம் குளம் வால்கட்டுப்பகுதியில் உள்ள சிறிய பற்றைக்காடு அழிக்கப்படாமல் இருப்பதனால் அந்தப் பகுதியில் தகாத செயற்பாடுகள் நடைபெறுவதாகப் பிரதேச வாசிகள் தெரிவித்துள்ளனர்.

வவுனியா இராசேந்திரம் குளத்தின் வால் கட்டுப் பகுதியில் சிறிய பற்றைக் காடு ஒன்று அழிக்கப்படாமல் காணப்படுகின்றது. இந்த நிலையில் இந்தக் காட்டுப் பகுதிக்குள் பலர் தகாத முறையில் நடந்து கொள்வதாகவும் சமூகச் சீரழிவுகளும் இடம்பெற்று வருவதாகவும் பிரதேச வாசிகள் தெரிவித்துள்ளனர்.

இந்தக் குளத்தைப் புனரமைப்புச் செய்கின்ற போதும் இந்தக் காட்டுப் பகுதி அழிக்கப்படாமல் உள்ளதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் குளத்தின் அணைக்கட்டு வேறு இடத்தில் இருந்து எடுத்து வரும் மண்ணைக் கொண்டு புனரமைக்கப்படுவதாகவும் அவ்வாறு செய்யாமல் குளத்தை ஆழமாக்கி விவசாயச் செய்கைகளை அதிகரிக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர். (க-6)

# த. வி. கூட்டணி அலுவலகத்தில் வேட்பாளர்களுடன் கலந்துரையாடல்

கிளிநொச்சி, ஜூன் 25

தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் போட்டியிடும் கிளிநொச்சி மாவட்ட உள்ளூராட்சி மன்ற வேட்பாளர்களுக்கான கலந்துரையாடல் நேற்று முன்தினம் கிளிநொச்சியில் உள்ள தமிழர் விடுதலைக் கூட்டணி அலுவலகத்தில் நடைபெற்றது.

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் வீ.ஆனந்தசங்கரி வேட்பாளர்களுடன் கலந்துரையாடியதுடன் எதிர்காலத்தில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் அனைத்துப் பகுதிகளையும் உள்ளடக்கத் தக்கவாறு பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படுவார்கள் எனவும் குறிப்பிட்டார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பூநகரி, பளைப் பிரதேச சபைகளுக்கு இலங்கைத் தமிழரசுக் கட்சியினால் தாக்கல் செய்யப்பட்ட மனு நிராகரிக்கப்பட்ட நிலையில் தமிழர் விடுதலைக் கூட்டணி புதிய பட்டியலைச் சமர்ப்பித்து வேட்பு மனுவைத் தாக்கல் செய்துள்ளது.

இந்த நிலையில் நேற்று நடைபெற்ற வேட்பாளர்களுக்கான கலந்துரையாடலில் பளை, பூநகரி வேட்பாளர்களுடன் கிளிநொச்சிப் பிரதேச சபை வேட்பாளர்களும் கலந்து கொண்டார்கள்.

(க-86)

# வேறு இடத்துக்கு இடம்மாறும் வன்னியில் கைவிடப்பட்ட வாகனங்கள்

கிளிநொச்சி, ஜூன் 25

இறுதி யுத்தத்தின்போது மக்கள் விட்டுச் சென்ற வாகனங்கள் கிளிநொச்சி திருநகரில் இருந்து வேறு இடத்துக்கு இடம்மாற்றப்படுகின்றன.

வன்னிப் பகுதியில் மக்களால் பயன்படுத்தப்பட்டு வந்த வாகனங்கள் வன்னியில் நடைபெற்ற யுத்தம் மற்றும் அதனால் ஏற்பட்ட பெரிய இடப்பெயர்வு காரணமாக வன்னியின் பல பகுதிகளிலும் விட்டுச் செல்லப்பட்டன.

மீளக் குடியமர்வின் பின்னர் மக்களது வாகனங்களைக் கிளிநொச்சி மாவட்டச் செயலகம் பொறுப்பேற்றுக் கிளிநொச்சி, திருநகரில் ஒரு பெரிய காணியில் பாதுகாப்பாக வைத்திருந்தது. வாகனங்களின் ஆவணங்களைக் கொண்டு சென்றவர்கள் அதனைச் சமர்ப்பித்துத் தமது வாகனங்களை இனங்காட்டிப் பெற்று வந்துள்ளார்கள்.

பெறப்பட்ட வாகனங்களில் பல கடுமையாகச் சேதமடைந்தும் பாகங்கள் அற்ற நிலையிலும் காணப்பட்டன என மக்கள் கூறிக் கவலைப்படுகின்றார்கள்.

கிளிநொச்சி, திருநகரில் உள்ள வாகனங்கள் வைக்கப்பட்டிருந்த காணி கிளி. கச்சேரியால் வேறு தேவைக்காக பயன்படுத்தப்படவுள்ளதால் தற்போது இந்த வாகனங்கள் கிளிநொச்சி நகரில் உள்ள கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரிக்கு முன்பாக அதாவது முன்னர் பண்பாட்டு மண்டபம் இருந்த இடத்துக்குப் பின்புறமாக கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தால் உழவு இயந்திரங்களில் ஏற்றப்பட்டு இடம்மாற்றப்பட்டு வருகின்றன.

இங்கு கொண்டு வந்து விடப்பட்டுள்ள வாகனங்கள் மூன்று வருடகாலமாக மழை, வெயில் போன்றவற்றில் நனைந்தும், காய்ந்தும் பாதிக்கப்பட்டு வருவதாக ஆவணங்களைத் தொலைத்த வாகனங்களின் உரிமையாளர்கள் கவலைப்படுகின்றனர்.

இந்த இடத்தில் உள்ள பெருமளவான மோட்டார் சைக்கிள்களும் ஏனைய வாகனங்களும் திறந்த வெளியிலேதான் நிற்கின்றன.


மோட்டார் சைக்கிள்களைக் கைவிட்டுச் சென்ற பல பேர் இங்கு வந்து தமது மோட்டார் சைக்கிள்களை பல தடவைகள் தேடிய பின்பு தான் அடையாளங்காண முடிகின்றது. பலர் இப்போதும் தமது வாகனங்களை இங்குவந்து தேடிக் கொண்டேதான் இருக்கிறார்கள்.

வன்னிப் பகுதியில் வாகனங்களைக் கைவிடுவதற்கு முன்னர் இங்கே மோட்டார் சைக்கிள் போன்ற வாகனங்களில் பயணித்தவர்கள் தற்போது ஒரு சைக்கிள் கூட இல்லாத நிலையில் பெரிதும் துன்பப்படுவதைக் காணக் கூடியதாக உள்ளது.

(க-426)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மடுமாதா ஆலய வருடாந்த திருவிழா வியாழன் கொடியேற்றத்துடன் ஆரம்பம்





மன்னார், ஜூன் 25

இலங்கையில் வாழுகின்ற கத்தோலிக்க மக்களின் முக்கியமான புனிதத் தலங்களில் ஒன்றான மன்னார் மடுமாதா ஆலயத்தின் வருடாந்தத் திருவிழா நேற்று முன்தினம் வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

இதன் போது நாட்டின் பல பாகங்களிலிருந்தும் ஆயிரக் கணக்கான மக்கள் பக்தி பூர்வமாகக் கலந்து கொண்டனர். போர் ஓய்ந்த நிலையில் தென் பகுதியிலிருந்து அதிகளவான மக்கள் இந்த நிகழ்வின்போது கலந்து கொண்டமையைக் காணக்கூடியதாக இருந்தது. மேலும் இவர்கள் மடுத் திருப்பதியை அண்டிய இடங்களில் தற்காலிகக் கூடாரங்களை அமைத்துக் குடும்பம் குடும்பமாகத் தங்கியுள்ளனர்.

இவர்கள் இறுதி நாள்வரை இங்கே தங்கியிருப்பார்களௌன எதிர்பார்க்கப்படுகின்றது. தமக்குரிய உணவு வகைகளைத் தாமே தயார் செய்வதில் இவர்கள் ஈடுபடுவதனையும் அவதானிக்க முடிகின்றது.

மேலும் மடுத் திருத்தலத்தை நோக்கி ஏராளமான மக்கள் வந்து கொண்டிருந்தனர். இவர்களுக்கான சகல ஏற்பாடுகளையும் ஆலய நிர்வாகத்தினர் மேற்கொண்டுள்ளனர்.

இந்த முறை சுமார் மூன்று லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் இந்த ஆலயத்தில் கூடுவார்களௌன எதிர்பார்க்கப்படுகின்றது.

ஆகவே இதற்கேற்றாற் போல விரிவான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

ஆலயத்தில் தினமும் மாலை 6.30 மணிக்கு ஆராதனைகள் நடைபெறும். எதிர்வரும் முதலாம் திகதி மாலை நற்கருணை ஆராதனைகள் நடைபெற்று அடுத்த நாள் இரண்டாம் திகதி காலை 6.30 மணிக்கு திருநாள் திருப்பலி நிறைவேற்றப்படுமென ஆலயத்தின் பரிபாலகர் அருட்தந்தை எ.எமிலியான்ஸ் பிள்ளை தெரிவித்தார்.

திருநாள் திருப்பலியை மன்னார், அநுராதபுரம், யாழ்ப்பாணம் ஆகிய மறைமாவட்ட ஆயர்கள் கூட்டுத்திருப்பலியாக ஒப்புக் கொடுக்கவுள்ளதாகவும் அருட்தந்தை மேலும் தெரிவித்தார்.

(க-601)

## மடு தேவாலயம். வருகை தருவோர் புனிதம் பேண வேண்டுகோள்

மன்னார், ஜூன் 25

மடுத் தேவாலயத்துக்கு வருகை தரும் மக்கள் புனிதத்தைப் பேணவேண்டுமென ஆலய பரிபாலகரான அருட்தந்தை எஸ். எமிலியான்ஸ் பிள்ளை வேண்டுகோள்விடுத்துள்ளார்.

இங்கே வருபவர்கள் உல்லாசப் பயண நோக்குடன் வராமல் பக்தியுடன் வருமாறும் அவர் கேட்டுள்ளார்.

மேலும் இங்கு வருபவர்கள் அணிந்து வரும் ஆடைகள் கௌரவத்துக்குரியதாக இருக்க வேண்டுமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, திருவிழாக் காலத்தில் மடுப் பிரதேசத்தினுள் பயணிக்கும் பக்தர்களுடைய வாகனங்களைப் படைத்தரப்பினர் சோதிக்கும் போது கெடுபிடிகளைக் குறைக்குமாறு அருட்தந்தை அவர்களுக்குத் தெரியப்படுத்தியதாகவும் கூறப்பட்டுள்ளது.

(க-601)

## கிளிநொச்சி மின் வலையமைப்புக்கு 7 ஆயிரம் மில்லியன் ரூபா ஒதுக்கீடு

### மின் பொறியியலாளர் தெரிவிப்பு

கிளிநொச்சி, ஜூன் 25

வடக்கின் வசந்தம் திட்டத்தின் மூலம் கிளிநொச்சி மாவட்டத்தின் மின் வலையமைப்பு விஸ்தரிப்புக்கென 7 ஆயிரம் மில்லியன் ரூபா நிதியை ஒதுக்கியுள்ளதாகக் கிளிநொச்சி மாவட்ட மின் பொறியியலாளர் எஸ். பிரபாகரன் உதயனுக்குத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

கிளிநொச்சி மாவட்டத்தில் மின்சார விஸ்தரிப்பு நடவடிக்கைகள் தற்போது பரந்த அளவில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இலவச மின்சாரமானது மீளக்குடியமர்ந்த மக்களின் நன்மை கருதியே விநியோகிக்கப்படுவதாகவும் இந்த வருடம் டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் இலவச மின்சாரத்தை நிறைவு செய்யத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மேலும் இந்த இலவச மின்சாரமானது அந்தப் பகுதி மக்களின் அடிப்படைத் தேவைகளுக்கு மட்டுமே பாவனைக்கு விடப்பட்டதாகவும் ஆனால் மக்கள் அநாவசிய தேவைகளுக்காக மின்சாரத்தைச் செலவிடுவதாகவும் தெரிவித்தார்.

இதனால் மின்சாரப் பாவனை அதிகரிப்பால் மின் இணைப்பு விஸ்தரிப்பிலும் தாமதம் ஏற்படுவதாகவும் மேலும் அவர் தெரிவித்தார்.

(க-எ-311)

## நிலைமை மாறுமா...?




பின்நோக்கிய நகர்வு: எரிபொருள் நிலையமில்லாத முல்லைத்தீவின் சந்தைப் பகுதியில் அமைந்துள்ள கரைதுறைப்பற்று ப.நோ.கூட்டுறவுச் சங்கத்தின் கிளை முன்பாக எரிபொருள்களை நேரடியாக விநியோகிக்கும் பொருட்டு எரிபொருள் பரல்கள் அடுக்கி வைக்கப்பட்டுள்ளன. (555)

## ஊரியான் விவசாயிகளுக்கு 29 ஆம் திகதி விசேட கூட்டம்

கிளிநொச்சி, ஜூன் 25

கிளிநொச்சி, ஊரியான் பிரதேச விவசாயிகளுக்கான பொதுக் கூட்டம் ஒன்று எதிர்வரும் 29 ஆம் திகதி ஊரியானில் நடைபெறவுள்ளது.

இந்த விசேட கூட்டம் எதிர்வரும் 29 ஆம் திகதி பிற்பகல் 4 மணிக்கு ஊரியானில் அமைந்துள்ள அன்சார் முன்பள்ளி மண்டபத்தில் ஊரியான் உப திட்டக் குழுவின் தலைவர் செ.சிவப்பிரகாசம் தலைமையில் நடைபெறவுள்ளது.

வங்கிக் கடன்கள், சிறுபோக நெற்செய்கைக்கான நீர்விநியோகம் உள்ளிட்ட பல விடயங்கள் குறித்து விரிவாக இந்தக் கூட்டத்தில் கலந்துரையாடப்படவுள்ளதாக உப குழுவின் தலைவர் தெரிவித்துள்ளார்.

குறிப்பாக ஊரியான் உப திட்டக் குழு சரியான முறையில் செயற்படுவதில்லை எனப் பலராலும் தொடர்ந்து குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன.

அதாவது கால்நடைகளைக் கட்டுப்படுத்த நடவடிக்கை மேற்கொள்வதில்லை, நீர் விநியோகத்தைச் சரியாக மேற்கொள்வதில்லை, வளங்களின் பங்கீடுகளில் மோசடி எனப் பல்வேறு குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

இந்த விடயங்கள் பற்றி விசேட கூட்டத்தில் ஆராயப்படவுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## மாகாண மட்டத்தில் பெருமை சேர்த்த மாணவர்களுக்குக் கௌரவிப்பு

அக்கராயன், ஜூன் 25

மாகாண மட்டத்தில் நடைபெற்ற இருவெவ்வேறு நிகழ்வுகளில் அக்கராயன் மகாவித்தியாலயத்தின் சார்பாகப் பங்குபற்றிப் பாடசாலைக்குப் பெருமை சேர்த்த மாணவ, மாணவிகளைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு கடந்த 21 ஆம் திகதி பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றுள்ளது.

பாடசாலை அபிவிருத்திக் குழுவின் ஏற்பாட்டில் பாடசாலை அதிபர் த.கண்ணபிரான் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

கடந்த 15 ஆம் திகதி நடைபெற்ற பௌர்ணமிக் கலை நிகழ்வில் 'சர்வமயம்' என்னும் நாடகத்தில் நடித்துப் பாடசாலைக்குப் பெருமை சேர்த்த மாணவ, மாணவிகளும் 16, 17 ஆம் திகதிகளில் வவுனியா நகரசபை மைதானத்தில் நடைபெற்ற மாகாண மட்டத் துடுப்பாட்டப் போட்டியில் பங்குபற்றிச் சிறப்பாக விளையாடிப் பாடசாலைக்குப் பெருமை சேர்த்த மாணவர்களும் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வில் தமது சிறப்பான பங்களிப்பை நல்கி மாணவர்களை வழிப்படுத்திய தயாபரன், சுகிதரன், விமலாதரன், ஜெகஜீவராஜ் ஆகியோர் பாராட்டப்பட்டனர்.

மேலும் பாடசாலை ஆசிரியர்கள், நலன் விரும்பிகள் அனைவருக்கும் நன்றி தெரிவிக்கப்பட்டதோடு தேநீர் விருந்துபசாரத்துடன் நிகழ்வு நிறைவு பெற்றது. (க-410)

## சிறு வீதிகளை புனரமைக்க வேண்டுகோள்

பூநகரி பிரதேச சபைக்கு உட்பட்ட நெற்புலவு கிராமத்தின் சிறு வீதிகள் மிக நீண்ட காலமாக புனரமைக்கப்படாமல் காணப்படுகின்றன.

இதனால் இந்த வீதியினூடாகச் செல்லும் முச்சக்கர வண்டிகள், மோட்டார் சைக்கிள்கள், கன ரக வாகனங்கள் ஏனைய வாகனங்கள் பயணம் செய்ய முடியாத நிலை காணப்படுகின்றது.

அத்துடன் வெயில் காலத்தில் பாடசாலைச் சிறார்கள், முன்பள்ளிச் சிறார்கள், கிராம மக்கள் ஒரு கல்லுக்கூட இல்லாத இந்த வீதியில் கொதிக்கும் மணலில் நடக்க முடியாமல் நடந்து செல்லும் நிலை காணப்படுகின்றது. எனவே உரிய தரப்பினர் மக்களின் பயணத்துக்கு ஆவன செய்யுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (க-எ-406)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4,000 மில்லியன் டொலர் செலவில் கொமன்வெல்த் போட்டி தேவையா?

## அநுரகுமார திஸாநாயக்க கூறுகிறார்

கொழும்பு, ஜூன் 25

வெளிநாடுகளில் இருந்து பெற்ற கடனுக்கு வட்டியைச் செலுத்துவதற்கு மேலும் அதிக வட்டிக்கு கடனைப் பெற முயலும் அரசு, அம்பாந்தோட்டையில் கொமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளை நடத்த 4,000 மில்லியன் அமெரிக்க டொலர்களை செலவழிக்கத் திட்டமிட்டுள்ளது. இதற்கு எதிராக மக்கள் கிளர்ந்தெழ வேண்டும்.

-இவ்வாறு ஜே.வி.பியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க நேற்று முன்தினம் தெரிவித்தார்.

ஜே.வி.பியின் ஊடகவியலாளர் மாநாடு நேற்றுமுன்தினம் பெலவத்தையிலுள்ள கட்சித் தலைமையகத்தில் நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் மேலும் கூறியதாவது,

மத்திய வங்கியிடமிருந்து 100 மில்லியன் அமெரிக்க டொலர்களைப் பெற அரசு தீர்மானித்துள்ளது. இந்தக் கடனை ஏன் அரசு பெற முயற்சிக்கிறது? 2007, 2008ஆம் ஆண்டுகளில் எச்.எஸ்.பி.ஸி. வங்கியிடம் 7 மற்றும் 8வீத வட்டிக்கு அரசு வணிகக் கடனைப் பெற்றது. அந்தக் கடனை 5 வருடங்களுக்குள் செலுத்த வேண்டும்.

அந்தக் கடன் வட்டியைச் செலுத்துவதற்கே அரசு மத்திய வங்கியிடம் இந்தக் கடனைப் பெறத் தீர்மானித்துள்ளது. 100 மில்லியன் அமெரிக்க டொலர் கடனைச் செலுத்துவதற்குத் திண்டாடும் அரசு, கொமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளை நடத்த 4,000 மில்லியன் அமெரிக்க டொலர்களைச் செலவு செய்யத் தீர்மானித்துள்ளது.



சூரியவெவ, பள்ளேகலை, கெத்தாராம ஆகிய விளையாட்டு மைதானங்களை அமைக்க 300 தொடக்கம் 350 கோடி ரூபாவரை செலவாகும் என்று சுராஜ் ரன்தெனிகல அண்மையில் ஊடகவியலாளர் மாநாட்டின்போது தெரிவித்திருந்தார். அந்தத் தொகை உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிகளில் இருந்து பெறப்படும் நிதியிலிருந்து ஒதுக்கப்படும் என்றும் கூறியிருந்தார்.

ஆனால் அண்மையில் இடம்பெற்ற மற்றுமொரு ஊடகவியலாளர் மாநாட்டில் இந்த மைதானங்களை அமைக்க 230 கோடி ரூபா கடன் பெற்றதாக இலங்கை கிரிக்கெட்டின் பொருளாளர் தெரிவித்தார். இந்நிலையில் எஞ்சிய பணத்துக்கு என்ன நடந்தது? உலகக் கிண்ணப் போட்டிகள் இடம்பெற்று முடிந்தபின்னர் இலங்கை கிரிக்கெட் அதிகாரிகளுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

இதனை மறைக்க விளையாட்டுத் துறை அமைச்சர் பல்வேறு கருத்துகளைக் கூறி வருகிறார். கிரிக்கெட் நிறைவேற்றுக்குழு உறுப்பினர்கள் புதிதாக நியமிக்கப்படுவார்களாம் என்று தம்பட்டம் அடித்து வருகிறார். அவ்வாறு புதிய உறுப்பினர்களை நியமித்துவிட்டால் மக்களின் வீணடிக்கப்பட்ட பணத்துக்குப் பதில் கிடைக்குமா? - என்றார்.

(த-சி)

# கற்பிட்டியில் எந்தத் தீவையும் தனியாருக்கு அரசு விற்காது

## அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 25

கற்பிட்டிப் பிரதேசத்தில் உள்ள எந்த ஒரு தீவையும் தனியாருக்கு விற்கும் நோக்கம் அரசுக்கு இல்லை என்று பிரதி பொருளாதார அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன நேற்றுமுன்தினம் நாடாளுமன்றில் தெரிவித்தார்.

நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின்போது ஐ.தே.க. உறுப்பினர் தயாசிறி ஜயசேகரவினால் எழுப்பப்பட்ட கேள்வியொன்றுக்கு பதிலளிக்கும்போதே பிரதியமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது,

கற்பிட்டி பிரதேசத்தில் உள்ள தீவுகளில் குறைவான மக்களே வாழ்கின்றனர். அவர்கள் பெரும்பாலும் வாழ்வாதாரத் தொழிலாக கடற்றொழிலையே மேற்கொள்கின்றனர்.

இங்கு அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்படும்போது அங்கு வாழும் மீனவக் குடும்பங்கள் வெளியேற்றப்படமாட்டார்கள்.

இந்தத்தீவுகளில் உல்லாச பிரயாணத் துறையை ஊக்குவிக்கும் வகையில் அபிவிருத்தி மேற்கொள்ளப்படவுள்ளன.

தற்போது நான்கு தீவுகளில் முதலீடு செய்வதற்கும்,அபிவிருத்தி திட்டங்களை மேற்கொள்வதற்கும் ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டுள்ளன.மேலும் 10 தீவுகளில் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ள தகுதியான முதலீட்டாளர்களுக்கு வழங்குவது குறித்துப் பரிசீலனை செய்யப்பட்டுவருகின்றது - என்றார்.

(சி)

# 2,800 ஆசிரியர்களுள் 600 பேர் மாத்திரமே மாகாணசபை பாடசாலைகளுக்கு நியமனம்

கல்வியியற் கல்லூரியில் பயிற்சிகளை முடித்துக்கொண்டு வெளியேறும் 2,800 ஆசிரியர்களுள் 600 பேர் மட்டுமே மாகாண சபை பாடசாலைகளுக்கு நியமிக்கப்படுகின்றனர். - இவ்வாறு நேற்றுமுன்தினம் நாடாளுமன்றில் கூறிய ஐ.தே.கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஆர். யோகராஜா, மாகாண சபைகளுக்கான அதிகாரங்கள் குறைக்கப்படுவதுபோல் ஆசிரியர் நியமனங்களும் குறைக்கப்படுகின்றனவா என்று கேள்வி எழுப்பினார்.இதற்குப் பதிலளித்த பிரதிக் கல்வி அமைச்சர் விஜிதமுனி சொய்ஸா கூறியவை வருமாறு:-

தேசிய பாடசாலைகளுக்கு ஆசிரியர்கள் தட்டுப்பாடுகள் நிலவியதால் அந்த வெற்றிடங்கள் நிரப்பப்பட்டன. மாகாண பாடசாலைகளுக்குப் போதுமான ஆசிரியர்கள் இருக்கின்றனர். எனினும், அங்கு முகாமைத்துவ பிரச்சினை உள்ளது - என்றார். மத்திய மாகாண பாடசாலைகளில் ஆசிரியர்களின் புற்றாக்குறை அதிகம் உள்ளன என்று ஆர்.யோகாராஜா கூறினார். இருப்பினும், தோட்டப்புறப் பாடசாலைகளுக்கு மூவாயிரம் ஆசிரியர்களை எமது அரசு நியமித்துள்ளது என்று பிரதி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

(ச)

# கொழும்பில் நடைபாதைக் கடைகள் அகற்றப்படும் என்கிறார் அமைச்சர்

கொழும்பு, ஜூன் 25

கொழும்பு நகரின் நடைபாதைகளில் அமைக்கப்பட்டுள்ள கடைகள் அனைத்தும் அகற்றப்படும் என்று அரசின் பிரதம கொறடா தினேஷ் குணவர்தன நேற்றுமுன்தினம் நாடாளுமன்றில் தெரிவித்தார்.

ஐ.தே.கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்கவின் கேள்விக்கு பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

பாதசாரிகள் நடந்து செல்வதற்காக அமைக்கப்பட்டுள்ள நடைபாதைகளில் கடைகள் அமைக்கப்படுவதால் பாதசாரிகள் வீதிகளில் நடக்கின்றனர். இதனால் வாகன நெரிசலும், விபத்துகளும் ஏற்படுகின்றன.

பாதசாரிகளின் நலன்கருதி இவ்வாறான விபத்துகளைக் குறைக்கும் நோக்கில் நாம் நடைபாதைகளில் அமைக்கப்பட்டுள்ள கடைகளை அகற்றி வருகின்றோம்.

கொழும்பு நகரின் நடைபாதைகளில் அமைக்கப்பட்டுள்ள அனைத்துக் கடைகளும் அகற்றப்படும். அவர்களுக்கு மாற்று இடங்கள் வழங்கப்படும். ஏற்கனவே அகற்றப்பட்ட கடைகளை மீள அமைப்பதற்கு வேறு இடங்கள் வழங்கப்பட்டுள்ளன.

மக்களுக்கு இடையூறு இல்லாத இடங்களே இந்த வர்த்தகர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. கடைகள் உடைக்கப்பட்ட வர்த்தகர்களின் பதிவுகள் எம்மிடமில்லை. தற்காலிகக் கடைகள் என்பதால் நாம் அந்தப் பதிவுகளை மேற்கொள்ளவில்லை - என்றார்.

(ச)

**அரிய சந்தர்ப்பம்**

நீங்கள் அடகு வைத்த நகைகளை உங்களால் மீட்க முடியாத சந்தர்ப்பத்தில் அதை நாங்கள் எங்கள் பணம் மூலம் மீட்டுத் திரும்ப அடகு வைப்பதற்கு உதவுவோம். (இச் சேவைக் கட்டணமாக 2% அறவிடப்படும்) அல்லது பவுணின் அதிக பெறுமதிக்கு வாங்குவோம். அநியாயமாக உங்கள் உடைமைகளை இழக்காமல் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்துவதற்கு

உடனே அழையுங்கள், 0774050936

**உயர் கல்வி**

ஐரோப்பிய நாடுகளில் உங்கள் உயர் கல்வியைத் தொடர இது ஓர் அரிய வாய்ப்பு.
அனுமதிக்கு முந்துங்கள்.
தொடர்புகளுக்கு:
Chaanl @ live.com
00447404607282 0728951673

**கோழிக்குஞ்சு விநியோகம்**

தரமான Prima No.1 புறொயிலர் கோழிக்குஞ்சுகள் Prima கொம்பனி உத்தரவாதத்துடன் நியாயமான விலையில் சிவப்புப் பேட்டுக் குஞ்சுகளும் (விலை ரூபா 150) 30.06.2011 காலை விநியோகிக்கப்படும். முன் பதிவு செய்யவும்.

★ சூட்டி பாம் சென்ரர், வட்டுக்கோட்டை - 0778996085
★ சன்னதி பாம் சென்ரர், தொண்டமனாறு - 0776904590
★ நெல்லியடி பல்பொருள் விற்பனை நிலையம், நெல்லியடி - 0774656377
★ நல்லூர் பாம் சென்ரர், பிரதான வீதி, பருத்தித்துறை - 0771392593

நல்லூர் பாம் சென்ரர்
19, முருகேசர் லேன், நல்லூர். தொ.பே.இல. 021 222 6944

**Vacancy for the following position's**

Trainee Marketing Executive / Student Coordinator (Full –time / Part-time)

Office Peon (Full –time)

Lecturers for : (Full –time / Part-time)

* Web designing / Multimedia
* Networking / PC Hardware
* AutoCat
* Accounting packages
* Linux administration

Tel: 0773464739
Please email your CV to info@idmjaffna.com or drop-in with your CV at IDM Jaffna Branch.

Successful candidates can look forward to an attractive remuneration package commensurate with qualifications and experience.

IDM Affiliated Campus Jaffna Branch
# 216 Navalar Road, Jaffna, Sri Lanka | Tel: 021 222 9901

Soft View
Academy For Computing & IT
Center For Information Technology (Pvt) Ltd
102, Main Street சிறைச்சாலை முன்பாக
Jaffna. 021 222 4885, 0779053545
MSOffice, DTP, Hardware, Kids Program, Internet & Email, Type Setting, Web Designing, Video Editing, Graphic Designing, Computerized Accounting. Note:- மாணவர் ஒவ்வொருவரும் தமக்குத் தேவையான நேரத்தை தேர்ந்தெடுக்கலாம். (7.30 a.m to 9.30 p.m )

**தவறிவிட்டது**

தாவடி வடக்கு கொக்குவில்
என்னும் முகவரியைச் சேர்ந்த தம்பிராசா இராஜகுமார் என்பவரது தேசிய அ.அட்டை (791682878V), விசேட அ.அட்டை (0906004667) என்பன கொக்குவிலுக்கும் தவாடிக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து மேற்காணும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும். அல்லது கொக்குவில் தபால் கந்தோரில் ஒப்படைக்கவும்.

**காணி விற்பனைக்கு**

கொக்குவில், சம்பியன்லேன், நந்தாவில் ஒழுங்கையில் குட்டி வைரவர் கோயிலுக்கு அருகில் 1¾ பரப்புக்காணி சுற்று மதில், கிணறு வசதிகளுடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு: கு.குமாரகுலசிங்கம், ஏழாலை வடக்கு, ஏழாலை.
T.P: 0213205671

**வீட்டுத்தோட்டப் பராமரிப்பாளர்/காவலாளி**

யாழ்ப்பாண வீட்டில் காவலாளியாகவும் வீட்டுத்தோட்டப் பராமரிப்பாளராகவும் (பகல்) வேலை செய்ய 50 வயதுக்கு மேற்பட்ட ஆண்கள் தேவை.
★ சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம்.
தொடர்பு: 0771965666

**கோழிக்குஞ்சு விநியோகம்**

35நாளில் 2Kg மேல் வளர்ச்சியடையக் கூடிய No1- BAHIRAHA புறொயிலர் குஞ்சுகள் 29.06.2011 விநியோகிக்கப்படும்.

★ றாஜீவ், நவாலி, ஆனைக்கோட்டை
★ P.ரவி, சாவகச்சேரி - 0775591366
★ ஜென்சி பாம், பருத்தித்துறை - 0773541771
★ துர்க்கா பாம், சுன்னாகம்



T.P: 0212222867, 0776090926.

(49,22,20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கு கல்விப் பணிப்பாளரை இடைநிறுத்தக் கோரி தீர்மானம்

மட்டக்களப்பு,ஜூன்25

கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளரான எம்.ரீ.நிஸாமை பதவியிலிருந்து இடைநிறுத்த வேண்டும் என கிழக்கு மாகாண அமைச்சரவை கடந்த புதன்கிழமை தீர்மானித்துள்ளது என மாகாண அமைச்சரவைப் பேச்சாளரான எம்.எஸ்.உதுமாலெப்பை தெரிவித்தார்.

இந்தத் தீர்மானம் கிழக்கு மாகாண ஆளுநர் ரியர் அட்மிரல் மொஹான் விஜயவிக்கிரமவின் பருந்துரைக்காக அனுப்பப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மாகாண ஆசிரியர் இடமாற்றத்திற்காக 4.7 மில்லியன் ரூபா செலவிட்டமை, மாகாண அமைச்சரவையின் அனுமதியின்றி ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தமை, சம்மாந்துறை கல்வி வலயத்தில் ஆசிரியர் இடமாற்றம் ஒழுங்காக இடம்பெறுகின்றது என மாகாண அமைச்சரவைக்குத் தெரிவித்துவிட்டு பின்னர் இந்த இடமாற்றத்தில் சில குளறுபடிகள் உண்டு எனத் தெரிவித்தமை ஆகியவை தொடர்பில் குழுவொன்றை அமைத்து விசாரணை நடத்துமாறும் கிழக்கு மாகாண அமைச்சரவை மாகாண ஆளு நருக்கு பருந்துரை செய்துள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

இந்த விசாரணை முடியும் வரை கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளரான எம்.ரீ. நிஸாமை வேறு பதவிகளில் நியமிக்குமாறும் கிழக்கு மாகாண அமைச்சரவை மாகாண ஆளுநருக்கு பருந்துரை செய்துள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச)

# அச்சுறுத்தலுக்கு நாம் அஞ்சோம்; தீர்வு கிட்டும்வரை எம் பணி தொடரும்

## அரியநேத்திரன் கூறுகிறார்



வெல்லாவெளி, ஜூன்25

எத்தகைய அச்சுறுத்தலுக்கும் நாம் அஞ்சப்போவதில்லை, தீர்வு கிடைக்கும்வரை எமது பணி தொடரும்.

இவ்வாறு தெரிவித்தார் நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன்.

மட்டக்களப்பு அம்பிளாந்துறையில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்ததாவது,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை இந்த மண்ணிலிருந்து என்ன விலை கொடுத்தாவது அழித்தொழிக்க வேண்டும் என இந்த அரசு கங்கணம் கட்டிக் கொண்டு செயற்படுவதை யாவரும் அறிவோம்.

தமிழ் மக்கள் சுயநிர்ணய உரிமையுடன் வாழ விரும்புகிறார்களே தவிர அடிமைகளாகவோ இரண்டாந்தரப் பிரஜைகளாகவோ வாழ விரும்பவில்லை. இதனால் தான் ஆறு தசாப்தங்களாக ஆயுதப் போராட்டம், அஹிம்சைப் போராட்டமென எமது உரிமைக்காகப் போராடுகின்றோம்.

அதேவேளை, ஆயுதப் போராட்டத்தை அழித்து விட்டோம். இத்துடன் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டமும் முடிவுக்கு வந்து விட்டது என இந்த அரசு நினைத்து வெற்றி விழாவும் கொண்டாடியது.

இந்த நேரத்தில் அரசு ஒரு புறத்தில் தமிழ் மக்களை அழித்து அகதிகளாக்கி முட்கம்பிகளுக்குள் வைத்து விட்டு, மறுபுறத்தி வெற்றி விழாக்களைக் கொண்டாடியது. அத்துடன் பொதுத் தேர்தலையும் நடத்தி தமிழ் மக்களின் அரசியல் பலத்தையும் இல்லாதொழிக்க வேண்டும் என எண்ணி இந்த அரசு பொதுத் தேர்தலையும் நடத்தியது.

எனினும், தமிழ் மக்களின் அரசியல் பலத்தை அழிக்க அரசு எடுத்த எந்த முயற்சியும் கைகூடவில்லை. மாறாக தமிழ் மக்களின் அரசியல் பலமாக மீண்டும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையே தமிழ் மக்கள் தெரிவு மூலம் கட்டியெழுப்பினார்கள்.

இதனால்தான் தமிழ் மக்களின் அரசியல் சக்தியாக விளங்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு விடயமாக விரும்பியோ, விரும்பாமலோ அதாவது இந்தியாவினதும் சர்வதேச நாடுகளினதும் அழுத்தம் காரணமாகவோ, என்னவோ இந்த அரசு பேசுகின்றது. ஆனால் இதுவரை நடந்து முடிந்த பேச்சுகளில் எந்த முன்னேற்றமும் இல்லை.

இதே நேரம், அண்மையில் நடந்துமுடிந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பெரும் வெற்றி ஈட்டியது. அதாவது, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு அடுத்த படியாக இரண்டாவது பெரும்பான்மைக் கட்சியாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது பலத்தை நிரூபித்தது.

இதனால்தான் சற்று முன்னோக்கிச் சென்று தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களையும் ஆதரவாளர்களையும் மறைமுகமின்றி நேரடியாகவே தாக்க வேண்டும், இவ்வாறு தாக்கினால் அவர்கள் நாட்டைவிட்டு ஓடி விடுவார்கள். பின்பு எமக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை என எண்ணத் தொடங்கிவிட்டது.

இதன் விளைவாகத்தான் நன்கு திட்டமிட்ட முறையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஆதரவாளர்களும் கடந்த வாரம் யாழ். அளவெட்டியில் இராணுவத்தால் தாக்கப்பட்டுள்ளனர்- என்றார். (ச)

# உல்லாச விடுதிகளாக மாறவுள்ள தோட்ட முகாமையாளர் இல்லங்கள்

நுவரெலியா, ஜூன் 25

நுவரெலியா மாவட்டத்தில் ஆங்கிலேயர் காலத்தில் கட்டப்பட்ட தோட்ட முகாமையாளர் விடுதிகளை உல்லாச விடுதிகளாக மாற்றியமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என மாவட்ட அரச அதிபர் டி.பீ. ஜி.குமாரசிறி தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு வரும் வெளிநாட்டு உல்லாசப் பயணிகள் 4,500 ரூபாவைச் செலவிட்டு 'சீ பிளேன்' மூலம் நுவரெலியாவுக்கு வருகை தருகின்றனர். இவ்வாறு வரும் அவர்களுக்கு இங்கு நாம் முறையான சேவைகளை வழங்க வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

இங்கு தற்போதுள்ள உல்லாச விடுதிகளுக்கு மேலதிகமாக இந்த பழைமைவாய்ந்த விடுதிகளையும் செப்பனிட்டு உல்லாசப் பயணிகள் தங்கிச்செல்ல ஏற்பாடு செய்யப்படும் - என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச)

# மாணவர்கள் கடலில் மூழ்கிப் பலி

மட்டக்களப்பு, ஜூன் 25

மட்டக்களப்பில் உள்ள மண்முனைப்பற்று, புதுக்குடியிருப்பு கடலில் நீராடிக்கொண்டிருந்த பாடசாலை மாணவர்கள் இருவர் கடலில் மூழ்கி உயிரிழந்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்றுள்ள இச்சம்பவத்தில் புதுக்குடியிருப்பு கண்ணகி மகா வித்தியாலயத்தில் 10 ஆம் வகுப்பில் கல்வி கற்கும் அதே ஊரைச் சேர்ந்து புண்ணியமூர்த்தி வினோதராஜ் (வயது-14) மற்றும் தங்கத்துரை டிசாந்தன் (வயது-14) என்பவர்களே நீரில் மூழ்கி மரணமானார்கள். (ச-21)

# நன்னீர் மீன் உற்பத்தியை அதிகரிக்க நடவடிக்கை

மட்டக்களப்பு,ஜூன் 25

மட்டக்களப்பு மாவட்டத்தில் நன்னீர் மீன் உற்பத்தியை அதிகரிக்கச் செய்யும் துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

இந்த மாவட்டத்தில் பெருமளவிலான குளங்களில் 2 லட்சத்திற்கும் அதிகமான மீன்குஞ்சுகள் வளர்ப்பதற்காக விடப்பட்டுள்ளதாக மாவட்ட கடற்றொழில் திணைக்கள உதவிப் பணிப்பாளர் டொமினிக் ஜோர்ஜ் தெரிவித்துள்ளார்.

நன்னீர் மீன் உற்பத்தி தொடர்பாக ஆராயும் விசேட மாநாடு நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மாலை மட்டக்களப்பு மாவட்ட கடற்றொழில் திணைக்கள தலைமையகத்தில் நடைபெற்றது.

இந்த மாநாட்டில் மட்டக்களப்பு மாவட்ட தேசிய நீரக வள அபிவிருத்தி அதிகாரி கே.ரவிக்குமார், கடற்றொழில் திணைக்கள உயர் அதிகாரிகள் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (ச-21)

# சீரற்ற கால நிலை; நோய் பரவும் அபாயம்

அம்பாறை,ஜூன் 25

அம்பாறை மாவட்டத்தில் கடந்த பல வாரமாக இடம்பெற்று வரும் காலநிலை மாற்றத்தால் சளி, இருமல், தலைவலியுடன் கூடிய ஒரு வகை காய்ச்சல் மற்றும் கண் நோய் போன்றன பரவி வருகின்றன.

இதனால், வைத்தியசாலைக்குச் சிகிச்சைபெற வருவோரின் எண்ணிக்கை அதிகரித்துக் காணப்படுவதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்த மாவட்டத்தில் டெங்கு மற்றும் மலேரியா போன்ற நோய்களும் பரவக்கூடிய அபாயம் உள்ளதாக எச்சரிக்கை விடப்பட்டுள்ளது. (ச)



ஸ்ரீமத் தந்திரதேவா மகராஜ் சுவாமிகளின் மூன்றாமாண்டு நினைவு தினம் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நடைபெற்றது. இந்த நிகழ்வில் மட்டக்களப்பில் அமைந்துள்ள ஸ்ரீமத் தந்திரதேவா மகராஜ் சுவாமிகளின் சிலைக்கு இந்து இளைஞர் பேவையின் பொதுச் செயலாளர் சா.மதிசுதன் மலர்மாலை அணிவிக்கின்றார். (21)

# யுவதியைக் கடத்த முயற்சி; கல்முனையில் 6 பேர் கைது

கல்முனையில் யுவதியொருவரைக் கடத்தும் முயற்சியில் ஈடுபட்டு அது தோல்வியடைந்த நிலையில், அங்கிருந்து தப்பிச் சென்ற சந்தேக நபர்களுள் அறுவரைக் கைது செய்துள்ளனர் காத்தான்குடி பொலிஸார்.

கடந்த செவ்வாய்க்கிழமை யுவதியொருவரைக் கடத்த முற்பட்ட சம்பவத்தைத் தொடர்ந்து பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றி வளைப்புத் தேடுதலின்போதே இவர்கள் அறுவரும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் குறிப்பிட்டனர். கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் தொடர்ந்தும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர் என்று கல்முனை பொலிஸ் நிலையக் குற்றத்தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி எஸ்.எம்.சதாத் தெரிவித்தார்.(ச)

# 34 சாரதிகள் கைது

பதுளை நகரை அண்மித்த பகுதிகளில் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு பொலிஸார் மேற்கொண்ட திடீர்ச் சோதனையின் போது போக்குவரத்து விதிகளை மீறிய 34 சாரதிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்படும் எனப் பெலிஸார் தெரிவித்தனர்.(ச)

# வர்த்தக நிலையத்தில் தீ

வெலிமடை பெரகஸ் பிரதேசத்தில் வர்த்தக நிலையமொன்றை தீயிட்டு நாசப்படுத்தினர் என்ற சந்தேகத்தில் கணவனும், மனைவியும் நுவரெலியா பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

தீயினால் வர்த்தக நிலையத்துக்கு அதிக சேதமேற்பட்டுள்ளதாகவும், மொத்த சேதவிவரம் மதிப்பிடப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது. தனிப்பட்ட பகைகாரண மாகவே இந்த தீவைப்புச் சம்பவம் இடம் பெற்றிருக்கலாம் எனப் பொலிஸார் தெரிவித்தனர். (ச)

# சிகெரட் உற்பத்தி: இருவர் கைது

வரக்காப்பொலை, தும்பலதெனிய பிரதேசத்தில் சட்டவிரோத சிகரெட் தயாரிப்பு நிலையம் ஒன்று கடந்த புதன்கிழமை இரவு கொழும்பு வடக்கு குற்றப்புலனாய்வுத் துறையினரால் சுற்றிவளைக்கப்பட்டு இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பு, ஜம்பட்டாவீதிப் பகுதியில் கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் ஒருவரிடம் மேற்கொண்ட விசாரணையின் போது கிடைக்கப்பெற்ற தகவலை அடுத்தே இந்த நிலையம் சுற்றி வளைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:**
மற்றவர்கள் செய்த தவறு ஒன்றுக்கு, நீங்கள் பொறுப்பேற்க நேரிடலாம். விரயச் செலவுகளைத் தவிர்க்க, பேராசைகளைக் கைவிட வேண்டும். உறவினர்கள் தொடர்பான சில விடயங்களில் கௌரவம் பார்த்து கர்வமாக நடந்து கொள்வீர்கள். கடன் மிகுதிகள் கொடுப்பது பின்தள்ளிப் போகலாம். ஆதாயமில்லாத அலைச்சல் அதிகரிக்கும்.

**இடபம்:**
மனதிற்கு, உற்சாகம் தரும் செய்திகளைக் கேட்கலாம். பெரிய மனிதர்கள் சிலரை சந்திக்க மேற்கொண்ட முயறசிகளில் நல்ல பலன் கிடைக்கலாம். சிலருக்கு அவசர உதவி செய்யலாம். உங்களுக்கு பிடித்தமான பொருள்களை மற்றவர்கள் கொடுக்கலாம். மனைவி, குழந்தைகளின் சின்ன, சின்ன ஆசைகளை நிறைவேற்றி வைப்பீர்கள். நல்ல நாள்.

**மிதுனம்:**
மனதில் நல்ல சிந்தனைகள் குடிகொள்ளும் நாள். எதிர்ப்புகளை முறியடிக்க புதிய திட்டம் போடுவீர்கள். ஒய்வு எடுக்க நினைத்தாலும் முடியாத அளவுக்கு அடுக்கடுக்காக பல வேலைகளைச் செய்யலாம். சிலருடன் கருத்து மோதல், ஈகோ பிரச்சினைகள் உருவாகலாம். பணம் வரலாம். உங்களின் சில செயற்பாடுகளை நண்பர்கள், சக ஊழியர்கள் பாராட்டலாம்.

**கடகம்:**
சக ஊழியர்கள் மத்தியில் உங்களின் மதிப்பு, மரியாதை அதிகரிக்கும். குடும்ப உறுப்பினர்கள் உங்களின் யோசனைகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கலாம். நண்பர்களுடன் சேர்ந்து கொண்டாட்டங்களில் பங்கேற்கலாம். ஆலய வழிபாடுகளில் நாட்டம் செல்லும். எதிர்பாராத சந்திப்பு நிகழும். வயிறு, வாயு உபாதைகளால் அவதிப்படலாம்.

**சிங்கம்:**
நண்பர்களின் விமர்சனங்களுக்கு ஆள்படலாம். எதிர்பார்த்த பணவரவுகள் வருவது தள்ளிப் போகலாம். சிலரிடம் ஏட்டிக்குப் போட்டியாகப் பேசி வாங்கிக் கட்டிக் கொள்ளலாம். ஆசைப்பட்டு சில பொருள்களை வாங்கியும் அதில் திருப்தி இல்லாமல் போகலாம். எப்படியும் முடிந்துவிடும் என நினைத்த காரியம் ஒன்று முடியாமல் போகலாம்.

**கன்னி:**
அலைச்சல் இருந்தாலும் அதற்கேற்ற ஆதாயம் பெறும் நாள். நண்பர்கள் சிலர் உங்களுக்கு நல்ல யோசனைகள் சொல்வர். பெண்கள் பிறந்த வீட்டின் உதவிகளைப் பெறலாம். உடன் பிறப்புக்கள் வழியில் எதிர்பாராத உதவிகள் கிடைக்கலாம். கூட்டு முயற்சிகளில் வெற்றி உண்டு. சிலர் உங்களைத் தூண்டி விட்டு வேடிக்கை பார்க்கலாம்.

**துலாம்:**
புதிய முயற்சிகளில் முத்தான வெற்றி கிட்டும். நாடி வந்த சிலருக்கு, இல்லை என்று சொல்லாமல் பிறரிடம் கடன் வாங்கிக் கொடுத்தாவது உதவுவீர்கள். பெற்றோர் நலனில் அக்கறை காட்டுவீர்கள். பிடித்தமான ஆலயங்களுக்குச் சென்று வழிபாடு நடத்தலாம். தொழில் ரீதியாக வரவேண்டிய பணவரவுகள் வந்து சேரலாம். இனிய நாள்.

**விருச்சிகம்:**
சேமித்த பணத்திற்கு திடீரென செலவு ஏற்படலாம். சிலரிடம் வாயைக் கொடுத்து வம்பில் மாட்டிக் கொள்ளலாம். உடன் பிறப்புக்கள் வழியில் முக்கிய செய்திகளைக் கேட்கலாம். மற்றவர்களின் நிர்ப்பந்தத்தின் பேரில், சில காரியங்களைச் செய்வீர்கள். தொழில் ரீதியாக புதிய அனுபவப் பாடம் ஒன்றைக் கற்றுக் கொள்வீர்கள்.

**தனுசு:**
குழப்பங்கள் விலக அனுபவம் உள்ளவர்களிடம் ஆலோசனை கேட்டுச் செயற்படுவது நல்லது. நன்றி மறந்தவர்களை நினைத்து மனவருத்தப்படுவீர்கள். கணவன், மனைவி இடையே வாக்குவாதங்கள் ஏற்படலாம். சில விடயங்களில் அஜாக்கிரதையாக செயற்படுவீர்கள். உறவினர் தொடர்பான வேலைகளுக்காக அலைய நேரிடலாம்.

**மகரம்:**
தொடங்கிய காரியங்கள் தங்கு தடையின்றி நடக்கும். நண்பர்கள் வழியில் சிறு அன்புத் தொல்லைகளைச் சந்திக்கலாம். பல நாள்களாக மன உளைச்சலைக் கொடுத்துக் கொண்டிருந்த விடயம் திடீரென முடிவு வரும். வெளியிடங்களுக்குச் செல்லும் போது, புதியவர் ஒருவரின் உதவி கிடைக்கும். சகாய விலையில் சில பொருள்களை வாங்குவீர்கள்.

**கும்பம்:**
துணையாக இருந்த சிலரே, பிரச்சினையாக மாறலாம். சில வேலைகளில் தீவிரமாக இறங்கி விட்டு பின்னர் அதில் இருந்து பின்வாங்கலாம். கொடுக்கல் வாங்கல்களை சீராக வைத்துக் கொள்ள பிரயத்தனம் மேற்கொள்வீர்கள். வீட்டை அழகாக வைத்திருப்பதில் அக்கறை காட்டுவீர்கள். எதிர்பார்ப்பு ஒன்றில் ஏமாற்றம் ஏற்படலாம். செலவு கூடும்.

**மீனம்:**
உங்களின் உத்வேகத்தை, தன்னம்பிக்கையை அதிகரிக்கும் நிகழ்ச்சிகள் நடக்கலாம். எதிலும், அகலக்கால் வைக்காமல் எச்சரிக்கையோடு செயற்பட வேண்டும். எதிர்பாராத சில தரப்பிலிருந்து உதவி கிடைக்கலாம். உங்களின் அனுபவம் ஒன்றை மற்றவர்களுக்கு அறிவுரையாகச் சொல்வீர்கள். அரசு தொடர்பான வேலைகளில் இழுபறி ஏற்படலாம்.

# மஹிந்தாவின் புதிய தலையிடி

**இந்திய – இலங்கை இடையிலான பரந்துபட்ட பொருளாதார ஒத்துழைப்பு உடன்படிக்கையானது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்குப் புதிய தலையிடியாக மாறியிருக்கிறது என்று மத்திய கிழக்கைத் தளமாகக் கொண்ட 'சவூதி கஸட்' என்ற ஊடகத்தில் பைசல் சமத் எழுதியுள்ள செய்தி ஆய்வின் தமிழாக்கம் இது.**

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான பரந்துபட்ட பொருளாதார ஒத்துழைப்பு உடன்பாட்டை (Indo&Lanka Comprehensive Economic Partnership Agreement - CEPA) எதிர்த்து இலங்கை வர்த்தக சமூகத்தினர் வீதிக்கு இறங்கிப் போராட்டங்களை நடத்தியதை அடுத்து, உடன் படிக்கையை நடைமுறைப்படுத்துவதில் இருந்து கொழும்பு அரசு பின்வாங்கி கிட்டத்தட்ட ஓராண்டாகிவிட்டது.

இலங்கையின் பொருளாதார நலன்களுக்குப் பாதகமாக அமையும் எத்தகைய உடன்பாட்டிலும் தான் ஈடுபடமாட்டார் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உறுதியளித்த பின்னரே ஆர்ப்பாட்டக்காரர்கள் தங்களது போராட்டத்தைத் தற்காலிகமாகக் கைவிட்டிருந்தனர்.

**சிக்கலில் வர்த்தக உடன்படிக்கை**

இரு நாடுகளுக்கும் இடையிலான பொருளாதார உடன்பாடானது உடனடியாக எட்டப்படுவதோடு விரைவாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்று இந்தியா கடும் அழுத்தங்களைப் பிரயோகித்துவரும் நிலையில் மீண்டும் பிரச்சினை தோன்றியுள்ளது.

இந்தியாவின் அழுத்தத்துக்கு அடிபணிவதா அல்லது செல்வாக்குமிக்க உள்ளூர் வர்த்தகர்களது நிலைப்பாட்டுக்குத் துணைபோவதா என்ற குழப்பத்துக்குள் ஜனாதிபதி இப்போது சிக்கிக் கொண்டுள்ளார். மஹிந்த அரசுக்கு நிதி ரீதியாகவும் இதர வழிவகைகளிலும் துணையாக இருப்பது இந்த வர்த்தக சமூகத்தினர்தான் என்பதால் அவர்களை அவரால் அடியோடு புறந்தள்ளிவிட முடியாது.

பரந்துபட்ட பொருளாதார உடன்பாடானது, இந்திய உற்பத்திப் பொருள்கள் குறைந்த விலையில் இலங்கையின் சந்தைகளுக்குத் தங்குதடையின்றி வருவதற்கு வழிசெய்கிறது என்றும் ஏன் தொழிலாளர்கள் கூடக் குறைந்த ஊதியத்தில் அங்கிருந்து தருவிக்கப்படுவதற்கு இடமளிக்கிறது என்றும் வாதிடும் இலங்கை வர்த்தகர்கள், இதன் விளைவாக இலங்கையின் உள்ளூர் தொழில்துறை மாத்திரமின்றி தொழில் சந்தையும் பெரும் பின்னடைவைச் சந்திக்கும் என்கிறார்கள்.

**வர்த்தகர்கள் எதிர்ப்பு**

தற்போது நடைமுறையிலிருக்கும் சுதந்திர வர்த்தக உடன்படிக்கையானது (Indo&Lanka Free Trade Agreement - FTA), இறக்குமதி செய்யப்படும் இந்திய உற்பத்திப் பொருள்களின் அளவை மட்டுப்படுத்துகிறது. ஆனால், பரந்துபட்ட பொருளாதார ஒத்துழைப்பு உடன்பாடானது வங்கிச்சேவைகள் உள்ளிட்ட தொழில்சார் அம்சங்களும் இந்தியாவிலிருந்து தங்கு தடையின்றித் தருவிக்கப்படுவதற்கு வழிசெய்கிறது என்று இந்த உடன்படிக்கைக்கு எதிரான போராட்டத்தை முன்னின்று நடத்தும் செல்வாக்குமிக்க உள்ளூர் வர்த்தகரான சமந்த குமாரசிங்க கூறுகிறார்.

''குறிப்பிட்ட இந்த உடன்பாடு கைச்சாத்திடப்பட்டால் இந்தியாவிலுள்ள சவரத் தொழிலாளி ஒருவர் தனது [illegible] இலங்கைக்குக் குடி [illegible] ஒன்றைத் திறக்கமுடியும்'' என்கிறார் இந்த வர்த்தகர்.

கடந்த மேயில் ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் அவர் இதனைக் குறிப்பிட்டிருக்கிறார். இரண்டு நாடுகளுக்கும் இடையிலா[ன] சுதந்திர வர்த்தக உடன்படிக்கை 1998ஆம் ஆண்டு கைச்சாத்திடப்பட்டிருந்தது.

பரந்துபட்ட பொருளாதார ஒத்துழைப்பு உடன்படிக்கையானது நாட்டின் வர்த்தகத்திலும் சேவைகளிலும் அரசுக்கு இருக்கும் கட்டுப்பாட்டை இல்லாது செய்துவிடும். அத்துடன் இந்த உடன்பாடு இந்திய வர்த்தகர்களுக்கும் துறைசார் நிபுணர்களுக்கும்தான் அதிக நன்மைகளைப் பெற்றுக்கொடுக்கப் போகிறது எனக் குமாரசிங்க கூறுகிறார்.

**குற்றச்சாட்டு**

எவ்வாறிருப்பினும் இலங்கையின் உள்ளூர் தொழில் துறையாளர்கள் சோம்பல் பிடித்தவர்கள் என்றும் தொழிலில் போட்டிக்கோ அன்றி தங்களது வாடிக்கையாளர்களுக்குத் தரமான உற்பத்திகளை வழங்குவதற்கோ இவர்கள் தயாராக இல்லை என்றும் இலங்கையின் மூத்த பத்திரிகையாளர் குசல பெரேரா கூறுகிறார்.

''மூன்றாம் தரப் பொருள்களையே உற்பத்தி செய்யும் இவர்கள், போட்டிக்கு அஞ்சுகிறார்கள். போட்டியென்று வந்தால்தான் நுகர்வோருக்கு தரமான உற்பத்திகள் கிடைக்கும்'' என்கிறார் இவர்.

இந்த வர்த்தக சமூகம்தான் அரசியல் ரீதியாகவும் நிதி ரீதியாகவும் அரசுக்கு முண்டுகொடுத்து நிற்பதால் அதைப் பகைத்துக்கொள்ள இன்றைய மஹிந்த அரசு விரும்பவில்லை.

பரந்துபட்ட பொருளாதார ஒத்துழைப்பு உடன்பாட்டில் விரைவாகக் கைச்சாத்திடுவது மற்றும் அதனை விரைவாக நடைமுறைப்படுத்துவது தொடர்பாக அண்மைய வாரங்களில் கொழும்பிலும் வெளிநாட்டிலும் இலங்கை - இந்திய அதிகாரிகளுக்கு இடையில் தொடரான அரசியல் கலந்துரையாடல்கள் இடம்பெற்றுவருகின்றன.

அரசியல் ரீதியில் நோக்குமிடத்து நாட்டின் சிறுபான்மைத் தமிழர்களுக்குரிய அதிகாரங்களை வழங்கும் வகையில் மேலுமதிக அரசியல் விட்டுக்கொடுப்பை இலங்கை மேற்கொள்ள வேண்டும் என இந்தியா விரும்புகிறது.

இது கொழும்பில் பெரும் வாதப்பிரதிவாதங்களைத் தோற்றுவித்திருந்தது. அத்துடன் பரந்துபட்ட பொருளாதார ஒத்துழைப்பு உடன்படிக்கை விரைந்து நடைமுறைப்படுத்தப்படவேண்டும் என்றும் இந்தியா தொடர்ந்தும் வலியுறுத்தி வருகிறது.


இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையில் வேகமாக வளர்ந்து வரும் அரசியல் மற்றும் பொருளாதார உறவுகள் தொடர்பாக இந்தியா அதிக கரிசனை கொண்டிருக்கின்றது என்று அரசியல் ஆய்வாளர்கள் கூறுகிறார்கள்.

**சீனாவால் வரும் சிக்கல்கள்**

இலங்கையில் இந்தியா வகிக்கும் பங்கு எதுவோ அதனை ஒத்த அல்லது அதற்கும் மேலான பங்கை வகிப்பதற்கே சீனா விரும்புகிறது. இலங்கைக்கு அதிகளவில் வர்த்தகக் கடன் வழங்கும் நாடு சீனாதான். அத்துடன் வீதிகள், துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் போன்ற உட்கட்டுமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அபிவிருத்திப் பணிகளிலும் சீனா துணை நிற்கிறது.

இந்த நிலையில், குறிப்பாக 30 ஆண்டுகாலப் போர் முடிவுக்கு வந்துவிட்ட இந்த வேளையில் தனது பொருளாதார ரீதியிலான நுழைவை விரிவாக்கும் வகையில், இந்தியா கொழும்பு மீது தொடர்ந்து அழுத்தம் கொடுக்கிறது.

இலங்கையில் வாழ்க்கைச் செலவு அதிகரித்துவிட்டது என்ற கருத்து பொதுமக்கள் மத்தியில் வலுப்பெற்றிருக்கிறது. இந்த நிலையில் பரந்துபட்ட பொருளாதார ஒத்துழைப்பு உடன்படிக்கையிலும் கைச்சாத்திடவேண்டும் என்று இந்தியா வலியுறுத்துவது மஹிந்தவின் தலையிடியை அதிகரித்திருக்கிறது.

தனியார் ஓய்வூதியச் சட்டத்துக்கு எதிரான போராட்டம், தமக்கான ஊதியத்தை அதிகரிக்க வேண்டும் என்ற பல்கலைக்கழக ஆசிரியர்களின் போராட்டம், பஸ் கட்டணங்களை அதிகரிக்க வேண்டும் என்ற கோரிக்கை உள்ளிட்ட இதர சம்பவங்களின் ஊடாக இலங்கையில் வாழ்க்கைச் செலவு எவ்வளவுக்கு உயர்ந்துள்ளது என்பதை விளங்கிக்கொள்ள முடியும்.

**சரியும் அரச செல்வாக்கு**

மக்கள் மத்தியில் அதிபர் ராஜபக்ஷவுக்கான செல்வாக்கு இன்னமும் குறையாமல் இருந்தாலும் அவரது அரசு மக்கள் செல்வாக்கை இழந்து வருகிறது என்கிறார் அரசியல் ஆய்வாளர் பேராசிரியர் கீத பொன்கலன்.

கடந்த மார்ச்சில் இடம்பெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தலில் அரசு வெற்றியீட்டிய போதிலும் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சிக்கு விழுந்த வாக்கு வீதம் கடந்த தேர்தலுடன் ஒப்பிடும்போது அதிகரித்திருக்கிறது.

''எந்தவொரு முயற்சியையும் எடுக்காமலேயே ஐ.தே.க. இந்த வாக்குகளைப் பெற்றிருக்கிறது'' என்கிறார் கீத பொன்கலன்.

பரந்துபட்ட பொருளாதார ஒத்துழைப்பு உடன்பாடானது உள்ளூர் பொருளாதாரத்தில் இந்தியாவின் செல்வாக்கு அதிகரிப்பதற்கே வழிசெய்யும் என்பதால் இலங்கையின் பொருளாதாரத்துக்கே அது பாதகமானது என்றும் அவர் கூறுகிறார்.

''அதிக வளர்ச்சி பெற்ற இந்திய நிறுவனங்கள் மற்றும் சேவைகளுடன் உள்ளூர் நிறுவனங்கள் போட்டியிடுவது கடினமானதாகவே இருக்கும். உள்ளூர் வர்த்தகர்கள் இந்த உடன்படிக்கையை எதிர்ப்பதன் அடிப்படை அதுவே'' என்கிறார் பொன்கலன். தவிர, குறித்த இந்த உடன்பாட்டை முன்னெடுத்துச் செல்வதற்கு அரசும் விரும்பவில்லை என்பது அவரது கருத்து.

''அரசில் இடம்பெற்ற கூட்டுக்கட்சிகளும் இந்த உடன்படிக்கையை எதிர்க்கின்றன. இலங்கை மீது இந்தியா செல்வாக்குச் செலுத்துவதை இந்தக் கட்சிகளில் சில விரும்பவில்லை. பரந்துபட்ட பொருளாதார ஒத்துழைப்புத் தொடர்பான தனது கரிசனையை இந்தியாவுக்கு வெளிப்படுத்துவதற்கு கொழும்பு வேறுபட்ட வழிகளைப் பயன்படுத்துவதாக நான் கருதுகிறேன்'' என்கிறார் ஆய்வாளர் பொன்கலன்.

அரியதொரு நிகழ்வாக கடந்த வாரம் இலங்கை அரசுடன் இணைந்து செயற்படுகின்ற கட்சிகளும் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியும் குறித்த இந்த உடன்பாட்டுக்கு எதிரான போராட்டத்தில் ஒன்று திரண்டிருந்தன.

*பரந்துபட்ட பொருளாதார ஒத்துழைப்பு உடன்பாட்டுக்கு எதிரான வர்த்தகர் குழு* என்ற அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பொதுக்கூட்டம் ஒன்றில் ஐ.தே.கவின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்கவும் அரசுடன் இணைந்து செயற்படும் தேசிய வாதக் கட்சிகளின் அரசியல்வாதிகளும் இணைந்து கலந்து கொண்டனர். குறித்த இந்த உடன்படிக்கைக்கு எதிரான பொதுத் தீர்மானம் ஒன்றையும் கொண்டுவந்திருந்தனர்.

**வர்த்தக உடன்படிக்கைக்கு ஆதரவு**

பொருளாதார உடன்பாட்டு விடயத்தில் இலங்கை அரசு அரசியல் சித்து விளையாட்டுக் காட்டுகிறது என்று அரசியல் அவதானிப்பாளர் குசல பெரேரா கூறுகிறார்.

''உள்ளூர் வர்த்தகர்களை எதிர்ப்பதற்கு அரசு தயாராக இல்லை. இதுவொரு குறுகிய பார்வையுடன்கூடிய சிந்தனையே. முன்மொழியப்பட்டிருக்கும் இந்த உடன்பாடு நடைமுறைப்படுத்தப்பட்டால் இலங்கைக்குத்தான் அதிக நன்மைகள் கிடைக்கும்'' என்கிறார் குசல பெரேரா.

உதாரணமாக, வெளிநாடுகளிலிருந்து மருத்துவர்கள் இலங்கைக்கு வந்து பணிசெய்வதற்கு அனுமதிக்கப்படுமெனில் மருத்துவ ஆலோசனைக்காக அதிக பணத்தை வாங்கும் மருத்துவர்கள் தங்களது சேவையை மேம்படுத்தவேண்டிய தேவை எழும் என்கிறார் இவர்.

''தாங்கள் மக்களுக்குச் சிறந்த சேவையை ஆற்றுகிறார்களெனில் இங்குள்ள மருத்துவர்களோ அல்லது இதர துறைசார் நிபுணர்களோ இந்த உடன்படிக்கை குறித்துக் கவலைகொள்வதற்கான தேவை எதுவுமில்லை. தவிர உள்ளூர் துறைசார் வல்லுநர்களுக்கு நாட்டிலுள்ள மொழிகள் பரிச்சயம் என்பதால் இங்கு வெளிநாட்டு மருத்துவர்களைவிட இவர்களுக்குததான் அதிக நன்மைகள் கிடைக்கின்றன. இவ்வாறிருக்க இந்த மருத்துவர்கள் ஏன் அஞ்சுகிறார்கள்?'' என குசல கேள்வி எழுப்புகிறார்.

இலங்கைக்கான பயணம் ஒன்றை மேற்கொள்வதற்கு விடுக்கப்பட்ட அழைப்பை இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் அண்மையில் ஏற்றுக் கொண்டிருக்கிறார்.


இந்தியப் பிரதமரின் இத்தகைய பயணம் நிச்சயமாக அளவில் சிறிய இலங்கைத்தீவு மீது உத்தேச உடன்படிக்கையை நடைமுறைப்படுத்தப்படவேண்டும் என அழுத்தம் அதிகரிப்பதற்கே வழிசெய்யும்.

குறித்த இந்தப் பரந்துபட்ட பொருளாதார ஒத்துழைப்பு உடன்படிக்கையை வரைவதற்கு நீண்ட காலங்கள் எடுத்திருந்தது. அத்துடன் இலங்கைத் தீவு மீதான இந்தியாவின் அரசியல் மற்றும் பொருளாதார நலன்கள் அதிகரித்துச்செல்வதைக் காட்டும் ஒரு சம்பவமாகவும் இந்த உடன்பாடு அமைகிறது.

(நன்றி புதினப் பலகை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐந்து முட்டாள்கள்



பேரரசர் அக்பரும் பீர்பாலும் வழக்கம் போல பேசிக்கொண்டிருந்தார்கள். ''பீர்பால் என் வாழ்நாளில் நான் முட்டாள்களைச் சந்தித்ததே இல்லை. நீ சந்தித் துள்ளாயா?'' என்று கேட்டார் அக்பர்.

பேரரசே எந்த நாட்டிலும் முட்டாள்களுக்குப் பஞ்சமே இல்லை. நான் நிறைய முட்டாள்களை முன்பும் சந்தித்துள்ளேன். இப்போதும் சந்திக்கிறேன்'' என்றார்.

''பீர்பால் என்னை மட்டம் தட்டுவதே உமக்கு வேலை. ஒருவாரம் தவணை தருகிறேன். அதற்குள் ஐந்து முட்டாள்களைத் தேடிப்பிடிக்க வேண்டும். இல்லாவிட்டால் உமது உடலில் உயிர் இருக்காது'' என்றார் அரசர்.

வீணாக மாட்டிக் கொண்டோமே என்று நினைத்துக் கொண்டே நகரம் எங்கும் முட்டாள்களைத் தேடி அலைந்தார் பீர்பால்.

ஒரு வாரத்தில் அவருக்கு மூன்று முட்டாள்கள் கிடைத்து விட்டனர். அவர்களை அழைத்துக்கொண்டு அரசவைக்கு வந்தார் பீர்பால்.

''பேரரசே! முதலில் நிற்பவன் குதிரையில் அமர்ந்து இருந்தான். இவன் தலையில் பெரிய புற்கட்டு இருந்தது. குதிரையின் முதுகில் புற்கட்டை வைக்காமல் ஏன் நீ புற்கட்டைத் தூக்கிக் கஷ்டப்படுகிறாய்?'' என்று கேட்டேன். ''உங்களுக்கு அறிவு இல்லையா? ஏற்கனவே என் எடையைத் தாங்காமல் குதிரை கஷ்டப்படுகிறது. புற் கட்டை வைத்தால் மேலும் அது துன்பப்படாதா'' என் றான்.

''தன்னைச் சுமக்கும் குதிரையே புற் கட்டையும் சுமக்கிறது. இதை அறியாத முட்டாள் இவன்'' என்றார் பீர்பால். சிரித்தார் அக்பர்.

இரண்டாவது நிற்கும் இந்த முட்டாளுக்கு விந்தையான எண்ணம் தோன்றியது. தன்குரல் எவ்வளவு தொலைவு கேட்கும். அதைத் தானே கணக்கிட்டுப் பார்க்க வேண்டும் என்று நினைத்தான். அதனால் உரத்துக்குக் குரல் கொடுத்து அந்தக் குரலைத் துரத்திக் கொண்டே ஓடினான் அப்படி ஓடிவரும் போது என்மீது மோதிவிட்டான். ''குரலைத் துரத்திக் கொண்டு ஓடினேன், என்னைத் தடுத்து விட்டீர்களே? என்று அலறினான்.

''இப்படிப்பட்ட முட்டாளா?'' என்று சிரித்தார் அக்பர்.

பேரரசே தெருவிளக்கு நன்றாக எரிந்து கொண்டிருந்தது. அந்த வெளிச்சத்தில் எதையோ தேடிக்கொண்டிருந்தான் இந்த மூன்றாமவன். ''என்ன தேடுகிறாய்? என்று கேட்டேன்.

''ஐயா நான் வெளியூரில் இருந்து வருகிறேன். வழியில் எங்கேயோ என் பணப்பை விழுந்துவிட்டது என்றான். ''எங்கேயோ விழுந்த பணப்பையை இங்கு தேடினால் கிடைக்குமா?'' என்று கேட்டேன்.

''வெளிச்சம் உள்ள இடத்தில்தானே தேட வேண்டும். அப்பொழுதுதான் பொருள் கிடைக்கும். மற்ற இடங்கள் இருட்டாக உள்ளன. இங்குதான் வெளிச்சமாக இருக்கிறது. இதனால் தான் இங்கு தேடினேன்'' என்று பதில் கூறினான் என்று பீர்பால் சொன்னார்.

இவனும் சரியான முட்டாள்தான் என்று சிரித்தார் அக்பர்.

''சரி இன்னும் இரண்டு முட்டாள்கள் எங்கே?'' என்று கேட்டார். ''நான்காவது முட்டாள் நான்தான் என்றார் பீர்பால். இதைக் கேட்ட அக்பரால் சிரிப்பை அடக்க முடியவில்லை. ''நீர் முட்டாளா?'' என்றார். ஏன்? என்று கேட்டார் அக்பர்.

பேரரசே! நான் இந்த நாட்டின் அமைச்சன் எவ்வளவோ முக்கியமான வேலைகள் இருக்க முட்டாள்களைத் தேடி அலைந்த நான் முட்டாள்தானே! என்றார் பீர்பால்.

சரி, ஐந்தாவது முட்டாள் யார்? என்றார் அரசர்.

அரசே! ஐந்தாவது முட்டாள் யார் என்று நான் சொன் னால் என் உடலில் உயிர் இருக்காது.

இதைக்கேட்ட அக்பரின் முகம் மாறியது. ''நான் ஐந்தாவது முட்டாளா?'' பேரரசே காலம் பொன் போன்றது. எத்தனையோ இன்றியமையாத வேலைகள் உங்களுக்காகக் காத்திருக்கின்றன. பல அரசுப் பணிகள் எமக்குக் காத்திருக்க ஐந்து முட்டாள்களைத் தேட ஓர் அமைச்சரை அனுப்பியுள்ளீர்கள். அவர்களைச் சந்திக்க நேரமும் ஒதுக்கியுள்ளீர்கள். இப்பொழுது சொல்லுங்கள் என் கருத்து உண்மையா? இல்லையா?'' என்று கேட்டார் பீர்பால்.

அரசர் ''எதற்கு முதன்மை தரவேண்டும் எதற்கு தரக் கூடாது'' என்பதை உணர்ந்து கொண்டேன். நன்றி என்றார் அக்பர்.

தேவையற்ற விடயங்களுக்காக எமது நேரத்தை வீணாக்கக் கூடாது.

சுகி.சிவம்.

# நம்பிக்கையுடன் நாட்டைக் கட்டியெழுப்ப பூரண ஒத்துழைப்பு வழங்குகின்றனர் படையினர்

## 51 ஆவது படைப்பிரிவின் கட்டளைத் தளபதி



யாழ்ப்பாணம், ஜூன் 25

அமைதியான சூழலை உருவாக்கி நம்பிக்கையுடன் நாட்டைக் கட்டி எழுப்ப படையினர் பூரண ஒத்துழைப்பு வழங்குகிறார்கள்.

30 வருடங்களின் பின்னர் தற்போது அமைதி ஏற்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்திலுள்ள எமது படையினர் மக்களுக்கு பல்வேறு உதவித் திட்டங்களை வழங்கி வருகிறார்கள்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் 51ஆவது படைப்பிரிவின் கட்டளைத் தளபதி என்.ஜே.வெல்கம. அளவெட்டியில் உள்ள மகாஜன சபா மண்டத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற மாணவர்களுக்கான பாடசாலை உபகரணங்கள் வழங்கல் மற்றும் பொதுமக்களுக்கான வாழ்வாதார உதவித் திட்டங்கள் வழங்கும் நிகழ்வில் பிரதம விருந்தினராக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:

யாழ்.மாவட்டத்தில் இராணு வத்தினர் பல்வேறு பிரதேசங்களில் இவ்வாறான உதவித் திட்டங்களை வழங்கி வருகின்றனர். ஜனாதிபதியின் ஆலோசனைக்கமையவே இவை முன்னெடுக்கப்படுகின்றன.

இந்த நிகழ்வு இந்தப் பிரதேசத்தில் முக்கிய விடயமாக அமைந்தாலும் எதிர்காலத்தில் பல செயற்பாடுகளை முன்னெடுக்க எதிர்பார்க்கிறோம்.

இந்த உபகரணங்கள் மற்றும் வாழ்வாதார உதவித் திட்டங்கள் தெற்கிலுள்ள உங்கள் சகோதரர்களின் ஏற்பாட்டில் அதாவது படையினர், உத்தியோகத்தர்களின் ஊடாக இங்கு கொண்டு வந்து வழங்கப்படுகின்றன. - என்றார்.

51 ஆவது பாதுகாப்புப் படைப் பிரிவினரால் ஏற்பாடுசெய்யப்பட்ட இந்த நிகழ்வுக்கு கொழும்பிலுள்ள பிரபல வர்த்தகர் ஒருவர் அனுசரணை வழங்கியிருந்தார்.

இந்த நிகழ்வில் பாடசாலை மாணவர்கள் 25 பேருக்கு ஆயிரம் ரூபா வீதம் புலமைப்பரிசில் வழங்கப்பட்டது. அது மட்டுமன்றி அவர்களுக்கான பாடசாலை உபகரணங்களும் வழங்கப்பட்டன.

தெரிவு செய்யப்பட்ட பொது மக்களில் ஐம்பது பேருக்கு உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. ஒருசிலருக்கு தலா எட்டு பைக்கற் சிமெந்தும் மலசல கூடம் அமைப்பதற்கான 8 மாபிள் கோப்பைகளும் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் தெல்லிப்பழை பிரதேச செயலாளர் மு.முரளிதரன், அமெரிக்கன் சிலோன் மிசன் போதகர் யூட் சுதர்சன், படைப் பிரிவுகளின் கட்டளை அதிகாரிகள் மற்றும் பொது மக்கள், பாடசாலை மாணவர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ம-4)

# புத்தகசாலை

## சுக மஞ்சரி




சமூக சுக நல காலாண்டு சஞ்சிகை யான 'சுக மஞ்சரி' வெளி வந்துள்ளது.

சுகாதாரம், கல்வி மற்றும் அபிவிருத்திக்கான அமைப்பின் வெளியீடாக காலாண்டு இதழாக வெளியிடப்பட்டு வருகின்றது.

உடல் நலத்தில் ஏற்படுகின்ற குந்தகங்களையும், அவற்றால் உண்டாகும் நோய்கள் குறித்தும் அந்த நோய்களைக் குணமாக்க எத்தகைய மருத்துவங்களைப் பின்பற்ற வேண்டும் என்கின்ற பல்வேறு விளக்கங்களைத் தாங்கி 'சுகமஞ்சரி' வெளிவந்துள்ளது.

## தமிழருவி




கலை, இலக்கிய சமூக விஞ்ஞான மாதாந்த சஞ்சிகையான 'தமிழருவி' வெளிவந்துள்ளது.

கலை, இலக்கியத்துறையை வளர்ச்சிப் பாதையில் இட்டுச் செல்லும் நோக்கில் தமிழருவி சஞ்சிகை வெளி வருகிறது.

குழந்தை ம.சண்முகலிங்கத்தின் நேர்காணல், பொது அறிவு, நகைச்சுவை எனப் பல்வேறு அம்சங்களைத் தன்னகத்தே கொண்டு 'தமிழருவியாக பாய்கிறது இந்தச் சஞ்சிகையென்றால் மிகையாகாது.

வாசிப்புத்திறன் குறைந்து வருகின்ற இந்த அவசர யுகத்தில் இவ்வாறான சஞ்சிவிகைகளைச் சுவையாக வெளியிட்டு அதனை வாசகர்கள் ருசிக்கத்தக்கதான முறையில் களம் அமைத்துக் கொடுப்பது வரவேற்கத் தக்கதொன்றாகும்.

# வாசகர் திருமுகம்

## 1983 கறுப்பு ஜூலை மீண்டும் வரப்போகிறதா?

இலங்கையின் வரலாற்றில் இனப் பிரச்சினை, இனப்படுகொலை, அடாவடித்தனம் என்பன இருக்கவேண்டுமென அரசியல் அமைப்பில் எழுதப்பட்டுள்ளது போல் தெரிகின்றது.

1957, 1977, 1983 ஆம் ஆண்டுகளில் மிகப்பிரமாண்டமான இனப்படுகொலை இடம்பெற்று அதன்பின் இனப் பிரச்சினை மிகப் பூதாகாரமாக வெடித்தது.

இவற்றுக்கெல்லாம் காரணம் தமிழர்களை - அப்பாவிகளை - ஆயுதம் ஏந்தாதவர்களை அடித்துத் துன்புறுத்தியதே ஆகும்.

அந்த வகையில் தான் அண்மையில் அளவெட்டியில் இடம்பெற்ற தாக்குதல் நிகழ்வும் அமைகின்றது. அதாவது ஆரம்பத்தில் 1976 ,1977 ஆம் ஆண்டு காலப் பகுதியில் இறைகுமரன், உமைகுமரன் என்ற இளைஞர்கள் கொல்லப்பட்டதும் அளவெட்டியில்தான்.

அதன் பின் 1977 ஆம் ஆண்டு தேர்தல் காலப் பகுதியில் சுன்னாகம், யாழ்ப்பாணம் பஸ் நிலைய கடைகள் எரிக்கப்பட்டது. நாச்சிமார் கோயிலடியில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் மேடை உடைக்கப்பட்டு, கலந்து கொண்ட பொதுமக்கள் மீது காடைத்தனம் காட்டப்பட்டு, வாகனங்கள் எரிக்கப்பட்டுமெல்ல மெல்ல கலவரத்தை ஆரம்பித்தார்கள்.

அதன் உச்சக்கட்ட வெளிப்பாடுதான் 1983 ஜூலை மாதம் பெரியளவில் இனப்பிரச்சினை ஏற்பட்டு சிறையில் இருந்தவர்களும் படுகொலை செய்யப்பட்டனர். இது உலகின் கவனத்தை ஈர்த்த கறுப்பு ஜூலை. அதுபோன்ற ஒரு காலகட்டத்தை அடைவதற்கு இன்றும் சிலர் முற்படுகின்றனர்.

'மக்கள் மனங்களை வெல்லவேண்டும்' என்பது மஹிந்த சிந்தனையின் உள்ளடக்கப்பட்டதொன்று.ஆனால் காரணமின்றி மக்களை - தமிழர்களை துன்புறுத்தவேண்டும் என்பதும் மஹிந்த சிந்தனையில் கூறப்பட்டுள்ளதா என்று மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

இன்று தமிழ் மக்கள் பொலிஸ், இராணுவம் மீது மிகுந்த மதிப்பும் நம்பிக்கையும் வைத்துள்ளனர்.

எனவே பொலிஸாரும் இராணுவத்தினரும் யாராவது தவறு செய்திருப்பின் சட்ட நடவடிக்கை எடுப்பதுவே மிகப்பொருத்தமான செயலாகும்.

அதை விடுத்து 1980 காலப் பகுதியில் சேவை புரிந்தவர்கள் போல் செயற்பட முற்பட்டால் மக்கள் மீண்டும் உங்கள் மீது நம்பிக்கை இழக்கவேண்டிய நிலை வரலாம்.

எனவே அண்மையில் அளவெட்டியில் தமிழ் தேசியக் கூட்டமைப்பினரின் கூட்டத்தில் அடாவடி புரிந்தவர்களை எல்லாம் வல்ல ஜனாதிபதி அவர்கள் பொறுப்பு அதிகாரிகள் மூலம் காடைத்தனம் புரிந்தவர்களை உடனடியாக மக்கள் முன் அம்பலப்படுத்தி தண்டனை வழங்கினால் மக்கள் உங்கள் மீது இன்னமும் நூற்றுக்கு நூறு வீதம் நம்பிக்கை கொள்வார்கள்.

எஸ்.எஸ்.குமார்,
சுன்னாகம்.

## மீளக்குடியமரத் துடிக்கும் மக்களும் அரச இயந்திரமும்

எப்பாடுபட்டேனும் தமது சொந்த மண்ணில் கால் பதித்து விடவேண்டுமென்ற தீராத ஆவலுடன் வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களின் இந்தப் பல வீனத்தை மிகவும் மோசமான முறையில் தவறாகப் பயன்படுத்துவது மிகவும் வேதனைக்குரிய விடயமாகும்.

மே மாதம் 10 ஆம் திகதி வலி. வடக்கின் குறிப்பிட்ட சில பகுதிகளில் மீள்குடியேற்றம் நடைபெறும் என்று பத்திரிகைகளில் செய்திகள் வந்துகொண்டிருந்தன. திடீரென்று எதுவித காரணமும் அறிவிக்கப்படாமலேயே 9 ஆம் திகதியென்று அறிவிக்கப்பட்டது.

குறிப்பிட்ட தினத்தில் 10 மணிக்கு பிரதேச செயலர் அலுவலகத்தில் கூடுமாறு பத்திரிகைகளில் காணப்பட்ட செய்தியை ஆதாரமாகக் கொண்டு மக்கள் வேதனையோடு காணி சம்பந்தமான ஆவணங்களையும் சுமந்தபடி கூடி நின்றார்கள்.

அன்று பிற்பகல் 3 மணியளவில் எதிர்பாராத கூட்டம் ஒன்றில் அவர்கள் பங்குபற்றச் செய்யப்பட்டார்கள். மீளக்குடியமர்வைத் தவிர ஏதோ எல்லாமோ நடைபெற்றன. பொழுது சாயும் வேளை நாள் முழுவதும் காத்துநின்ற வலியும், பசிக்களையும் வாட்ட மக்கள் தமது தற்போதைய இருப்பிடங்களுக்குப் புறப்பட்டார்கள்.

சிறிது நேரத்தின் பின் ஒலிபெருக்கி மூலம் ஓர் அறிவித்தல் விடுவிக்கப்பட்டது. ''உங்களுடைய இடங்களுக்குப் போகும் பாதைகளில் பற்றைகள் இருக்கின்றன. அவற்றைத் துப்புரவு செய்தபின் அறிவிப்போம். தற்போது யாராவதுபோக விரும் பினாலும் ஒரு தடையில்லை'' என்று கூறப்பட்டது.

நடைபெற்று முடிந்த கூட்டத்தில் ஜனாதிபதியின் விசேட செய்தியாக இனிமேல் உயர் பாதுகாப்பு வலயம் என்ற ஒன்று இருக்காது என்று அறிவிக்கப்பட்டதற்கு மாறாக கூட்டம் நடைபெற்ற இடத்திலிருந்து 700 மீற்றர் தூரத்தில் புதிதாக அமைக்கப்பட்ட மண் அணையில் காவலுக்கு நின்ற இராணுவத்தினரால் மக்கள் திருப்பி அனுப்பப்பட்டனர்.

மீளக்குடியமரவிருக்கும் மக்களுக்கான கூட்டங்கள் ஒழுங்கு செய்யப்படும் போது பத்திரிகைகளில் அறிவிக்கப்படுவது குறைவு அப்படி அறிவித்தாலும் மிகக்குறுகிய கால இடைவெளியில் தான் அறிவிக்கப்படும். சம்பந்தப்பட்டவர்கள் அந்தக் கூட்டங்களுக்கு சமுகமளிக்காமல் விடுவதால் நெடுந்தூரத்திலிருந்து வரும் மக்கள் உட்படப் பலரும் பெரும் ஏமாற்றங்களுக்குள்ளாகிறார்கள். இந்தநிலை மாறாதா?

வை.சந்திரபாலன்
கொக்குவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆன்மிகம் அவசியமா?

நிரந்தர சந்தோசத்தைப்பெற, நம் முடைய மூதாதையர்கள், ஆன்மிகப் பெரியார்கள் சில அடிப் படை சுயக்கட்டுப் பாடு விதிமுறைகளை வகுத் தார்கள். ஆனால், மனிதனின் அடிப்படை இயல்பே பரிபூரண சுதந்திரம் என்பதால், அவன்மேல் சுமத்தப்படும் எந்தக் கட்டுப்பாடுகளையும் விதி முறைகளையும் அவன் வெறுக்கின்றான். எதைச் செய்ய வேண்டும்? எதனைச் செய்யக்கூடாது போன்ற அறிவுரைகளை அவன் விரும்புவதில்லை. போர்க் காளைக்குச் சிவப்புத் துண்டுத் துணியாக அவ னுக்கு நல்ல ஒழுக்க விதிமுறைகளும் கோட் பாடுகளும் இருக்கின்றன. ஆதலால், சுய கட்டுப் பாடுள்ள எந்த ஆன்மிக சாதனையையும் அவன் எதிர்க்கிறான். அறிவுபூர்வமான சுயகட்டுப்பாடு, ஒழுக்கம் இவற்றின் மேல்தான் சுதந்திரம் நிலை நிறுத்தப்படுகிறது என்பதை அவன் சிறிதேனும் உணருவதில்லை. உதாரணமாக வீதிகளிலுள்ள போக்குவரத்து சமிக்ஞை விளக்குகள் நிச்சய மாக அரசினாலேயே நம்முடைய சுதந்திரத்துக் குக் குறுக்கீடாக அமைக்கப்பட்டுள்ளன. என் றாலும் இந்தக் கட்டுப்பாடுதான் சுதந்திரமான நிம்மதியான போக்குவரத்துக்கு ஓர் அர்த்தத்தைத் தந்து கட்டுப்பாடற்ற ஆபத்தான ஒரு நிலைக்குப் போய் விடாமல் காத்து நிற்கிறது.

சுதந்திரத்தையும் உரிமையையும் பாகுபடுத் திப் பார்க்க இயலாமையே, நாகரிக மனிதன் மதத்தை அல்லது ஆன்மிகத்தை வெறுக்கும் காரணத் துக்கு அடிப்படையாக இருக்கிறது. மாறா கப் பாகு படுத்திப்பார்க்கக் கூடியவர்கள், தன்னிச்சையான சுய கட்டுப்பாட்டின் அவசியத்தை அறிவு பூர்வமாக உணர்ந்தவர்கள், ஆன்மிகத்தை நாடுகின்றனர். அவர்களுக்கு வழிகாட்ட, அகவுலக மெஞ்ஞான ஆராய்ச்சியின் முடிவுகள். ஆன்மிக நூல்களாக, மத நூல்களாக வெளிப்படுத்தப்பட்டிருக்கின் றன. ஓர் இயந்திரத்தைச் சரியாக உபயோகிப்பதற் காக அதனுடன் தரப்படும் குறிப்புக்களை/ வழி காட்டியைப் போன்று இந்த ஆன்மிக (மத) நூல் கள் (வேதங்கள், ஆகமங்கள், புராணங்கள், திரு முறைகள், இதிகாசங்கள்) நமக்கு உதவுகின்றன. இயற்கையிலேயே அதிக சிக்கல் நிறைந்த இந்த மனித இயந்திரம், உலகப் பொருள்களோடும் உயிர் களோடும் அது கொண்டுள்ள எல்லாத் தொடர்பு களும் சிறப்பாக அமைய வாழ்வதற்கோர் அற்புதமான இடமாக இந்த உலகை அமைத்து இருக்கின்றான் மனிதன். மனித இனத்தை அச்சுறுத்தியும் அழித் தும் கொண்டிருந்த, காரண, காரிய தொடர் புக்கு அடங்காத மாயா சக்திகள் எல்லாம் மனிதனுக்குச் சேவை செய்யும் பொருட்டு அடக்கப்பட்டுள்ளன. காடாகவும் தரிசாகவும் கிடந்த நிலங்கள், அமோக விளைச்சலைத் தரக்கூடிய நிலங்களாகத் தயார் செய்யப்பட்டுள்ளன. காட்டுமிராண்டி நிலையிலிருந்து நாகரிக அறிவுமிக்க சமுதாயமாக மனிதர்கள் வளர்ந்தி ருக்கிறார்கள். சொர்க்கத்தைப் போலவே எல்லா வசதி களும் இன்பங்களும் இருக்கின்றன. சிறிதளவு கட்டுப் பாடும் இல்லாமல் மனிதன் இந்தச் சுகங்களை அனுப வித்துக் கொண்டிருக்கிறான். இருப்பினும், வளமையும் செழுமையும் நிறைந்த ஒரு மலையின் நடுவே அமர்ந்து கொண்டு, மனிதன் கவலையும் அதிருப்தியும் நிறைந்த ஒரு வாழ்க்கையை வாழ்ந்து கொண்டி ருக்கிறான். இவ்வளவு விஞ்ஞான வளர்ச்சியை அடைந்தும் வசதிகளைப் பெற்றும் மனதில் அமைதி இல்லை; நிம்மதி இல்லை; ஆனந்தம் கிடையாது. ஏன்?

மனித இனத்தின் மேம்பாட்டுக்காகத் தங்களுடைய வாழ்க்கையையே அர்ப்பணித்துக் கொண்டுள்ள ஆன் மிகக் குருமார்களின் ஆராய்ச்சிக்குரிய கேள்வியாக இது அமைந்தது. இந்த வருத்தமான எதிரும் புதிருமான நிலை, முரண்பாடு ஆராய்ச்சிக்குரிய விடயமாகியது. அவர்களுடைய நுண்ணிய மெஞ்ஞான அகவுலக ஆராய்ச்சியில் கட்டுப்பாடு அற்ற அதீத புலன் இன்பங்களில் ஈடுபடுவது ஒருவனின் துயரத்துக்கும் துக்கத்துக்கும் காரணமாகிறது என்பதைக் கண்டுபிடித்தார்கள்.

உதாரணமாக முதல் இனிப்புத்துண்டு சாப்பிடு வதற்கு ருசியாக இருக்கிறது; இரண்டாவதும் மூன்றாவ தும் ருசியில் குறைந்து கடைசியில் இருபதாவது இனிப்புத்துண்டு வெறுப்பைத் தருவதோடு மட்டு மல்லாமல் அது உடல் நலத்துக்கும் தீங்கிழைக்கிறது. அதனால், பொருள் உலகத்தோடு நமக்கிருக்கும் தொடர்பால் நாம் ஆன்மிகக் கோட்பாடுகளோடு அவ்வப்போது தன்னை சரிபார்த்துக் கொள்ள வேண்டியதாகிறது. இந்தக் கோட்பாடுகளின், விதிகளின், ஒழுங்கு முறைகளின் வழியில் நடந்து, நிறைந்த சந்தோசத்தை அடைவதற்கோ அல்லது இவற்றைப் புறக்கணித்து துயரத்தையும் துக்கத்தை யும் தேடிக்கொள்வதற்கோ உள்ள சுதந்திரம் மனித னுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. தன்னையும் தன் சந்தோசத்தையும் உருவாக்குவதற்கும் அழிப்பதற்கும் உள்ள உரிமை அவனிடம் மட்டுமே உண்டு. இங்ஙனம் சிறப்பான ஆரோக்கியமான ஆனந்தமான வாழ்க் கைக்கு அறிவுசார் பாடமாக, விஞ்ஞானப் பாடமாக இந்த ஆன்மிக (மத) நூல்கள் அமைகின்றன. நாம் வளர வளர நமது அறிவு, அனுபவம் வளர வளர, இறையனுப வத்தில் நம்மை நிலை நிறுத்தும் ஆன்மிக சுயவளர்ச்சியின் எல்லா நுணுக்கங்களும், வழிமுறைகளும், விடயங்களும் இந்த மத நூல்களில் இருப்பதை நாம் உணர்கிறோம்.

வாழ்க்கையை ஆனந்தமானதாக, அற்புதமான தாக அனைவருக்கும் பயனுள்ளதாக வாழ்வதற்கு, பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டு அகவுலகு ஆராய்ச்சியின் முடிவுகளான இந்த மத நூல்களை, எத்தனையோ மகான்கள், நாயன்மார்கள், இறை தூதர்கள், மெய்ஞானிகள் வெற்றியடையக் காரண மாக இருந்த இந்த வழியை நாம் ஏன் பயன்படுத் தக்கூடாது?

பிரம்மச்சாரி ஜாக்கிரத் சைதன்ய,
யாழ். சின்மயாமிஷன் நிலையம்.

# அனைவரையும் அரவணைத்துச் செல்வதே திருச்சபையின் உண்மைப் பண்பு - திருத்தந்தை

பெந்தகோஸ்து திருவிழாவான கடந்த ஞாயிறன்று உரோம் நகர் தூய பேதுரு பேராலய வளாகத்தில் விசு வாசிகளுக்குத் திருப்பலி நிறைவேற்றிய திருத்தந்தை, திருச்சபையை அனைத்து மக்களின் திருச்சபையாக, தூய ஆவியார் எவ்விதம் உருவாக்கினார் என்பது குறித்து மறையுரையாற்றினார். திருச்சபை என்பது அனைத்து இனப்பிரிவுகள், வகுப்புப் பிரிவுகள், நாடுகள் என்ற எல்லைகளை எல்லாம் தாண்டி, தன் துவக்க காலத்தி லிருந்தே அனைவரையும் அரவணைத்துச் செல்லும் ஒன் றாக உள்ளது என்ற திருத்தந்தை, அதுவே அதன் உண்மைப் பண்பு என்பது அனைவராலும் அங்கீகரிக்கப்பட வேண் டும் என்றார்.

'ஆண்டவரைக் கண்டதால் சீடர்கள் மகிழ்ச்சி கொண் டார்கள்' என்ற விவிலிய வார்த்தைகளை எடுத்துரைத்து, இந்த மகிழ்ச்சி என்பது ஏதோ ஒரு மகிழ்ச்சியல்ல, மாறாக தூய ஆவியாரின் கொடையான முழு மகிழ்ச்சி என்றார் திருத்தந்தை.

சீடர்கள்போல் நாமும் இயேசுவை விசுவாசத்தில் காண முடியும். ஏனெனில் அவர் விசுவாசத்தில் நம்முன் வந்து தன் காயங்களைக் காட்டுகிறார் என்ற பாப்பிறை, நாமும் இறைவனின் பிரசன்னம் என்ற கொடைக்காக வேண்டுவோம். அப்போது மிக உன்னதக் கொடை யான மகிழ்ச்சியைப் பெறுவோம் என்று உரைத்தார்.

பெந்தகோஸ்து விழாவில் நாம் சிறப்பித்த தூய ஆவி, அகிலத்தையும் நிறைத்து நாடுகளிடையே ஐக்கியத் துக்குத் தயாரிப்பாராக என அன்று மூவேளை செப உரை யின்போது நம்பிக்கையை வெளியிட்டார் திருத்தந்தை.

பாஸ்கா மறையுண்மையின் நிறைவாக தூய ஆவி அன்னை மரியோடு கூடியிருந்த திருத்தூதர்கள் மீது இறங்கி வந்தது. திருச்சபைக்கான திருமுழுக்காக இருந் தது எனவும் கூறினார் அவர்.

நன்றி:- பாதுகாவலன்

# இந்து மதம் காட்டும் மன்னிப்பு...

இந்தச் சம்பவத்தைப் படிக்கின்ற போது இந்து மதத் தில் இப்படியா வாழ்ந்திருக்கிறார்கள் என்று ஆச்சரி யத்தோடு எண்ணத்தோன்றும். இது ஒரு சம்பவம் மட்டுமல்ல தத்துவமும்கூட.

இந்து மதத்தில் அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவராக இருப்பவர் மெய்ப்பெருள் நாயனார். வீரம், கொடை, நல்லாட்சி என அனைத்திலும் சிறந்தோங்கிய அவர் நிகரில்லா சிவபக்தன். சிவனடியார்களை சிவன் என எண்ணிப் பணிபவர். அவரைப் பழி தீர்க்க எண் ணிய அவரின் எதிரிகளின் ஒற்றன் சிவவேடமிட்டு ஒரு பக்தன் போல மெய்ப்பொருள் நாயனாரின் அரண்மனையை அடைகிறான். அரசனாகிய நாயனாரை அவன் சந்திக்க கேட்டும் காவலன் மறுக்கிறான். சிவ பக்தன் வந்திருக்கிறார் என்று கேள்விப்பட்ட நாயனார் வந்தவனை தனியே சந்திப்பதற்கு அனுமதிக்கிறார். தருணத்தை பயன்படுத்திய ஒற்றன் மறைத்து வைத்தி ருந்த வாளை எடுத்து மெய்ப்பொருள் நாயனாரைக் குத்தி விடுகிறான். காலம் கரைவது கண்டு காவலன் தத்தன் உள்ளே பார்க்கிறான். அரசரோ உயிருக்காகப் போராடிக் கொண்டிருக்கிறார். சிவபக்தன் போல் வேடமிட்டு வந்த பாதகனைக் கொல்ல காவலன் தத்தன் தன் வாளை உருவி னான். குற்றுயிராய் கிடந்த மெய்ப்பொருள் நாயனார் தடுத்தார். 'வேண்டாம்... பொறு தத்தா இவர் நம்மவர். இவரைப் பத்திரமாக கூட்டிச் சென்று ஊர் எல்லையிலே விடுவாய்' என்று மரணத் தறுவாயில் நாயனார் ஆணையிடுகின்றார். தத்தன் அவ்வாறே செய்கின் றான்.

அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவரான மெய்ப் பொருள் நாயனாரின் மேன்மையான மன்னிக்கும் பண்பு எத்தனை பேருக்குவரும். தன்னைக் கொன்ற வனையே பழிதீர்க்கா மனமல்லவா அது. இப்படியான மன்னிக்கும் மகா உதாரணங்களாக இந்துமத நாயன்மார் களும், ஞானிகளும் வாழ்ந்து காட்டியிருக்கிறார்கள். இக் காலத்தில் எம்மால் இப்படி முடியுமா என்பதற்கு அப் பால் சின்னச் சின்ன விசயங்களில் எப்படியான மன் னிப்பு மனப்பான்மையை வளர்த்துக் கொள்ள வேண் டும். இந்து மதமானது ஞானிகளதும், நாயன்மார் களதும் வரலாறுகளை சுவாரசியமாகப் படிக்கத் தர வில்லை வாழ்வியலோடு நடைமுறைப்படுத்தவே தந்தது.

யோ.புரட்சி, வன்னுவாப்புரம்.

# கிருபானந்த வாரியாரின் பொன் மொழிகள்

* நாம் செய்த நல்வினை, தீவினை ஒன்றுக்கு ஆயிரமாகப் பெருகிவரும்.
* வயலில் இட்ட விதை ஒன்று பலவாக வருவதுபோல் வினைகளும் பன்மடங்கு வளர்ந்துவரும்.
* பகை தொலைவில் இருக்கலாம். அடுத்த வீட்டில், எதிர்வீட்டில் இருக்கக்கூடாது. இருந்தால் அது நமக்கு அட்டமத்துச் சனி போன்றது.மிக்க ஆபத்தைத் தரும்.
* மனிதன் வாழ்கின்ற வாழ்க்கை பிறருக்கும், நாட்டுக்கும் பயனுள்ளதாக இருக்க வேண்டும்.
* மனைவியைக் கோபிக்கும் ஆண்கள் இருக்கக்கூடாது. மனைவி கண்ணீர் சிந்தினால் அந்தக் குடும்பம் தழைக்காது.
* ஒரு மனிதனோடு பழகும்போது அளந்து பழக வேண்டும். பால் வாங்கும் போதும், துணி எடுக்கும் போதும் அளந்து தானே வாங்குகிறோம். அதுபோல் யாரிடம் பழகினாலும் அளந்து பழகாவிட்டால் துயரம் வந்து சேரும்.
* நமது உடம்பின் அளவு கண். கண்ணை மட்டும் பார்த்தாலே அவன் எப்படி உள்ளவன் என்று கணக்கிட்டுவிடலாம்.
* இருள் இருவகைப்படும். ஒன்று புறஇருள், மற்றொன்று அக இருள். இதற்குஆணவம் என்று பேர். புற இருள் தன்னைக் காட்டும், ஏனைய பொருள்களை மறைக்கும். ஆணவ இருள் தன்னையும் மறைத்து, மற்ற எல்லாவற்றையும் மறைத்து நின்று பெருந்துயரத்தைச் செய்யும்.
* தங்கம் இளகினால்தான் அதில் இரத்தினக்கல் பதியும். அதுபோல் நம் உள்ளம் உருகினால் உருகிய உள்ளத்தில் இறைவன் ஒன்றி விடுவான்.
* எதனையும் பலமுறை சிந்தித்துச் செய்ய வேண்டும். ஒருவர் போன வழியிலேயே, சிந்திக்காமலேயே பின்பற்றிச் செல்வது மூடத்தனம்.
* எங்கும் நிறைந்த இறைவனை எங்கும் எளிதாகக் கிடைக்கக் கூடிய பூவினாலும் நீரினாலும் நாம் வழிபடவேண்டும். வழிபாட்டுக்கு அன்பும், ஆசாரமும் இரண்டு கண்கள் போன்றவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொன்மைத் தமிழும் அண்மைத் தமிழும் இன்மைத் தமிழும்

### தொன்மைத் தமிழ்

தமிழுணர்வும், பிரதேச உணர்வும் வளர்ந்த வரலாற்றைப் பற்றித் தனிநாயக அடிகளாரின் முடிவுகளின் படி நோக்கினால், இவ்வுணர்வின் வளர்ச்சியை முழுமையாக அறிந்து கொள்வதற்கு இந்த உணர்ச்சியின் தோற்றம் முதல் இன்று வரை அதன் வரலாற்றைச் சுருக்கமாக அறிந்து கொள்ளுதல் அவசியம்.

சரித்திர காலத்தில் தமிழ்நாடு நான்கு வகை நிலங்களாக இயற்கையாகவே பிரிந்திருந்தது. அவை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்பன. குறிஞ்சி மக்கள் வேட்டுவ வாழ்க்கை மூலமாகவும், மருத நில மக்கள் உழவுப்பயன் மூலமாகவும், நெய்தல் நில மக்கள் மீன்பிடித்தல், உப்புக் காய்ச்சுதல் முதலிய தொழில்களின் மூலமாகவும், உணவும், உடையும், உறையுளும் பெற்று வாழ்ந்தனர்.

உழவுப்பயன் அதிகமாக அதிகமாக ஏனைய நிலப் பகுதிகளுக்குப் பண்டமாற்று வாணிபம் பரவியது. தமிழ்நிலப் பாகுபாடுகள் மறையத் தொடங்கின. இந்த நிலையைத்தான் பத்துப்பாட்டும் புறநானூறும் சித்திரிக்கின்றன.

ஒவ்வொரு நிலப்பகுதியிலும் தோன்றிய கலைகள் நான்கு நிலப் பகுதிகளிலும் பரவின. இதனைப் பரப்பியவர்கள், பண்டைப்பாணர்களும், பொருநரும், விறலியரும் கூத்தரும், கூத்தியரும் ஆவார்கள்.

அவர்கள் நானிலங்களிலும் தோன்றி வளர்ந்த கலைகளைத் தமிழ்நாடு முழுவதும் பரப்பினர். கலை மரபுகளை ஒருமுகப்படுத்தினர். இக்காலத்தில் தமிழகத்தை ஒன்றுபட்ட மரபின் நூற்றுக் கணக்கான குறுநில மன்னரும், முடியுடை மன்னர் மூவரும் சிறு சிறு நிலப்பகுதிகளில் ஆட்சி புரிந்து வந்தனர். பண்டமாற்றம் கலைப் பரிவர்த்தனையும் தமிழகத்தில் ஒற்றுமையுணர்வைத் தோற்றுவித்தன.

இந்தக் கூற்றுக்குச் சில சான்றுகளாக அமைவன

பட்டாங்கொற்றன் என்னும் குறுநில மன்னனது வள்ளன்மையை கருவூர் ககதப்பிள்ளைச் சாத்தனார் பாடுகிறார். அவன் குதிரை மலையின் சிறு குறவர் குடியொன்றின் தலைவன். அவனது ஆதிக்க வரம்பு மிகக் குறுகியதாயினும் அவனது புகழ் தமிழ்நாடு முழுவதும் பரவியிருந்தது. ஏனெனில் அவனிடம் பரிசில் பெற்ற புலவர் அவனது புகழைத் தமிழகம் முழுவதும் பரப்பிவிட்டார்கள் . இதனைப் புலவர் பின்வருமாறு கூறுகிறார்.

*'ஊரார்க் குதிரைக் கிழவ, கூர் வேல்*
*நறை நார்த் தொடுத்த வேல்கையங் கண்ணி*
*வடி நவிலம்பின் வில்லோர் பெரும்,*
*கை வள்ளிகைக் கடுமான் கொற்ற,*
*வையக வரைப்பில் தமிழகம் கேட்பப்*
*பொய்யாச் செந்நா நெளிய ஏத்தி,*
*பாடுப வென்ப பரிசிலர் நாளும்,*
*ஈயா மன்னர் நாண,*
*ஈயாது பரந்த நின் வசையில் வான் புகழே'* *(புறம் 168)*

இமய வரம்பன் நெடுஞ்சேரலாதனை குமட்டூர் கண்ணனார் பதிற்றுப்பத்து இரண்டாம் பத்தில் போற்றிப் பாடியுள்ளார். அவன் முடியுடை மன்னர் மூவரில் ஒருவனே யாயினும், அவன் புகழ் தழிழகமெங்கும் பரவியிருந்தது என்று புலவர் கூறுகிறார்.

*'அமைவரல் வேலி இமயம் விற்பொறித்து*
*இமிழ் கடல் வேலித் தமிழகம் விளங்கத்*
*தன் கோல் நிற்க இ'*

மதுரை நகரின் புகழ் தமிழகமெங்கும் பரவியிருந்ததெனப் பரிபாடல் (திரட்டு 9) கூறுகிறது.

*தண் தமிழ் வேலித் தமிழ் நாட்டகம் எல்லாம்*
*நின்று நிலை இப்புகழ் பூத்தல் அல்லது*
*குன்றுதல் உண்டோ மதுரை - கொடித்தேரான்*
*குன்றம் உண்டாகும் அளவு?*

மொழி, கலை பண்பாடு இவற்றால் ஒன்றுபட்டு வந்த தமிழகம் ஆட்சி முறையால் பிரிவுபட்டு நின்றது. அது மட்டுமல்ல, சேரர்களுக்கும் சிற்றரசர்களுக்கும் இடையேயும், சேரருக்கும் பாண்டிய சோழர்களுக்கும் இடையேயும் இடைவிடாமற் போர்கள் நிகழ்ந்து வந்தன. ஆயினும் தமிழுணர்வும், தமிழக உணர்வும் நிலை பெற்றிருந்தன. மூவரசுகள் ஒன்றுபட்ட பொழுதெல்லாம் புலவர்கள் மன்னர்களின் ஒற்றுமையைத் தமிழக ஒற்றுமையாகப் போற்றி வரவேற்றனர்.

(வளரும்)

# கதைவழிக் கூத்து என அழைக்கப்பட்ட பாரம்பரிய சிந்துநடைக் கூத்து வடிவம்

அரிய கலையூர் சி.சிவதாசன்



தமிழ் மக்களின் பாரம்பரியத்தை எடுத்துக்கூறும் கலைவடிவங்களில் மிகவும் முக்கியமான இடத்தினை வகித்தவை கூத்து வடிவங்களே ஆகும். ஆரம்ப காலத்தில் தெருக்கூத்து, வட்டக்களரிக் கூத்து ஆகிய வடிவங்களே இம் மண்ணில் ஆடப்பட்டன. தொடர்ந்து நாட்டுக் கூத்து கலைவடிவம் முன்னெடுக்கப்பட்டது. இக் கூத்து வடிவங்கள் அறத்தைப் பேணவும், சமய பக்தியை பாமர மக்களிடையே ஏற்படுத்தவும், தீமைகளைக் களைந்து நன்மைகளை சமூகத்திடையே புகுத்தவும் கட்டுக்கோப்பான வாழ்வை நிர்ணயிக்கவும் பாமரமக்களிடையே இவற்றை எடுத்துச் சொல்ல மிக இலகுவான வழியாகவும் இது இருந்தது. இந்த நாட்டுக் கூத்து வடிவத்தை தமது கிறீஸ்தவ மதத்தினை எம்மண்ணில் பரப்புவதற்காக நம் மண்ணைக் கைப்பற்றிய போத்துக்கீசர் பயன்படுத்திக் கொண்டார்கள் என்பது வரலாறு.


காலத்துக்குக் கரலம் கூத்துவடிவங்களில் பல மாற்றங்கள் எழுந்தன. சங்கீத இசைக் கூத்து, கதைவழிக் கூத்து, மரபுவழி இசைக் கூத்து - இதனை இசை நாடகம் எனவும் அழைத்தனர். அதனைத் தொடர்ந்து புராண, இதிகாச, சரித்திர நாடகங்கள் வசன அமைப்பில், சமூக சீர்திருத்த நாடகங்கள், தாளலயம் என இம்மண்ணில் கூத்துக்கள் பல வடிவங்களில் ஆடப்பெற்று வந்தன.

கூத்து வடிவங்களாக ஆடப்பட்டவை தென்மோடி, வட மோடி அல்லது தென்பாங்கு, வடபாங்கு எனவும் அழைக்கப்பட்டது. இவற்றில் முற்றிலும் வேறுபட்ட பாணியில் எமது மண்ணில் ஆடப்பட்ட கூத்து வடிவமே அன்று கதைவழிக்கூத்து என்றும் இன்று சிந்து நடைக் கூத்து என்றும் அழைக்கப்படும் கலை வடிவமாகும். கதைவழிக் கூத்து என்றால் பேச்சுவழக்கில் ஆடப்பட்ட கூத்து அல்ல. பாடலும், ஒருவித கெந்தல் நடையும், பின்புலத்தில் பலபேர் சேர்ந்து பாடுவதும் கலந்த இக்கூத்து வடிவத்திற்கு தாளமும் உடுக்கையுமே வாத்தியக் கருவிகளாக உபயோகப்படுத்தப்பட்டன. இக் கூத்து வடிவமானது 1930 இல் தமிழ்நாடு என்று இன்று அழைக்கப்படும் முன்னைய தென்னிந்திய சென்னையில் வாழ்ந்த பரசுராம ஆச்சாரி என்பவரால் அறிமுகப்படுத்தப்பட்டது. இவர் இக்கூத்து வடிவத்திற்கு தேர்ந்தெடுத்த கதையே ''காத்தவராயன்'' கதையாகும். காத்தவராயன் என்னும் காவல் தெய்வத்தை மகிமைக்குள்ளாக்கி, பெண் தெய்வத்தின வன்மையை மேன்மைப்படுத்தி, அக்கால சாதித்துவ மேலாண்மையை வெளிப்படுத்தி மிக அழகாக இக்கதை கூத்து வடிவமாக்கப்பட்டது. இக்கூத்துப்பாடலின் ஆரம்பத்தில் கூத்தாசிரியர் பின்வருமாறு பாடல் ஒன்றைப் பாடியுள்ளார். ''சிந்திசையில் பாடலிசைத்து - நாங்கள் சிங்காரமாகவே நடை நடந்து''... இப்பாடல் வரி சிந்து என்னும் இசையில் பாடலை இசைத்து சிங்காரமாகவே நடை நடந்து எனக் கூறுவதை மையமாகக் கொண்டே பிற்காலத்தில் இந்தக் கூத்தினை சிந்து நடைக் கூத்தென அழைக்கலாயினர். சிந்து நடைக் கூத்து என்றால் ''காத்தவராயன் கூத்து'' வடிவம் மட்டுந்தான் என்ற கருத்துத் தவறானது. காத்தவராயன் கதையை பரசுராம ஆச்சாரி சிந்துநடைக் கூத்து வடிவமாக்கியது போல வேறு சிலர் ஆரவல்லி சூரவல்லி, பவளக்கொடி, கோவலன் கண்ணகி போன்ற கதைகளைச் சிந்து நடைக்கூத்து வடிவத்தில் ஆக்கியுள்ளார்கள். அவையும் எம் யாழ்ப்பாண மண்ணில் பல்வேறு இடங்களில் ஆடப்பட்டன. இக் கூத்து வடிவத்தில் தற்பொழுது பாவிக்கப்படும் அரச உடைகள் அக் காலத்தில் பாவிக்கப்படவில்லை. பதிலாக ''கணிதஉடை'' என்னும் அலங்கார உடையே பாவிக்கப் பட்டது. ஆண்பாத்திரமாக இருந்தாலும் சரி, பெண் பாத்திரமாக இருந்தாலும் சரி இவ்விதமான உடையினையே கூத்துக் கலைஞர்கள் அணிந்தார்கள். கணித உடை என்றால் என்ன? ''தில்லானா மோகனாம்பாள்'' படத்தில் வரும் நாடகக் காட்சி ஒன்றில் மனோரமாவும், இராஜாதி இராஜன் படத்தில் வரும் நாடகக் காட்சியொன்றில் ரஜனி காந்தும் இக்கணித உடையை அணிந்து வருவதைப் பார்த்திருப்பீர்கள். கீழாடை முழங்கால் வரையும், மேலாடை முழங்கை வரையும் இருக்கும் கழுத்த உடையில் மணிமாலைகளும் குஞ்சங்களும் காணப்படும். இவ்வித உடைகளே இக்கூத்து வடிவத்திற்கு அக் காலத்தில் உபயோகப்படுத்தப்பட்டன.

(தொடரும்)

# அடிதடி '

''எது நடந்ததோ அது நன்றாகவே நட
கீதாசாரம் ஏன் என்று சிந்திக்[illegible]
வடிகளைப் பார்த்தால் கீதாசாரம் சொல்
கட்டும். இம்முறை விசயம் என்ன? என்
அன்று ஞாயிற்றுக்கிழமை பகல் வே
யேசுபிரான் சந்நிதியில் எல்லோரும் அ
என்றதால் ஏராளமான பக்தர் கூட்டம் ப
திடீரென அந்த வீதியில் [illegible]
என்னதான் நடக்குது என்று விசாரித்த
தகராறாம்'' அலவாங்கு, பொல்லு போ
மோதிக்கொண்டிருக்கின்றன. (சின்னத்
பிளந்து காயங்களுடன் இரத்தமும் பீறிட்
'தெருச்சண்டை கண்ணுக்குக் குளிர்ச்
(நம்ம பொலிஸாரும் தானுங்கோ). பிற
வந்தார்கள். மள, மளவென அள்ளி ஏற்
பார்த்தீர்களா? இந்தச் சம்பவம் அண்
பேசி, வீண்வம்புகளை விலைக்கு வாங்
வன்முறைக்குள்ளே கரையும் இளம் சமு




பொழுது நாங்கள் கடந்து வந்த அவலப்
வெளிச்சம் தரப்போவது யார்?
ஒரு சினிமாப்படத்தில் வடிவேலு
லிப்போட்டு அடிப்பார்களாம். இப்ப அ
களாம்.'' இந்த நிலைமைதான் பாருங்கோ
நிலையில் இருந்து காப்பாற்ற வேண்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெங்கு என்னும் டாங்கி

மண்ணில் வீழ்ந்த
மழை நீர்
கணப்பொழுதில்
கண் முன்னால்
உலர்ந்து போக
குவிந்து கிடந்த
விதம் விதமான
கழிவுப் பொருள்கள்
குப்பை கூளங்களில்
நீர் தேங்கி
நிலைத்து நின்றது
கவனிப் பாராற்று
அந்தி வேளையில்
அங்கு வருகை தந்த
நுளம்புக் கூட்டம்
இதைக் கண்டதும்
சுறு சுறுப்புடன்
சுற்றிச் சுற்றி வந்து
ஆரவாரத்துடன்; ஆர்வமாய்
ஆடிப் பாடின
கூர்ந்து கேட்டதில்
கூறியவை புரிந்தன
கூறியன கூறல்
குற்ற மெனினும்
ஆபத்திற்கில்லை
பாவமென்பதால்..
பகர்கின்றேன்
பலரு மறிய
குதூகல மாயிங்கு
குடும்பம் நடத்தி
இனத்தைப் பெருக்கி
சனத்தை அழிக்க
இப்போதைக்கு...
இது போதுமாம்.



க.நாகராசா,
சாவகச்சேரி.

# ...டி 'கலாசாரம்'

...ன்றாகவே நடந்தது எது நடக்கிறதோ அதுவும் நன்றாகவே நடக்கும்...'' இருந்தாப்போல ...லிக்...ர்க...? யாழ்ப்பாணத்தில் இன்றைய சூழலில் நடக்கின்ற அநியாயங்களை, அடா ...ாரம் சொல்லிக்கொண்டிருப்பதைவிட வேறென்ன செய்யமுடியும்? சரி அது ஒரு புறமிருக் ... என்ன? என்றுதானே ஆவல் கொள்கிறீர்கள்.

...ம பகல் வேளை... ''கேளுங்கள் தரப்படும், தட்டுங்கள் திறக்கப்படும்'' என்று சொன்ன ...லோரும் அமைதிப் பிரார்த்தனையில் ஆழமாய் மூழ்கிப்போயிருந்தனர். அன்று பெருநாள் ...ர் கூட்டம் படை திரண்டிருந்தது.

...சனக்கூட்டம் நிறைந்து வழிந்தது. சரமாரியான அடிதடிச் சத்தங்களும் காதில் வீழ்ந்தன. ...று விசாரித்தால், ''சைக்கிள் பாதுகாப்பு நிலையத்தில பெடியளுக்கிடையில் சின்னத் ...பால்லு போன்ற ஆயுதங்களை ஏந்தியவாறு இரு இளைஞர் அணிகள் வெறித்தனமாக ...ன. (சின்னத்தகராறு; ஆனால் பெரிய கலவரம்) ஒரு சிலருக்கு மண்டையில் அடிபட்டு ...த்தமும் பீறிட்டுக் கொண்டிருந்தது.

...க்குக் குளிர்ச்சிதானே! எல்லோரும் மெய்மறந்து பார்த்து ரசித்துக்கொண்டிருக் கிறார்கள் ...ங்கோ). பிறகென்ன தமிழ் சினிமாவில வாற பொலிஸ்காரர் போல எல்லாம் முடிஞ்சதும் ... அள்ளி ஏற்றினார்கள்; கொண்டு போனார்கள்.

...பவம் அண்மையில் வலிகாமம் பகுதியில் இடம்பெற்றுள்ளது. குடாநாட்டில் குதர்க்கம் ...லக்கு வாங்கி எதற்கெடுத்தாலும் காரண, காரியமின்றி அடி, உதையென்று அலைந்து ...ம் இளம் சமுதாயம் விஸ்வரூபமெடுத்துள்ளது.



இதற்குப் பொலிஸாரின் அசண்டையீனமான நடவடிக்கையும் காரணமென்று கூறலாம். ஏனெனில், இவ்வாறான வன்முறைகளில் ஈடுபடுவோருக்குத் தகுந்த தண்டனையைப் பொலிஸார் வழங்குவதில்லை.


இதனால்தான் குற்றம் புரிவோரின் எண்ணிக்கை அதிகரித்து மூலைமுடுக்கெல்லாம் வன்முறைகள் வெடிக்கின்றன. கட்டமைப்புக்குள் இருந்த எமது சமூகம் வன்முறையால் சிதைந்து போய் நிற்கிறது என்கிறபோது மனம் துடிக்கிறது. இளைஞர்களே! அடிதடிக்குள் இறங்கும் போது ஒரு நொடிப் ...த அவலப் பாதைகளைச் சிந்தியுங்கள், நீங்கள் இருளை நோக்கி விரைந்தால் சமூகத்துக்கு ...ர்?

...வடிவேலு அழுதபடி சொல்லும் ''முன்பெல்லாம் ஏன் அடிக்கிறம் என்று சொல் ...். இப்ப அப்படியில்லை; எதுக்கு அடிக்கிறார்கள் என்று தெரியாமலேயே அடிக்கிறார் ... பாருங்கோ எங்கள் யாழ்ப்பாணத்திலையும்... ஆண்டவன்தான் எங்களை இந்த ஆபத்தான ...ம வேண்டும்.

## பெண்களின் உள்ளத்தில்

# காதல் கனல் எவ்வளவு காலம் நீடிக்கும் என்ற ஆய்வில் ஷா

(சென்றவாரத் தொடர்ச்சி)



பெர்னாட்ஷா உண்மையிலேயே நகைச்சுவைக் களஞ்சியம் என்பது வெள்ளிடைமலை. ஷாவை யாரும் மிஞ்ச முடியாது. இவர் தெரிவித்த கருத்துக்களை காது கொடுத்துக் கேட்கப் பலர் முன் வந்தனர். ஷாவின் வயோதிபத்தில் இவரது ஒவ்வொரு சொல்லுக்கும் உலகம் காத்து நின்றது. இவர் தனது முதுமையிலும் நாடகங்கள் எழுதி வந்தார்.

பெர்னாட் ஷாவின் நகைச்சுவைகள் சிலவற்றை எடுத்து நோக்கலாம்; பெர்னாட் ஷாவிற்கு பூக்களின் மீது மிகவும் பிரியம் என்று கேள்விப்பட்ட ஒருவர், அவர் வீட்டிற்குச் சென்றார். ஆனால் அங்கு மலர்களையே காணோம் பூக்கள் வைக்கும் அலங்கார ஜாடிகளும் இல்லை. வியப்புக்குள்ளான அவர் ஷாவை நோக்கி ''உங்களுக்கு மலர்கள் மீது மிகுந்த பிரியம் என்றல்லவா கேள்விப்பட்டேன்!''

''ஆமாம்! இல்லையென்று யார் சொன்னது? எனக்கு குழந்தைகள் மீதுதான் பிரியம். அதற்காக அவர்களின் தலையைக் கொய்து என்வீட்டு அலங்கார ஜாடிகளை அழகு செய்ய வேண்டுமென்பதில்லையே!'' என்றார் ஷா.

ஷாவிடம் ''நீங்கள் ஏன் குடியை வெறுக்கின்றீர்கள்?'' என்று கேட்டார் ஒருவர்.

''என் குடும்பத்திலிருந்த முன்னோர் எனக்கு வரவேண்டிய பங்குகளையும் சேர்த்து தாங்களே குடித்துவிட்டிருக்கிறார்கள். ஆகையால் எனக்கு அதில் பங்கு இல்லாமல் போயிற்று'' என்று பதில் ஷாவிடமிருந்து கிடைத்தது.

ஷேக்ஸ்பியரைப் பற்றிக் குறை கூறிக்கொண்டிருக்கும் பெர்னாட்ஷாவை மட்டம் தட்டவேண்டும் என்று எண்ணிய சேக்ஸ்பியரின் அபிமானிகள் ஒரு கூட்டம் கூட்டி அதில் ஷாவையும் பேச அழைத்தனர்.

ஷா நல்ல நகைச்சுவையுடன் தான் சொற்பொழிவாற்றினார். என்றாலும் வேண்டுமென்றே ஒருவரும் அவரது பேச்சைக் கேட்டு கைதட்டவில்லை. அத்துடன் தலைமை வகித்தவரும் அவரைப்பற்றி கிண்டலாகப் பேசினார். ஷேக்ஸ்பியர் அபி மானிகள் கைதட்டி சிரிப்பொலி எழுப்பவில்லை என்பதால் ஷாவுக்கு சரியான மூக்குடைப்பு என்று முணுமுணுத்தனர்.

பெர்னாட்ஷா எழுந்து நின்று பேசினார். ஷேக்ஸ்பியர் அபிமானிகளே! நான் இப்போது பேசியது எனது சொந்த நகைச்சுவைப் பேச்சு அல்ல; ஷேக்ஸ்பியர் காலத்தில் நடந்ததாகக் கூறப்படும் ஷேக்ஸ்பியரின் சொந்த நகைச்சுவைதான் அது. உங்களுக்கு சிரிப்பு ஏற்படாமைக்கு நான் பொறுப்பாளி அல்லன்'' என்றார்.

ஷேக்ஸ்பியர் அபிமானிகள் முகத்தில் ஈயாடவில்லை. பேரழகி ஒருத்தி பெர்னாட்ஷாவை மணக்க முன்வந்து நீங்கள் பேரறிஞர். நான் உலகப் பேரழகி. நாம் கலியாணம் செய்து கொண்டால் நமக்குப் பிறக்கும் குழந்தைக்கு உங்கள் அறிவும் எனது அழகும் நிறைந்திருக்குமல்லவா?'' என்றாள் அவள்.

''யார் கண்டார்கள்? ஒருவேளை உங்கள் முட்டாள்தனமும் எனது அழகும் சேர்ந்து விட்டால்....?'' என்று கூறியதுதான் தாமதம் பெண்மணி பேசா மடந்தையாய் வந்தவழியே சென்றார்.

பெண் உள்ளத்தில் காதல் கனல் எவ்வளவு ஆண்டு காலம் நீடிக்கும் என்ற ஆராய்ச்சியில் இறங்கினார் பெர்னாட்ஷா.

யார் யாரையோ கேட்டுப் பார்த்தார். அவருக்குத் திருப்தி அளிக்கும் பதிலை யாரும் தரவில்லை. இறுதியில் எழுபத்தைந்து வயதுக்கு மேற்பட்ட தம்மைப் போன்றவர்களிடம் சென்று ஒரு கேள்வி கேட்டார்.

(தொடரும்)

அருணா தருமலிங்கம், கோப்பாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க நீதிமன்ற அழைப்பாணையும் மஹிந்தவின் நிலைப்பாடும்

**ஜனாதிபதியின் பேச்சாளராக 2001-2005 காலப்பகுதியில் பணிபுரிந்தவரான ஹரிம் பீரிஸ் 'டெய்லிமிரர்' ஆங்கிலப் பத்திரிகையில் எழுதியுள்ள கட்டுரையின் தமிழாக்கம்.**

வான்செயல் ஒன்றைத் தொடர்ந்து இறந்தவர் ஒருவரின் சடலம் குறித்து எழும் பிரச்சினையானது என்னவென்றால் குற்றம் ஒன்று நிகழ்த்தப்பட்டுவிட்டது, என்பதற்கான மறுக்கவியலாத ஆதாரமாகும் அது என்பதாம். அதுபோலவே திருகோணமலைக் கடற்கரையில் தலையில் குண்டுதுளைத்த காயங்களுடன் ஐந்து தமிழ்ப் பாடசாலை மாணவர்களின் உடல்கள் கிடக்கக் காணப்பட்டமையும் பதினேழு நலன்புரி ஊழியர்களின் சடலங்கள் மூதூரிலுள்ள அவர்கள் பணிபுரிந்த வளாகத்துக்குள்ளேயே கொலைத் தண்டனை விதிக்கப்பட்டவர்கள்போல் சுடப்பட்டுக் கிடந்தமையும் மறுக்கமுடியாத ஆதாரங்கள் ஆகும். இயற்கைக்கு மாறான குற்றச்செயல்கள் நடந்துள்ளன என்பதற்கான ஆதாரங்களாகும் இவை.

துரதிருஷ்டவசமாக இலங்கையின் உள்நாட்டு பொறி அமைப்பான மிகமோசமான மனித உரிமை மீறல்கள் தொடர்பான ஜனாதிபதியின் விசாரணைக் குழுவும் சட்டத்துறை விசாரணைகளும் இவை தொடர்பான உண்மைகளைக் கண்டறிந்து நிலை நாட்டவுமில்லை, குற்றவாளிகளைத் தண்டிக்கவுமில்லை.

இந்த நிலையில் திருகோணமலையில் கொல்லப்பட்ட இளைஞர்களில் ஒருவரின் நெருங்கிய உறவினரும், மூதூரில் கொலையுண்ட பணியாளர் ஒருவரின் நெருங்கிய உறவினரும் சர்வதேச சட்ட நடைமுறைகளுக்கேற்ப அமெரிக்க நீதிமன்றம் ஒன்றில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக வழக்குத் தொடர்ந்திருக்கிறார்கள்.

இலங்கைக்குள் ஜனாதிபதியானவர் நீதிமன்ற விசாரணைகளிலிருந்து விலக்களிக்கப்பட்டவராவார். அவ்வாறு விலக்களித்தலானது எமது கடற்பிராந்தியத்துடன் முற்றுப் பெறுகின்றது.

அதேசமயம் அவர் பதவியில் இருக்கும்வரை இறைமைக்குரிய விலக்களிப்பு சில வரையறைகளுக்குள் செல்லுபடியாகின்றது. இந்த வழக்குக்கான அழைப்பாணை நீதியமைச்சின் செயலாளரிடம் முறையாக கையளிக்கப்பட்டுள்ளது. தற்போதைய சர்வதேச நியமங்களின்படி பொருத்தமான அதிகாரி என்ற முறையில் அவரிடம் அது கொடுக்கப்பட்டுள்ளது.

**இந்தியாவிடமிருந்து கடும் தொனி செய்தி**

ஒரு கடின தொனியிலான செய்தியை வழங்குவதற்காக இந்திய உயர்மட்டக் குழுவொன்று கடந்த வாரம் கொழும்புக்கு வந்திருந்தது. தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனன், வெளியுறவு செயலாளர் நிருபமா ராவ், பாதுகாப்பு செயலாளர் பிரதீப்குமார் ஆகியோர் இந்தக் குழுவில் அடங்கியிருந்தனர்.

இந்தியாவின் கவலைகள் இலங்கையுடனான கூட்டறிக்கையில் வெளியிடப்பட்டுள்ளன. போரின் காரணங்கள் மற்றும் தாக்கங்கள் உள்ளடங்கிய விதத்தில் தேசிய நல்லிணக்கத்தை உருவாக்கும் விடயம் மேற்கொள்ளப்படுவதை அது வலியுறுத்துகின்றது. தீர்வு ஒன்று வந்துகொண்டிருக்கிறது என்றவகையில் இலங்கை தரப்பில் மீண்டும் மீண்டும் உறுதிமொழிகள் வழங்கப்பட்டு வந்துள்ளன. ஆனால் சண்டை முடிவுற்று இரண்டு ஆண்டுகள் கடந்த பின்பும் ஒன்றும் வெளிப்படுவதைக்காணோம். பதிலாகக் குலைந்துபோன சர்வகட்சி மாநாட்டின் வழியில் தமிழ் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சு வார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதிலும் அரசு தன் தரப்பில் யோசனை எதனையும் முன் வைக்கவில்லை. இப்பொழுது அதற்கும் மாறாக நாடாளுமன்ற தெரிவுக் குழுவொன்றைப் பற்றி ஆலோசனை வழங்கியிருக்கின்றது.

**மனவுறுதி இருந்தால் தீர்வு கிட்டும்**

ஒரு தீர்வினை எட்டுவதற்கு வெவ்வேறு விதமான பேச்சுவார்த்தைகள் அல்ல அரசியல் மனஉறுதி இருக்கவேண்டும். மஹிந்த சிந்தனையில் தெரிவிக்கப்பட்டுள்ள வடமாகாண சபை ஏன் செயற்படுத்தப் படவில்லை என்பதையும் இது எடுத்துக்காட்டுகின்றது. மேலும் அதிகாரப் பகிர்வு மற்றும் 13 ஆவது திருத்தம் என்பவற்றுக்கும் கதவு இழுத்து மூடப்படுவதாக அரசு இந்தியத் தரப்பினரிடம் மிகத் தெளிவாக எடுத்துக் கூறிவிட்டது.

வரும் செப்ரெம்பர் மாதம் ஜெனிவாவில் கூடவிருக்கும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இந்தியா ஓர் உறுப்பு நாடாக வரப்போகின்றது. அதே சமயம் பாதுகாப்புச் சபையில் உறுப்புரிமை பெறவிருக்கின்றது. இலங்கை தொடர்பான சர்வதேச உரையாடலில் இந்தியாவுடனான இருதரப்பு உறவுகள் கட்டுப்படுத்துவனவாக இருக்கும் என்று எதிர்பார்க்கலாம்.

**தமிழ் தேசியக் கூட்டமைப்பு தாக்கப்பட்ட நிகழ்ச்சி**

கடந்தவாரம் இறுதிப் பகுதியில் தமிழ்தேசியக் கூட்டமைப்பினர் யாழ்ப்பாணம் அளவெட்டியில் கூடித் தமது உள்ளூராட்சிமன்ற வேட்பாளர்கள் மற்றும் கட்சி உறுப்பினர்களுடன் கலந்துரையாடிக் கொண்டிருந்த வேளையில் குண்டாந் தடிகளுடன் கூட்டத்துக்குள் புகுந்த படைத்தரப்பினர் உள்ளூராட்சி மன்ற தமிழ்தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர்களை தாக்கியிருப்பதுடன் நாடாளுமன்ற உறுப்பினர்களையும் தாக்க முயன்றுள்ளனர். மனச்சாட்சி யுடன் தமது கடமைகளைச் செய்ய முயன்ற மெய்ப் பாதுகாவலர்களால் காப்பாற்றப்பட்டுள்ளனர். இதனால் அவர்கள் காயமுற்றனர்.

இந்தத் தாக்குதல் இராணுவ உடையில் வந்த இனம் காணப்படாத நபர்களால் நடத்தப்பட்டுள்ளது என்று ஆரம்பத்தில் கூறி மழுப்ப எடுக்கப்பட்ட முயற்சி தோல்வி கண்டுவிட்டது. கள இராணுவத் தளபதிகள் பொறுப் பேற்றுள்ளார்கள்.

அனுமதி பெறாத செயற்பாடுகள் மீது இராணுவத்தினர் நடத்திய தாக்குதல் என்று கூறி பாதுகாப்பு அமைச்சு அதனை நியாயப்படுத்தியுள்ளது.

முதலில் ஒரு தேர்தல் நடைபெறவிருக்கின்றது. அதனால்தான் முன்னைய அரசுகள் எப்பொழுதுமே அவசரகால நிலைமையை தளர்த்தியிருந்தன- குறைந்தது தேர்தல் பிரசாரக் காலத்திலாவது. ஆனால் இப்போது போர் நடைபெறவில்லை. ஜனநாயகம் செயற்படவேண்டும். அன்று நடைபெற்றது மூடப்பட்ட கதவுகளுக்குள் இடம்பெற்ற ஒரு தனிப்பட்ட கலந்துரையாடல், வெளிப்புறத்தில் நடைபெற்ற ஒரு பொதுக் கூட்டமல்ல.

கூட்டங்கள் நடைபெறுவதற்கான அரசமைப்பு ரீதியிலான அடிப்படை உரிமைகள் இருக்கின்றன. மேலும் ஒரு முரண்பாட்டு மோதலின் பின்னர் சாதாரண நிலைமையைத்தோற்றுவிப்பதற்கு ஜனநாயக தேர்தல்கள் நடைபெறுவது முக்கியமாகும்.

இலங்கையின் ஜனநாயக நிறுவனங்களால் இனக் கொந்தளிப்புக்குச் சரியான தீர்வுகள் வழங்கப்படாமையால்தான் தமிழ் போராட்டங்களும் பயங்கரவாதமும் தோன்றின. தமிழ் தேசியக் கூட்டமைப்பின் ஜனநாயக அரசியல் மீது இராணுவபலத்தைப் பிரயோகிப்பதானது இலங்கையைத் தளமாகக் கொண்டுள்ள தமிழ் அரசியல் தலைமைத்துவத்தை புலம்பெயர்ந்த அதி தீவிரவாத சக்திகளின் பிடிக்குள் துரத்திவிடுவதாக அமைந்துவிடும்.

வடபகுதித் தமிழர்களுக்கு மாகாணசபையைக் கூட வழங்கமாட்டீர்கள் என்றால் ஒரு மாநகர சபையை யாகுதல் அவர்கள் அமைதியாகத் தேர்ந்தெடுக்கவிடவேண்டும்.

**தமிழில்: ரம்யன்**

## ஆங்கிலமொழி பயிற்சி வகுப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 25

வடக்குமாகாணக் கல்வித் திணைக்களமும் யாழ்.பல்கலைக்கழக மும் இணைந்து இன்று சனிக்கிழமை நடத்தவிருந்த ஆங்கில மொழிபயிற்சிநெறியின் ஆரம்ப நிகழ்வுகள் தவிர்க்க முடியாத காரணத்தால் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக வடமாகாண மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (ம)

## நயினாதீவில் எரிபொருள் விற்பனை நிலையம்

யாழ்ப்பாணம், ஜூன் 25

புங்குடுதீவு-நயினாதீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் நயினாதீவு மத்தியில் இன்று சனிக்கிழமை எரிபொருள் விற்பனை நிலையம் ஒன்றைத் திறந்து வைக்கவுள்ளது.

அனலைதீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கப் பொது முகாமையாளர் இங்கு முகாமையாளராகக் கடமைகளைப் பொறுப்பேற்கவுள்ளார். (ம)

ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு இலக்கம் 761 திகதி 23-06-2011
வெற்றி எண்கள்
01 38 47 54 K (ஆங்கில எழுத்து)
ஜக்பொட் பரிசு ரூ. 15,374,610/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | - | 15,374,610/= | - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 01 | 400,000/= | 400,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 07 | 50,000/= | 350,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 315 | 1,000/= | 315,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 605 | 1,000/= | 605,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 14123 | 60/= | 847,380/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 7296 | 40/= | 291,840/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 186693 | 20/= | 3,733,860/= |
| ஆங்கில எழுத்து | 27237 | 20/= | 544,740/= |
| | | மொத்தம் ரூ. | 7,087,820/= |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 08 | 50,000/= | 400,000/= |

ரூபா 50,000 வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்.

| | |
|---|---|
| யாழ்ப்பாணம் | 700246478-8-08 |
| அநுராதபுரம் | 700249831-6-46 |
| கொழும்பு | 700251884-4-24 |
| இரத்தினபுரி | 700243163-5-45 |
| வவுனியா | 700256067-3-33 |
| கொழும்பு | 700250043-1-21 |
| மொனராகலை | 700240047-9-39 |
| பொலன்னறுவை | 700248098-8-48 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 7,487,820/=
எதிர்வரும் திங்கட்கிழமை சுப்பர் ஜக்பொட்
ரூ. 15,739,390/=
மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2011 ஜூன் 27 ஆம் திகதி திங்கட்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு-02
தொ.பே: 2333546/7
Enriching Your Life
Development Lottery

31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்
பிறப்பு: 16.09.1928 இறப்பு: 26.05.2011
திருமதி சுந்தரமூர்த்தி சிவகாமிப்பிள்ளை
(ஓய்வுபெற்ற ஆசிரியை, யா/மறவன்புலோ சகலகலாவல்லி வித்தியாலயம்)

அன்பு வழியில் எம்மை அரவணைத்து
ஆருயிராய் நேசித்து ஆசீர்வதித்து
இன்பமிகு நல்லறமாம் இல்லறத்தை
ஈடேற்றிய எம்இதயத் தெய்வமே!
நாள்கள் முப்பத்தொன்று ஆனபோதும்
ஆறவில்லை எம் துயரம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!
39/2, விதானையார் வீதி,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
குடும்பத்தினர்.
(5179)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நலன்புரி நிலைய பாடசாலைகளை கவனிப்பார் யாருமில்லையா?

வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து செட்டிகுளம் நலன்புரி நிலையங்களில் தங்கவைக்கப்பட்ட மக்களில் இன்னமும் அதிகமானோர் மீள்குடியமர்த்தப் படாது தொடர்ந்தும் அங்கேயே தங்க வைக்கப்பட்டுள்ளனர். கதிர்காமர் மற்றும் ஆனந்தகுமாரசாமி ஆகிய நலன்புரி நிலையங்கள் இன்னமும் இயங்கிக் கொண்டிருக்கின்றன.இங்குள்ள மாணவர்களுக்காக இரு நலன்புரி நிலையங்களிலும் இரு பாடசாலைகள் இயங்குகின்றன.இங்குள்ள மாணவர்கள் முல்லைத்தீவு மாவட்டத்தின் கல்வியில் முதலிடம் பெறும் புதுக்குடியிருப்பு பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என்பதும் அவர்கள் தான் இன்னமும் மீள்குடியேற்றம் செய்யப்படாமலிருக்கின்றார்கள் என்பதும் யாவரும் அறிந்ததே.

எனினும் இந்த மாணவர்கள் பற்றியோ இங்கு இயங்கும் பாடசாலை பற்றியோ யாரும் கவலைப்படுவதே இல்லை. வலய மட்டத்திலும் மாகாணமட்டத்திலும் பல தடவைகள் முறையிட்டும் எதுவித பயனுமில்லை. இங்குள்ள இரு பாடசாலைகளில் ஆனந்தகுமாரசாமி நலன்புரி நிலையத்தில் மட்டும் 3200 மாணவர்கள் கல்வி கற்கின்றனர். தரம் ஒன்றிலிருந்து 13வரை இங்கு கற்பிக்கப்படுகின்றன. 80 இற்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் கற்பிக்கின்றனர். எனினும் இந்தப் பாடசாலையிலுள்ள பிரச்சினைகள் ஏராளம். எவரும் தீர்க்க முன்வரவில்லை.

* 3200 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்கின்றபோதிலும் மாணவர்களுக்கு குடிதண்ணீர் வசதியோ மலசலகூட வசதியோ இல்லை. இலங்கையில் எங்காவது இவையிரண்டும் இன்றி பாடசாலை நடத்தப்படுகின்றதா?

* மாணவர்களுக்கு மதிய உணவு வழங்கப்படுவதில்லை.

* இரண்டாம் தவணை நடுப்பகுதியான பின்னும் பெரும்பாலான பாடப் புத்தகங்கள் இன்னும் வழங்கப்படவில்லை. இந்த மாணவர்களுக்கென அனுப்பப்பட்ட பாடப் புத்தகங்கள் விசுவமடுவில் வைக்கப்பட்டுள்ளதாக கூறப்பட்டாலும் இதுவரை முழுமையாக வழங்கப்படவில்லை.

* ஆசிரியர்களுக்கான கைநூல்கள் தரம் ஒன்றிலிருந்து 13வரை எவையும் வழங்கப்படவில்லை.

* பாடசாலைக்கென எதுவித உதவிகளும் வலயத்திலிருந்தோ அல்லது மாகாணத்திலிருந்தோ வழங்கப்படுவதில்லை. இந்த வருடம் தொடங்கியதிலிருந்து வலயக் கல்விப் பணிப்பாளரிடம் பலமுறை முறையிட்டும் இதுவரை அவரோ வலய அதிகாரிகள் குழுவோ பாடசாலையைப் பார்வையிடவரவில்லை.

* 3200 மாணவர்களைக் கொண்ட ஒரு பாடசாலைக்கு வருடந்தோறும் தர உள்ளீட்டுக்காக எவ்வளவு நிதி ஒதுக்கப்படவேண்டும். எனினும் இரு வருடங்களாக எதுவித நிதியும் ஒதுக்கப்படவில்லை.எதுவித நிதி ஒதுக்கீடும் இன்றி எவ்வாறு ஒரு பாடசாலையை நடத்த முடியும்.

* பாடசாலைக்கென அமைக்கப்பட்ட கொட்டில்கள் இரு வருடங்கள் கடந்துவிட்ட நிலையில் கிடுகுகள் எல்லாம் காற்றிலடித்துச் செல்லப்பட்டு மழை நேரங்களில் ஒதுங்கி நிற்கக்கூட முடியாத நிலை காணப்படுகிறது.கடந்த மாதம் கடும் மழை பெய்து மாணவர்கள், ஆசிரியர்கள் எவரும் ஒதுங்கக்கூட முடியாத நிலையில் வலயக்கல்விப் பணிப்பாளரிடம் முறையிட்டும் இது வரை அவர் வருகை தரவுமில்லை. உரிய நடவடிக்கை எதுவும் எடுக்கவுமில்லை

* பாடசாலை வளாகம் எதுவித பாதுகாப்புமின்றி காணப்படுவதுடன் மக்கள் மட்டுமன்றி வாகனங்கள் என்பனவும் பாடசாலைக் காணியூடாகப் போக்குவரத்துச் செய்கின்றன.மாணவர்களும் இடைவேளை நேரங்களில் நாலாபக்கத்தாலும் வெளியில் செல்வதையும் கட்டுப்படுத்த முடியாதுள்ளது.

* மெனிக்பாம் பிரதேசம் அதிகஷ்டப் பிரதேசமாகவும் ஏனைய நிரந்தரப் பாடசாலைகள் அதற்குள் அடக்கப்பட்டு ஆசிரியர்களுக்கு அதிகஷ்டப் பிரதேச கொடுப்பனவு வழங்கப்படுகிறது. எனினும் வலயம்,மாகாணம் எனப் பல மட்டத்திலும் கோரிக்கை விடுத்தும் இந்த நலன்புரி நிலையத்தில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு இதுவரை அதிகஷ்டப் பிரதேச கொடுப்பனவு வழங்கப்படுவதில்லை.

* இந்தப்பாடசாலைக்கும் மற்றும் கதிர்காமர் பாடசாலைக்கும் வெளியிலிருந்து வரும் ஆசிரியர்கள் 110 இற்கும் மேற்பட்டவர்கள். தினமும் சனத்திரள் நிறைந்த பொதுப் போக்குவரத்தில் ஒரே நேரத்தில் பயணம் செய்வது முடியாத காரியமாகவுள்ளது. அவர்களுக்காக சேவையிலீடுபட்ட மாகாண சேவை பேருந்து டிசெம்பர் மாதத்துடன் நிறுத்தப்பட்டுள்ளது. இதனால் ஆசிரியர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

* முல்லைத்தீவு வலயத்திலிருந்து வவுனியா வரும் கல்வி அதிகாரிகள் வவுனியாவில் இயங்கும் காமினி வித்தியாலயத்துக்கு மட்டும் விஜயம் செய்துவிட்டு இந்த நலன்புரி நிலையப்பாடசாலைகளுக்கு வருவதில்லை. இந்தப் பாடசாலைகளில் ஏதும் அலுவல்கள் இருப்பின் தொலைபேசி மூலம் வவுனியா காமினி வித்தியாலயத்துக்குக் கொண்டு வரும்படி கூறிவிட்டு அங்கிருந்தே திரும்பிச் சென்றுவிடுவார்கள்.

* இதனைவிட முட்கம்பி வேலிகளால் சூழப்பட்ட இராணுவ நிர்வாகத்தின் கீழுள்ள அசாதாரண சூழலில் வெளியிலிருந்து ஆசிரியர்கள் உள்ளே செல்வதும் வெளியில் வருவதும் துன்பமான நிகழ்வாகவே உள்ளது.

* இங்குள்ள இராணுவ அதிகாரி அதிபர், ஆசிரியர்களை இராணுவச் சிப்பாய்கள் போல் நடத்துவதும் அதிபர், ஆசிரியர்களுக்கு மன உளைச்சலை ஏற்படுத்துகின்றது.

இந்தப் பாடசாலையின் அதிபர் அண்மையில் பாடசாலை முடிந்து திரும்பி வரும் வழியில் மோட்டார் சைக்கிள் விபத்தில் உயிரிழந்த பரிதாபமும் நடந்துள்ளது. இராணுவ அதிகாரியின் செயற்பாட்டால் இவர் அதிகமான உளைச்சலுக்கு ஆளாகியிருந்தமையும் அது தொடர்பில் அவர் அங்கு செல்லும் பெற்றோர்களிடம் கூறி கண்ணீர் விட்ட சம்பவமும் நடந்துள்ளது.

* இதன் பிறகு கூட வலயக் கல்விப் பணிப்பாளரோ வேறு அதிகாரிகளோ பாடசாலைக்கு விஜயம் செய்யவில்லையென்பது மனவேதனையளிப்பதாகும்.

**பாடசாலை நலன்புரி சங்கம்**
**ஆனந்தக் குமாரசாமி பொதுப்பாடசாலை**

இவ்வாறு எவரது கவனிப்புமின்றி எதுவித வளங்களுமின்றி இப்பாடசாலை கடந்த சாதாரண தரத்தில் 8 ஏ, சி சித்தியும் 5 ஏ மற்றும் 4 ஏ எனப் பல சித்திகளுடன் மாணவர்கள் தங்கள் சாதனைகளையும் ஆசிரியர்களின் அர்ப்பணிப்பையும் வெளிக்காட்டியுள்ளனர். இதில் முக்கிய விடயம் என்னவெனில் இம் மாணவர்கள் தனியே பாடசாலைக் கல்வியில் மாத்திரமே தங்கியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

எனவே மனச்சாட்சியும் நேர்மையான நிர்வாகத் திறனும் உடைய வலய, மாகாணமட்ட அதிகாரிகள் யாராவது இப்பிரச்சினைகள் தொடர்பில் பதிலெழுதுவார்களா? இதன் பின்னராவது எம் மாணவர்களதும் பாடசாலையினதும் தேவைகளை நிறைவு செய்ய வருவார்களா? கல்வியில் முல்லை வலயத்தை முந்தியிருக்கச்செய்யும் இம்மாணவர்களை கல்வியில் ஈடேற்ற வருவார்களா?

*

# வாசனா சம்பத சீட்டிழுப்பு முடிவுகள்

கொழும்பு, ஜூன் 25

தேசிய லொத்தர் சபையின் வாசனா சம்பத 874 ஆம் இலக்க அதிர்ஷ்ட இலாபச் சீட்டிழுப்பில் "C" என்ற ஆங்கில எழுத்தும் 02/13/35/40 ஆகிய இலக்கங்களும் அதிர்ஷ்டத்துக்குரியனவாகத் தெரிவு செய்யப்பட்டன. போனஸ் இலக்கமாக 05 தெரிவாகியது.

இதன் பிரகாரம் சுப்பர் பரிசு வெல்லப் படவில்லை. நான்கு இலக்கங்களும் சரியாக வைத்திருந்த ஒருவருக்கு முதலாம் பரிசாக பத்துலட்சம் ரூபா கிடைக்கவுள்ளது.

மூன்று இலக்கங்களும் போனஸ் இலக்கமும் சரியாகக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 05 பேருக்கு இரண்டாம் பரிசாகத் தலா ஒரு லட்சம் ரூபா கிடைக்கவுள்ளது.

மூன்று இலக்கங்களை மட்டும் சரியாகக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 323 பேருக்கு மூன்றாம் பரிசாகத் தலா இரண்டாயிரம் ரூபா கிடைக்கவுள்ளது.

இரண்டு இலக் கங்கள் மட்டும் சரியாகக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 15,457 பேருக்கு 4ஆம் பரிசாகத் தலா நூறு ரூபா கிடைக்கவுள்ளது.

ஒரு இலக்கத்தை மட்டும் சரியாகக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 216,926 பேருக்கு ஐந்தாம் பரிசாகத் தலா இருபது ரூபா கிடைக்கவுள்ளது.

ஆங்கில இலக்கத்தை மட்டும் சரியாகக் கொண்ட சீட்டுக்களைவைத்திருக்கும் 32,238 பேருக்குஆறாம் பரிசாகத் தலா இருபது ரூபா கிடைக்கவுள்ளது.

(ற)


**வீடு, காணி விற்பனைக்கு**

கந்தரோடை - சுன்னாகம் வீதியில் வீடுடன் கூடிய 5 பரப்புப் காணியும் பத்துப் பரப்பு நெல்/தோட்டக் காணியும் உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு:-0775479332

**German Swiss**

German, Swiss மொழிகள் தமிழ் மொழி பெயர்ப்புடன் நடைபெறுகின்றன.
German Embassy இல் கேட்கப்படும்.
A-1 Certificate இற்கு ஏற்றவாறு கற்பிக்கப்படும்.
German Institute, No 10,Palaly Road, Jaffna.

**பெண் பராமரிப்பாளர் தேவை**

வயோதிபப் பெண் ஒருவரை வீட்டில் தங்கியிருந்து பராமரிக்க 30 வயதுக்கு மேற்பட்ட பெண் பராமரிப்பாளர் தேவை.

தொடர்பு:-0776155452,021 5755955

**வீடு விற்பனைக்கு**

இல.35, பொன்னையா வீதி (உப தபாற் கந்தோர் வீதி), ஆனைக்கோட்டையில் 2 பரப்புக் காணியில், கட்டிய குறை நிலையில் மாடி வீடு விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0774527671

**3 ஆம் ஆண்டு நிறைவு நினைவஞ்சலி**

**திருமதி மனோன்மணி இராசரெத்தினம்**

இருவருக்கும் மகளாக 06.05.1920
இறைவனுக்குமகளாக 28.06.2008

திதி: தசமி



திங்களோ முப்பத்தாறு தீர்ந்ததோ அம்மாவுந்தன்
கண்களாம் மக்கள் இங்கு கலங்கிட மருகர் பேரர்
சிந்திய விழிநீர் இன்னும் சிறிதுமே வற்றலின்றி
எந்தையே உம்மையெண்ணி ஏங்கிட நீர்தான் செய்த
விந்தைதான் ஏது? அம்மா... வித்தகி நாளும் உன்னைக்
கொண்டுள மனதால் ஓம்பிக் கொடுத்தவுன் பாலால் உற்ற
பண்பதாம் உதிரம் தாமோ பாவியர் உடலுள் வற்றி
ஒன்றெனும் துளியாய்த்தானும் ஒடுங்கிடும் போதில் கூட
அங்கொரு துளிதான் தானும் அம்மையுன் பாதம் போற்றி
நின்றுதான் வணங்குமம்மா... நிகரிலாய் வேழன் தாழைக்
கொண்டு நீ பெருமை கொள்வாய் குணமலையான தாயே....

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
தகவல்: இரா.பரநிருபசிங்கம் (மகன்)

81A, கலட்டி பிள்ளையார் வீதி,
சீனியர் லேன்,கலட்டி, யாழ்ப்பாணம்.

**வீடு விற்பனைக்கு**

கொக்குவில் கிழக்கில் சகல வசதிகளுடன் கூடிய 3.75 பரப்பில் வீடும் காணியும் விற்பனைக்குண்டு. (ஆடியபாதம் வீதியில் சரஸ்வதி மில்லுக்கு முன்பாக உள்ள புதிய ஒழுங்கையில்)

தொடர்பு: 0772759225

**இறைச்சிக் கோழி விற்பனை**

உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து காலை 8மணி தொடக்கம் இரவு 8மணி வரை பெற்றுக் கொள்ளலாம்.

நல்லூர் பாம் சென்ரர்,
19, முருகேசர் லேன், நல்லூர்.

**ஜனஜய லொத்தர்**

உத்தியோகப்பூர்வ முடிவுகள்
வாரம் 238
சீட்டிழுப்புத் திகதி 23.06.2011

வெற்றி இலக்கங்கள்: 34 52 53 60
சுப்பர் இலக்கம்: 01

சுப்பர் பரிசுப்பொதி — ரூ. 8,163,740/=

| வெற்றி இல. | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| சுப்பர் இலக்கம் தவிர்ந்த எந்த 1 இலக்கத்துக்கும் | 69903 | ரூ. 20/= | ரூ. 1,398,060 |
| சுப்பர் இலக்கத்துடன் எந்த 1 இலக்கத்துக்கும் | 6374 | ரூ. 40/= | ரூ. 254,960 |
| சுப்பர் இலக்கம் தவிர்ந்த எந்த 2 இலக்கங்களுக்கும் | 5491 | ரூ. 100/= | ரூ. 549,100 |
| சுப்பர் இலக்கத்துடன் எந்த 2 இலக்கங்களுக்கும் | 496 | ரூ. 200/= | ரூ. 99,200 |
| சுப்பர் இலக்கம் தவிர்ந்த எந்த 3 இலக்கங்களுக்கும் | 127 | ரூ. 1,500/= | ரூ. 190,500 |
| சுப்பர் இலக்கத்துடன் எந்த 3 இலக்கங்களுக்கும் | 11 | ரூ. 3,000/= | ரூ. 33,000 |
| சுப்பர் இலக்கம் தவிர்ந்த எந்த 4 இலக்கங்களுக்கும் | 1 | ரூ. 1,000,000/= | ரூ. 1,000,000 |
| சுப்பர் இலக்கத்துடன் எந்த 4 இலக்கங்களுக்கும் | | ரூ. 8,163,740/= | |
| மொத்த எண்ணிக்கை | 82403 | | ரூ. 3,524,820/= |

ஞாயிற்றுக்கிழமை சுப்பர் பரிசுப்பொதி ரூ. 8,375,690/= உட்பட வரிவிலக்கற்ற புதிய மோட்டார் வாகனமும் அதன் மிகுதிப்பணமும்

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர். டி. சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02.
தொலைபேசி: 2 333 566 - 67 தொலைநகல்: 2 333 545
Website: www.dlb.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீவிரவாதத்தை ஒழிக்க இந்தியாவும் பாகிஸ்தானும் இணைந்து செயற்படும்

## இந்திய வெளியுறவுச் செயலர் நிருபமா தெரிவிப்பு

இஸ்லாமாபாத், ஜூன்25
தீவிரவாத ஒழிப்பு நடவடிக்கையில் இந்தியாவும், பாகிஸ்தானும் இணைந்து செயற்படும் என்று இந்திய வெளியுறவுத்துறை செயலர் நிருபமா ராவ் தெரிவித்தார்.

இந்தியா - பாகிஸ்தான் வெளியுறவுச் செயலர்கள் இடையிலான பேச்சு பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத்தில் வியாழக்கிழமை தொடங் கியது.

இந்தப் பேச்சில் கலந்து கொள்வதற்காக இந்திய வெளியுறவுச் செயலர் நிருபமா ராவ், இஸ்லாமாபாத்துக்கு வியாழக்கிழமை வந்தார். தொடர்ந்து அவர் பாகிஸ்தான் வெளியுறவுச் செயலர் சல்மான் பஷீரை சந்தித்து முதல் சுற்று பேச்சுகளைத் தொடங்கினார்.

அப்போது இந்தியாவுக்கு எதிராக பாகிஸ்தானில் செயற்பட்டு வரும் தீவிரவாதிகள் மீது தீவிர நடவடிக்கை எடுக்காதது, மும்பைதீவிரவாதத் தாக்குதல் விசாரணையில் தாமதம் குறித்து பாகிஸ்தானிடம் கவலை தெரிவிக்கப்பட்டது.

இருநாடுகளிடையே அமைதி, பாதுகாப்பு, நம்பிக்கை ஏற்படுத்தும் முயற்சி என மூன்று பிரிவுகளாகப் பேச்சு நடைபெறுகிறது.

முதல் கட்டப் பேச்சுக்குப் பின் செய்தியாளர்களிடம் நிருபமா ராவ் கூறியதாவது:

நாடுகளின் அமைதி, பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் வகையில் தீவிர வாதம் உள்ளது. தீவிரவாதத்தை ஒழிக்க இந்தியாவும் பாகிஸ்தானும் இணைந்து செயற்படும். தீவிரவாதம் என்பது ஒரு பகுதியில் மட்டும் உள்ள பிரச்சினையில்லை, சர்வதேச அளவில் தீவிரவாதிகள் செயல்பட்டு வருகின்றனர் என்றார் அவர்.

பாகிஸ்தானில் செயல்பட்டு வரும் தீவிரவாதிகளுடன் அந்த நாட்டு உளவு அமைப்பான ஐ.எஸ்.ஐ. க்குத் தொடர்பு உள்ளது வெளிப்பட்டுள்ள நிலையில் நடைபெறும் இப் பேச்சு மிகுந்த முக்கியத்துவம் பெறுகிறது.



சந்திப்பு.....

இஸ்லாமாபாத்தில் பாகிஸ்தான் வெளியுறவுத்துறை செயலர் சல்மான் பஷீரை இந்திய வெளியுறவுத் துறைச் செயலர் நிருபமா ராவ் சந்தித்து கைலாகு கொடுக்கின்றார்.

# சீனக் கலைஞர் அய்வெய் கைது குறித்து விளக்கம் கோருகிறார் ஜேர்மன் அதிபர்

பெர்லின், ஜூன் 25
சர்ச்சைக்குரிய சீனக் கலைஞர் அய்வெய் புதன்கிழமை பிணையில்விடுதலைசெய்யப்பட்டார். அவர் விடுதலை குறித்து ஜேர்மன் அதிபர் ஏங்க லா மார்கெல் அறிக்கை வெளியிட்டுள்ளார். அந்த அறிக்கையில் அய்வெய் கைது நடவடிக்கைக்கு என்ன காரணம் என்பதை சீன அரசு வெளிப்படையாகத் தெரிவிக்க வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

உலக நாடுகளில் பிரபலமாக உள்ள கலைஞர் அய் வெய் கடந்த ஏப்ரல் மாதம் 3 ஆம் திகதி சீன அரசால் கைது செய்யப்பட்டார். அவர் வரி ஏய்ப்பு நடவடிக்கையில் ஈடு பட்டதாக சீன அரசு குற்றம் சுமத்தி இருந்தது.

அய்வெய் கடந்த 2008ஆம் ஆண்டு நடந்த பெய்ஜிங் ஒலிம்பிக் போட்டியின் போது பிரதான அரங்கத்திற்கு வடிவமைத்த நிபுணர். அதன் போது அவரை சீன அரசு மிகவும் பாராட்டியது. அரசை அய் வெய் விமர்சித்ததைத் தொடர்ந்து அய்வெய் நடவடிக்கைளை சீனா வெறுத்தது.

இந்த நிலையில் கைது செய்யப்பட்ட அவர் 81 நாள்கள் சிறையிலிருந்து பின்னர் விடுதலையாகியுள்ளார். இது குறித்து ஜேர்மன் அதிபர் ஏங்கலா மார்கெல் அறிக்கை வெளியிட்டு உள்ளார். இதில் அவரைக் கைது செய்ததற்கான காரணத்தை வெளிப்படையாகத் தெரிவிக்க வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

# துருக்கி எல்லையில் சிரியப் படைகளின் நடமாட்டத்தை கண்டிக்கிறது அமெரிக்கா

வாஷிங்டன், ஜூன் 25
துருக்கி எல்லைப்பகுதியில் சிரியநாட்டுப் படைகளின் நடமாட்டம் அதிகரித்து உள்ளது. இந்தப் படைகளின் நடமாட்டத்தால் மோதல்கள் ஏற்படும் என அமெரிக்கா எச்சரிக்கை விடுத்துள்ளது.

சிரியாவின் இந்த நடவடிக்கை கவலை அளிப்பதாக உள்ளது. இந்தப் படைகளின் நடமாட்டத்தால் எல்லைப்பகுதியில் மோதல் வெடிக்கும். இதனால் அகதிகளுக்கு அபாய நிலை ஏற்படும் என அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் ஹிலாரி கிளிண்டன் தெரிவித்துள்ளார். சிரியாவில் அரசுக்கு எதிராகக் கடந்த மார்ச் மாதம் போராட்டம் வெடித்தது.

சிரிய ராணுவ வீரர்கள் கிர்பெட் அல் கிராமத்தில் ஊடுருவி உள்ளனர். இதனால் அந்த கிராம மக்கள் துருக்கிக்குத் தப்பி ஓடி உள்ளனர்.

இந்தப் போராட்டத்தை தொடர்ந்து இதுவரை 1300 பேர் கொல்லப்பட்டுள்ளனர். ஆயிரக் கணக்கான போராட்டக்காரர்கள் அரசால் கைது செய்யப் பட்டுள்ளனர். ஹாம்ஸ் மற்றும் ஹமா உள்பட சிரியாவின் பல நகரங்கள் பொது வேலை நிறுத்தத்தை அறிவித்துள்ளன.

சிரிய துருப்புகளின் தீவிர நடவடிக்கையால் அங்கு மோசமான சூழ்நிலை ஏற்படும் எனக் ஹிலாரி கிளிண்டன் எச்சரித்துள்ளார்.

# மரண அறிவித்தல்



## கனகசபை இராமநாதன் (இராமையா) நயினாதீவு

(முகாமையாளர், தாவடிச்சந்தி கந்தையா அன்சன்ஸ்)

நயினாதீவு, 7 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட கனகசபை இராமநாதன்(இராமையா) 22.06.2011 புதன்கிழமை நயினாதீவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபை - சின்னம்மா, வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான மாசிலாமணி- அன்னம்மா, வாலாம்பிகை தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற சிவக்கொழுந்துவின் அன்புக் கணவரும் புனிதவதி (ஜேர்மனி), இராஜசூரியர்(ஜேர்மனி), செந்தில்நாதன் ஆகியோரின் அன்புத் தந்தையும் கதிர்காமநாதன்(யாழ். தபாலகம்), யோகேஸ்வரி ஆகியோரின் சிறிய தந்தையும் தனஞ்சயன் (ஜேர்மனி), திருவருட்செல்வி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான சிவக்கொழுந்து, கோபாலபிள்ளை மற்றும் புவனேஸ்வரி(பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற தில்லைநாதன் மற்றும் பத்மாவதி, யோகேஸ்வரி, மாணிக்கவாசகர், சிவகாமசுந்தரி(பிரான்ஸ்), தர்மகுலசிங்கம், விஜயகுலசிங்கம் (ஜேர்மனி), கதிர்காமசுந்தரி,விஜயலட்சுமி, செல்வரெத்தினம்(சுவிஸ்), பரமேஸ்வரி (ஜேர்மனி), காலஞ்சென்ற பரமலிங்கம் மற்றும் அன்னலெட்சுமி, இராசரெத்தினம்(பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், பரமேஸ்வரி, இராசரெத்தினம், காலஞ்சென்றவர்களான சோதிலிங்கம், மயில்வாகனம் மற்றும் லோகாம்பிகை, நிர்மலாதேவி, சசிகலா, விக்னேஸ்வரன், தங்கராசா, சடாச்சரமணி, லிங்கேஸ்வரன் ஆகியோரின் அன்பு சகலனும், ஜேர்மனியில் வசிப்பவர்களான அஸ்வினி, சாம்பவி, சுஜீபன், ரகுநாத், ராகவி, சிறினாத்(நயினை), ஹர்சனா, கம்சனா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.06.2011) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக நயினாதீவு சல்லிபரவை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

7 ஆம் வட்டாரம்,
நயினாதீவு.

தகவல்:
இராஜசூரியர், செந்தில்நாதன்
(மகன்மார்)

(5191)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க எதிரிகளுக்கு அடைக்கலமா? எவரும் தப்பமுடியாது என்கிறார் ஒபாமா

## பாகிஸ்தானுக்கு மறைமுக எச்சரிக்கை

வாஷிங்டன், ஜூன் 25

"எங்களைக் கொல்லும் நோக்கத்துடன் செயல்படும் தீரவாதிகளுக்கு அடைக்கலம் கொடுப்பவர்களை, அமெரிக்கா ஒருபோதும் பொறுத்துக் கொள்ளாது. அமெரிக்காவிடம் இருந்து அவர்கள் திறமையாகத் தப்பித்துக் கொள்ள முடியாது," என்று அதிபர் ஒபாமா மறைமுக எச்சரிக்கை விடுத்தார்.

ஆப்கன், பாகிஸ்தான் எல்லைப் பகுதிகளிலும், அல்குவைதா மற்றும் தலிபான் தீவிரவாதிகள் மறைந்திருந்து, உலக நாடுகளை மிரட்டி வருகின்றனர். தீவிரவாதிகளின் கூடாரமாக ஆப்கன் இருக்கிறது என, அமெரிக்க அதிபர் ஒபாமா கூறி வந்தார்.

அமெரிக்க அதிபராக ஒபாமா பதவியேற்ற பின், கடந்த 2009 ஆம் ஆண்டில், ஆப்கனில் முகாமிட்டுள்ள அமெரிக்கப் படை வீரர்களின் எண்ணிக்கையை மும்மடங்காக அதிகரித்தார். தற் போது, ஆப்கனில் ஒரு லட்சம் அமெரிக்கப் படை வீரர்கள் முகாமிட்டுள்ளனர்.

இதனிடையே, "தலிபான்களுடன், அமைதிப் பேச்சை ஆப்கன் அதிபர் அமித் கர்சாய் தலைமையிலான அரசு தொடக்கும். பின்னர் சிறிது, சிறிதாக அந்நாட்டில் இருந்து அமெரிக் கப் படைகள் வாபஸ் பெறப்படும்" என்றுஅப்போது ஒபாமா பேசினார்.

இந்நிலையில், ஆப்கனில், அமெரிக்கப் படைவீரர்கள் வாபஸ் தொடர்பான அறிவிப்பை, வாஷிங்டனில் உள்ள வெள்ளை மாளிகையில், அமெரிக்க அதிபர் ஒபாமா வெளியிட்டு பேசுகையில் தெரித்தது:

ஆப்கனில் இருந்து, இந்தாண்டில் 10 ஆயிரம் வீரர்கள் வாபஸ் பெறப்பட்டு, 2012 ஆம் ஆண்டில் மொத்தம் 33 ஆயிரம் வீரர்கள் வாபஸ் பெறப்படுவார்கள். இவர்கள் வாபஸுக்குப்பின், அந்நாட்டில், மீதம் 68 ஆயிரம் அமெரிக்க வீரர்கள் இருப்பார்கள். 2014 ஆம் ஆண்டில், ஆப்கனின் முழு பாதுகாப்புப் பொறுப்பும், அந்த நாட்டிடம் ஒப்படைக்கப்பட்டு, அனைத்து அமெரிக்கப் படைவீரர்களும் வாபஸ் பெறப்படுவார்கள்.

தலிபான்கள் மீதான போரில், அமெரிக்கா பெரிய அளவில் இழப்பை சந்தித்தது. அதே சமயம், முக்கிய தீவிரவாதிகள் பலர் கொல்லப்பட்டனர்.

அமெரிக்காவுடன் இணைந்து, இதன் கூட்டு நாடுகளும் ஆப்கனில் ஸ்திரத்தன்மையை உண்டாக்க உதவின. ஏற்கனவே ஆப்கனின் சில மாகாணங்கள் மற்றும் நகராட்சிகளின் அதிகாரங்களை, அப்பகுதி மக்களிடம் ஒப்படைக்கும் பணியை தொடக்கி விட்டோம்.

தலிபான்களுடனான எங்களது அமைதிப் பேச்சுத் திட்டத்தில் எந்த மாற்றமும் இல்லை. ஆப்கன் அமைதியான நாடாக மாற விரும்புபவர்கள் அல்குவைதா அமைப்பைத் துண்டித்து வெளியேற வேண்டும். வன்முறையைக் கைவிட வேண்டும்.

ஆப்கன் நாட்டின் அரசியலமைப்புச் சட்டத்தை பின்பற்ற வேண்டும். ஆப்கன் நாட்டை தீவிரவாதிகளின் கூடாரமாக அல்குவைதா தீவிரவாதிகள் மற்றும் இஸ்லாமிய தீவிரவாத அமைப்புகள் மாற்றுவதை தடுப்பதே அமெரிக்காவின் முதல் நோக்கமாக இருந்தது.

தற்போது, அமெரிக்காவின் உள்கட்டமைப்பில் கவனம் செலுத்த வேண்டிய தருணம் வந்துவிட்டது. எங்களை கொல்லும் நோக்கத்துடன் செயல்படும் தீவிரவாதிகளுக்கு அடைக்கலம் கொடுப்பவர்களை அமெரிக்கா ஒருபோதும் பொறுத்துக் கொள்ளாது. அமெரிக்காவிடம் இருந்து அவர்கள் திறமையாகத் தப்பித்துக் கொள்ள முடியாது. இவ்வாறு அதிபர் ஒபாமா பேசினார்.

## அலாஸ்காவில் நிலநடுக்கம்

வாஷிங்டன், ஜூன்.25

அலாஸ்கா, அட்காவுக்கு கிழக்கே 172 கிலோமீற்றர் தொலைவில் பசிபிக் பெருங் கடலில் நேற்று 7.4 என்ற ரிச்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டது. இதையடுத்து அலாஸ்காவின் கடற்கரையோரப் பகுதிகளில் சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதே பகுதியில் அரை நிமிடம் கழித்து 7.2 என்ற ரிச்டர் அளவில் மீண்டும் ஒரு நிலநடுக்கம் ஏற்பட்டதாக அமெரிக்க புவி ஆய்வு மையம் தெரிவித்தது.

யூனிமாக் பாஸ், அலாஸ்காவில் இருந்து அம்சிட்கா பாஸ் வரையிலான கடற்கரையோரப் பகுதிகளில் சுனாமி எச்சரிக்கை அமுலில் இருப்பதாக மேற்குக் கடலோர மற்றும் அலாஸ்கா சுனாமி எச்சரிக்கை மையம் தெரிவித்தது.

சுனாமி எச்சரிக்கை விடுத்துள்ளதையடுத்து அந்தப் பகுதிகளில் தாழ்வான இடங்களில் வசிக்கும் மக்களை உடனடியாக உயரமான பகுதிகளுக்குச் செல்லுமாறும் துறைமுகப் பகுதிகளில் உள்ளவர்களை வெளியேறுமாறும் அறிவிக்கப்பட்டது.

மகிழ்ச்சி....



தாய்லாந்துப் பிரதமர் வெஜ்ஜஜிவா தேர்தல் பிரசாரம் செய்த வேளை அவருக்கு அவரது ஆதரவாளர்கள் மலர்க்கொத்து வழங்கி மகிழ்விக்கின்றனர்.

## ஈராக்கில் தொடர் குண்டு வெடிப்பு 40 பேர் பலி; 107 பேர் படுகாயம்

பாக்தாத், ஜூன் 25

ஈராக்கின் முக்கிய பகுதியில் நேற்றுமுன்தினம் அடுத்தடுத்து மூன்று முறை நடந்த குண்டுவெடிப்பில் அமெரிக்காவைச் சேர்ந்த ஒப்பந்தகாரர் உள்பட40 பேர் பலியாயினர். 107 பேர் படுகாயம் அடைந்தனர்.

ஈராக்கின் தலைநகர் மத்திய பாக்தாத் அருகே ஷரெட் அல்-ரப்பாஹ் எனும் வியாபாரம் உள்ளது. நேற்று (வெள்ளி) விடுமுறை என்ப தாலும் வாரத் தின் கடைசி நாளானதாலும் வியாழக் கிழமை மாலை பெருமளவு மக்கள் கூட்டம் இருந்தது. அப்போது திடீரென அடுத் தடுத்து மூன்று முறை குண்டு வெடித்தது. இதனால் பொதுமக்கள் அலறியடித்து கொண்டு ஓடினர்.

இந்தக் குண்டு வெடிப்பில் 40 பேர் பலி யாயினர். 107 பேர் படுகாயமடைந்தனர். காயமடைந்தவர்கள் யார் கோம்ப் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்தக் குண்டு வெடிப்பில் அமெரிக்காவைச் சேர்ந்த ஒப்பந்தகாரர் ஒருவரும் பலியானதாகக் கூறப்படுகிறது.

அதேவேளை அருகிலுள்ள முஸ்தானியாப் பல்கலைக் கழகத்தின் முக்கிய விருந்தினரது வாகனம் அந்த வழியாகச் சென்று கொண்டிருந்தது எனவும் எனினும் அந்த வாகனம் அதிர்ஷ்டவசமாகத் தப்பியது எனவும், குண்டு வெடிப்புச் சம்பவத்தினை நேரில் பார்த்தவர்கள் கூறினார்கள்.

## ஆப்கனிலிருந்து வீரர்களை திருப்பி அழைக்க பிரான்ஸ் முடிவு

பாரீஸ், ஜூன் 25

அமெரிக்காவைத் தொடர்ந்து பிரான்ஸும் ஆப்கானிஸ்தானில் முகாமிட்டுள்ள 4 ஆயிரம் ராணுவ வீரர்கள் வாபஸ் பெறப்போவதாக அந்தநாட்டு அதிபர் நேற்று முன்தினம் தெரிவித்தார். ஆப்கனில் இந்தாண்டில் 10 ஆயிரம் வீரர்கள் வாபஸ் பெறப்படுவர். 2012 ஆம் ஆண்டில் மொத்தம் 33 ஆயிரம் வீரர்கள் வாபஸ் பெறப்படுவார்கள் என அதிபர் ஒபாமா அறிவித்தார். இவர்கள் வாபஸுக்குப் பின், அந்நாட்டில், மீதம் 68 ஆயிரம் அமெரிக்க வீரர்கள் இருப்பார்கள். 2014 ஆம் ஆண்டில் ஆப்கனின் முழுப் பாதுகாப்பு பொறுப்பும் அந்த நாட்டிடம் ஒப்படைக்கப்படும் என அறிவித்தார்.

இந்நிலையில் பிரான்ஸ் அதிபர் நிக்கோலஸ் சர்கோஸி நேற்றுமுன்தினம் வெளியிட்டுள்ள அறிக்கையில் அமெரிக்காவைப் போலவே ஆப்கானிஸ்தானில் முகாமிட்டுள்ள 4 ஆயிரம் ராணுவ வீரர்களும் திரும்ப அழைக்கப்படுவர். இனி ஆப்கானிஸ்தானை அந்த நாட்டு வீரர்களே பாதுகாப்பர் என்றார்.

ஆப்கானில் காபூல், கபீஸா ஆகிய மாகாணங்களில் தான் பிரான்ஸ் ராணுவ வீரர்கள் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர். இதனையடுத்து இங்கிலாந்தின் 10 ஆயிரம் வீரர்கள் மட்டும் ஆப்கானிஸ்தானில் 2015 ஆம் ஆண்டு வரை இருப்பர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சாவுக்கு நாங்கள் அஞ்சவில்லை; தொடர்ந்தும் போராடுவோம்

### கடாபி சூளுரை



திரிபோலி, ஜூன் 25

"நூறாண்டுகள் ஆனாலும், மேற்கத்திய படைகளை எதிர்த்து சண்டையிடுவோம். சாவுக்கு அஞ்சமாட்டோம்" என, லிபியத் தலைவர் கடாபி தெரிவித்துள்ளார்.

லிபியாவில், அதிபர் கடாபியை பதவி விலகக் கோரி, அதிருப்தியாளர்கள், நேட்டோ படைகளின் உதவியுடன் போராடி வருகின்றனர்.

அதிருப்தியாளர்கள் மீது, கடாபி ஆதரவுப் படைகள் தாக்குதல் நடத்துவதால் அதை எதிர்த்து நேட்டோப் படைகள் கடாபி ஆதரவாளர்கள் தங்கியுள்ள கட்டடங்கள் மீது தாக்குதல் நடத்துகின்றன. இதில், கடாபியின் நண்பர் ஹெமிதியும் அவரது குடும்பத்தினரும் கொல்லப்பட்டனர்.

அவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் விதமாக, 'தொலைக் காட்சியில்' பேசியபோதே கடாபி இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் தெரிவித்தாவது:

'நேட்டோப் படைகள், ராணுவத்தின் மீது தாக்குதல் நடத் தாமல், மக்கள் வசிக்கும் பகுதிகளிலேயே தாக்குதல்களை நடத்தி வருகின்றன. இதை ஐ.நா. பார்வையாளர்கள் பார்வையிட வேண்டும்.

எத்தனை ஆண்டுகளானாலும் மேற்கத்தேயப் படைகளை எதிர்த்துப் போராடத் தயாராக இருக்கிறோம். சாவுக்கு நாங்கள் அஞ்சவில்லை. எத்தனை நூறாண்டுகள் ஆனாலும், 'நேட்டோ படைகளை' எதிர்த்து நின்று சண்டையிடுவோம்' என்றார்.

## கிரீஸின் பொருளாதார நிலைமையை தீவிரமாகக் கண்காணிக்கிறது சுவிஸ்

சுவிஸ் உற்பத்தி பொருள்கள் அதிக அளவில் அனுப்பப்படும் 26 ஆவது பெரிய நாடாக கிரீஸ் உள்ளது. கிரீஸ் பொருளாதார வீழ்ச்சி ஐரோப்பிய பொருளாதார நிலையில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் என்பதால் கிரீஸ் பொருளாதார நிலைமையை சுவிஸ் கவனித்து வருகிறது.

அந்த நாட்டில் அரசு செலவினங்களைக் குறைக்க நடவடிக்கை மேற்கொண்டு உள்ளது. புதிய கடன்களைப் பெறுவதற்காக இந்தச் செலவினத்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அரசின் செயல்பாடுகளால் மக்கள் இடையே அதிருப்தி ஏற்பட்டு உள்ளது.

இதனால் தலைநகர் ஏதென்ஸ் உள்ளிட்ட நகரங்களில் போராட்டங்கள் அரங்கேறி வருகின்றன. இதேவேளை சுவிஸ் வங்கிகள் கிரீஸ், அயர்லாந்து, ஸ்பெயின், போர்த்துக்கல் மற்றும் இத்தாலி ஆகிய நாடுகளுக்கு 6 ஆயிரம் கோடி சுவிஸ் பிராங்குகளை கடனாக அளித்ததுள்ளது.

ஆனால் கடந்த ஆண்டு இந்தக் கடன்கள் குறிப்பிட்ட நாடுகளுக்கு 4 ஆயிரத்து 600 கோடி பிராங்குகளாகக் குறைக்கப்பட்டன. கிரீஸிடம் இருந்து சுவிஸுக்கு 200 கோடி பிராங்குகள் மட்டுமே வரவேண்டியுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை யுத்தத்தில் உயிரிழந்தவர்களுக்கான அஞ்சலி நிகழ்வு நாளை சென்னையில்

## அனைவரையும் அணி திரளுமாறு அழைக்கிறார் பழ.நெடுமாறன்



சென்னை, ஜூன் 25

இலங்கையில் இடம்பெற்ற இறுதி யுத்தத்தின் போது படையினரின் தாக்குதலில் உயிரிழந்த ஈழத் தமிழர்கள் மற்றும் தமிழக மீனவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வில் தமிழர்கள் அனைவரும் கலந்துகொள்ளுமாறு இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் பழ. நெடுமாறன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இலங்கை அரசின் திட்டமிட்ட இனப்படுகொலைக்கு ஆளாகி உயிர்நீத்த ஈழத் தமிழர்களுக்கும், தமிழக மீனவர்களுக்கும் அஞ்சலி செலுத்தும் வகையில் சென்னை மெரீனா கடற்கரையில் நாளை ஞாயிற்றுக் கிழமை மாலை 5 மணிக்கு மெழுகுவர்த்தி ஏந்தி நிற்கும் நிகழ்வு இடம்பெறவுள்ளது. இந்த அஞ்சலி நிகழ்வை ''மே 17 இயக்கம்'' முன்னின்று நடத்துகிறது.

ஐ.நா. மன்றம் கடைப்பிடிக்கும் அனைத்துலக நாளான அன்று இந்த நிகழ்வு நடைபெறுவது சிறப்புக்குரியது. இந்த நிகழ்வில் தமிழர்கள் அனைவரும் எத்தகைய வேறுபாடும் இல்லாமல் பங்கெடுத்து எமது உணர்வை வெளிப்படுத்தத் திரண்டு வருமாறு வேண்டிக் கொள்கிறேன். இவ்வாறு அந்த அறிக்கையில் அவர் தெரிவித்துள்ளார். (வ)

# ரஜனிகாந்தைச் சந்தித்து நலம் விசாரித்தார் சிரஞ்சீவி



சென்னை, ஜூன் 25

சிங்கப்பூரில் ஓய்வெடுத்து வரும் நடிகர் ரஜனிகாந்தை தெலுங்கு நடிகர் சிரஞ்சீவியும், கன்னட நடிகர் அம்பரீஷும் புதன்கிழமை சந்தித்து நலம் விசாரித் தனர்.

சிங்கப்பூர் மவுண்ட் எலிசபெத் மருத்துவமனையில் சிறுநீரகப் பாதிப்புக்காக ரஜனிகாந்த் சிகிச்சை எடுத்து வந்தார். இந்நிலையில், அவர் கடந்த 15 ஆம் திகதி மருத்துவமனையில் இருந்து இருப்பிடம் திரும்பினார்.

இதையடுத்து சிங்கப்பூரில் அவர் ஓய்வெடுத்து வருகிறார். ரஜனிகாந்தைப் பார்க்க அவரது நெருங்கிய நண்பர்களும் நடிகர்களுமான சிரஞ்சீவி, அம்பரீஷ் ஆகியோர் சிங்கப்பூர் சென்றார்கள்.

ரஜனிகாந்த் தங்கியுள்ள குடியிருப் புக்கு சென்று அவரிடம் உடல் நலம் விசாரித்தனர். 'ரஜனி குணமடைந்து வருகிறார். சென்னை திரும்புவதற்கு ஆர்வமாக இருக்கிறார்' என்று சிரஞ்சீவி தெரிவித்துள்ளார். ரஜனியைச் சந்திக்க சிங்கப்பூர் சென்ற சிரஞ்சீவியும், அம்பரீஷும் மலேசியத் தலைநகர் கோலாலம்பூருக்கும் சென்று வந்தனர் எனத் தெரிகிறது. (வ)

# சாயிபாபா அறக்கட்டளைச் செயற்பாடுகள் விளக்கமளிக்குமாறு ஆந்திர அரசு அறிவிப்பு

அனந்தப்பூர், ஜூன்.25

காரில் இருந்து கடத்தப்பட்டு பறிமுதல் செய்யப்பட்ட பணம் சத்தியசாயி மத்திய அறக்கட்டளைக்குச் சொந்தமானது என்பதால் 3 தினங்களுக்குள் விசாரணை அதிகாரி முன்பு ஆஜராகி விளக்கம் அளிக்குமாறு ஆந்திர மாநில அரசு அறிவித்துள்ளது.

இதுதொடர்பாக சாயிபாபாவின் சகோதரர் மகனும் சத்தியசாயி மத்திய அறக்கட்டளையின் உறுப்பினருமான ஆர்.ஜே.ரத்னாகர், மற்றொரு உறுப்பினர் சீனிவாசன் ஆகியோருக்கு ஆந்திர மாநில பொலிஸார் நோட்டீஸ் அனுப்பியுள்ளனர்.

ஆந்திர மாநிலம் புட்டபர்த்தியில் உள்ள பிரசாந்தி ஆசிரமத்தில் இருந்து அண்மையில் காரில் கொண்டு செல்லப்பட்ட ரூ.35 1/2 லட்சம் கொடிகொண்டா சோதனைச்சாவடி அருகே பொலிஸார் பறிமுதல் செய்தனர். இந்த சம்பவம் நடந்த மறுநாள் சொகுசு பஸ்ஸில் பெங்களூருக்கு கடத்திச் செல்லப்பட்ட பல கோடி ரூபாய் பறிமுதல் செய்யப்பட்டது. எனவே இந்தப் பணம் சத்திய சாயிபாபா அறக்கட்டளைக்குச் சொந்தமானதால் விளக்கமளிக்குமாறு ஆந்திர அரசு அறிவித்துள்ளது. (வ)

## என்றும் நினைவில் நிற்பவர்...



கவியரசு கண்ணதாசனின் 85 ஆவது பிறந்தநாளான நேற்று தமிழக அரசின் சார்பில் சென்னை தி.நகரில் உள்ள அவரது உருவச்சிலை அருகில் வைக்கப்பட்டிருந்த உருவப்படத்துக்கு ஊடகத் துறை அமைச்சர் ஜி.செந்தமிழன், சட்டபேரவை உறுப்பினர்களான பழ.கருப்பையா, கலைராஜன் உள்ளிட்டோர் மலர் தூவி மரியாதை செலுத்தினர். (வ)

# ராசா மீதான குற்றச்சாட்டுக்களை பகிரங்கமாக வெளியிட வேண்டும்

## பிரதமர் அலுவலகத்துக்கு உத்தரவு

டில்லி, ஜூன்.25

முன்னாள் மத்திய அமைச்சர் ராசா மீதான முறைப்பாடுகள், குற்றச்சாட்டுக்கள் ஆகியவற்றை பகிரங்கமாக வெளியிட வேண்டும் என்று பிரதமர் அலுவலகத்திற்கு தலைமை தகவல் ஆணையாளர் உத்தரவிட்டுள்ளார்.

2ஜி ஸ்பெக்ட்ரம் ஏல நடைமுறையில் முறைகேடாக நடந்ததால் நாட்டுக்கு ரூ. 1.75 லட்சம் கோடி அளவுக்கு நட்டத்தை ஏற்படுத்தி விட்டார் என்பது ராசா மீதான முறைப்பாடாகும். இந்த வழக்கில் தற்போது ராசா கைது செய்யப்பட்டு திஹார் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

இந்த நிலையில், மத்திய அமைச்சர் பதவியில் ராசா இருந்தபோதே அவர் மீது ஸ்பெக்ட்ரம் ஊழல் முறைப்பாடு எழுந்தது. ஆனால், அதை அவர் மறுத்து வந்தார். அந்த சமயத்தில், ஆ.ராசா மீது கடுமையான ஊழல் குற்றச்சாட்டு கூறப்பட்ட போதிலும் அமைச்சராக அவர் நீடிக்க காரணம் என்ன? என்பது போன்ற விவரங்களை தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் பிரதமர் அலுவலகத்திடம் தகவல் ஆர்வலர் ஒருவர் கேட்டிருந்தார். ஆனால் அதற்கு பிரதமர் அலுவலகம் ஒரு பதிலையும் அனுப்பாமல் அமைதி காத்து வந்தது.

இதையடுத்து மனுதாரர், தலைமைத் தகவல் ஆணையாளர் அலுவலகத்தில் மேல் முறையீடு செய்தார். அந்த மனுவைப் பரிசீலித்த மத்திய தலைமை தகவல் ஆணையாளர் சைலேஷ் காந்தி, பிரதமர் அலுவலகத்திற்கு ஒரு உத்தரவு கலந்த கடிதத்தை அனுப்பியுள்ளார்.

அதில் இந்த நாட்டு மக்கள் அனைத்தையும் அறிந்து கொள்ள வேண்டும் என மனுதாரர் விரும்புகிறார். அவருடைய கேள்விகளை இந்தியில் தொகுத்திருக்கிறார். அவரை அழைத்து நடத்திய ஆலோசனையின் பின்னர் அவருடைய கேள்விகள் அனைத்தும் சரியான முறையில் தொகுத்து பிரதமர் அலுவலகத்துக்கு தகவல் ஆணையம் அனுப்புகிறது.

எனவே, ஆ.ராசாவுக்கு எதிரான ஊழல் குற்றச்சாட்டுகள் தொடர்பான சான்றிட்ட நகல்கள் மற்றும் அவை தொடர்பாக பிரதமர் அலுவலகம் மேற்கொண்ட கடித தொடர்புகள் ஆகியவற்றை நாட்டு மக்கள் அறிந்து கொள்ளும் வகையில் பகிரங்கமாகத் தெரிவிக்க வேண்டும் என்று உத்தரவிடப்பட்டுள்ளது.

# தமிழக மீனவர்கள் விரைவில் விடுதலை: மீனவர்களின் போராட்டம் நிறுத்தம்

இலங்கைக் கடற்படையால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ள ராமேஸ்வர மீனவர்களை விடுதலை செய் யும் வரை காலவரையற்ற வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபட்ட மீனவர்கள் தமது போராட்டத்தை நிறுத்தியுள்ளனர்.

தமிழக மீனவர்கள் 23 பேரும் நீதிமன்ற நடவடிக்கைகள் முடிவடைந்ததும் விரைவில் விடுதலை செய்யப்படுவார்கள் என்று இலங்கை அரசு உறுதி அளித்து உள்ளது. எனவே இதனையடுத்து மேற்படி போராட்டம் கைவிடப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# உளவு பார்ப்பதைத் தடுக்க விரைவில் சட்டம் அறிமுகம்

அரசு அலுவலகங்களில் உளவு பார்ப்பதைத் தடுக்கும் வகையில் புதிய சட்டத்தை கொண்டு வர மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

இந்தச்சட்டத்தில் எந்த ஒரு அரச அலுவலகத்திலும் உளவு பார்ப்பதற்கான கருவியை பொருத்தினாலோ, தொலைபேசி உரையாடலை ஒட்டு கேட்பதற்கான கருவியை வைத்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டால் சம்பந்தப்பட்ட குற்றவாளிக்கு 5 வருட சிறைத் தண்டனையும், ரூ.1லட்சம் அபராதம் விதித்தல் போன்ற விடயங்களை உள்ளடக்கப்பட்டதாக அமையவுள்ளது.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் நிதித்துறை அமைச்சக அலுவலகத்தில் உளவு பார்க்கப்பட்டதாக பெரும் பரபரப்பு ஏற்பட்டது. இதனையடுத்து அரசு அலுவலகங்களில் உளவு பார்ப்பதை தடுக்கும் வகையில் வரும் குளிர்கால கூட்டத்தொடரில் புதிய சட்டம் கொண்டு வரப்பட உள்ளதாக அரச வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

# புதுச்சேரி சட்டப்பேரவை உறுப்பினர் நியமனத்துக்கு அ.தி.மு.க. எதிர்ப்பு

புதுச்சேரி, ஜூன்25

மத்திய அரசால் நியமிக்கப்படும் சட்டபேரவை உறுப்பினர் நியமனத்தில் என்னென்ன தகுதிகள் மற்றும் அதிகாரங்கள் உள்ளன என்பது குறித்து இதுவரை வரையறுக்கப்படாத நிலையில், நியமனச் சட்டப்பேரவை உறுப்பினர்களை நியமிக்கக் கூடாது என்று அ.தி.மு.க. சட்ட பேரவை உறுப்பினர்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

இந்த நியமனத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து அ.தி.மு.க. செயலர் ஏ.அன்பழகன் தலைமையிலான அ.தி.மு.க. சட்டபேரவை உறுப்பினர்கள் துணைநிலை ஆளுநர் இக்பால் சிங்கை நேற்று முன்தினம் சந்தித்து மனு கையளித்துள்ளனர்.

இதனையடுத்து செய்தியாளர்களிடம் அ.தி.மு.க. செயலர் ஏ.அன்பழகன் கருத்துத் தெரிவிக்கையில்:

புதுச்சேரியில் சட்ட மேலவை இல்லாததால் கடந்த 1963ஆம் ஆண்டு யூனியன் பிரதேச ஆட்சிப்பரப்பு சட்ட விதி எண் 3இன் கீழ் துணை விதி (3) படி அரசுக்கு ஆலோசனை கூற 3 நியமன சட்டசபை உறுப்பினர்களை மத்திய அரசு நியமனம் செய்ய முடியும்.

புதுச்சேரியில் பல சட்டப் பேரவைத் தேர்தலுக்கு பின் அமைந்த ஆட்சியில் நியமன சட்டபேரவை உறுப்பினர்கள் நியமிக்கப்படவில்லை. 1985 இல் 3 நியமன சட்டபேரவை உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டனர். பின்னர் 1991 மற்றும் 1996 இல் நியமிக்கப்படவில்லை.

தனது ஆட்சியைக் காப்பாற்றிக் கொள்ள 3 நியமன சட்ட பேரவை உறுப்பினர்களை நியமிக்க ஆளுநர் மூலம் மத்திய அரசை ரங்கசாமி வலியுறுத்தி உள்ளார். இந்நிலையில் தனது அரசின் பெரும்பான்மையை நிரூபிக்க நியமன சட்டபேரவை உறுப்பினர்களைப் பயன்படுத்துவது என்பது ஜனநாயகத்துக்கு விரோதமான செயலாகும். இதற்கு மத்திய அரசும், ஆளுநரும் துணைபோகக் கூடாது.

ஸ்திரத்தன்மை இழந்துள்ள புதுச்சேரி அரசு சட்டப்பேரவையில் பெரும்பான்மையை நிரூபிக்கவும், பேரவைத் தலைவர் தேர்தலை உடனடியாக நடத்தவும் ஆளுநர் உத்தரவிட வேண்டும்- என்றார் அவர். (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைத் தமிழர்கள் நிலையை நேரில் பார்வையிடவுள்ளார் சுஷ்மா

சென்னை, ஜூன் 25

இலங்கைத் தமிழர்களின் நிலையை நேரில் சென்று பார்வையிடவுள்ளதாக லோக்சபா எதிர்க்கட்சித் தலைவர் சுஷ்மா சுவராஜ் கூறியுள்ளார். எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் அவர் இலங்கைக்குச் செல்லவுள்ளார்.

பாரதீய ஜனதா கட்சியின் மாநில செயற்குழுவில் மேற்படி கூட்டம் சென்னை மைலாப்பூரில் கடந்த 2 நாள்கள் நடைபெற்றது. நேற்று முன்தினம் இடம்பெற்ற கூட்டத்தில் அவர் கலந்து கொண்ட அவர் செய்தியார்களுக்கு பேட்டியளிக்கையில்:

இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷ இந்தியாவுக்கு வந்த போது இலங்கை தமிழர்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும். அவர்களுக்கு கௌரவமான வாழ்க்கை கிடைக்க வேண்டும். மறுவாழ்வு பணிகள் துரிதமாக நடக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டேன்.

அதற்கு பதில் அளித்த இலங்கை ஜனாதிபதி சகல பணிகளும் இடம்பெறுவதாக அங்கு பதிலளித்துள்ளதாக அவர் கூறினார்.

மேலும் தமிழகத்தில் ஆளுங்கட்சியை வீழ்த்த எதிர்க் கட்சிக்கு மக்கள் வாக்களித்துள்ளனர். எனவே தி.மு.க.-அ.தி.மு.க. இடையே இந்தத் தேர்தல் என்றாகி விட்டது. இதை மாற்ற பாரதீய ஜனதா மக்கள் பிரச்சினையை கையில் எடுத்து தொடர்ந்து போராடும்.



உள்ளாட்சித் தேர்தலை சந்திப்பது தொடர்பான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன. தமிழக மீனவர்கள் தொடர்ந்து கொல்லப்படுவது பற்றி நாடாளுமன்றத்தில் பேசினேன். இவ்வாறு தொடர்ந்து நடக்கும் தாக்குதல் வருந்தத்தக்கது. எதிர்வரும் நாடாளுமன்ற கூட்டத்திலும் இதுகுறித்து பேசுவேன்- என்றார் அவர்.

# கடற் கொள்ளையர்களைப் போன்று செயற்படுகிறது இலங்கைக் கடற்படை

## சாடுகிறார் காங்கிரஸ் உறுப்பினர்

ராமேஸ்வரம், ஜூன் 25

இந்திய மீனவர்கள் விவகாரத்தில் கடற்கொள்ளையர்கள் போல இலங்கை கடற்படை நடந்து கொள்கிறது என்று காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் ஜே.எம். ஆருண் கூறியுள்ளார்.

ராமேஸ்வரத்தில் நேற்று முன்தினம் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தபோது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் கூறுகையில்:

சர்வதேச கடல் விதிமுறைகளின்படி, மீனவர்கள் சர்வதேச கடற்பரப்பில் மீன் பிடிக்கலாம். இதற்கு எந்தவிதமான தடையும் இல்லை. இதனிடையே, கடற்கொள்ளையர்கள் போல இலங்கை கடற்படை நடந்து கொள்ளக் கூடாது.

இலங்கை படையினரால் பிடித்துச் செல்லப்பட்ட 23 மீனவர்களையும் விடுதலை செய்ய மத்திய அரசு அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது. 1974இல் இலங்கையுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தின்படி, கச்சத்தீவுக்கு அருகே மீன் பிடிக்க இந்திய மீனவர்களுக்கு தகுந்த உரிமை உள்ளது. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# அபாயகரமான கழிவுப் பொருள்கள்: தூத்துக்குடி துறைமுகத்தில் பறிமுதல்

சென்னை, ஜூன் 25

இங்கிலாந்தில் இருந்து கொண்டு வரப்பட்ட 260 தொன் அபாயகரமான கழிவுப் பொருள்கள் தூத்துக்குடி துறைமுகத்தில் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

தூத்துக்குடி துறைமுகத்திற்கு இங்கிலாந்தில் இருந்து நேற்று வந்த கனரக வாகனங்கள் மீது வருவாய் புலனாய்வுத் துறையினருக்கு சந்தேகம் எழுந்தது. இதையடுத்து, அவற்றை சோதனை செய்ததில் அபாயகரமான கழிவுப் பொருள்கள் இருந்தமை தெரியவந்தது.

இதனையடுத்து, அந்த கனரக வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டன. எனவே அவை அனைத்தும் மீண்டும் இங்கிலாந்துக்குத் திருப்பி அனுப்பப்படும் என்று கூறப்படுகிறது.

தூத்துக்குடி துறைமுகத்திற்கு வெளிநாடுகளில் இருந்து வரும் கனரக வாகனங்களில் இவ்வாறு அபாயகரமான கழிவுப் பொருள்கள் சிக்குவது அதிகமாக நிகழ்ந்து வருகிறது.

சில மாதங்களுக்கு முன்னர், வெளிநாடுகளில் இருந்து தூத்துக்குடித்துறைமுகத்திற்கு வந்த 20 கனரக வாகனங்களில் 470 தொன் எடையுள்ள அபாயகரமான கழிவுப் பொருள்கள் இருந்தது. அவை காகிதக் கழிவுகள் என்ற பெயரில் இறக்குமதி செய்யப்பட்டிருந்தன.

தமிழகத்தில் உள்ள சில நிறுவனங்கள் வேறு சில பொருள்களை இறக்குமதி செய்வதாகக் கூறிக்கொண்டு, இங்கிலாந்து, பிரான்ஸ், அமெரிக்கா உள்ளிட்ட மேற்கத்தைய நாடுகளின் மருத்துவக் கழிவுகள், நகராட்சி குப்பைகள், ஆஸ்பெஸ்டாஸ் கழிவுகள் உள்ளிட்ட அபாயகரமான கழிவுகளை இறக்குமதி செய்கின்றன. இதற்காக வெளிநாடுகளில் இருந்து இத்தகைய நிறுவனங்கள் கோடிக்கணக்கில் பணம் பெறுகின்றன.

## ஆலோசனை...



சென்னை மயிலாப்பூரில் இடம்பெற்ற தமிழக பா.ஜ., மாநில செயற்குழுவின் இரண்டாம் நாள் கூட்டத்தில், லோக் சபா எதிர்க்கட்சித் தலைவர் சுஷ்மா சுவராஜ், தேசிய செயலர் முரளிதர் ராவ், தமிழக பா.ஜ., தலைவர் பொன். ராதாகிருஷ்ணன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# உயிரோடு பிரேத அறைக்கு நோயாளியை அனுப்பிய டாக்டர்

## மனைவி, உறவினர்கள் அதிர்ச்சி

பெங்களூர், ஜூன் 25

நாய் கடிக்கு சிகிச்சை பெற வந்தவரை இறந்து விட்டதாகக் கூறி பிரேத அறைக்கு அனுப்பிய டாக்டர் மீது அமைச்சரின் நடவடிக்கையால் அந்த நபர் மீடகப்பட்டார்

கர்நாடக மாநிலம் பெல்காம் மாவட்டம் சங்கேஸ்வர் என்ற இடத்தைச் சேர்ந்த நாராயண் ராமு (வயது 51) என்பவரே மீட்கப்பட்டவராவார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:

மேற்படி நபரை வெறி நாய் கடித்ததால் உடனடியாக கவனிக்காமல் விட்டதால் உடலில் விஷம் ஏறி உடல் நலம் குன்றினார். இதையடுத்து உறவினர்கள் அவரை பெல்காம் மாவட்ட அரச மருத்துவமனையில் சேர்த்தனர்.

அவரை டாக்டர் பட்டீல் பரிசோதித்து சிகிச்சை அளித்தார். அவரது மருத்துவ அறிக்கையில் நாராயண் ராமுவின் அனுமதித் திகதியை இடம் மாறி இறந்த திகதியை குறிப்பிடும் இடத்தில் டாக்டர் எழுதி விட்டார். இதனால் மருத்துவமனை ஊழியர்கள் அவரை இறந்து விட்டதாகக் கருதி பிரேத அறைக்குக் கொண்டு சென்று பூட்டி வைத்து விட்டனர்.

அவரைப் பார்க்க வந்த மனைவி மற்றும் உறவினர்கள் உயிரோடு இருந்தவரை பிரேத அறைக்கு அனுப்பியதை கேள்விப்பட்டு அதிர்ச்சி அடைந்தனர். இதுகுறித்து அமைச்சர் ராமதாஸிடம் முறைப்பாடு செய்தனர்.

இதையடுத்து அவர் மருத்துவ மனைக்குச் சென்று திடீர் சோதனையிட்டார். அப்போது உயிரோடு இருக்கும் நாராயண் ராமுவை பிரேத அறைக்கு அனுப்பியது தெரியவந்தது. உடனே ஊழியர்கள் பிண அறையில் இருந்த நாராயண் ராமுவை வெளியே கொண்டு வந்தனர். உயிரோடு இருப்பவரை இறந்ததாக அனுப்பிய சம்பவம் மருத்துவமனையில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

மேலும் இதுதொடர்பாக விசாரித்து 3 நாளில் அறிக்கை கொடுக்குமாறு மாவட்ட ஆட்சியாளருக்கு அமைச்சர் உத்தர விட்டார். இதனையடுத்து டாக்டர் பட்டீல் நீண்ட கால விடுப்பில் செல்ல உத்தர விடப்பட்டுள்ளது.

# டில்லியில் தீ! 6 சிறுவர் உட்பட 22 பேர் காயம்

டில்லி, ஜூன்.25

டில்லி கிழக்கில் உள்ள குரேஜி பகுதியில் உள்ள குடியிருப்புப் பகுதிகள் மீது மின்சாரக் கம்பி அறுந்து வீழ்ந்ததில் குடிசைகள் தீப்பற்றிக் கொண்டதில் 6 சிறுவர்கள் உட்பட 22 பேர் காயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:

இந்தத் தீ விபத்து நேற்று முன்தினம் இடம்பெற்றது. சுமார் ஆயிரம் மீற்றர் நீளம் உள்ள உயர் அழுத்த மின்சார கம்பி ஒன்று குடியிருப்பு பகுதியில் அறுந்து விழுந்தது. இதில் அங்கிருந்த வீடுகள் தீப்பற்றி எரிய தொடங்கின. இதுபற்றி தகவல் அறிந்ததும் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்த தீயணைப்புப் படையினர், சிறிது நேரம் போராடி தீயை அணைத்தனர்.

எனினும் இந்த தீ விபத்தில் 6 சிறுவர்கள் உட்பட 22 பேர் காயம் அடைந்தனர். அவர்கள் அனைவரும் அருகில் உள்ள ஒரு ஆஸ்பத்திரியில் அனுமதிக் கப்பட்டு, சிகிச்சை பெற்று வருகின்றனர். இதேவேளை மின்கம்பி அறுந்து விழுந்ததற்கான காரணம் பற்றி விசாரணை நடந்து வருகிறது.

# 10 மாதங்கள் கடலில் தவித்த மாலுமிகள் தாயகம் திரும்பினர்

டில்லி, ஜூன் 25

சோமாலிய கடல்கொள்ளையர்களிடம் சிக்கி கப்பத் தொகை செலுத்தப்பட்டு பின்னர் பாகிஸ்தான் படையினரின் உதவியால் மீட்கப்பட்ட இந்தியர்கள் நேற்று டில்லி வந்து சேர்ந்தனர்.

10 மாதம் கடலில் சிக்கித் தவித்த இவர்களின் மீட்பு நடவடிக்கைக்கு பெரும் உதவிபுரிந்த பாகிஸ்தான் கடற்படைக்கு மத்திய அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா நன்றி தெரிவித்துள்ளார்.

சோமாலிய கடற்கொள்ளையரால் பிடிக்கப்பட்டு பின் விடுவிக்கப்பட்ட எம்.வி.சூயஸ் சரக்குக் கப்பல் ஓமன் நாட்டுக்கு வரும் வழியில் கடற்புயலில் சிக்கியதால் அதில் இருந்த ஆறு இந்தியர்கள் உள்ளிட்ட 22 கப்பல் பணியாளர்கள் பாகிஸ்தான் கப்பலுக்கு மாற்றப்பட்டு காப்பாற்றப்பட்டனர்.

எகிப்திய கப்பல் நிறுவனத்துக்குச் சொந்தமான எம்.வி. சூயஸ் சரக்குக் கப்பல் ஏடன் வளைகுடாவில் சென்று கொண்டிருந்த போது கடந்த 2010 ஓகஸ்ட் 2 ஆம் திகதி சோமாலிய கடற்கொள்ளையர்களால் கடத்தப்பட்டது.

கப்பலை மீட்க எகிப்திய நிறுவனம் ஒன்பது கோடி ரூபாவை கடற் கொள்ளையர்களிடம் அளித்தது. இதையடுத்து கப்பலை அண்மையில் கடற்கொள்ளையர்கள் விடுவித்தனர். விடுவிக்கப்பட்ட கப்பல் ஓமன் நாட்டின் சலாலா துறைமுகத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்த போது, அதன் எரிபொருள் முற்றிலும் முடிவடைந்து விட்டது.

மேலும் கடலில் வீசிய சூறாவளியில் கப்பல் சிக்கிக் கொண்டது. கப்பல் கப்டன் பாகிஸ்தான் கடற்படைக்கு அளித்த தகவலின்படி பாகிஸ்தானின் பி.என்.எஸ்.பாபர் கப்பலுக்கு கப்டன் உள்ளிட்ட 22 பணியாளர்களும் பத்திரமாக மாற்றப்பட்டனர்.

கப்பலில் இருந்த அனைவரையும் பத்திரமாக மீட்டு கராச்சிக்கு அழைத்து வந்தது. அதன் பின்னர் விமானம் மூலம் துபாய் வழியாக இந்தியர்கள் அனைவரும் நேற்றுக் காலை 9.15 மணியளவில் டில்லி விமானம் வந்தடைந்தனர். இதன் மூலம் கடந்த 10 மாதங்களாக துயரத்தில் இருந்த இந்திய குடும்பத்தினர் மன நிம்மதியடைந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூடப்பட்ட 77 வைத்தியசாலைகளுக்கு வைத்தியர்கள் நியமிக்க நடவடிக்கை

கொழும்பு,ஜூன் 25

வைத்தியர்கள் பற்றாக்குறையால் மூடப்பட்ட 77 வைத்தியசாலைகளுக்கு அடுத்த மாதம் முதல் வைத்தியர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்கவுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற மாகாண சுகாதார அமைச்சர்களின் மாநாட்டின் போது இந்த விடயம் தொடர்பில் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன.

அந்தக் கருத்துரைகளில் மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு:

வைத்தியர்கள் பற்றாக்குறை காரணமாக மூடப்பட்டிருந்த 97 வைத்தியாலைகளில், இருபது வைத்தியாலைகளுக்குத் தேவையான வைத்தியர்களை நியமித்துள்ளதாகவும் தாதியர்கள் பற்றாக்குறை நிலவும் வைத்திய சாலைகள் பற்றிய தகவல்கள் அடங்கிய அறிக்கையொன்றை சமர்ப்பிக்குமாறும் மாகாண அமைச்சர்களுக்கு அமைச்சர் மைத்திரிபால சிறிசேன பணிப்புரை விடுத்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

மத்திய மாகாணத்தில் மூன்று வைத்தியசாலைகளுக்கும், வடமத்திய மாகாணத்தில் ஐந்து வைத்தியசாலைகளுக்கும், வடமேல் மாகாணத்தில் ஐந்து வைத்தியசாலைகளுக்கும், கிழக்கு மாகாணத்தில் 14 வைத்தியசாலைகளுக்கும் வைத்திய அதிகாரிகளை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

இதனைத் தவிர வடமத்திய மாகாணத்தில் 46 வைத்தியசாலைகளுக்கும், தென் மாகாணத்தில் இரண்டு வைத்தியசாலைகளுக்கும், ஊவா மாகாணத்தில் இரண்டு வைத்தியசாலைகளுக்கும், வைத்திய அதிகாரிகள் நியமிக்கப்படுவார்கள் என சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

இதேவேளை சில வைத்தியசாலைகளில் தாதியர்களுக்கு பற்றாக்குறை நிலவுவதாகவும் அவையும் வெகுவிரைவில் நிவர்த்தி செய்யப்படும் எனவும் சுகாதார மத்திய அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது. (ற)

## வட்டவளையில் லொறி விபத்து

கொழும்பு,ஜூன் 25

வட்டவளை, குயில்வத்த பகுதியில் லொறியொன்று பள்ளத்தில் வீழ்ந்ததில் ஐந்து பேர் காயமடைந்துள்ளனர்.

ஹற்றன் - கொழும்பு பிரதான வீதியில் வட்டவளை, குயில்வத்த பகுதியில் சுமார் 175 அடி பள்ளத்தில் இந்த லொறி வீழ்ந்துள்ளது.

திஸ்ஸமஹாராமையிலிருந்து வட்டவளைக்கு அரிசி ஏற்றிச்சென்ற லொறியொன்றே விபத்துக்குள்ளானதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்தில் காயமடைந்த ஐந்து பேர் நாவலப்பட்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளனர். விபத்துக்குள்ளான லொறியின் சாரதியைக் கைது செய்துள்ள வட்டவளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.(ற)




தென்மராட்சி, ஜூன்25

சாவகச்சேரி,நுணாவில் மேற்கு, ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய அலங்காரத் திருவிழா நேற்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 12 தினங்கள் நடைபெற வுள்ளன.

சிவஸ்ரீ க.ச.சோமஸ்கந்த குருக்கள் தலைமையில் நடைபெறும் இந்த திருவிழாக்கள் எதிர்வரும் ஐந்தாம் திகதி செவ்வாய்க்கிழமை நிறைவு பெறும்

(ற-207)

***

நெடுந்தீவு, ஜூன் 25

நெடுந்தீவு, நாககுறிச்சி பெருக்கடி ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தின் புதிய மணிக்கோபுர ஸ்தூபி மகாகும்பாபிஷேகமும் புதிய மணிக்கான அபிஷேகமும் மணி ஏற்றுதல் நிகழ்வுகளும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.55 மணி முதல் முற்பகல் 11.30 மணிவரை நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு விநாயகப்பெருமானின் அருளாசிகளைப் பெற அனைத்து மக்களையும் வருகை தருமாறு ஆலய புனருத்தாரண மகாகும் பாபிஷேக பரிபாலன சபையின் தலைவர் சுதியாகலிங்கம் அறிவித்துள்ளார். இந்த நிகழ்வுகளை பிரதமகுரு சிவஸ்ரீ சிவாச்சாரிய கிரியாபூஷணம் நா.பத்மநாதக் குருக்கள் தலைமையில் நடை பெறும்.

(ற-7)

***

யாழ்ப்பாணம், ஜூன் 25

யாழ். நீராவியடி கடையிற் சுவாமி ஆல யத்தின் அலங்கார உற்சவம் இன்று சனிக் கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 10 நாள் களுக்கு நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 5 ஆம் திகதி 108 சங்காபிசேகமும் அதனைத் தொடர்ந்து மறுநாள் புதன்கிழமை வைரவர் சாந்தியும் இடம் பெறும்.

அலங்கார உற்சவக் கிரியை வழிபாடுகளை பிரதமகுரு சிவஸ்ரீ ஜெயசங்கர் குருக்கள் நிகழ்த்துவார்.

இதன்போது தினமும் மாலை 5 மணிக்கு செஞ்சொற்செல்வன் இரா.செல்வவடிவேல் மற்றும் மாணவர்களது தொடர் சொற்பொழிவுகள் இடம்பெறும்.

(ற-313)

***

யாழ்ப்பாணம்,ஜூன் 25

கொடிகாமம்,கச்சாய் தூய பேதுரு வானவர் ஆலயத்தின் வருடாந்த திருவிழா கடந்த 20 ஆம் திகதி ஆரம்பமாகித் தொடர்ந்து எதிர்வரும் 29 ஆம் திகதி புதன்கிழமைவரை இடம்பெறவுள்ளது.

நாளை ஞாயிற்றுக்கிழமை கிறிஸ்துவின் திருவுடல் திரு இரத்தப் பெருவிழாவும் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை மாலை நற்கருணைப் பெருவிழாவும் மறுநாள் காலை 7 மணிக்கு திருநாள் திருப்பலியும் இடம்பெறும்.

(ற-313)

***

தென்மராட்சி,ஜூன் 25

சாவகச்சேரி சந்திரசேகர வாரிவனநாத சிவன் ஆலய பெருந்திருவிழா எதிர்வரும் செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளன.

எதிர்வரும் ஆறாம் திகதி புதன் கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத்திருவிழாவும் நடைபெறும்.

பெருந்திருவிழாக் கால கிரியைகளை சிவஸ்ரீ க.பரராஜசேகரக் குருக்கள் நிகழ்த்துவார். (ற-207)

## குடியியல் சட்டத்தின் சில சரத்துக்களால் தாமதமடைந்து வரும் வழக்கு விசாரணைகள்

தற்போது நடைமுறையிலுள்ள குடியியல் சட்டத்தில் திருத்தம் மேற் கொள்வது தொடர்பில் நீதி அமைச்சு கவனம் செலுத்தியுள்ளது. இது தொடர்பிலான யோசனை அறிக்கை இன்னும் ஓரிரு வாரங்களில் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக, அமைச்சின் செயலாளர் சுஹத கம்லத் குறிப்பிட்டுள்ளார்.

குடியியல் சட்டத்திலுள்ள சில சரத்துக்கள் காரணமாக வழக்கு விசாரணைகள் தாமதமடைவதாகச் சுட்டிக்காட்டிய அவர் இரண்டு தரப்பினரதும் வாதப் பிரதிவாதங்கள் தொடர்பில் கவனம் செலுத்தி நீண்ட நாள்களுக்குப் பின்னரே தற்போது வழங்குகளில் தீர்ப்புகள் அறிவிக்கப்படவுள்ளதாகவும் தெரிவித்தார்.

இதன் காரணமாக வழக்கு விசாரணைகளைத் துரிதப்படுத்தும் வகையில் புதிய சரத்துக்களை குடியியல் சட்டத்தில் உள்ளடக்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது எனவும் ஏற்கனவே சில நாடுகள் குடியியல் சட்டத்தில் திருத்தம் மேற்கொண்டு நீதிமன்ற நியாயாதிக்க முறைமைகளை அறிமுகப்படுத்தியுள்ளதாக நீதி அமைச்சின் செயலாளர் கூறியுள்ளார்.

ஆஸ்திரேலியா, சிங்கப்பூர், இங்கிலாந்து, அமெரிக்கா, போன்ற நாடுகளுக்கு விஜயம் மேற்கொண்டு அங்குள்ள சட்ட நடைமுறைகள் குறித்து ஆராய்ந்த போது இந்த விடயம் தெரிய வந்ததாகவும் அவர் குறிப்பட்டுள்ளார். (ற)


## வாசனா சம்பத

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம்: 874 திகதி: 23.06.2011

| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள் | | | | போனஸ் இல: |
|---|---|---|---|---|---|
| C | 02 | 13 | 35 | 40 | 05 |

| | கூட்டு | பரிசுத் தொகை | வெற்றி பெற்றோர் |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்தும் 4 இலக்கங்களும் சரியாயின் | 11,305,968.00 | - |
| 1ம் பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | 1,000,000.00 | 1 |
| 2ம் பரிசு | 3 இலக்கங்களும் போனஸ் இலக்கமும் சரியாயின் | 100,000.00 | 05 |
| 3ம் பரிசு | 3 இலக்கங்கள் மட்டும் சரியாயின் | 2,000.00 | 323 |
| 4ம் பரிசு | 2 இலக்கங்கள் மட்டும் சரியாயின் | 100.00 | 15457 |
| 5ம் பரிசு | 1 இலக்கம் மட்டும் சரியாயின் | 20.00 | 216926 |
| 6ம் பரிசு | ஆங்கில எழுத்து மட்டும் சரியாயின் | 20.00 | 32238 |

இவ்வாரம் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத் தொகை ரூ.
**8,674,980.00**

சுப்பர் பரிசுத்தொகை அடுத்த வியாழக்கிழமை
**11,657,974.00**

ஐந்து இலட்சம் அல்லது அதற்குக் கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரிச் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது. பரிசைப் பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

வெற்றி பெறும் டிக்கட்டுகள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்கள் மட்டுமே செல்லுபடியாகும்.

தேசிய லொத்தர் சபை



# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

திருமதி

## சிவானந்தவல்லி பூரணச்சந்திரன்

(முன்னாள் அரச மருந்தாளர்)

தோற்றம்
02.03.1948

மறைவு
28.05.2011



மண்ணை விட்டே விரைந்திட்டாய்
எம் மனம் நொந்து தவிக்குதம்மா
கண்ணை இமை காப்பதுபோல் - எம்
உறவுகளை அனுசரித்தவளே
மாலைமதி இல்லாவானம் இருண்டது போல
எம் இல்லம் இருண்டதம்மா
தங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்

கடந்த 28.05.2011 அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத்தின் குல விளக்கின் அந்தியேட்டிக் கிரியை நிகழ்வுகள் நாளை (26.06.2011) ஞாயிற்றுக்கிழமை குரும்பைகட்டி ஞானவைரவர் கோயிலடியில் நடைபெறும். இந்த நிகழ்விலும் தொடர்ந்து வீட்டில் இடம்பெறும் சபிண்டீகரண நிகழ்விலும், ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மற்றும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குரும்பைகட்டி,
புலோலி.

கணவர், பிள்ளைகள்,
மருமகன், பேரப்பிள்ளைகள்

(சி/1142)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீர் எருமை

நீர் எருமைகள் உலர்ந்த மற்றும் ஈரப்பதனான இடங்களில் வாழக்கூடியவை. இவை அதிகமாக சதுப்பு நிலங்களிலும் நீர்த்தேக்கங்களிலுமே தமது காலத்தைச் செலவிடுகின்றன. இதனாலேயே இவற்றிறை நீர் எருமைகள் என்று அழைப்பதுண்டு. இவை நீண்டநேரம் ஈரழிப்பான இடங்களிலே நின்று தமது வெளிப்புறத் தோல்மீது தடிப்பான சேறுகளைப்பூசி குளிர்மையாக வைத்திருந்து சூரிய வெப்பத்தில் இருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்கின்றன.

இந்த மிருகங்கள் இந்தியா, சீனா, கிழக்கு மற்றும் மேற்கு ஆசிய நாடுகளில் அதிகமாக வாழ்கின்றன. அவற்றில் ஒரு பகுதி ஐரோப்பிய நாடுகளான இத்தாலி, துருக்கி, மற்றும் கிரீஸ் ஆகிய நாடுகளில் வாழ்கின்றன.

முன்னைய காலங்களில் ஆசியாவில் உள்ள வனாந்தரங்களில் வாழ்ந்து வந்த இந்த மிருகங்கள் தற்போது மிகவும் அரிதாகவே காணப்படுகின்றன. ஆயினும் இவற்றினை உலகிலுள்ள பல நாடுகளில் விவசாயத்துக்கே மக்கள் பயன்படுத்தி வருகின்றனர். இந்த மிருகங்கள் கூட்டமாகவே அதிகம் வாழ்கின்றன. இவற்றில் ஒன்று மிகவும் பெரியதாகக் காணப்படும். அது ஆண் மிருகமாக இருக்கும். அதன் உயரம் 1.9 மீற்றர் உயரமுடையதாகவும், மிகவும் பிரமாண்டமான தோற்றத்துடன் முரட்டுத்தன்மை கூடியதாகவும் காணப்படும். அதுமட்டுமன்றி இவை மிகவும் நேர்மையுடையனவாகவும் வலிமை பொருந்தியனவாகவும் காணப்படுகின்றன.


இந்த மிருகங்கள் 1000 வருடங்களுக்கு முற்பட்ட பழம் பெரும் மிருகங்களாகக் காணப்படுகின்றன. இந்த எருமைகளைக் கடந்த 100 வருடங்களாக விவசாயத்துக்கே அதிகம் பயன்படுத்தி வருகின்றனர்.

ஆஸ்திரேலியாவின் வடமாகாணத்தில் விவசாயத்துக்குப் பயன்படுத்துவதற்காக காடுகளில் இருந்து கொண்டுவரப்பட்ட இந்த மிருகங்கள் நீரில் காணப்படும் தாவரங்களையும் வைக்கோல், புற்களையுமே அதிகம் விரும்பி உண்ணுகின்றன. மக்கள் எருமையை விவசாய்த்துக்கு மட்டுமன்றி பால், இறைச்சி போன்றவற்றுக்கும் பயன்படுத்துகின்றனர்.



-நாதன், பருத்தித்துறை.

# ரோபர் ப்ளைஸ் (Robber Flies)



பார்ப்பதற்கு வெட்டுக்கிளி போல் தோற்றமளிக்கும். இந்தப் பறவையின் பெயர் ரோபர் ப்ளைஸ். இது பூச்சிகளைப் பிடித்து அப்படியே உறிஞ்சிச் சாப்பிட்டு விட்டுத் தூக்கிப் போட்டுவிடும்.

இந்த ரோபர் ப்ளைஸ் பறந்து கொண்டே இரை தேடும். இதன் பெரிய கண்களிலிருந்து எந்தப் பூச்சிகளும் தப்ப முடியாது. ஒரு சின்ன அசைவை வைத்தே அந்தப் பூச்சிகளைப் பின் தொடர்ந்து அப்படியே பிடித்துவிடும்.

கூர்மையான மூக்கு, கால்களில் கைகளில் அமைந்துள்ள வலுவான முடிகள், இது இரைகளைப் பிடித்துக் கொள்வதற்கு மட்டும் பயன்படாமல் பிற உயிரினங்களிடமிருந்தும் அது பாதுகாப்பாக இருக்க உதவுகின்றன.

சா.ஜிந்துஜா,
கோண்டாவில்.

# நஜ வஞ்சக நரி

[தொடர்ச்சி]

பன்றிக் குட்டிகளைச் சாப்பிட்டுப் பல நாள் பசியாறலாம் போலிருக்கிறதே என்றெண்ணிற்று நரி. மேலே கழுகுக் குஞ்சுகள், கீழே பன்றிக்குட்டிகள்... பேஷ் பேஷ்...

நரியாரே இந்த மரத்தடியில் நானும் என் குட்டிகளும் தங்கலாமா? "என்று கேட்டது தாய் பன்றி.

தங்கலாம்!" என்றது நரி.

"எனக்கும், என் குட்டிக்கும் ஏதாவது ஆபத்து வருமா நரியாரே?" என்று கவலையோடு கேட்டது தாய் பன்றி.



நான் இருக்கும் இடத்துக்கு வந்துவிட்டாய் பன்றியே...கவலையெபடாதே...! நான் வயதானவன். இந்தப் பொந்தே கதி என்று கிடப்பவன்...! எதிரிகள் எவரையும் மரத்தருகில் வர விடமாட்டேன்...! நானிருக்க பயமேன்?" என்றது நரி.

பன்றி தன் குட்டிகளுடன் மரத்தடியில் தங்கிக்கொண்டது.

நாளடைவில் மரத்தின் மேலுள்ள கூட்டில் பெண் கழுகு முட்டையிட்டுக் குஞ்சு பொரித்தது. நான்கைந்து குஞ்சுகள் இருக்கும். கத்தியபடி இருந்தன. மரத்தடியில் பன்றிக் குட்டிகளும் 'கர், கர்' என்று உறுமியபடி உலாவிக் கொண்டிருந்தன.

வந்ததற்கு இப்போது பன்றிக் குட்டிகள் மிகவும் பெருத்திருந்தன. தாய் பன்றியும்தான். அவற்றை எப்படிச் சாப்பிடலாம் என்று யோசித்த நரி, ஆண் கழுகையும், பெண் கழுகையும் அழைத்தது.

இதோ பாருங்கள்...! மரத்தடியில் இருக்கிறதே பன்றி அது சுத்த மோசம்... உங்கள் குஞ்சுகளை எப்பொழுது சாப்பிடலாமென்று தருணம் பார்த்துக் கொண்டிருக்கிறது! என்றது.

இரண்டு கழுகுகளும் இரை தேடக்கூட வெளியில் செல்லாமல், கூட்டிலுள்ள குஞ்சுகளைக் காவல் காக்கத் தொடங்கின. வெளியே எங்கேயும் போக பயந்தன.

மேலே ஒருமுறை பார்த்துவிட்டுக் குட்டிகளுடன் மேய்ந்து கொண்டிருந்த பன்றியிடம் வந்தது நரி.

பன்றியே...! நீ உன் குட்டிகளை மிகவும் ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள்ள வேண்டும். மேலே இருக்கிற இரண்டு கழுகுகளும் மகா பொல்லாத கழுகுகள். அவை நீ இல்லாத சமயத்தில் உன் குட்டிகளைக் கொத்திக் கொன்று சாப்பிட்டுவிட நேரம் பார்த்துக் கொண்டிருக்கின்றன! என்றது நரி.

பன்றி ஒரேயடியாகப் பயந்து போய்விட்டது. குட்டிகளை எல்லாம் தன் காலின் கீழ் அழைத்துக் கொண்டது. மரத்தடியிலேயே இருக்கவேண்டும். குட்டிகளைத் தனியாக விட்டுவிட்டுப் போய் விடக் கூடாது. கழுகுகள் சாப்பிடவா என் குட்டிகளை கண்போல வளர்க்கிறேன் என்றெண்ணியது பன்றி. அதன் பிரகாரமே இருக்கவும் ஆரம்பித்தது தாய் பன்றி.

ஆண், பெண் கழுகுகளும், தாய் பன்றியும், பன்றிக் குட்டிகளும் இரை தேடாததால் வாடி இளைத்து, சோர்ந்து, துவண்டு ஒரு நாள் எல்லாமே இறந்து போயின.

நரி விரும்பியதுபோல் நிறைய சாப்பிட கழுகுகளும், பன்றிகளும் அதன் தந்திரத்தால் கிடைத்து விட்டன.

யார் யாரிடம் நட்பு கொள்ளவேண்டுமென்று யோசித்து நட்புக் கொள்ளாததால் கழுகுகளுக்கும், பன்றிகளுக்கும் நேர்ந்த பரிதாபமான முடிவைப் பார்த்தீர்களா? நல்லவர்களோடு மட்டுமே நட்பு கொள்ள வேண்டும்.

[முற்றும்]

# பெண்ணமுது



அழகு மலரே நீ
அமுத மொழி கூறி
பழகும் தமிழ் பேச வா!

வீசும் தென்றல் நீ
வளரும் வசந்தம் கண்டு
பெருமை கொள்ளும் மனம்!

பொக்கை வாய் குவித்து
பஞ்சு விரல் பதித்து
நெஞ்சை அணைக்க வா!

கை.சிவனுகா,
கொய்யாத்தோட்டம்.

# கலைத்திறன்...



மகிழ்ச்சி: இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களமும் வலி.கிழக்கு சைவசமய அருள்நெறி மன்றமும் இணைந்து நடத்திய திருஞானசம்பந்த சுவாமிகள் குருபூசை விழாவில் புத்தூர் கிழக்கு கன்னியர் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் காவடி நடனம் இடம்பெறுகின்றன. (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருத்தலாவ தோமஸ் அணியை தோற்கடித்தது சென்.ஜோன்ஸ்

யாழ்ப்பாணம், ஜூன் 25

குருநாகல், குருத்தலாவ சென்.தோமஸ் கல்லூரிக்கும் யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரி 'ஏ' அணிக்கும் இடையிலான சிநேகபூர்வ கிரிக்கெட் ஆட்டத்தில் யாழ்.சென் ஜோன்ஸ் கல்லூரி 'ஏ' அணி வெற்றி பெற்றது.

கடந்த வாரம் குருத்தலாவ சென்.தோமஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற 15 வயது பிரிவுக்கான ஆட்டத்தில் இரு அணிகளும் மோதிக்கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி 50 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுக்களை இழந்து 282 ஓட்டங்களைப் பெற்றது.

அதில் கபில்ராஜ் 50 ஓட்டங்களையும், பிரிசங்கர் 90 ஓட்டங்களையும், துவரசீலன் 20 ஓட்டங்களையும் அஜித் 30 ஓட்டங்களையும் தமது அணிசார்பாக பெற்றுக்கொடுத்தனர்.

பந்து வீச்சில் சென்.தோமஸ் கல்லூரி அணி வீரர்களான பசில் 10 ஓவர்கள் பந்துவீசி, 42 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும், கரித்து 10 ஓவர்கள் பந்துவீசி 41 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினார்கள்.

283 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென களம் இறங்கிய சென்.தோமஸ் கல்லூரி 27.3 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 106 ஓட்டங்களை மட்டும் பெற்றது. கிஷாந் 36 ஓட்டங்களையும் பண்டார 24 ஓட்டங்களையும் மேலாகா 15 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்துள்ளனர்.

பந்து வீச்சில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி வீரர்களான காமின் 8 ஓவர்கள் பந்துவீசி 29 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் சந்திபன் 2 ஓவர்கள் பந்து வீசி 07 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினார்கள்.

சென். ஜோன்ஸ் கல்லூரி அணி 176 ஓட்டங்களால் சென். தோமஸ் கல்லூரியை வெற்றி கொண்டது. (த-23)

# வென்றது கொக்குவில் எபி

வலி.வடக்கு, ஜூன் 25

அளவெட்டி மத்திய விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட மென்பந்து கிரிக்கெட் விளையாட்டுக்கழகங்களுக்கு இடையே நடத்திய போட்டி ஆட்டமொன்றில் கொக்குவில் 'எபி' விளையாட்டுக்கழகம் 76 ஓட்டங்களினால் வெற்றிபெற்றது.

மல்லாகம் ஸ்ரீ பாஸ்கரன் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற ஆட்டத்தில் சுன்னாகம் ஐயனார் விளையாட்டுக் கழகமும் கொக்குவில் எபி விளையாட்டுக்கழகமும் மோதிக் கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் 'எபி' விளையாட்டுக்கழகம் 05 ஓவர்கள் நிறைவில் ஒரு விக்கெட்டை இழந்து 90 ஓட்டங்களைப் பெற்றது.

ஆட்டமிழக்காது இராகுலன் எட்டு நான்குகள் இரண்டு ஆறுகளுடன் 55 ஓட்டங்களைப் பெற்றார்.

ஐயனார் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த சேலன் 09 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினார்.

91 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய ஐயனார் விளையாட்டுக்கழகம் 3.4 ஓவரில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 14 ஓட்டங்களைப் பெற்றது.

கொக்குவில் எபி விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த கிருபா ஓர் ஓட்டத்துக்கு 3 விக்கெட்டுக்களையும், நிஷா 06 ஓட்டத்துக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள். (த-86)

# மென்பந்து கிரிக்கெட்; முத்துத்தம்பி வி.க.வெற்றி

வலி. வடக்கு, ஜூன் 25

அளவெட்டி மத்திய விளையாட்டுக்கழகம் யாழ்.மாவட்ட மென்பந்து விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடத்திய 05 ஓவர்கள் ஆறுபேர் பங்குபற்றும் கிரிக்கெட் போட்டியில் திருநெல்வேலி முத்துத்தம்பி விளையாட்டுக்கழகம் 04 விக்கெட்டுக்களினால் வெற்றிபெற்றது.

மல்லாகம் ஸ்ரீ பாஸ்கரன் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற ஆட்டத்தில் சுன்னாகம் காந்தி நியூ ஸ்ரார் விளையாட்டுக்கழகமும் திருநெல்வேலி முத்துத்தம்பி விளையாட்டுக் கழகமும் மோதிக்கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய காந்தி நியூஸ்ரார் விளையாட்டுக்கழகம் 05 ஓவர்கள் நிறைவில் 04 விக்கெட்டுக்களை இழந்து 25 ஓட்டங்களைப் பெற்றது.

சசி 09 ஓட்டங்களைப்பெற்றார். முத்துத்தம்பி விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த ரஜீவன், சுரேந்திரன், லவன், சைலேஸ் முறையே 01, 06, 08, 09 ஓட்டங்களைக் கொடுத்து தலா ஒவ்வொரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்கள்.

26 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய முத்துத்தம்பி விளையாட்டுக்கழகம் 3.4 ஓவர்களில் 02 விக்கெட்டுக்களை இழந்து 28 ஓட்டங்களைப் பெற்று வெற்றி இலக்கை அடைந்தது. லவன் 12 ஓட்டங்களைப் பெற்றார்.

காந்தி நியூ ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த சுலக்சன் 11 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினார். (த-86)

# இன்றைய ஆட்டங்கள்

அளவெட்டி மத்திய விளையாட்டுக் கழகம் யாழ்.மாவட்ட மென்பந்து விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடத்தும் 05 ஓவர்கள் ஆறுபேர் பங்குபற்றும் கிரிக்கெட் போட்டியில் இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு மல்லாகம் ஸ்ரீபாஸ்கரன் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ள ஆட்டத்தில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:

ஏழாலை மயிலங்காடு ஞானகலா விளையாட்டுக் கழகம் எதிர் இரட்டையபுலம் விளையாட்டுக் கழகம்

இணுவில் இந்து விளையாட்டுக்கழகம் எதிர் வலி.வடக்கு பிரதேச சபை விளையாட்டுக்கழகம்.

கோண்டாவில் டிப்போ விளையாட்டுக்கழகம் எதிர் சங்கானை வை.எம்.எச்.ஏ. விளையாட்டுக்கழகம்.

மல்லாகம் ஸ்ரீ முருகன் விளையாட்டுக் கழகம் எதிர் ஐங்கரன் விளையாட்டுக்கழகம்.


இரண்டாம் சுற்றில் இருந்து சுன்னாகம் நியூ ஸ்ரார் விளையாட்டுக் கழகமும் உடுவில் கிங்ஸ்ரார் விளையாட்டுக் கழகமும் விளையாடவுள்ளன. (த-86)

# இறுதிப்போட்டி நாளை மாலை

வடமராட்சி, ஜூன் 25

பருத்தித்துறை 521 ஆவது படையணியினால் வடமராட்சிப் பிரதேசத்திலுள்ள விளையாட்டுக்கழகங்களுக்கிடையே நடத்தப்பட்ட உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதிப் போட்டி 26 ஆம் திகதி நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு கரணவாய் குஞ்சர்கடை விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இப் போட்டியில் கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கரவெட்டி நவசக்தி விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது. இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (த-236)



யாழ். மாவட்டத்திலிருந்து முதல் முதலாக தேசிய மட்டப் போட்டிக்கு செல்கின்ற இளவாலை மெய்கண்டான் ம.வி. கராட்டி பெண்கள் அணியினர் அதிபர், ஆசிரியர்களுடன். (த)

# கொழும்பு செல்லும் யாழ்.வீரர்களை தளபதி ஹத்துருசிங்க வழியனுப்பினார்



யாழ்ப்பாணம், ஜூன் 25

கொழும்பு ஆனந்தாக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் 2 வருடமாக நடத்தும் சந்திரசிங் வெள்ளிக்கிண்ணத்துக்கான 7 பேர் பங்குபற்றும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடர் கொழும்பில் இன்று ஆரம்பமாகின்றது.

இந்தப் போட்டியில் பங்குகொள்வதற்காக யாழ்ப்பாணத்திலிருந்து வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, இளவாலை ஹென்றியரசர் கல்லூரி, சென்.பற்றிக்ஸ் கல்லூரி ஆகியவற்றின் வீரர்களை யாழ். படைத் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க வழியனுப்பிவைத்தார். கொழும்பு ஆனந்தாக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் அழைப்பின் பேரில் யாழ். மாவட்ட அணியினர் நேற்று கொழும்பு புறப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான போக்குவரத்து வசதி, தங்குமிட செலவுகள் அனைத்தையும் யாழ்.மாவட்ட படைத்தலைமையகம் பொறுப்பேற்றுள்ளது. அணியினரை வழியனுப்பும் நிகழ்வு நேற்றுக்காலை யாழ். சிவில் அலுவலகத்தில் யாழ்.படைத்தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க தலைமையில் இடம்பெற்றது. (ஐ-14-23)

# யாழ். மாவட்டத்தில் இவ்வாண்டு சிறந்த வீரர்களாகத் தெரிவானோர்

வலி.வடக்கு, ஜூன் 25

வட மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் ஆதரவுடன் யாழ். மாவட்ட செயலக விளையாட்டுப் பிரிவு யாழ். மாவட்ட பிரதேச செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கு இடையே நடத்திய பெரு விளையாட்டுப் போட்டிகளில் சிறந்த வீரர்கள், வீராங்கனைகளாகத் தெரிவு செய்யப்பட்டவர்களின் விவரங்கள் வருமாறு:-

**உதைபந்தாட்டம்**

**வீரர்** - சி.மன்மதன் (கரவெட்டி பிரதேச செயலகம்).

**வீராங்கனை** - எ.நிதர்சினி (பருத்தித்துறை பிரதேச செயலகம்).

**கபடி**

**வீரர்** - நீகன் பெர்னாண்டோ (பருத்தித்துறை பிரதேச செயலகம்).

**வீராங்கனை** - குணசிங்கம் கௌசிகா (சாவகச்சேரி பிரதேச செயலகம்).

**கரப்பந்தாட்டம்**

**வீரர்** - சிவசம்பு சிவசொரூபன் (கோப்பாய் பிரதேச செயலகம்).

**வீராங்கனை**- பாலசுப்பிரமணியம் கலாஜினி (தெல்லிப்பழை பிரதேச செயலகம்).

**கிரிக்கெட்**

**வீரர்** - எ.ஜனார்த்தனன் (நல்லூர் பிரதேச செயலகம்).

**வீராங்கனை** - பாலச்சந்திரன் ரஜிதா (சங்கானை பிரதேச செயலகம்).

**எல்லே**

**வீரர்** - எஸ்.கிசோக்காந் (தெல்லிப்பழை பிரதேச செயலகம்).

**வீராங்கனை** - எம்.வசந்தினி (மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் அலுவலகம்).

**கூடைப்பந்தாட்டம்**

**வீரர்** - என்.திவாகர் (நல்லூர் பிரதேச செயலகம்).

**வீராங்கனை** - எஸ்.சோபனா (யாழ்ப்பாணம் பிரதேச செயலகம்).

**பூப்பந்தாட்டம்**

**வீரர்** - றெமேடியல் றெமின்ரன் (உடுவில் பிரதேச செயலகம்)

**வீராங்கனை** - சந்திரராசா பிறின்சிலா (உடுவில் பிரதேச செயலகம்).

**மேசைப்பந்தாட்டம்**

**வீரர்** - சண்முகம் சாமுவேல் (யாழ்ப்பாணம் பிரதேச செயலகம்).

**வீராங்கனை** - எஸ்.சிந்துஜா (தெல்லிப்பழை பிரதேச செயலகம்).

**ஹொக்கி**

**வீரர்** - கே.அனுசியன் (தெல்லிப்பழை பிரதேச செயலகம்).

**வீராங்கனை** - எஸ்.கிருத்திகா (உடுவில் பிரதேச செயலகம்). (த-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வென்றது இந்தியா
## மண்கவ்வியது தீவுகள்



கிங்ஸ்டனில் நடந்த முதல் டெஸ்ட் ஆட்டத்தில், இந்திய அணி 63 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அசத்தல் வெற்றி பெற்றது. துடுப்பாட்டத்தில் சிறப்பிக்கத் தவறிய மேற்கிந்தியத்தீவுகள் அணி, சொந்த மண்ணில் பரிதாபமாக தோல்வியடைந்தது.

மேற்கிந்தியத்தீவுகள் சென்றுள்ள இந்திய அணி மூன்று ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கின்றது. முதல் டெஸ்ட் கிங்ஸ்டன் (ஜமைக்கா) நகரில் உள்ள சபினா பார்க் மைதானத்தில் நடந்தது. இதன் முதல் இன்னிங்ஸில் இந்திய அணி ரெய்னா (82), ஹர்பஜன் சிங் (70) உதவியுடன் 246 ஓட்டங்கள் எடுத்தது. மேற்கிந்தியத்தீவுகள் அணி 173 ஓட்டங்களுக்கு சுருண்டது.

இரண்டாவது இன்னிங்ஸில் இந்திய அணி 252 ஓட்டங்களைப் பெற்றது. விராட் ஹோக்லி (15), ரெய்னா (27), தலைவர் டோனி 16 ஓட்டங்களுடன் திரும்பினர்.

ஹர்பஜன் (5), பிரவீண் குமார் டக்காகினார். ஒரு முனையில் விக்கெட்டுக்கள் சரிந்த போதும், மறுபக்கம் அபார ஆட்டத்தை வெளிப்படுத்திய டிராவிட் சர்வதேச அளவில் 32 ஆவது சதம் கடந்து அசத்தினார். இவருக்கு நல்ல ஒத்துழைப்பு கொடுத்த அமித் மிஸ்ரா 28 ஓட்டங்கள் எடுத்தார்.

அடுத்த சில நிமிடங்களில் டிராவிட்டும் (112) ஆட்டமிழக்க, இந்திய அணி இரண்டாவது இன்னிங்ஸில் 252 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. மேற்கிந்தியத் தீவுகள் சார்பில் சமி, தேவேந்திர பிஷூ தலா 4 விக்கெட்டுக்கள் வீழ்த்தினர்.

இரண்டாவது இன்னிங்ஸில் 326 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற நிலையில், மேற்கிந்தியத்தீவுகள் அணி களமிறங்கியது. அட்ரியன் பரத், சிம்மன்ஸ் இணைந்து அதிரடியான ஆரம்பத்தை அமைத்தனர். இஷாந்த் சர்மாவின் ஓவரில் இரண்டு சிக்சர்கள், ஒரு பவுண்டரி அடித்து அசத்தினார் பரத். மறு முனையில் சிம்மன்ஸ் தன் பங்கிற்கு அமித் மிஸ்ரா பந்தை சிக்சருக்கு விரட்டினார்.



முதல் விக்கெட் டுக்கு 62 ஓட்டங்கள் சேர்த்த நிலையில், பரத் (36 பந்தில் 38 ஓட்டங்கள்) பிரவீண்குமார் வேகத்தில் வீழ்ந்தார். அடுத்து வந்த சர்வான் 'டக்' அவுட்டானார். சிம்மன்ஸ் (27), இஷாந்த் பந்தில் போல்டானார். இதன் பின்னர் சந்தர்போல், டரன் பிராவோ இணைந்து மேலும் விக்கெட்டுக்கள் எதுவும் விழாமல் பார்த்துக் கொண்டனர்.

நேற்று முன்தினம் நான்காம் நாள் ஆட்டம் நடந்தது. நீண்ட நேரம் தாக்குப் பிடித்த டரன் பிராவோ (41) இஷாந்த் பந்தில் போல்டானார். அடுத்த சில நிமிடங்களில் சந்தர்போலும் (30) நிலைக்கவில்லை, பாக் 'டக்' அவுட்டானார். ஹர்பஜன் ஓவரில் 'ஹட்ரிக்' சிக்சர் விளாசிய தலைவர் சமி (25), பிரண்டன் நாஷ் (8) இருவரும் அமித் மிஸ்ரா சுழலில் சிக்கினர்.

அதிரடியாக ஓட்டங்கள் சேர்த்த ராம் போல் (34), டோனியின் அபார பிடியெடுப்பில் வெளியேறினார். அடுத்து வந்த பிஷூ (26) போராடி வீழ்ந்தார். மேற்கிந்தியத்தீவுகள் அணி இரண்டாவது இன்னிங்ஸில், 262 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்து 63 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது. இந்தியா சார்பில் இஷாந்த் சர்மா, பிரவீண் குமார் தலா 3, அமித் மிஸ்ரா 2 விக்கெட்டுக்கள் வீழ்த்தினர்.


இதையடுத்து மூன்று ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரில் இந்திய அணி 1-0 என்று, முன்னிலை பெற்றது. இரு அணிகள் இடையிலான இரண்டாவது டெஸ்ட் எதிர்வரும் 28 ஆம் திகதி பிரிஜ்டவுனில் ஆரம்பமாகின்றது. (15)

## கலக்குகிறார் சானியா



கிராண்ட்சலாம் போட்டிகளில் ஒன்றான விம்பிள்டன் ரெனிஸ் போட்டி லண்டனில் நடந்து வருகின்றது. நேற்று முன்தினம் நடந்த மகளிர் இரட்டையர் முதல் சுற்றுப் போட்டியில் இந்தியாவின் சானியா மிர்சா- ரஷ்யாவின் எலீனா வெஸ்னினா ஜோடியும், ரஷ்யாவின் அன்சனா சக்வெதாசே - அமெரிக்காவின் மெலனி ஒடின் ஜோடியும் மோதின. இதில் சானியா மிர்சா, எலீனா ஜோடி நேர் செற்றில் வெற்றி பெற்று 2 ஆவது சுற்றுக்கு தகுதி பெற்றது. 6-0, 7-6(4).

ஆண்கள் ஒற்றையர் போட்டியில் சுவிட்சர்லாந்து ரோஜேர் பெடரர், பிரான்சின் அட்ரியன் மன்னாரினோவை வீழ்த்தி 3 ஆவது சுற்றுக்கு முன்னேறினார். மற்றொரு போட்டிகளில் நேவக் ஜோகோவின் கெவின் அண்டர்சனை வீழ்த்தி 3 ஆவது சுற்றுக்கு தகுதி பெற்றார். (15)



## சாய்னா வந்துவிட்டார் காலிறுதிக்கு

இந்தோனேசிய ஓபன் சூப்பர் சீரிஸ் பட்மின்ரன் போட்டியில் இந்தியாவின் சாய்னா நேவல் காலிறுதிக்கு முன்னேறினார். வியாழக்கிழமை நடைபெற்ற காலிறுதிக்கு முந்தைய சுற்றில் சாய்னா 21-18, 21-9 என்ற நேர் செற்களில் பல்கேரியாவின் பெட்யா நீடெல்சேவாவை வென்றதன் மூலம் காலிறுதிக்கு தகுதி பெற்றார்.

நடப்புச் சம்பியனான சாய்னா, இந்த ஆட்டத்தின் முதல் செற்றில் முதல் 8 ஆட்டங்களின் முடிவில் 6-2 என்ற கணக்கில் முன்னிலை பெற்றார். இதன்பிறகு நீடெல்சேவா சற்று சுதாரித்துக் கொண்டார். இதனால் 24 ஆட்டங்களின் முடிவில் இருவரும் தலா 12-12 என்ற கணக்கில் சமநிலை பெற்றனர். இருப்பினும் இந்த செற்றை 21-19 என்ற கணக்கில் சாய்னா வென்றார்.

இதன் பிறகு நடைபெற்ற இரண்டாவது செற்றில் ஆரம்பம் முதலே அபாரமாக ஆடிய சாய்னா 21-9 என்ற கணக்கில் வென்று அந்த செற்றை முடிவுக்குக் கொண்டு வந்தார். சாய்னா வேகமாக ஆடியதால் இந்த ஆட்டம் 31 நிமிடங்களில் முடிவுக்கு வந்தது குறிப்பிடத்தக்கது.

இரட்டையர் பிரிவு இரண்டாவது சுற்றில் இந்தியாவின் ஜூவாலா கட்டா - அஸ்வினி பொன்னப்பா ஜோடி 20-22, 21-18, 18-21 என்ற செற்களில் இந்தோனேசியாவின் மெய்லியானா - கிரேஸியா ஜோடியிடம் தோல்வி கண்டது. (15)

## காலை வாரியது இந்தியா கவிழ்கிறது எஸ்.எல்.பி.எல்.

SLPL 2011

இலங்கை பிரீமியர் லீக் 'ரி - 20 போட்டித் தொடரில் இந்திய வீரர்களை பங்கேற்க அனுமதிப்பதில்லை என்ற சபையின் முடிவில் எந்த மாற்றமும் இல்லை என்று இந்திய கிரிக்கெட் சபைத் தலைவர் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து சபைத் தலைவர் சஷாங் மனோகர் செய்தியாளர்களிடம் தெரிவிக்கையில், இது பழைய முடிவு. இதில் மாற்றம் ஏதும் இல்லை. இன்று இதை அனுமதித்தால், நாளை மேற்கிந்தியத்தீவுகளிலோ அல்லது சிம்பாப்வேயிலோ யாராவது ஒரு தனி நபர் போட்டித் தொடரை நடத்தலாம். அதற்கும் நமது வீரர்களை அனுப்பக் கோருவார்கள். எனவே இலங்கை தொடரில் இந்திய வீர்ரகளை பங்கேற்க அனுமதிக்க முடியாது என்ற முடிவு இறுதியானது உறுதியானது.

இலங்கை பிரீமியர் லீக் போட்டிகளை நடத்தும் ஒப்பந்தம் சிங்கப்பூரைச் சேர்ந்த ஒரு நிறுவனத்திற்கு அளிக்கப்பட்டுள்ளது. இந்தப் போட்டியை இலங்கை கிரிக்கெட் சபை நடத்தவில்லை. எனவே இது அதிகாரப்பூர்வ போட்டி அல்ல ஒரு தனியார் நிறுவனத்தின் போட்டித் தொடர்.

ஆனால் ஐ.பி.எல் எனப்படும் இந்திய பிரீமியர் லீக் போட்டிகள் வேறு. அவை சர்வதேச கிரிக்கெட் சபையினால் அங்கீகரிக்கப்பட்டவை. இந்திய கிரிக்கெட் சபையே அதை நடத்துகின்றது. இது தனியார் நிகழ்ச்சி அல்ல என்றார் மனோகர். (15)

*"இன்று இதை அனுமதித்தால், நாளை மேற்கிந்தியத் தீவுகளிலோ அல்லது சிம்பாப்வேயிலோ யாராவது ஒரு தனி நபர் போட்டித் தொடரை நடத்தலாம். அதற்கும் நமது வீரர்களை அனுப்பக் கோருவார்கள். எனவே இலங்கை தொடரில் இந்திய வீர்ரகளைப் பங்கேற்க அனுமதிக்க முடியாது என்ற முடிவு இறுதியானது; உறுதியானது."*

## அடிவாங்கும் மே.தீவுகள் அரவணைக்கிறது கெயிலை

கிரிக்கெட் சபையிடம் சமரசம் செய்து கொள்ள தேவைப்பட்டால் கெய்ல் மன்னிப்புக் கேட்பார் என்று வீரர்கள் சங்கத் துணைத் தலைவர் ஹிண்ட்ஸ் தெரிவித்துள்ளார்.

சம்பள ஒப்பந்தம் உட்பட பல பிரச்சினைகள் காரணமாக அதிரடி வீரர் கெய்லுக்கும் மேற்கிந்தியத்தீவுகளின் கிரிக்கெட் சபைக்கும் இடையே சிக்கல் இருந்து வருகின்றது. இதன் காரணமாக தேசிய அணியில் சேர்க்காமல், கெய்லை புறக்கணித்து வருகின்றனர். இது தொடர்பாக மேற்கிந்தியத்தீவுகள் வீரர்கள் சங்கத்துக்கும் சபைக்கும் நடந்த பேச்சுவார்த்தை தோல்வியில் முடிந்தது.

இந்த நிலையில் கிரிக்கெட் சபை சமாதானத்துக்கு இறங்கி வந்துள்ளது. இதுகுறித்து கெய்லுக்கு அனுப்பிய கடிதத்தில், மேற்கிந்தியத்தீவுகள் கிரிக்கெட்டுக்கு தாங்கள் செய்த சாதனைகளை சபை கணக்கில் எடுத்துக் கொண்டது. இதனால் நீங்கள் விரும்பும் பட்சத்தில், பிரச்சினைக்குத் தீர்வுகாண உங்களைச் சந்திக்க நினைத்துள்ளோம். இந்த கடிதத்தின் பதிலுக்காகக் காத்திருக்கிறோம் என்று தெரிவித்துள்ளது.



சபையின் கேள்விகளுக்கு தகுந்த பதிலளிக்க, கெய்ல் தயாராகி வருகிறார். ஒருவேளை மன்னிப்பு கேட்க வேண்டும் என்றாலும், அதற்கும் தயாராக உள்ளார். பிரச்சினையை முடிவுக்கு கொண்டு வர கெய்ல் எப்படியும் மன்னிப்பு கேட்பார் என்று நினைக்கிறேன் என்றார். (15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ் நகரில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள மிருக வைத்தியசாலை



இல 46, பிறவுண் வீதி (Brown Road) யாழ்ப்பாணம் எனும் முகவரியில் முன்னர் இயங்கிய அரசாங்க மிருக வைத்திய சாலைக்கு அருகாமையில் புதிதாக, யாழ். மிருகவைத்திய சத்திரசிகிச்சை நிலையம் (Jaffna Veterinary Clinic Surgery) ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இவ்வைத்திய நிலையத்திலிருந்து பெறக்கூடிய மிருக வைத்திய சுகாதார சேவைகளாவன

★ நோய்ச்சிகிச்சை (Disease Treatment)
★ சகல விதமான சத்திரசிகிச்சை (Surgery) - விசேடமாக நாய், பூனை களுக்கான கருத்தடை சத்திரசிகிச்சை.
★ நோய்த்தடுப்பூசி (Vaccination) விசேடமாக கோழிகளுக்கான கம்போறோ (Gumboro) ரனிக்கற் (Ranikhet) நோய்களுக்கான தடுப்பு மருந்துகள்.
★ மருந்தகம் (Pharmacy)
★ இலவச பண்ணை வளர்ப்பு மற்றும் மிருகவைத்திய ஆலோசனைகள்.
★ நல்லின நாய்க்குட்டிகளை வழங்குதல்.
★ தெள்ளு, உண்ணிகளுக்கான மருந்துகள்.
★ நடமாடும் மிருக வைத்திய சேவை (Mobile Veterinary Services - Home Visit)

இந்தவைத்திய நிலையமானது சனி, ஞாயிறு உட்பட வாரத்தின் ஏழு நாள்களும் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 8.00 மணி வரை திறந்திருக்கும்.

நிர்வாகி.

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி அதிபர் சூ.ஜெயவீரசிங்கம் அவர்களின் அன்புத் தாயார்

திருமதி. **யோகரத்தினம் செல்லையா**

அவர்கள் 24.06.2011 அன்று இறைவனடி சேர்ந்துள்ளார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி,
மானிப்பாய்.
ஆசிரியர்கள், ஊழியர்கள், மாணவர்கள்.

## மரண அறிவித்தல்



திருமதி **நாகம்மா சிவராஜா** (நாகேஸ்வரி)

(முன்னாள் Peoples Traders & Supplies (PTS) கொழும்பு 11. உரிமையாளரின் மனைவி)

வேலணை மேற்கைப் பிறப்பிடமாகவும் No.16, Frazer Avenue, Dehiwala என்னும் முகவரியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி. நாகம்மா சிவராஜா (நாகேஸ்வரி) 23.06.2011 அன்று சிவபதமடைந்தார். இவர் காலஞ்சென்ற திரு. பரநிருபசிங்கம் சிவராஜா அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம் - ஆச்சிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான பரநிருபசிங்கம் வள்ளியம்மை தம்பதியினரின் பாசமிகு மருமகளும், சிவா கந்தையா (Real Estate Agent, Canada), குகநேசன் (Maruthy Holidays Pvt Ltd - Colombo), சாருமதி (கனடா), இளங்குமரன் (கனடா), காலஞ்சென்ற பாருமதி, பானுமதி (கனடா) ஆகியோரின் பாசமிகு அத்தையும், ஆனந்ததவம் (Kajaluxmi Trader Centre, Colombo - 11 ) அவர்களின் சிறிய தாயாரும், லட்சுமிப்பிள்ளை (கனடா), கந்தையா (ஓய்வு பெற்ற நிர்வாக அலுவலர் - வவுனியா கமநல சேவை) கனடா, காலஞ்சென்ற பூபதி, இராஜரட்ணம் ( ஓய்வு பெற்ற பணிப்பாளர் யாழ். உயர் தொழில்நுட்ப நிறுவனம்), ராமச்சந்திரன் (ஓய்வு பெற்ற முகாமையாளர் - விவசாயத்திணைக்களம், வவுனியா), திலகம் - பாலகுமாரன் (ஓய்வு பெற்ற ஆசிரியை - பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி ) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான இந்திரபூபதி, விஜயரட்ணம், பாக்கியசிந்தாமணி, பரஞ்சோதி ( ஆராய்ச்சி அலுவலர் ), இராஜேஸ்வரி, குலசேகரம்பிள்ளை, சிவகாமசுந்தரி (அம்பிகா), ஆச்சிமுத்து, நவரட்ணராஜா, பாலகுமாரன் ( ஓய்வு பெற்ற தொழில்நுட்ப அலுவலர்), சித்ரா ஓய்வு பெற்ற பிரதி அதிபர் - யாழ். திருக்குடும்ப கன்னியர் மடம்), ரஜனி ஆகியோரின் மைத்துனியுமாவார் அன்னாரின் பூதவுடல் எதிர்வரும் 25ம் திகதி பொறளை ஜெயரட்ன மலர்ச்சாலையில் காலை 9 மணிமுதல் மாலை 4 மணிவரை உற்றார், உறவினர், நண்பர்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு 26ம் திகதி ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிக்கு ஈமைக்கிரியைகள் நடைபெற்று, பொறளை பொது மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

தகவல் : சிவா கந்தையா - **001 416 301 9540** . கனடா (மருமகன்)
தவம் குலசேகரம்பிள்ளை - **0777 575 143** (கொழும்பு) பெறாமகன்
குகன் கந்தையா - **0771 094 085** (கொழும்பு) மருமகன்
**E-mail : kukanlk2011@gmail.com**

## வழிகாட்டல் கருதரங்கு

யாழ்ப்பாணம், ஜீன் 25

கா.பொ. த உயர்தர மாணவர்களுக்கான தமிழ், இந்து நாகரீகம்,புவியியல் ஆகிய பாடங்களுக்கான பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கு இன்று சனிக்கிழமை முதல் 3 தினங்கள் வவுனியா, புளியங்குளம் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இலங்கை நட்புறவுச் சங்கத்தின் சுவிஸ் கிளையின் அனுசரணையுடன் யாழ். பல் கலைக்கழக வவுனியா மாவட்ட கலைப் பீட மாணவர் ஒன்றியத்தினால் இந்தக் கருத்தரங்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

"கல்விக்காக கை கொடுப்போம்" என்னும் தொனிப் பொருளில் இடம்பெறும் இந்தக் கருத்தரங்கில் ஆர்வமுடைய மாணவர்களைக் கலந்து கொள்ளுமாறு கேட்கப்படுகின்றது. (ந-313)

## யோகாசன வகுப்பு

யாழ்ப்பாணம், ஜீன் 25

ஒக்கிரியா பாபாஜி யோக ஆரண்யத்தால் இலவசயோகாசன வகுப்புகள்திருநெல்வேலி பழங்கிணற்றடிப் பிள்ளையார் ஆலயத்தின் கல்யாண மண்டபத்தில் நடத்தப்படுகின்றன.

தினமும் காலை 5.30 -6.30 வரை நடைபெறும் இந்த வகுப்பில் இருபாலரும் வயது வேறுபாடின்றி கலந்து கொள்ளமுடியும் என்று அமைப்பாளர் அ.த.கதிரவேல் அறிவித்துள்ளார். (ம-313)

### வேலைக்கு ஆள் தேவை

கம்பியூட்டரில் வேலை செய்வதற்கு ஆள் தேவை.

தரன் ரேடர்ஸ்
130, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

### விற்பனைக்கு

Canon Digital Camera 400D மொடல் அத்துடன் Lence 18-55mm Zoom, 28m-105mm Zoom, 70-200mm Zoom, 28mm, 50mm Micro, 430ES Canon Flash மற்றும் Electric Oven, Micro Way, Multi Function HP Printer & Copies

தொடர்பு:-
T.P:0777066051, 021 222 0781.

### வேலைக்கு ஆள் தேவை

கணக்கு வேலையில் அனுபவம் உள்ளவர் தேவை. நேரில் தொடர்பு கொள்ளவும்.

பாக்கியரத்தினம் காட்வெயார்
163, பிரதான வீதி, சங்கானை.

## திருமண சேவை

1. 79 இல் பிறந்த செவ்வாய் இல்லாமல் 58¾ பாவமுடைய B.COM, M.Ed. முடித்து ஆசிரியராக பணி புரியும் மணமகனுக்கு படித்த மணமகள் தேவை.
2. 81 இல் பிறந்த 8 இல் சூரியனும் செவ்வாயும் 97¼ பாவமுடைய பட்டதாரிக்கு படித்த மணமகள் தேவை.
3. 75 இல் பிறந்த செவ்வாய் இல்லாமல் 44½ பாவமுடைய B.Sc சைவபோசன ஆசிரியருக்கு அரச தொழில் புரியும் சைவபோசன மணமகள் தேவை.
4. 82 இல் பிறந்த செவ்வாய் இல்லாமல் 41½ பாவமுடைய கனடா பிரஜா உரிமை பெற்ற டாக்டர் மணமகளுக்கு கனடாவில் அல்லது ஊரில் படித்த மணமகன் தேவை.
5. 79 இல் பிறந்த செவ்வாய் இல்லாமல் 55¼ பாவமுடைய கனடா பிரஜா உரிமை பெற்ற மணமகளுக்கு கனடாவில் மணமகன் தேவை.

மேலும்:- டாக்டர்கள், இஞ்சினியர்கள், பட்டதாரிகள் செவ்வாய் பாவம் கூடிய, பாவம் குறைந்த அரச உத்தியோகத்தர்களும், சைவபோசனமுள்ள அரச உத்தி யோகத்தர்களும் வெளிநாட்டில் பிரஜா உரிமை பெற்ற மணமக்களும் எம்மிடமுள்ளனர்.

தொடர்பு:- கமலக்கண்ணன் திருமணசேவை
171/7, மனோன்மணி அம்மன் கோவிலடி, நல்லூர்.
T.P:- 0776070862 (5175)

## தேவை

யாழ்.பஸ் நிலைய முன்பாக பிரபல்யமாக இயங்கிக் கொண்டிருக்கும் சன்றைஸ் மெடிக் கிளினிக்கு (Sun. Rise Medi Clinic) கீழ் வரும் உதவியாளர்கள் தேவையாக உள்ளது.

1. Lab Technical Assistant (ஆய்வு கூட தொழில்நுட்ப உதவியாளர்) - A/L இல் BIO படித்த பெண்கள்
2. தாதிய உதவியாளர் - பெண்

நேர்முகத் தேர்வு: நாளை (26.06.2011) ஞாயிறு காலை 9 மணி

இடம்:
Sun. Rise Medi Clinic,
388, Hospital Rd,
Jaffna.

## European College of higher Studie's

**Study in Uk, Canada, Australia**

Student Visit (1 year)
Student Visa (4 year)
Visit Visa
**Depented Visa (depented, English Course training free)**

* IELTS தேவையான, தேவையற்ற முறையிலே அனைத்து ஆவணங்களும் நிவர்த்தி செய்யப்படும்.
* Canada Student களுக்கான பிரத்தியேக பாடங்களும் மேற்கொள்ளப்படும்.
* Student Visiter Visaகான Sponsor வசதி, Sponsor documents என்பன மிகவும் நேர்த்தியான முறையில் செய்து தரப்படும்.

(தலைநகரிலும், யாழிலும் August / Sept, Intake)

***Course Fees: 2000$ / 2500$***

வரும் (July 15) **IELTS** வகுப்புகளும் ஆரம்பிக்கப்படுகின்றன.

***European College of higher Studie's***
*315/A, Paramashwara Junction,*
*(Yarl Hospital Building) Palaly Road, Jaffna.*
T.P. 0774629998 / 0213734747.
*E.mail- asmy.echs@yahoo.com*

## வேலை வாய்ப்பு

1) தாதியர்
2) உதவித் தாதி பயிற்சி பெற விரும்புபவர்கள்

வெளி இடத்து ஆள்களுக்கு இலவச உணவு, தங்குமிட வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்படும்.

சம்பந்தர் மொடேர்ன் கிளினிக்
இல 08, இராமையாச் செட்டியார் வீதி,
யாழ்ப்பாணம். 0212227259

### யா/அச்சுவேலி மத்திய கல்லூரி
### அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு அறிவித்தல்

கல்லூரியின் விளையாட்டுத்துறை மேம்பாட்டைக் கருத்திற்கொண்டு இன்று (25.06.2011) சனிக்கிழமை நடைபெற விருந்த அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு தவிர்க்கமுடியாத காரணங்களினால் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. சீட்டிழுப்பு 29.07.2011 அன்று வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு நடைபெறும் என்பதை அன்புடன் அறியத்தருகின்றேன்.

யா/அச்சுவேலி மத்திய கல்லூரி, அச்சுவேலி. (1157) (34)
வே. அரசகேசரி அதிபர்.

## வீடு விற்பனைக்கு

சண்டிலிப்பாய் மேற்கு, சண்டிலிப்பாய் (சம்பிலியோடை) தேனிப்புளியடி ஒழுங் கையில் 2¼ பரப்புக் காணியும் வீடும் விற்பனைக்கு உண்டு. (5195)
தொடர்பு: 0773907687

## மரண அறிவித்தல்கள்



திருமதி **காசிநாதர் சின்னப்பிள்ளை**

நாவற்காடு, வரணியைப் பிறப்பிடமாகவும், கோணங்குளம், கண்டாவளையில் வசித்த வருமான திருமதி காசிநாதர் சின்னப்பிள்ளை நேற்று(24.06.2011) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் சிவாகாமிப்பிள்ளை காலஞ் சென்ற பொன்னம்பலம் (முன்னாள் இறப்பு, பிறப்பு விவாகப் பதிவாளர் , கண்டாவளை), காலஞ்சென்ற குமாரசாமி மற்றும் சிவசிதம்பரம், யோகேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயார் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.06.2011) சனிக்கிழமை பி.ப 2 மணியளவில் கரம்பைக்குறிச்சி வரணியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

திருக்குமார்,
கரம்பைக்குறிச்சி, வரணி.
தகவல்:
செ.யோகேஸ்வரி(மகள்).



**தயாபரன் நந்தகோகுலன்**

யாழ். பிறவுண் வீதி, 5 ஆம் ஒழுங்கையைப் பிறப்பிட மாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட தயாபரன் நந்தகோகுலன் நேற்று (24.06.2011) காலமாகிவிட்டார்.

அன்னார் தயாபரன் சரஸ்வதி (கௌரி) தம்பதியரின் அன்புப் புதல்வனும் துவாரகன், சம்சன், நதுசன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

N.R.Shaju construction ,
Brown Road,
5 th Lane, Jaffna.
தகவல்:
நமனன், குகன், தாசன்
(சித்தப்பாமார்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாதுகாப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு :

குடிசனமதிப்பீட்டுப் பணிகளைமேற்கொள்ளவேண்டிய பொறுப்பு புள்ளி விவரத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அவர்களைத் தவிர வேறு எவரும் இந்தப் பணியில் ஈடுபட்டதாக இலங்கை வரலாற்றில் இல்லை.

அவர்களை விட வேறு எவரும் இந்தப் பணியில் ஈடுபட்டால் அதனை அத்து மீறல் நடவடிக்கையாக நோக்கவேண்டும். இது தொடர்பில் சட்டவல்லுநர்களுடன் கலந்தாலோசித்த பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நீதிமன்றத்தை நாடும்.

சனத்தொகை விவரம் சேகரிக்க வேண்டிய வேலை இராணுவத்திடம் இல்லை. அவர்களின் பணி வேறு. வடக்கில் அத்துமீறி இந்த வகைச் செயற்பாட்டில் இராணுவம் ஈடுபட்டால் அதைக் கண்டிப்பாக எதிர்ப்போம் - என்றார் அவர்.

இதேவேளை -

படையினர் தொடர்ந்தும் மக்களைப் பதிவுசெய்து வருகின்றனர் என்று பொது மக்களிடமிருந்து தகவல்கள் கிடைக்கின்றன. இந்த நடவடிக்கையை அரசு நிறுத்தாவிட்டால் ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் தீர்ப்பின்மீது மீள் மறுதாக்கல் செய்யவேண்டிய நிலையும் ஏற்படும் எனவும் மாவை தெரிவித்தார்.(உ-ஐ)

---

## வடக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என 'கபே' அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கீர்த்தி தென்னக்கோன் சுட்டிக்காட்டினார்.

இது தொடர்பாக கீர்த்தி தென்னக்கோன் 'உதயனு'க்குத் தெரிவித்தவை வருமாறு:-

"வடக்கில் அரசியல் சுதந்திரம் இல்லை. அரசியல் சுதந்திரத்தை நிலைநாட்ட அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தேர்தல் தினத்தன்று வாக்குப் பெட்டிகளை வைத்து வாக்களிக்குமாறு கூறுவது தேர்தல் அல்ல. வேட்பாளர்கள் தமது கருத்துகளை மக்களுக்கு சுதந்திரமாக எடுத்துக்கூறுவதற்கு வாய்ப்பளிக்க வேண்டும். அதுவே ஜனநாயகம்.

குறிப்பாக உள்ளூராட்சி சபைத் தேர்தல் என்பது, மக்கள் தங்களுக்கு சேவையாற்றும் வகையில் தமது பிரதேசத்திலுள்ள பிரதிநிதியொருவரைத் தெரிவு செய்வதாகும். அதற்கு இடையூறு விளைவித்தால் அங்கு அரசியல் சுதந்திரம் உள்ளது என்று எப்படிக் கூறமுடியும்?

வேட்பாளர்களுக்கு பிரசாரத்தை மேற்கொள்ளும் சுதந்திரமும், மக்களுக்கு அதில் கலந்துகொள்ளும் சுதந்திரமும் உண்டு. அது இல்லையேல் அங்கு ஜனநாயகம் இல்லை என்றுதான் கருதப்படும்.

வடக்கில் அரசியல் சுதந்திரம் இல்லை. அதனை நிலைநாட்ட அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். கூட்டமைப்பின் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல், நாம் இலங்கையர் அமைப்பு ஏற்பாடு செய்த ஆர்ப்பாட்டத்துக்கு இடையூறு விளைவிக்கப்பட்டமை ஆகிய சம்பவங்கள் அங்கு அரசியல் சுதந்திரம் இல்லை என்பதை எடுத்துக்காட்டுகிறது. எனவே வடக்கில் அரசியல் சுதந்திரத்தையும், ஜனநாயகத்தையும் அரசு உறுதிப்படுத்த வேண்டும்'' - என்றார்.

(உ)

---

## எதிர்க்கட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விளக்கம் கொடுக்கத் தேவையில்லை. அது தொடர்பாக யாரும் விசாரிக்க முடியாது.

ஆனால், ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் சபையில் நிகழ்த்துகின்ற உரைகள் தொடர்பாக விசாரணை நடத்துவதற்காக சி.ஐ.டியினர் அழைப்பு விடுத்துள்ளனர்.

எமது உறுப்பினர் ரவி கருணாநாயக்க சபையில் ஆற்றிய உரை தொடர்பாக விசாரிப்பதற்காக சி.ஐ.டியினர் அவருக்கு அழைப்பு விடுத்தனர். - இவ்வாறு இடம்பெற்ற வரலாறு இல்லை.- என்றார்.

(07)




## அளவெட்டி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்புபட்டிருந்தனர் என்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்திருந்தார். தாக்குதல் தொடர்பில் 2 பொலிஸ் குழுக்கள் இராணுவப் பொலிஸ் குழு மற்றும் கொழும்பில் இருந்து வந்த சிறப்புக் குழு என்ற நான்கு குழுக்கள் விசாரணை நடத்துவதாகத் தெரிவிக்கப்பட்டது. ஆனால், இது வரை எவரும் கைதுசெய்யப்பட்டதாகவோ தண்டிக்கப்பட்டதாகவோ அறிவிக்கப்படவில்லை.

இதனை அடுத்து அளவெட்டித் தாக்குதலைக் கண்டித்து கொழும்பு ஆர்ப்பாட்டத்துக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

நவசமசமாஜக் கட்சித் தலைவர் சிறிதுங்க ஜயசூரிய, புதிய இடதுசாரி முன்னணித் தலைவர் விக்கிரமபாகு கருணாரட்ன, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, அ.விநாயகமூர்த்தி, எம்.ஏ. சுமந்திரன், ஜனநாயக மக்கள் முன்னணித் தலைவர் மனோகணேசன் ஆகியோரும் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி -

யாழ்ப்பாணத்தில் ஜனநாயகம் இல்லை; இராணுவ ஆட்சியே நடக்கிறது என்று தெரிவித்தார்.

''எமக்கு இராணுவ ஆட்சி வேண்டாம். என்னதான் சூழ்ச்சிகள் செய்தாலும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பைப் பல வீனப்படுத்த யார் முயன்றாலும் எதிர்வரும் தேர்தலில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு அமோகமாக வெற்றியீட்டும்'' - என்றார்.

இந்த நாட்டில் ஜனநாயகத்தை நசுக்கி விட்டு இராணுவ சர்வாதிகாரத்தைக் கொண்டுவர அரசு முயற்சிக்கிறது என்று அங்கு குற்றஞ்சாட்டினார் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா.

''ஜனநாயகம், மனித உரிமைகள் என்பன இந்த நாட்டில் பாதுகாக்கப்பட வேண்டியவை. தென்னிலங்கையில் உள்ள ஜனநாயக சக்திகளும் தமிழ்மக்களின் ஜனநாயக சக்திகளும் இணைந்து போராடவேண்டிய தேவைப்பாடு உள்ளது'' - என்றார்.

---

## தமிழ்மக்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கண்டுபிடித்துத் தருமாறும், தடுப்பில் உள்ளவர்களின் விவரங்களை வெளியிடுமாறும் திருகோணமலை, வவுனியா உட்பட பல இடங்களில் தொடர் ஆர்ப்பாட்டங்களை மேற்கொண்டு வருகின்றோம். இதன்படி நேற்றுமுன்தினம் கிளிநொச்சி நகரில் முற்பகல் 11 மணிக்கு ஆர்ப்பாட்டம் நடத்த ஏற்பாடு செய்திருந்தோம்.

ஆர்ப்பாட்டத்துக்கு முன்தினம் காலை முதல் சிவில் உடையில் இராணுவத்தினர் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொள்ள இருந்தவர்களின் வீடுகளுக்குச் சென்று இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொள்ளவேண்டாம் என்று கடுந்தொனியில் மிரட்டியுள்ளனர்.

அடுத்தநாள் காலை 6.30 மணிக்கு எமது அமைப்பின் உறுப்பினரான லலித்குமார் வீரராஜ் மற்றும் சின்னத்துரை இராஜேந்திரன் ஆகியோரை சிவில் உடையில் வாகனங்களில் வந்த இராணுவத்தினர் கைதுசெய்து விசாரணை என்ற பேரில் அழைத்துச் சென்றனர். அவ்வாறு அழைத்துச் சென்றவர்களிடம் எதற்காக கைதுசெய்தீர்கள் என வினவியபோது ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைதுசெய்கிறோம் என்றனர்.

அவர்களை கைதுசெய்தவர்கள் இராணுவ முகாமுக்கு அழைத்துச் செல்லாமல், பாழடைந்த வீடொன்றுக்கு அழைத்துச் சென்று மிரட்டியுள்ளனர். குறித்த இருவரது அனுமதியின்றி அவர்களை புகைப்படம் எடுத்து, பிற்பகல் ஒரு மணியளவில் விடுவித்துள்ளனர்.

கிளிநொச்சி இன்னும் இராணுவக் கட்டுப்பாட்டிலேயே உள்ளது. இங்கு ஆர்ப்பாட்டம் எதனையும் மேற்கொள்ள அனுமதிக்க முடியாது என்று சிவில் உடையிலிருந்த இராணுவத்தினர் கடுந்தொனியில் கூறியுள்ளனர்.

நாட்டில் அமுலிலுள்ள அவசரகாலச் சட்டத்தைப் பயன்படுத்தி சமாதானமாக நடத்தப்படுகின்ற ஆர்ப்பாட்டங்களில் நுழைந்து இராணுவத்தினர் அடாவடித்தனம் செய்கின்றனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் நடத்திய பேச்சுகளில் தடுப்பில் உள்ளோரின் விவரங்களை வெளியிடுவதாக பல தடவைகள் அரசு உறுதியளித்தபோதிலும், அவற்றை உருப்படியாக செவ்வனே நிறைவேற்றவில்லை. எனவே தமிழ்மக்களின் மனங்களை வெல்லவேண்டும் என்றால் தடுப்பில் உள்ளவர்களின் பெயர், விவரங்களை அரசு வெளியிடவேண்டும் - என்றார்.

இந்த ஊடகவியலாளர் மாநாட்டில் காணாமல் போன இருவரது உறவுகளும் சமுகமளித்திருந்தனர்.

கொழும்பு, மட்டக்குளி பிரதேசத்தைச் சேர்ந்த பாத்திமா சபிரா (வயது - 23) என்ற இளம் குடும்பப்பெண் தனது கணவரான மொஹம்மட் ஹக்கீம் (வயது - 29) கடந்த 2009ஆம் ஆண்டு மார்ச் 29ஆம் திகதி முதல் காணாமல் போயுள்ளார் என்று கண்ணீர் மல்க கூறினார்.

(ஒ-சி)

---

## சனல் 4...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பின்னர் இராணுவ சேவையிலிருந்து ஓய்வு பெற்ற ஜெனரல் சவேந்திர சில்வா தற்போது ஐ.நா. சபையில் பிரதி நிரந்தர வதிவிடப் பிரதிநிதியாகவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-8)

**வேலைவாய்ப்பு**

யாழ்ப்பாணத்தில் பிரபலமான தகவல் தொழினுட்ப நிறுவனமான epixcell உடனடி வேலைவாய்ப்புக்கு இளைஞர், யுவதிகளிடமிருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கின்றது.

பதவி : DATA ENTRY OPERATORS

தகைமை : அடிப்படைக் கணினி அறிவு

சுயவிவரக் கோவையுடன் எமது அலுவலகத்துக்கு இன்று (25.06.2011) சனிக்கிழமை மு.ப. 11 மணியிலிருந்து பி.ப. 3 மணிக்குள் நேரில் வரவும்.

**epixcell Solutions**
94A, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
(காளிகோயிலுக்கு அருகில்)
T.P. : 021 222 4780

**படிவம்**

* கல்வியியல் கல்லூரி அனுமதிக்கான விண்ணப்ப படிவம்.
* சிறைக் காவலர் பதவிக்கு ஆட்சேர்ப்பு விண்ணப்ப படிவம்

விற்பனையாகின்றது.

பாரதி பதிப்பகம்,
430, காங்கேசந்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## கந்தையா அன்னம்மா (மாணிக்கம்)



இணுவில் மேற்கு, ஞானவைரவர் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா அன்னம்மா நேற்று (24.06.2011) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.06.2011) சனிக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஞானவைரவர் கோயிலடி,
இணுவில் மேற்கு. (சி/1164)

தகவல்:
குடும்பத்தினர்.

## விசுவநாதர் மாணிக்கவாசகர்

(ஓய்வுபெற்ற ஆசிரியர், ஸ்கந்தவரோதயக் கல்லூரி, சுன்னாகம்)

கந்தரோடையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட விஸ்வநாதர் மாணிக்கவாசகர் நேற்று (24.06.2011) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விஸ்வ நாதர் - மாரிமுத்துப்பிள்ளை தம்பதியரின் புத்திரனும் திலகவதியின் (ஓய்வுபெற்ற ஆசிரியை, யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி) அன்புக் கணவரும் மயூரனின் அன்புத் தகப்பனும் காலஞ்சென்றவர்களான HINDU BORD இராசரத்தினம் செல்லம்மா தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்றவர்களான மங்கைநாயகி, வைத்தியநாதன் (முன்னாள் அதிபர், இரத்ம லானை இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புச் சகோ தரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.06.2011) சனிக்கிழமை பி.ப. 2 மணியளவில் அவரின் கந்தரோடை இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சங்கம்புலவு இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கந்தையா உவாத்தியாயர் வீதி,
கந்தரோடை,
சுன்னாகம். (சி/1163)

தகவல்
மா. திலகவதி
(மனைவி)

## அருணாசலம் திருநாவுக்கரசு



பலகாடு, காரைநகரைப் பிறப்பிடமாகவும் கருங்காலி, காரைநகரை வசிப்பிடமாகவும் கொண்ட அருணாசலம் திருநாவுக்கரசு நேற்று (24.06.2011) வெள்ளிக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அருணாசலம் (முன்னாள் பிரபல வர்த்தகர்) - செல்லாச்சி தம்பதியரின் பாசமிகு மகனும் காலஞ்சென்ற மகேஸ்வரியின் அன்புக் கணவரும் சிவனேந்திரா (அருள்), சிவரூபன் (சிறி) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்றவர்களான கந்தசாமி, கனகசபை, நடராசா மற்றும் சோமசுந்தரம், பொன்னம்பலம் மங்கையர்க்கரசி ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.06.2011) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நீலகிரி இந்து மயானத்துக்கு காலை 8 மணியளவில் எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கருங்காலி, காரைநகர். (5199)

தகவல்:
மகன்மார்.

## திருமதி செல்லையா யோகரத்தினம்



சுதுமலை மத்தி, மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லையா யோகரத்தினம் நேற்று (24.06. 2011) வெள்ளிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான ஞானரட்ணம் -அன்னம்மா தம்பதியரின் அன்புப் புதல்வியும் செல்வரத்தினம் (பிரான்ஸ்), கமலரத்தினம் (இந்தியா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் கோணேஸ்வரன் (ஆஸ்திரேலியா), திருக்கேதீஸ்வரன் (கனடா), கிருஷ்ண குமாரி, ஜெகதீஸ்வரன் (கனடா), இந்திரகுமாரி (வவுனியா), சூரியகுமாரி (அதிபர் - மானிப்பாய் மகளிர் கல்லூரி), முனீஸ்வரன் (கனடா), சந்திர குமாரி (ஆசிரியை - மானிப்பாய் இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தாயும் புத்திரசிகாமணி (இளைப்பாறிய - பிரதம பாதுகாப்பு அதிகாரி, யாழ். பல்கலைக்கழகம்), மாலினி (ஆஸ்திரேலியா), றுயினா (கனடா), வடிவாம்பாள் (கனடா), அற்புதராஜா (ஓய்வு பெற்ற தபாலதிபர், வவுனியா), ஜெயவீரசிங்கம் (உப அதிபர், மானிப்பாய் மெமோறியல் ஆங் கிலப் பாட சாலை), வசந்தி (கனடா), அமிர்தலிங்கம் (அதிபர், யாழ்/ நடேஸ்வராக் கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமியும் சஞ்சிதா (மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்), உமாபிரதீபா (கனடா), யாழினி (கனடா),பிரியங்கா (வவுனியா), மயூரன் (ஆஸ்திரேலியா), ராதிகா (கனடா), ரமணன் (கனடா), பிரகாஷ், (தபாலகம், வவுனியா), காயத்திரி (கொமர்ஷல் வங்கி, சுன்னாகம்),வினோத் (கனடா), மாதங்கி (வேம்படி மகளிர் கல்லூரி உயர் தரம்), அபிராமி (வேம்படி மகளிர் கல்லூரி, உயர்தரம்), சத்தீஸ் (கனடா), பிரியதர்ஷன் (வவுனியா, தமிழ் மத்திய மகா வித்தியாலயம்), மயூரி (கனடா) மற்றும் அம்பிகைதரன் (வவுனியா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித் தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சுதுமலை மத்தி, மானிப்பாய். (5196)

தகவல்
குடும்பத்தினர்.

---

மரண விசாரணை அறிக்கை அனுப்பத் தவறியமை;

# நீதிமன்றப் பதிவாளர், ராணுவ அதிகாரிக்கு கிளிநொச்சி நீதிவான் பிடியாணை

கிளிநொச்சி, ஜூன் 25

மன்னார், உயிலங்குளம் 8ஆவது படைப்பிரிவின் கட்டளையிடும் மேஜர் தர அதிகாரி ஒருவருக்கும் அனுராதபுரம் நீதிவான் நீதிமன்றப் பதிவாளருக்கும் கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்துள்ளது.

நேற்று முன்தினம் கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றத்தால் இப்பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

குறித்த ஒரு வழக்கில் மரண விசாரணை அறிக்கையை அனுராதபுரம் நீதிவான் நீதிமன்றத்தில் இருந்து கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றுக்கு அனுப்பி வைக்குமாறு பல தடவை அறிவித்தல் அனுப்பியும் அந்த அறிக்கை அனுப்பப்படாத நிலையில் அனுராதபுரம் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஊடாக அனுராதபுரம் நீதிமன்றப் பதிவாளருக்கு பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்த வழக்குடன் தொடர்புடைய மன்னார் உயிலங்குளம் 8ஆவது படைப்பிரிவின் கட்டளையிடும் மேஜர் தர அதிகாரிக்கு கிளிநொச்சி இரணைமடு இராணுவ பொலிஸ் கட்டளையிடும் அதிகாரி ஊடாக பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

(ஓ-10 -06)

BIT கணினிப் பட்டதாரியாக அரிய சந்தர்ப்பம
புதிய பிரிவிற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. Call me: 0776577359
BIT கற்கைநெறியினைத் தொடர்ச்சியாக 10 வருடங்கள் கற்பிக்கும் ஆசிரியரால் அனைத்துப் பாடங்களும் கற்பிக்கப்படுகின்றன.
MIS Open Source College By Mr R.Kumaran-B.Sc. (Computing & IS)

தளராத கல்விச் சேவையில்...
NEC
பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
வர்த்தகப் பிரிவு
கணக்கீடு:- திரு.பாலகஜன்.
பொருளியல்:- திரு N.B. கஜீதரன்.
வணிகக்கல்வி:- திரு S.யசோதரன்.
புதிய பிரிவுகள் ஆரம்பம்
25.06.2011 (சனிக்கிழமை)

EVEREST Academy
தட்டா தெரு சந்தி, யாழ்ப்பாணம்.
கணித/ விஞ்ஞான பாடங்களில் சித்தியின்மை குறித்து கவலையா?
தரம் 10, 11 மற்றும் மீள் பரீட்சார்த்தி மாணவர்களுக்கான
ஆசிரியர்கள்
A.துஷ்யந்தன்
A.கபிலன்
துரித மீட்டல் வகுப்புகள் ஆரம்பமாகின்றன.
*ஒவ்வொரு பிரிவிலும் மட்டுப்படுத்தப்பட்ட மாணவர்கள்.
*தனிப்பட்ட பாட அனுமதி உண்டு.
காலம்:- 02.07.2011 காலை 9 மணி.
அனுமதிகளுக்கு:-
0779829371, 0750441296.

விற்பனையாகின்றது
கல்வியியற்கல்லூரி விண்ணப்பப்படிவம் விற்பனையாகின்றது.
அன்னை புத்தகசாலை
யாழ்ப்பாணம்.

படிவங்கள் விற்பனையாகின்றன
*தேசிய கல்வியியற் கல்லூரி அனுமதிக்கான படிவம்-2012
*இலங்கை நிருவாக சேவை தரம்-III -2011 (திறந்த போட்டிப் பரீட்சை.)
*சிறைக்காவலர் பதவிக்கு ஆள்சேர்ப்பு -2011.
பூபாலசிங்கம் புத்தகசாலை
பஸ் நிலையம், யாழ்ப்பாணம்.
வேம்படிச் சந்தி, யாழ்ப்பாணம்.

கணக்கீடு
திரு. பாலகஜன் H.N.Dip. in Acc.
A/L 2011 Sat, Sun 7-9 AM
A/L 2012 Sat, Sun 10-11AM
A/L 2013 Sat, Sun 9-10AM
Sat, Sun 11-12AM
ஆரம்பம்:- 25.06.2011 (Sat)
NEC பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

EVEREST Academy
தட்டா தெரு சந்தி, யாழ்ப்பாணம்.
யாழ். நகரில் ஆங்கில மொழிமூல தனியார் கல்வி நிறுவனம்.
தரம் 6முதல் 11வரை வகுப்புகளுக்கான அனுமதிகள் வழங்கப்படுகின்றன.
சிறந்த ஆசிரியர்களின் வழிகாட்டலில் English Medium வகுப்புகள்
*ஒவ்வொரு பிரிவிலும் மட்டுப்படுத்தப்பட்ட மாணவர்கள் மட்டுமே...
அனுமதிகளுக்கு:-
0779829371, 0750441296.

BIT @ ESOFT
The Leader in Professional ICT Education
புதிய பிரிவுகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன இன்றே இலங்கையின் முதல்தர நிறுவனமான எம்முடன் இணையுங்கள்
Call @ 077 3099308
021 2224142
ESOFT Computer Studies
No. 166/3, Navalar Road,
Jaffna
நெல்லியடி 021 2264940
சாவகச்சேரி 021 2270333
கிளிநொச்சி 021 2285444

காணி விற்பனைக்கு
நுணாவில் அறவழி இல்லத்துக்கு அண்மையில் A-9 வீதிக்கு அருகில் 9 ½ பரப்புக் காணி விற்பனைக்கு.
தொடர்புகளுக்கு: 0774064035

வெளிவந்து விற்பனையாகிறது
இரசாயனவியல் - 2011
முன்னோடிப்பரீட்சை - 1
விடைகளுடன்.
ஆசிரியர்:-A.Loganthan
(B.Sc., PG.D.E, M.Ed.)
யாழ் மத்தியகல்லூரி.
கிடைக்குமிடம்:-பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம்.

MyWay இன் SPOKEN ENGLISH
ஆசிரியர்கள், அரச, தனியார் அலுவலர்கள், பட்டதாரிகள், பல்கலைக்கழக மற்றும் உயர்கல்வி மாணவர்கள், இளைஞர், யுவதிகள்,
சனி, ஞாயிறு 3 மாத பயிற்சிநெறி
பயிற்சியில் சேர கடைசி சந்தர்ப்பம்
25.06.2011 சனிக்கிழமை
பிரிவுகள் : காலை 10-11, 11-12,
மாலை 2-3, 3-4, 4-5, 5-6
27.06.2011 முதல் அனுமதி நிறுத்தப்படுகிறது
பயிற்சிக்கான மொத்த கட்டணம்
ரூபா 3000/- மட்டும்
MyWay 182, Stanley Rd, Jaffna
077 33 63 456

வீடு விற்பனைக்கு
வீடு,வங்கிகள், தனியார் நிறுவனங்கள், விருந்தினர் விடுதி (Guest House & Restaurant) மற்றும் வேறு தேவைகளுக்கும் உகந்த, வாகனத்தரிப்பிட வசதிகளுடன், பாவனைக்குத் தயார் நிலையில் சகல வசதிகளுடன் கூடிய விசாலமான கட்டடம் ஆஸ்பத்திரி வீதியில் விற்பனைக்குண்டு.
தொடர்பு:- தொ.பே: 0774528818

Deutsch, Dutch, French, Italian
கொழும்பு விவேகானந்தா அக்கடமியின் யாழ். கிளையில் தற்பொழுது ஜேர்மன் எம்பஸி பரீட் சைக்கான Deutsch மற்றும் நெதர்லாந்து Dutch, Italian, French வகுப்புக்களும் நடைபெறுகின்றன.
Vivekananda Academy
(Centre For International Language Studies)
No.3, 2nd Lane, Palaly Road, Jaffna.
(அப்பலோ ஆஸ்பத்திரிக்கு எதிரில்)
அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரே யொரு வெளிநாட்டு மொழிக்கல்வி நிறுவனம்.
GOV.Reg.No W/A 76795 T.P : 0774842464, 0213216928, 0779927117

## கட்டட ஒப்பந்தகாரர்களுக்கான கலந்துரையாடல்

ஆசிய அபிவிருத்தி வங்கியின் திட்டம் சம்பந்தமான கலந்துரையாடல் ஒன்று தேசிய நிர்மாணிகள் சங்க காரியாலயத்தில் 29.06.2011, புதன்கிழமை அன்று காலை 9.00 மணி தொடக்கம் 11.00 மணிவரை நடைபெற உள்ளது. மேற்படி கலந்துரையாடலில் கட்டட ஒப்பந்தகாரர்கள் அனைவரையும் தவறாது பங்குகொண்டு பயனடையுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

175, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி,யாழ்ப்பாணம்.
தொலைபேசி:- 021 321 0148. (சி/1141)

த.இ. பாலசுந்தரம், தலைவர்,
தேசிய நிர்மாணிகள் சங்கம்,
யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 25.06.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org